# கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்



Rev.Dr. A. சேவியர் B.Sc.,M.A(Theo).,DD.,
(எழுத்தாளர் சுவிசேஷகர் போதகர்)

# கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்


ஆசிரியர்

**Rev. Dr. A. சேவியர்** B.Sc., M.A, (Theology), D.D.

(சுவிசேஷகர், போதகர், எழுத்தாளர்)



**2016**

**வெளியீடு**

**"கடைசிகால விடுதலை ஊழியம் டிரஸ்ட்"**

எண். 3, 27வது தெரு, சிவசக்தி நகர்,

சி-பிரிவு, அண்ணனூர், சென்னை - 600 109.

போன்: 044-26375758, 26841363

செல் : 9444979822, 9444873848, 9444184648

facebook:- endtimedeliveranceministry; youtube:- endtimetrust xavier

www.endtimedeliverance.com; e-mail:-info@deliverance.com

**கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்**

First Edition : 2016
Total Copies : 1000
Book Serial No : 12/12

**Copy right :**
End Time Deliverance Ministry Trust

**Sponsored by:**
**Antony Raj,** B.Lit.,
Vidhuthalai Christhuvin Sabai,
Annanur, Chennai - 600 109.
Cell : 98415 33691

காணிக்கை : ₹ 70/-

**Printed by :**
**Saravan Printers**
New 91, Old 44, V.M. Street (Near BSNL Quarters)
Royapettah, Chennai - 600 014.
Email : saravanprinters@gmail.com

# முன்னுரை

## விசுவாசம் வெற்றியைத் தரும்

*"... கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்"* (மத். 24:24) என்ற இயேசுவின் வார்த்தை நிறைவேறுகிற காலமாயிருக்கிறது.

*"அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும்"* (2 பேதுரு 2:2) என்று பேதுரு சொன்னபடி தற்காலத்தில் நடக்கிறதைக் கண்டு,

அந்த கள்ள உபதேசக்காரர்களின் பெரும்பான்மையான – தேவையான – கேள்விகளுக்கான பதிலையும், அவர்களைப்பற்றிய வரலாற்று உண்மைகளையும், பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு உங்களுக்கு அளித்து, நீங்கள் கள்ள மற்றும் தவறான உபதேசக்காரர்களை விட்டு விலகி உங்களை நீங்களே இரட்சித்துக் கொள்ளும்படியாய் (அப். 2:40) இந்த நூலை சமர்ப்பிக்கிறேன்.

*வாசியுங்கள் ! விசுவாசியுங்கள் !*

*ஆசீர்வாதம் பெறுங்கள் !*

*இயேசு சீக்கிரம் வருகிறார் !*

*ஆயத்தமாவோம் !! ஆயத்தமாக்குவோம் !!!*

சென்னை

**– ஆசிரியர்**

மே 2016

**குறிப்பு :**

இது குறித்து எந்த சந்தேகமோ, கேள்வியோ இருந்தால், தயவுசெய்து ஆசிரியரிடம் எப்போதும் கேட்கலாம்; அவர் நடத்தும் கூட்டங்களில் கேள்விகளோடு வரலாம்; மாத இதழுக்கும் எழுதி அனுப்பலாம்.

## இந்த மாத "விசுவாச முழக்கம்" வாசித்தீர்களா?

## நமது ஊழியங்கள்

1. "விசுவாச முழக்கம்" பத்திரிக்கை ஊழியம்
2. "விடுதலை கிறிஸ்துவின் சபைகள்"
3. "சேவியர் இறையியல் பயிலகம்" - பைபிள் காலேஜ் ஊழியம்
4. விசுவாசக் கருத்தரங்கு ஊழியம்
5. வசன விளக்கம் எப்போதும் (காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை)
6. வெப்சைட், சி.டி. ஆராய்ச்சி புத்தகங்கள், Facebook, you tube, Whatsapp ஊழியம்
7. கஸ்தூரிபாய் ஆசிரமம்.

இன்னும் பல .......

# பொருளடக்கம்


| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | அந்திகிறிஸ்துவின் ஆவி இப்பொழுதே கிரியை செய்கிறது ........ | 106 |
| 2. | அடிப்படையைத் தகர்க்கும் அதிநவீன பிசாசின் பொல்லாத உபதேசங்கள் ........ | 53 |
| 3. | இயேசு நாமக்காரர்களின் நூதனக் கேள்விகள் ..... | 44 |
| 4. | இத்தனை சபைகள் எப்போது எழும்பின? ............ | 18 |
| 5. | கள்ள உபதேசத்தின் நுழைவாயில் எது? ............. | 7 |
| 6. | கள்ள உபதேச சபைகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் ........ | 11 |
| 7. | "கள்ள உபதேசம்" – வரலாறு ........ | 13 |
| 8. | கள்ள உபதேச சபைகள் | |
| | 1. கிறிஸ்தவ சபை ........ | 23 |
| | 2. 7ம் நாள் அட்வெந்து சபை ........ | 24 |
| | 3. யேகோவா சாட்சிகள் சபை ........ | 26 |
| | 4. இயேசு நாமக்காரர் சபை ........ | 27 |
| | 5. ரோமன் கத்தோலிக்க சபை ........ | 28 |
| | 6. சி.எஸ்.ஐ., ஆங்கிளிக்கன், லூத்தரன் ............ | 30 |
| | 7. சிறிய புராட்டஸ்டண்டு சபைகள் ........ | 32 |
| | 8. LEF சபை ........ | 33 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 9. | கள்ள தீர்க்கதரிசனமும் கள்ள உபதேசமும் ........... | 102 |
| 10. | கள்ள உபதேசக்காரர்களின் "கேள்விகள்" – அத்தியாயம் 1 முதல் 7 வரை ........ | 109 |
| 11. | திருச்சபை சரித்திரம் ............................................ | 21 |
| 12. | புரட்டுக்காரர்கள் மத்தியில் புரட்சிக்காரனாய் இரு .. | 87 |
| 13. | பாரம்பரிய மற்றும் பெயர்க்கிறிஸ்தவர்களே கேளுங்கள்! ................... | 49 |
| 14. | பெந்தகொஸ்தே சபைகளில் – குறிப்பாக சி.பி.எம். சபையில் உள்ள தவறான உபதேசங்கள் .............. | 96 |
| 15. | 7-ம் நாள் காரரே! வழக்காடுவோம்! வாருங்கள்! .... | 34 |
| 16. | 7-ம் நாள் காரர்களே! சிந்தியுங்கள்! ...................... | 40 |
| 17. | CHART ........................................................ | 20 |


**இயேசு சீக்கிரம் வருகிறார்!**

**ஆயத்தமாவோம்!!**

**ஆயத்தமாக்குவோம்!!!**

# கள்ள உபதேசத்தின் நுழைவாயில் எது?
# (Which is the entrance door of cults)

ஆரோக்கியமான (sound) உபதேசம் இருந்தால் தான், விசுவாசம் ஆரோக்கியமாயிருக்கும் (தீத்.1:9,14); விசுவாசம் ஆரோக்கியமாயிருந்தால் தான் அறிக்கையும், நமக்கு சம்பவிப்பதும் ஆரோக்கியமாயிருக்கும். இக்கால ஆவிக்குரிய சபை, மீதமான சபை, சீயோன் சபை என்று சொல்லிக் கொள்ளும், சி.பி.எம் போன்ற பெந்தகொஸ்தே சபைகளில் ஆரோக்கிய மில்லாத தவறான உபதேசம், தவறான சிந்தனை, தவறான விசுவாசம், தவறான அறிக்கை, தவறான செயல்பாடுகள் உருவாகின்றன. இதைக் காணுகின்ற பிசாசானவன், **இந்த தவறான உபதேசங்களை அடிப்படையாய் வைத்தே கள்ள உபதேசங்களை உருவாக்குகிறான்.** உதாரணத்திற்கு ஒன்றிரண்டைப் பார்ப்போம்.

மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று, ஆணும் பெண்ணும் இணைந்த திருமண வாழ்வை ஏதேனில் தேவன் உருவாக்கினார். தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்கக்கூடாது என்பது தேவசித்தம். இஸ்ரேலரின் இருதயக் கடினத்தால், தள்ளுதற்சீட்டு கொடுத்து விட்டு பிரியலாம் என்று நியாயப் பிரமாணம் தரப்பட்டது. இயேசுவின் காலத்திலோ, விபச்சாரத்தினிமித்தம் பிரியலாம் என்று சொல்லப்பட்டது (மத்.19:4-9) ஆனாலும் திருமணவாழ்வு வேண்டாமென்று சொல்லப்படவே இல்லை. தற்கால சி.பி.எம். சபையிலோ திருமணமாகி ஊழியம் செய்வது பாவமென்றும், வரம் பெற்றவர்கள் தான் இந்த ஊழியம் செய்ய முடியும் என்றும் போதிக்கப்படுகின்றது. இதற்கு அவர்கள் காட்டும் வசனம் மத்.19:11. இந்த வசனத்தை மறுபடியும் வாசியுங்கள். வரம் பெறாதவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்களாம். எந்த வசனத்தை? 9ம் வசனத்தை. அதாவது, "வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி தன் மனைவியைத் தள்ளி விட்டால் அது விபச்சாரமாகும்" என்பதே. இதைக் கேட்ட சீஷர்கள், மனைவி கொடூரக்காரியாய், வஞ்சனைக்காரியாய், அடங்காப் பிடாரியாய், எதிர்ப்பவளாய் இருந்தாலும் கூட அவளை விவகாரத்து, (புருஷனானவன்) செய்யக்கூடாது என்றால், விவாகம்

பண்ணவே தேவையில்லை என்றார்கள். அப்போது தான் இயேசு சொன்னார்:- "வரம் பெற்றவர்கள் தான் (Gifted Persons Only) விவாவரத்து குறித்து - திருமணம் குறித்து - நான் சொன்னதை ஏற்றுக் கொள்வார்கள் என்றார்." இந்த வசனம் எவ்விதத்திலும் திருமணமாகி ஊழியம் செய்வது சம்பந்தமாக இல்லாமல், அன்றாட திருமணம் சம்பந்தமாகவே உள்ளது என அறியலாம். அத்தோடு வச.12ஐ வாசித்தால், பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை யார் வேண்டுமானாலும், அண்ணர்களாக - அலிகளைப் போல ஆண்மை உணர்வு இல்லாதவர்களாக - ஆக்கிக் கொள்ளலாம். இதை விசுவாசிகளும் செயல்படுத்தலாம், ஊழியர்களும் செயல்படுத்தலாம். இது பெரும்பாலும் ஊழியர்களுக்கே என்றும் கணிக்கலாம். இப்படி இருப்பது அவரவர் விருப்பம், சுயாதீனம், சுதந்திரம். பவுல்கூட, தன்னைப்போல மனைவி இல்லாமல் ஊழியர் மட்டுமல்ல, எல்லா மனுஷரும் இருக்கலாம் என்றுதன் விருப்பத்தை சொல்லிவிட்டு (1 கொரி.7:7) அந்த 7ம் அதிகாரம் முழுவதும் திருமணத்தாலும், திருமணமில்லாமையினாலும் வரும் சாதக பாதகங்களை எழுதி, நமக்கே சுயாதீனத்தைக் கொடுத்து எழுதியுள்ளான். இதுவும் ஊழியர்களுக்கு மட்டுமல்ல... விசுவாசிகள் எல்லோருக்கும் தான்.

மேலும், வெளி 14 ல் உள்ள 1,44,000 பேர் திருமணமாகாத, ஸ்திரீகளால் கறைபடாத ஊழியர்களாகிய நாங்கள் தான் என்று சொல்லிப் போதிக்கின்றனர். வெளி.14:4ல் உள்ளதை ஸ்திரி (women) என்றே எடுத்துக் கொண்டாலும், ஸ்திரீயால் என்று சொல்லாமல், ஸ்திரீகளால் என்று தானே உள்ளது. அப்படியானால் ஒரு ஸ்திரீயோடு விவாகம் பண்ணி ஊழியம் செய்தால் கறையில்லை அல்லவா! இந்த அர்த்தத்தில் தானே கண் காணியானவன் (Bishop) ஒரே மனைவியை உடையவனாய் இருக்க வேண்டுமென்று பவுல் எழுதுகிறான் (1தீமோ.3:2) மேலும் 1 தீமோ.3:4ம் வசனத்தை வாசித்தால் அந்த ஊழியக்காரன், மனைவியோடும், பிள்ளைகளோடும் இருப்பவன் என்று உணரலாம். இந்த 1,44,000 பேர், அவர்களின் கணிப்புப்படி திருமணமாகாத - ஸ்திரிகளால் கறைபடாத - ஆண் ஊழியர்கள் என்றால், இவர்களைப் போலவே, திருமணம் செய்யாமல் ஊழியம் செய்யும் பெண் ஊழியர்கள் இந்த லிஸ்டில் இல்லையா? இவர்கள் சீயோனுக்குப் போக மாட்டார்களா? கலா.3:27, 28ன் படி கிறிஸ்துவுக்குள்ளானவர்களிடையே ஆண், பெண் என்ற வேற்றுமை இல்லை என்கிறபோது 1,44,000 பேரில் மாத்திரம் எப்படி வேற்றுமை வரும்? இப்படிப் போதிப்பது பெண்ணடிமைக்கு நுழைவாயில் ஆகாதா? வெளி.14:4ல், இந்த 1,44,000 பேரும் கற்புள்ளவர்கள் என்று எழுதப்பட்டுள்ளது. கோவலனுக்கு மனைவியாய் வாழ்ந்த கண்ணகியையே கற்புள்ளவள் என்று

சொல்லும்போது, இராமனின் மனைவி சீதையே கற்புள்ளவள் என்று பரீட்சை பார்க்கும்போது, கற்பு என்றால் திருமணமாகதவர்கள் என்று மட்டும் அர்த்தம் அல்ல... ஒரே புருஷனோடு வாழ்பவர்கள் என்றும் புரியவில்லையா? மேலும் கற்பு என்றால் Virgin - கன்னிமை என்பது பொருள். இந்த வார்த்தை பெண்களுக்கு மட்டுமே பொருந்தும். அப்படியானால் அந்த 1,44,000 பேரும் ஆண் ஊழியரா? சிந்தியுங்கள்.

வெளி.5 முதல் 19 வரை நமது சபை பற்றிய தீர்க்கதரிசனம் ஏதுமில்லை. சபை எடுபட்டுப் போன பின்பு பூமியில் நடக்கும் 7 வருட உபத்திரவ காலத்தையே இதுகாட்டுகிறது. அப்படியிருக்க இந்த 1,44,000 பேர் எப்படி கிறிஸ்தவ சபையாராய் இருக்க முடியும்? வெளி.7ம் அதிகாரத்திலே பூமியில் காணும் 12 கோத்திர இஸ்ரேலர்களாகிய 1,44,000 பேர் தான் 14ம் அதிகாரத்திலே பரலோகில் காணப்படுகிறார்கள். இவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்ட அந்திகிறிஸ்துவின் கால இஸ்ரேலர்களே! ஸ்திரி என்றால் தீர்க்க தரிசனத்தில் சபை, குழு, கூட்டம், இனம் என்று பொருள். கை விடப்பட்ட சபையாராலோ, புறஜாதி மக்களாலோ கறைபடாதவர்கள், கற்புள்ள கன்னிகைகள் இந்த 1,44,000 பேர். அல்லேலூயா. (இது குறித்து ஆசிரியரின் "வெளியரங்கரமாகாத தீர்க்கதரிசனங்கள்" என்ற நூலிலுள்ள செய்தியைப் படியுங்கள்.) சத்தியம் இப்படியிருக்க, முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுவது போல, விவாகத்துக்கும் ஊழியத்துக்கும் இது போன்ற வசனங்களை இழுத்துப் போடுவது ஆரோக்கியமில்லாத உபதேசம், தவறான உபதேசம்.

மட்டுமல்ல.. பவுல் அப்போஸ்தலன் திருமணமாகாமல் தான் ஊழியம் செய்தான் என்று வாதிடுவோர் அவர்கள். பவுல் கமாலியேலின் பாதபடியில் படித்தவன், சனகெரிம் மன்றத்தின் உறுப்பினர். இந்த மன்றத்தில் ஒருவர் உறுப்பினராக வேண்டுமென்றால் அவர் நிச்சயம் திருமணம் செய்தவராக இருக்க வேண்டுமென்பது சட்டம். இதன்படி பவுல் திருமணமானவர் தான். சரித்திரம் தெரியாமல் வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று பேசுவது தவறான உபதேசம். ஒரு வேளை சபை ஊழியத்திற்கு முன்போ அல்லது ஊழிய ஆரம்பத்தின் போதோ பவுல் மனைவியை விட்டு, மரணத்தாலோ மற்ற காரணத்தாலோ பிரிந்திருக்கலாம். மற்றப்படி பவுல் திருமணமானவன் தான். பேதுரு திருமணமானவன் தானே! பேதுரு, சீயோன் போகமாட்டாரா? பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் ஏராளமான ஊழியர்கள் திருமணமாகி மனைவியோடே ஊழியம் செய்திருக்கிறார்களே! அப்போஸ்தலர்களே, சகோதரியை மனைவியாய் கூட்டிக் கொண்டு திரிந்தார்கள் என்று 1 கொரி.9:5 சொல்வதை வாசிக்கவில்லையா? ("have we not power (no right) to lead about a Sister, a wife" - King James

Verson. "Do not we have the right to take a believing wife along with us as apostles" - NIV Bible), இயேசு திருமணமாகாமல் ஊழியம் செய்யவில்லையா என்பது அவர்கள் வாதம். இயேசு எந்த மாதிரியை நமக்கு வைத்து விட்டுப் போனார்? அங்கிபோட்டு ஊழியம் செய்வதையா? எட்டாம் நாள் விருத்தசேதனம் செய்ததையா? சனிக்கிழமையாகிய ஓய்வு நாளை ஆசரித்ததையா? 5 கண்ட மக்களுக்கும் ஊழியம் செய்யாமலிருந்ததையா? சிலுவையில் தொங்கி தான் மரிக்க வேண்டும் என்பதையா? நடந்தே போய் தான் ஊழியம் செய்ய வேண்டும் என்பதையா? மைக், லைட், சேர், ஏதுமில்லாமல் ஊழியம் செய்ய வேண்டும் என்பதையா? துரோகியான யூதாஸ் போன்றோரையும் ஊழியத்திற்கு வைக்கலாம் என்பதையா? பெண் அப்போஸ்தலர்களே வைக்கக் கூடாது என்பதையா? சிந்தியுங்கள். 1 பேது. 2:21, 22; 4: 12-16 போன்ற வசனங்களை வாசியுங்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் நிமித்தம் வரும்பாடுகளை சகிக்க வேண்டிய மாதிரியைத் தான் அவர் வைத்துவிட்டுப் போனார். அவர் சொல்லிவிட்டுப் போனதை சிந்திக்காமல், சொல்லாததை செயல்படுத்துவது வசனத்தை அவமதிப்பதாகும். ஒரு வேளை, புருஷன் மனைவியாய், குடும்பமாய் ஊழியம் செய்வது நலமாயில்லை என்று தோன்றினால், பரலோகராஜ்ய ஊழியத்தினிமித்தம் அண்ணர்களாய் விவாகமில்லாமல் இருக்கலாம். இது அவரவர்களின் சுயாதீனம், இது சட்டமல்ல. திருமணமாகாமல் ஊழியம் செய்வது பெரிய தியாகம். ஆமென். கலா. 5:24ன் படி இருப்போருக்கு இது சட்டமாகவே தேவையா?

இப்படி தவறான - ஆரோக்கியமில்லாத, வசன அடிப்படையில்லாத உபதேசத்தை இவர்கள் போதிக்க போதிக்க, அது கள்ள உபதேசத்திற்கு கதவைத் திறந்து விடுவதாக ஆகிவிடுகிறது. ஆவிக்குரிய சபை என்று மார்தட்டுகின்ற சி.பி.எம். சபை போன்ற சபைகளின் இதுபோன்ற போதகத்தால் கள்ள உபதேசம் எழும்புகிறது, பரவுகிறது, செழிக்கிறது. ஆதி அப்போஸ்தல காலத்திலேயே, மனசாட்சியிலே சூடுண்ட பொய்யரின் மாயமான வஞ்சிக்கிற ஆவிகளால், "விவாகம் பண்ணக் கூடாது" என்று கட்டளையிடவில்லையா? (1 தீமோ.4:13) இதன் அடிப்படையில் தான் ரோமன் கத்தோலிக்க சபையில், தலைமுடியின் சிறுபகுதியை ஒட்ட சவரம் செய்தல், கன்னிமாட ஏற்பாடு, (celebece) சாமியார் மட எற்பாடு (Tonstute) போன்றவை உண்டாயின. அஞ்ஞான, பாபிலோனிய வீட்டு தேவதை வெஸ்டாவின் அடிமைகள், பாபிலோனிலே தேவதா கன்னிகைகள் ஆயினர். அவர்களுக்கு சமமாய் RCயில் Nuns உருவாக்கப்பட்டது மட்டுமல்ல... இந்துக்களிலே காவி உடைச் சாமியார்கள் பெருகினர், புத்த மதத்திலும் பெருகினர். நமது சபைகளிலும்

“சாது” என்ற பெயரோடு தோன்றுகின்றனர். இப்படிப்பட்ட கள்ள உபதேச போதகங்களும், செயல்பாடுகளும் நமது கிறிஸ்தவத்திற்குள்ளே நுழைய, வாசலாய் - நுழைவாயிலாய் - இருப்பது CPMசபை போன்ற ஆவிக்குரிய சபைகளில் உள்ள தவறான - ஆரோக்கியமில்லாத உபதேசம் தான். இப்படிக் கள்ள உபதேசத்துக்கு வழிவகுக்கும், ஆரோக்கியமில்லாத, தவறான உபதேசங்களை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். வசனவிளக்கம் அறிந்து தெளிவு பெற்றும், இன்னும் அந்த தவறான உபதேசத்திலே ஆவிக்குரிய சபைகள் ஊறித்திளைத்தால், அந்த சபைகளுக்காய் ஜெபியுங்கள். சபையிலே மாற்றமில்லை என்றால் அந்த சபையை விட்டு வெளியேறுங்கள். இது கடைசி காலம்! ஏமாந்து போகாதீர்! (1 பேதுரு.5:8) இயேசு சீக்கிரம் வருகிறார்.

❖ ❖ ❖

# கள்ள உபதேச சபைகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்

கிறிஸ்துவால் கட்டப்பட்ட (மத்.16:18) சபைக்கு, அவரின் உபதேசமும், அப்போஸ்தலர் உபதேசமும் இணைந்ததே உபதேச சட்டமாகும் (மத்.28:18-20; யூதா.17; ரோ.6:17). இதை பவுல் 6 பகுதியாய்ப் பிரித்திருக்கிறார் (எபி.6:1,2). அவையாவன:-

(1) **மனந்திரும்புதல்:-** எதிலிருந்து? உலகம், பிசாசு, மாம்சம் ஆகியவைகளிலிருந்து (யோ.16:8,9; 3:3,5; அப்.2:38). இது விசுவாச வசனத்தால் வருகிறதான காரியமாகும் (ரோ.10:9,10; 1 பேது.1:23).

(2) **தேவன்பேரில் வைக்கும் விசுவாசம் :-** யார் விசுவாசி தெரியுமா? வெறுமனே தேவன் இயேசுவை விசுவாசிப்பவன் அல்ல விசுவாசி (யாக்.2:19). இயேசுவாகிய வார்த்தையை, வார்த்தையாகிய இயேசுவை விசுவாசிப்பவனே விசுவாசி (See யோ.14:1). இந்த விசுவாசமே சபைக்கு தேவை.

(3) **ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்:-** இதிலே 3 விதமான ஸ்நானங்கள் வருகின்றன. (i) கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் (1 பேது.1:23; கலா.3:27; ரோம.6; யோ.3:5). இது தான் இரட்சிப்பின் அனுபவம். (ii) ஜலத்தினால் ஞானஸ்நானம் (அப்.2:48; 1 பேது.3:21;

மாற்.16:16). (iii) பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் (மத்.3:11; அப்.1:48).

(4) **கைகளை வைக்குதல்:-** நமக்குள்ளே தேவனின் புத்திர சுவீகாரம் இருப்பதால் (கலா.4:7; ரோ.8:15) நமது கைகளின் மூலம் அவர் தந்த வல்லமை நம்மிடமிருந்து புறப்பட்டுப் போகிறது. வியாதியிலிருந்து விடுதலை பெற (மாற்.16:16), பரிசுத்த ஆவிபெற, நல்ல காரியத்திற்கு தயார் செய்து அனுப்ப இம்முறையை உபயோகிக்க வேண்டும் (See 1 தீமோ.5:22 also).

(5) **மரித்தோரின் உயிர்த்தெழுதல்:-** சதுசேயர் இதை நம்புவதில்லை. நமக்கோ இரகசிய வருகையில் (1 கொரி. 5:51), இது முதலாம் உயிர்த்தெழுதல். 1000 வருட அரசாட்சிக்கு முன்னும் இது உண்டு (வெளி.20:6). 2ம் மரணதண்டனைக்கான பாவிகளுக்கு இன்னொரு உயிர்த்தெழுதல் உண்டு.

(6) **நித்திய நியாயத்தீர்ப்பு:-** அன்பு, இரக்கம், உருக்கம் உள்ள பரிந்துபேசும் தேவன், நியாதிபதியாகவும் இருக்கிறார். பாவிகளுக்கு நித்திய நரகம்; நமக்கோ நித்திய ஜீவன் (மத்.25:46). நமக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை (ரோ.8:1,2 கொரி.5:10).

இப்படிப்பட்ட மூல உபதேச அஸ்திபாரமில்லாத சபைகளெல்லாம் கள்ள உபதேச சபைகள். இவைகளிலே ஒன்று தவறினாலும் அஸ்திபாரம் போய்விடும். இப்படிப்பட்டதான மூல உபதேசத்திற்கு மாறான கள்ள உபதேசக்காரர்களெல்லாம் (1) பக்கவழியாய் வந்தவர்கள் (யூதா.4). (2) வஞ்சிக்கிற ஆவிகள் (1 தீயோ.4:1). (3) ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள் (மத்.7:15). (4) தேவபக்தியின் வேஷம் தரித்தவர்கள் (2 தீமோ.3:5).

**இப்படியாய் உள்ள கள்ள உபதேச சபைகளில் ஒருசில:-** ஏழாம் நாள் அட்வெந்து, யேகோ வாவின் சாட்சிகள். இயேசு நாமக்காரர்கள், கிறிஸ்துவின் சபை, ரோமன் கத்தோலிக்க சபை, மார்த்தோமா, சிரியன், சி.எஸ்.ஐ, சி.என்.ஐ, லூத்தரன், ஆங்கிலிகன், இ.சி.ஐ, மெதடிஸ்ட், பாப்டிஸ்ட், யேகோவா ஷம்மா (பகத்சிங்), சால்வேஷன் ஆர்மி, பிரதரன் சபை, LEF, பிரஸ்பிடேரியன், Children of God, புதிய எருசலேம், சாத்தான் சபை.

இவைகளை விட்டு முழுமையாய் வெளியே வந்தால் தான் நரக ஆக்கினை இல்லை. (அப்.2:40) கள்ள உபதேசத்திற்கு எதிரிடையானது நல்ல உபதேசம்; ஆரோக்கியமான உபதேசம். இது அடிப்படை மூல உபதேசம் உள்ள

சபைகளில் காணப்படவேண்டும். பல ஆவிக்குரிய சபைகளில் மூல உபதேசம் உண்டு (Foundation). ஆனால் அந்த Foundation மேல், ஒழுகுகிற கூரை, இடிந்து போகும் சுவர், கதவு, ஜன்னல் இல்லாத நிலை - இருந்தும் உபயோகமில்லாமை. வெளிச்சம் இல்லை - விளக்கு இருந்தும் எரியாது, தண்ணீர் இல்லை - இருந்தும் உபயோகமில்லாமை, இப்படிப்பட்ட நிலையான பல ஆவிக்குரிய சபைகள் தவறான உபதேசங்களோடு காட்சியளிக்கின்றன (1 தீமோ.6:3,4). தவறான உபதேசம் கள்ள உபதேசத்தின் நுழைவாயில் என்று ஏற்கனவே எழுதியுள்ளேன்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இவைகளை விட்டும் வெளியேவா! இந்த தவறான உபதேசங்களை அறியாமலிருந்த காலம் போகட்டும் (அப்.17:30). அறிந்த பின்னும், அதிலே இருப்பது நியாயமா? உனக்குள் ஆவியானவர் இல்லையா? தூங்குகிற நீ மரித்தோரை விட்டு மட்டுமல்ல; இவர்களையும் விட்டு வெளி வரமாட்டாயா? எத்தனை நாளைக்கு இரண்டு பக்கமும் குந்திக் குந்திக் நடப்பாய் (1 ராஜா. 18:21). உனக்குள்ளிருக்கும் ஆவியானவரை துக்கப்படுத்தாதே (எபே.4:30). இதன் விளைவை கடைசி நாளில் காண்பாய் (1 கொரி.3:13-15). ஜாக்கிரதை! ஆமென்!

❖ ❖ ❖

# "கள்ள உபதேசம்" - வரலாறு

கர்த்தரின் வார்த்தைக்கு (மூல அடிப்படை உபதேசங்களுக்கு) விரோதமாய் இருப்பதெல்லாம் கள்ள உபதேசங்கள்; (எபி. 6:1,2) ஆரோக்கியமில்லாத உபதேசங்களெல்லாம் தவறான உபதேசங்கள் (தீத்து 2:1; 1 தீமோ. 6:3,4). தவறான உபதேசங்கள் நாளாக, நாளாக, கள்ள உபதேசங்களாய் மாற வாய்ப்புண்டு. கள்ள உபதேசங்களைக் கொடுப்பவர்கள், கள்ளப்போதகர்கள், கள்ளத்தீர்க்கதரிசிகள், கள்ளகிறிஸ்துகள்; ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள் (மத். 24:24; 2 பேது. 2:1).

கள்ள உபதேசம் பற்றி இயேசு மத். 13:13ல் விளக்குகிறார். **(1) அது புளித்தமா;** Evil Doctrine; இது இயேசு காலத்திலேயே பரிசேயரின் புளித்தமா (சட்டப்படியான-Legalism), சதுசேயரின் புளித்தமா (சரீர உயிர்த்தெழுதல், ஆவி-தேவதூதர்கள் எல்லாம் இல்லை). ஏரோதின் புளித்தமா (மதமும் உலகப் பற்றாசையும்-Materialism) என்று மூன்று வகையாய் இருந்திருக்கிறது. **(2) மத். 13:13ல் இயேசு சொன்ன ஸ்திரி**

என்பது சபையைக் குறிக்கிறது (வெளி. 2:20; 17:5). **(3) 3 படி மாவு-நல்ல மாவு** (குடும்ப சாப்பாட்டிற்கானது-ஆதி. 18:6 - 3 measures of meal) என்பது தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது. சபைகள் மூலமாகத்தான் ஆரோக்கியமான நல்ல உபதேசங்களான மாவு எல்லாம், **கள்ள உபதேசமான புளித்தமாவாய்** மாறுகிறது என்று இயேசு சொன்னார்.

**இதிலிருந்து நாமறிவது என்ன?** சபைக்குள்ளேயே, கள்ள உபதேசக்காரர்கள், பிரதான ஆசாரியனைப்போல இருந்து கொண்டு, எகிப்து-உலகம்-பிசாசிலிருந்து விடுதலையான-இரட்சிக்கப்பட்டவர்களை நிர்வாண மாக்குகிறார்கள். எதிலே? சரீரத்தில் மட்டுமல்ல... பரிசுத்தத்தில், விசுவாசத்தில், வசன வெளிச்சத்தில், வசனக் கிரியையில். அதைத்தான் வனாந்திரத்திலே ஆரோன் செய்தானாம் (யாத். 32:25) - "ஜனங்கள் பகைவருக்குள் அவமானப்படத்தக்கதாக, ஆரோன் அவர்களை நிர்வாணமாக்கியிருந்தான்." இந்த நிர்வாணம் - கள்ள உபதேசம் - ஆரம்பமே ஏதேனில்தான். தேவன் சொன்னார்: "இந்தக் கனியைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (ஆதி. 2:17). இது நல்ல உபதேசம். சாத்தன் சொன்னான்: "சாகவே சாவதில்லை; கண்கள் திறக்கப்படும்; நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போலாவீர்கள்" (ஆதி. 3:4,5). இது கள்ள உபதேசம். இதை ஏற்றுக்கொண்டு, ஆதிப் பெற்றோர் செயல்பட்டதால், அவர்கள் நிர்வாணமானார்கள் (ஆதி. 3:1). இன்றுவரை அதனுடைய விளைவுதான் தலைதூக்கி நிற்கிறது.

ஆதாம் ஏவாளுக்கு முன்பிருந்த பூமியை ஆண்ட சாத்தானின் தலைநகரம் ஏதேன்தான் (எசே. 28:13). ஆதாம் வாழ, ஆள கொடுத்து வைத்த இடமும், 6 நாளில் வளமாக்கப்பட்ட 2ம் காலக்கட்ட பூமியும் ஏதேன்தான். இந்த ஏதேனில் ஓடிய ஆற்றின் 4ம் கிளை நதியான ஐபிராத்தின் கீழ்க்கரைதான், "பாபிலோன் ஸ்தலம்" என்றும், இங்கிருந்துதான், கள்ள உபதேசத்தை சாத்தான் ஆரம்பித்தான் என்றும் வேத வல்லுநர்கள் கணிக்கிறார்கள். ஜலப்பிரளயத்திற்குப்பின், நிம்ரோத் என்பவன், இந்த இடத்தில்தான் "பாபேல் கோபுரம்" கட்டினான். உலகின் மிகப்பெரிய தேவதுரோகம் இங்குதான் ஆரம்பம். மக்கள் பலவாறாய் சிதறிப் போனபோது, நிர்வாணமாக்கும் கள்ள உபதேச விஷக்கிருமிகளை பிசாசு புகுத்திவிட்டான். இதுதான் பாபேல்-பாபிலோனியனிசம்-பாபிலோன் Cults என்பதாகும்.

இஸ்ரேல் சபை-குழு-அசெம்பிளி என்ற ஒன்று மோசேயோடுதான் வந்தது. அப்போதுதான் சட்டதிட்டங்கள்-உபதேசங்கள்-கற்பனைகள் இஸ்ரேல் சபைக்கு முழுமையாக கிடைத்தது. இஸ்ரேல் சபை உருவான பின்தான், கள்ள உபதேசங்கள் சபைக்குள் தலைதூக்கியது. ஆனால்

தற்காலம்போல் அந்த சபை, கள்ள உபதேசங்களால் உடையவில்லை. இஸ்ரேல் சபைக்குள்ளேயே கள்ள எழுத்தாணிகள் இருந்தன (எரே. 8:8- "தல்மூத்"). இதைத்தான் மத். 15:9, 3ல் இயேசு சொன்னார். எகிப்திலிருந்து கானானுக்கு வந்தவர்களுக்கு ராஜ்யம் கிடைத்தது; ஆண்டார்கள். ஆனாலும் சாலமோனுக்குப்பின் பிரிந்த இஸ்ரேல் ராஜ்யம் அசீரியர்களால் அழிந்தது. யூத ராஜ்யம் பாபிலோனியர்களால் அழிந்தது. பாபிலோனுக்கு அடிமையாய்ப் போன யூதர்கள் முழுமையாய் சந்தித்த பொல்லாத செயல்பாடுகள்தான் பாபிலோனிய கள்ள உபதேசமாகும். அந்த உபதேசமுள்ள புறஜாதிக் கூட்டத்தார் தெய்வ ஞானம் உடையவர்களாம்; அவர்கள் அந்தக் குழுவில் சேருமுன் பூசாரியிடம் பாவ அறிக்கை செய்ய வேண்டுமாம்; இவர்கள்தான் அபூர்வ சகோதரர்களாம் (Mystical Brotherhood); தலைமைப் பூசாரி சொல்லுவதுதான் சட்டமாம்; இது முதலாம் உலக பாபிலோனிய ராஜ்யத் தலைநகரில் ஆரம்பமாகி, 2ம் சாம்ராஜ்யமான மேதிய-பெர்சியா வரை தொடர்ந்ததாம். அதற்குப்பின் கள்ள உபதேசம் புறப்படும் இடம், ஆதி அப்போஸ்தல காலத்தில் பெர்கமுக்கு மாற்றப்பட்டதாக அறிகிறோம் (வெளி. 2:13). ஆனாலும் அதுவரை இஸ்ரேல் சபைக்குள்ளேயோ, இயேசுவால் ஸ்தாபிக்கப்பட்ட, கிறிஸ்தவ சபைக்குள்ளேயோ (மத். 16:18; எபே. 2:14,15) முழுமையாய் பாபிலோனிய கள்ள உபதேசம் நுழையவுமில்லை; நுழைந்து பிரிவினையும் இல்லை. நிக்கொலாய் கொள்கைகள் (வெளி. 2:6), பிலேயாம் கொள்கைகள் (வெளி. 2:14), யேசபேலின் கொள்கைகள் (வெளி. 2:20) ஆங்காங்கே கிறிஸ்தவ சபையில் தலைதூக்கின. அவ்வளவுதான்.

கி.பி. 35ல் ஸ்தேவானின் கொலைக்குப்பின் கிறிஸ்தவர்களும், கி.பி. 70ல் எருசலேம் அழிவுக்குப்பின் இஸ்ரேலர்களும் சிதறடிக்கப்பட்டனர். அப்போது ரோமர் ஆட்சி. ஆதி அப்போஸ்தலர் காலத்தில், எருசலேம், அந்தியோகியா, ரோம், அலெக்சாந்திரியா போன்ற இடங்களில் தலைமையகங்கள் இருந்தன; அதன்பின் எருசலேம் இல்லாமல் மூன்றானது. சிதறடிக்கப்பட்ட ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் தங்கள் சத்தியத்தில் மாறாமல், ஆங்காங்கு சிறுசிறு கூட்டமாய், ஆட்சியாளர்களுக்கு பயந்து வாழ்ந்தனர். தமிழகத்திற்கு தோமா வந்து சத்தியத்தைப் பரப்பி மரித்தார். ரோம சாம்ராஜ்யத்தில் கிறிஸ்தவரல்லாத ராஜா ரோமில் இருந்தார். அங்கே கிறிஸ்தவ சபையும், சபைப் போதகரும், Bishop களும் இருந்தனர். Our doctrine refined from AD 100 by Ignatious of Antioch & Iranius. இந்த நிலையில் ஐரோப்பா, ஆசியா பகுதிகளில் உள்ள பிஷப்கள், கி.பி. 2ம் நூற்றாண்டில் SYNOD ஆரம்பித்தனர். அதிலே ரோமாபுரி பிஷப்தான் 3ம் நூற்றாண்டில் முதலிடம் வகித்தார்.

நாட்கள் ஆக, ஆக, புறஜாதி மக்கள் சபைக்குள் நுழைய, நுழைய, புறஜாதிகளிடமிருந்த பாபிலோனிய கொள்கைகள் சபைக்குள்ளேயே தலைதூக்கின. பாபிலோனிய தலைமைப் பூசாரி அட்டலஸ் மரிக்கும்போது, கி.பி.133ல் தன் பதவியை ரோமிலுள்ள பூசாரிக்கு கொடுத்தான். இதனால் ரோமில் அதிகமாய் பாபிலோனிய சடங்குகள் பெருகின. காலப்போக்கில் பூசாரியே, ரோம சாம்ராஜ்யத்தின் ராஜாவாகும் நிலை வந்தது. கி.பி. 376க்குப் பின்பு, ராஜபரம்பரைக்குள்ளும் கிறிஸ்தவம் புகுந்தது. கிரேஷியன் என்ற ரோம சக்கரவர்த்தி, கிறிஸ்தவ கொள்கை அடிப்படையில் பூசாரி காரியம் செய்ய ஒப்புக் கொள்ளாமல் வெளியேறினார். கர்மேல் பர்வதத்தில், பாபிலோனிய மதக்கொள்கை பயிற்சி நிலைய தலைமைக் குரு, தமாஸஸ் என்பவர் கி.பி. 378ல் ரோம சாம்ராஜ்யத்தின் ராஜாவாகவும் பூசாரியாகவும் ஆனார். புறஜாதி மக்களையும் கிறிஸ்தவர்களையும் வசப்படுத்தி, இரு சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்த விரும்பினார். **இவர் மூலமாக கிறிஸ்தவ மதத்தில் கீழ்க்காணும் கள்ள உபதேசங்கள் அதிகாரப்பூர்வமாய் உருவாகின.**

கி.பி. 381ல் கன்னிமரி தொழுகை (பாபிலோனிய வானத்து அரசி இஷ்டார்போல); கி.பி. 321ல் ஞாயிறு ஓய்வுநாள் சூரிய கடவுளை வைத்து; TAMUZ என்ற தெய்வப் பெயரிலுள்ள 'T' என்ற முதலெழுத்தை - கல்தேயர், எகிப்தியரின் மந்திர எழுத்தை - சிலுவை சின்னமாக்கப்பட்டது; பிரம்மச்சாரித்துவம் வந்தது; Celebesy - தலைமுடியின் சிறு பகுதியை ஒட்ட சவரம் செய்தல்; கன்னிமாட (Tonstute), சாமியார் மட ஏற்பாடு; Nuns உருவாக்கம் (பாபிலோனிய வீட்டுத் தேவதை வெஸ்டாவின் அடிமைகள் தேவதா கன்னிகைகள்) போன்றவை வந்தன. ரோம சாம்ராஜ்யம் உலகமெங்கும் இருந்ததால் இவைகள் விரைவாய்ப் பரவின. இதற்குமுன் ஆண்ட கான்ஸ்டான்டின் சக்கரவர்த்தி, சிலுவையை வானில் கண்டு ஜெயம் பெற்றதாக விசுவாசித்து, கிறிஸ்தவர்களுக்கு உதவினான். A.D. 312ல் கிறிஸ்தவ செயல்பாட்டை சட்டமாக்கி, A.D. 380ல் ராஜாங்க மதமாக கிறிஸ்தவம் பிரகடனப்படுத்தப்பட்டது. கான்ஸ்டாண்டின்ன் கிறிஸ்தவனாகி விட்டபடியால், இவன் மூலம் தான் குழந்தை ஞானஸ்நானம், கிறிஸ்மஸ் போன்றவையெல்லாம் தலைதூக்கின.

கி.பி. 364ல் ரோம சாம்ராஜ்யம் கிழக்கு, மேற்கு என்று இரண்டாய்ப் பிரிந்தது. மேற்கு சாம்ராஜ்யம் கி.பி. 476லும், கிழக்கு சாம்ராஜ்யம் கி.பி. 1453லும் வீழ்ந்து போயின. கி.பி. 325ல் நடந்த கிறிஸ்தவ நிசியா கவுன்சிலில், கிறிஸ்தவக்கூட்டம் (1) New Religions Arianism (2) Catholic Division to Mary என்று இரண்டாய் பிரிந்தது. மேற்கு

சாம்ராஜ்யம் வீழ்ந்தபின், கத்தோலிக் Faith வளர்ந்தது. கி.பி. 538ல் கிறிஸ்தவ மார்க்க போப் தலைமையில் உலகம் முழுவதும், கிழக்கு ரோம ராஜ்யத்தின் தலைமையின் ஆதிக்கத்திற்கு வந்தது. அப்போது ஆட்சியும், கிறிஸ்தவமும் இரண்டறக் கலந்து, இதுவரைக்கும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த பாபிலோனியக் கொள்கைகள் முழுவதுமாய் கிறிஸ்தவர்களுக்குள் நுழைந்தன. இந்த கிறிஸ்தவக் கூட்டமும் கி.பி. 1054ல், East Churches, West Churches என்று இரண்டாய்ப் பிரிந்தன; அதிலே West Churches, "கத்தோலிக்" என்ற பெயரை எடுத்துக் கொண்டன. இந்தக் கிரேக்க வார்த்தை முதன் முதலில் கி.பி. 110ல் St. Ignatious அவர்களால் சொல்லப்பட்டது (meaning: "UNIVERSAL").

16ம் நூற்றாண்டிலிருந்துதான் பாபிலோனியக் கொள்கையோடு ஆதி முதல் இலங்கிய, கிறிஸ்தவப் போர்வையுடைய போப் மாக்கத்திலிருந்து பலதரப்பட்ட சபைகள் உருவாகி, கள்ள உபதேசங்களைப் போதிக்க ஆரம்பித்து விட்டன. ஜான் விக்ளிப் என்பவரின் அறிவுரைப்படி, கி.பி. 1517ல் மார்ட்டின் லூத்தர் தலைமையில் லூத்தரன் சபையும், கி.பி. 1534ல் 8ம் ஹென்றி தலைமையில், ஆங்கிளிக்கன் (England Church-Episcopal) சபையும் கத்தோலிக்கிலிருந்து பிரிந்தன. இந்த ஆங்கிளிக்கன் சபையிலிருந்துதான், கி.பி. 1560ல் ஜான்கனாக்ஸ் தலைமையில், பிரிஸ்பிடேரியன் சபையும், 17ம் நூற்றாண்டில் சாமுவேல் சீபரி மூலம் அமெரிக்கன் புராட்டஸ்டண்டும், பிற்காலத்தில் CSI, CNI போன்ற சபைகளும், 1744ல் ஜான் மற்றும் சார்லஸ் வெஸ்லி மூலம் மெத்தடிஸ்ட் சபையும், 1606ல் ஜான் ஸ்மித் மூலம் பேப்டிஸ்ட் சபையும் உருவாயின. மெதடிஸ்ட் சபையிலிருந்து, அட்வென்டிஸ்ட் சபைகளும், Pentecostalism (Holiness movement) சபைகளும் உருவாயின. கிறிஸ்டியன் சயின்ஸ், மர்மன் சர்ச் ஆப் கிரைஸ்ட், வேதமாணாக்கர், யேகோவா விட்னஸ், சால்வேஷன் ஆர்மி, சர்ச் ஆப் நசரேன், கிறிஸ்துவின் சபை, பெந்தேகாஸ்டல் சபை, ஒன்லி ஜீசஸ், சாத்தான் சபை போன்ற பல சபைகள் தொடர்ந்து உருவாயின. ஆதி அப்போஸ்தல காலத்திற்குப்பின் கி.பி. 1905 வரை உருவான எல்லா சபைகளிலுமே கள்ள உபதேசங்கள் பெருகியிருக்கின்றன. பாபிலோனியக் கொள்கை பதிந்து கிடக்கின்றன.

சிறுசிறு கூட்டமாய் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டு வாழ்ந்த ஆவிக்குரிய கிறிஸ்தவ கூட்டத்தார்தான் உண்மையான சபையார் என்றும், அவர்கள் மூலம்தான் 1905ல் பின்மாரி ஊற்றப்பட்டு கிறிஸ்தவ மார்க்கமாய் தேவனால் அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றது என்றும் நாமறிவோம்! அந்தக் கூட்டத்தார்தான் நாம். இந்தக் கூட்டம்தான் ஆவிக்குரிய பெந்தகொஸ்தே சபை என்று பெயர் கொண்டுள்ளன. இங்கும் கள்ள உபதேசம் வளர்ந்து வருகிறது.

# இத்தனை சபைகள் எப்போது எழும்பின?

மத்.16:18ன் படி, இயேசுவாகிய பாறையின் மேல், தன் சபையைக் கட்டுவேன் என்று சொன்னார். அன்று வரை பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் அறியாத இந்த சபை, இந்த வார்த்தைக்குப் பிறகும் இரகசியமாகவே இருந்தது. ஒருவரும் அதைப்பற்றி உணர்வாரில்லை. எபே.2:15ஐப் பார்த்தால் இந்த சபையாகிய புதிய மனுஷன், 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணத்தை உடைய இஸ்ரேலரையும், நியாயப் பிராமணமே அறியாத புறஜாதி மக்களையும் இணைக்கும் படியாய், இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் சிருஷ்டிக்கப்பட்டதாய் அறிகிறோம். இது உண்டாக்கப்பட்ட (making) சபை அல்ல, மறுமலர்ச்சி (Reformation or Revived) சபை அல்ல, சிருஷ்டிக்கப்பட்ட (Created) சபை. ஆனாலும் ஒருவரும் இதை உணரவில்லை. பெந்தகொஸ்தே நாளில்,. பேதுருவின் பிரசங்கத்தின் போது 3000 பேர் இரட்சிக்கப்பட்டு இந்த சபையில் சேர்க்கப்பட்டும் (அப்.2:47) முதன் முதலில் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கப்பட்டும் (அப்.11:26), எபே. 2:19-3:36ன்படி பவுல் இந்த இரகசியத்தை வெளிப்படுத்திய பிறகு தான், கிறிஸ்தவ வட்டாரம் உண்மையை உணர்ந்தது. அதன் படி இந்த கிறிஸ்துவின் சபை பல இடங்களில் எபேசு சபை, பெர்கமு சபை, தீயத்ரா சபை, சிமிர்னாசபை, சர்தை சபை, பிலதெல்பியா சபை, லவோதிக்யா சபை என்று ஊர்ப் பெயர்களிலும், தேவனுடைய சபை (1 கொரி.1:1). ஜீவனுள்ள தேவனுடைய சபை (1 தீமோ. 3:15). கெங்கி ரேயா ஊர் சபை (ரோ.16:1). கிறிஸ்துவின் சபை (ரோ.6:16) என்று பல பெயர்களிலும், ஆதி அப்போஸ்தலர் காலத்தில் நிலவி வந்தது. காலங்கள் போகப் போக, கிரேக்கர்கள் மற்றும் புறஜாதியினர் சபைக்குள் நுழைய நுழைய, ரோம ஆட்சியாளரின் ஆதிக்கத்தின் கீழ் இந்த சபை கொண்டு வர, கொண்டு வர, இயேசு உருவாக்கிய ஆதிக்கிறிஸ்தவ சபையின் மூலத்தன்மை (Originality) படிப்படியாய் மாற ஆரம்பித்தது. இதனால் ஏராளமான, சபைகள் தாராளமாய் உருவாயின, இன்றும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இதனால் சாத்தானிசம் வலுப்பெற்று, கள்ள உபதேசங்கள் பெருகி, கிறிஸ்தவம் (Christianity) பல வழிகளில் கெடுக்கப்பட்டது. இப்படி பல சபைகள் எழும்பியதால், ஆவியானவரால் நடத்தப்படும் அடிப்படை மூல உபதேசமுடைய (எபி.6:1,2) கிறிஸ்தவர்கள், சிந்தித்து செயல்பட ஆரம்பித்தனர். அப்படிப்பட்ட மீதியான (Remenent) சபையாரின் ஆவி தான் இன்று கடைசி கால விடுதலை முழக்கமாய், வசன

முழக்கமாய், விசுவாச முழக்கமாய் விளங்குகிறது என்பதை சொல்வதிலே கர்த்தருக்குள் மிகவும் களி கூருகிறேன். அல்லேலூயா!


ரோம சர்க்காரின் ஆதிக்கத்திலிருந்து உருவான முதல் பெரிய சபை தான் கத்தோலிக்க கிறிஸ்தவ சபை. இது கி.பி.538ல் போப் தலைமையில் முழுமையாய் வெளிப்பட்டது. கி.பி.1517ல் மார்ட்டின் லூத்தர் தலைமையில் லூத்தரன் சபையும் 1534ல், 8ம் ஹென்றி, தலைமையில் இங்கிலாந்து சபையும் (Anglican), 1560ல் ஜான்கனாக்ஸ் மூலம் பிரிஸ்பிடேரியன் சபையும், 17ம் நூற்றாண்டில் சாமுவேல் சீபரி தலைமையில் அமெரிக்கன் புராட்டஸ்டண்ட் சபையும், கி.பி.1744ல் ஜான் மற்றும் சார்லஸ் வெஸ்லி தலைமையில் மெத்தடிஸ்ட் சபையும், 1606ல் ஜான் ஸ்மித் மூலம் பேப்டிஸ்ட் சபையும், 1865ல் வில்லியம் பூத் தலைமையில் சால்வேஷன் ஆர்மி (இரட்சணிய சேனை) சபையும், உருவாயின. இந்த சபைகளிலிருந்து உருவான ஆங்ளிகன், Children of God, Christian Science, Mormon, Unitarion, டச்ரிபார்ம்டு சர்ச், சி.எஸ்.ஐ., சி.என்.ஐ, போன்ற பல சபைகளையும் கூறலாம்.

20ம் நூற்றாண்டில் தான் ஏராளமான சபைகள், பலதரப்பட்டவர்களால் பல இடங்களில் உருவாக்கப்பட்டன. **அவைகளில் ஒருசில சபைகளாவன:-** சர்ச் ஆப் நசரேன், அசெம்பளி ஆப் காட், பெந்தகொஸ்தே காஸ்பல் சபை, பரிசுத்த சபை, யேகோவா சாட்சிகள் சபை, ஏழாம்நாள் அட்வெந்த்சபை, ஒன்லி ஜீசஸ் சபை, புதிய எருசலேம், இசிஐ, சிபிஎம் போன்ற பெந்தகொஸ்தே சபைகள், கர்ச் ஆப் காட், கிறிஸ்துவின் சபை (Church of Christ) போன்ற பல சபைகளைக் குறிப்பிடலாம்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நீ மேற்கண்ட எந்த சபையில் உறுப்பினராய் இருந்தாலும், முதலில் அந்த சபை, எபி.6:1,2ன் படியான அடிப்படை மூல உபதேசத்தை உடையதா என்று பார். இல்லையேல் அப்.2:40ன் படி மாறுபாடுள்ள அந்த சபையை விட்டு உடனே வெளியேறி உன்னை நீயே இரட்சித்துக்கொள். இது கடைசிகாலம்.

ஏமாந்து போகாதே! மூல உபதேசத்திற்கும் மேலே, ஆரோக்கியமான மற்றும் சரியான உபதேசமுள்ள சபைகள் ஏதுமில்லை. எனவே அடிப்படைச் சத்தியமுள்ள சபையில் இருந்து கொண்டே சரியான உபதேசங்களை கற்றுக் கொள், மற்றவர்களுக்கு கற்றுக்கொடு. இயேசு சீக்கிரம் வருகிறார்!

❖ ❖ ❖


4 Anabaptists
3 Continental Reformed Churches
Calvinism
5 Presbyterians
Baptists
Congregationalists
Puritans / Separatists
2 Anglicanism
1 Methodists
3 Adventists
2 Holiness movement
4 Pentecostalism
Only Jesus
Pietism
1 Lutherans
1500
16th
1600
17th
1700
18th
1800
19th
1900
20th
2000

# திருச்சபை சரித்திரம்

நமது கிறிஸ்தவ சபை என்பது, இஸ்ரேல் சபையின் மறுமலர்ச்சி சபை அல்ல; அல்லது புதிய கொள்கைகளோடு செயல்படுகிற பழைய சபை அல்ல. எபே. 2;14ன் படி, சிலுவையிலே இயேசு, இஸ்ரேலர் - புறஜாதிகள் ஆகியோரை இணைத்து ஒருபுதிய மனுஷனை - ஒரு புதிய சபையை - சிருஷ்டித்தார். (எபே. 2:14,15). இதைத் தான் மத்.16:18 சொல்கிறது. கிறிஸ்தவ சபை இயேசுவின் மேல் கட்டப்பட்டது; பேதுருவின் மேல் அல்ல (மூல பாஷையில் வாசித்தறியுங்கள்). இந்த கிறிஸ்தவ சபையின் இரகசியத்தை பவுல் தான் வெளியாக்கினார் (எபே.2:29-3:6). இந்த கிறிஸ்தவ சபை சிலுவையில் சிருஷ்டிக்கப்பட்டாலும், பெந்தகோஸ்தே நாளில் தான் உருவானது. அப்போஸ்தலர் காலத்தில் தான், இயேசுவைப் பின்பற்றுகிற - புது உடன்படிக்கையின் கூட்டத்தாருக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயர் அந்தியோகியாவில் வழங்கப்பட்டது (அப்.11:26). இந்த கிறிஸ்தவர்களின் கூட்டம் தான் கிறிஸ்தவ திருச்சபை. கி.பி.35ம் ஆண்டுக்கு மேலே, ஸ்தேவான் கல்லெறியுண்டு மரித்தபின் எருசலேமிலுள்ள கிறிஸ்தவ சபையார் சிதறடிக்கப்பட்டனர். உலகின் பல பகுதிகளுக்கும் சபையார் ஓடினர். அப்படி ஓடி வந்தவர்களில் இந்தியாவுக்கு வந்தவர் தான் தோமா. ஆரம்பத்தில் யூதஜாதிக்குத் தான் இந்த சபை உரியது என்ற நிலை இருந்தது (அப்.10:44-48). சவுலாகிய பவுலை தேவன் தெரிந்து கொண்டு, புற ஜாதிகளுக்கென்றே நியமித்தார். (அப்.9:15). அந்த காலக்கட்டத்தில் பேதுருவும், யோவானும், யாக்கோபும் எருசலேமைத் தலைமை இடமாகக் கொண்டு சபைகளை கண்காணித்து வந்தனர்.

புறஜாதிகள் மத்தியிலே சபை விரிவாய்ப் பரவியது. வெளி. 2,3 அதிகாரங்களை வாசித்தால், முதலாம் நூற்றாண்டுக்குள்ளேயே, எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்திரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா போன்ற இடங்களில் பெரிய சபைகள் எழும்பியதாக அறிகிறோம். நமது திருச்சபையின் சரித்திரம் அப்போஸ்தலர் நடபடிகையில் ஆரம்பமாகி இன்று வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது (வீடுகளில் ஆரம்பித்து, சபை கூடாரங்களில் சபைகள் கூடி வந்தன). இது இயேசுவின் வருகை வரை நீடிக்கும். ஆமென்! அல்லேலூயா! நான்காம் சாம்ராஜ்யமான ரோம சாம்ராஜ்யம் அந்த கால கட்டத்தில் தலைதூக்கி நின்றது. அவர்களின் கலாச்சாரம், பண்பாடு, வாணிகம் போன்ற எல்லாமே உலகமெங்கும் பரவிக் கிடந்ததால் ரோமசர்க்காரின் ஆளுகை அதிகமாய்க் காணப்பட்டது. இந்த நிலையில் தான் ரோமக் கிறிஸ்தவர்களை வைத்து, ரோம சர்க்கார் கிறிஸ்தவ சபையை தன்கையில்

வைத்துக் கொள்ள ஆரம்பித்தது, ஆனாலும் அது இன்று வரை வெற்றியடையவில்லை. உலகமெங்கும் சிறுசிறு கூட்டங்களாய் தேவனை ஆராதித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களை பல ஆளுநர்களும் பல சமுதாயக் கழகங்களும் துன்புறுத்தி அழிக்க நினைத்தன. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே தலைவராகக் கொண்டுள்ள கிறிஸ்தவ சபை யாருடைய கட்டுப்பாட்டுக்குள்ளும் இருந்தது இல்லை. பலர் நினைப்பது போல நமது திருச்சபை, கத்தோலிக்க திருச்சபை என்று இருந்தது என்றும், அதிலே தேவ பிள்ளைகளை கொன்று குவித்தார்கள் என்றும், அந்த காலம் சபை சரித்திரத்தில் இருண்ட காலம் என்றும், அந்த சபையிலிருந்து மார்ட்டின் லூத்தர் என்பவர் புரட்சி செய்து வெளியேறி சீர்த்திருத்த சபை உருவாக்கினார் என்றும், அதன் பின் ஜான் வெஸ்லி, பேப்டிஸ்ட் போன்ற பல ஊழியர்களால் ஸ்திரப்படுத்தப்பட்டு, இன்றைய நிலைக்கு வளர்ந்து வந்திருக்கிறது என்றும் கருதிட வழியே இல்லை. **(அவர்களுடைய சபைகளெல்லாம் லூத்திரனிலிருந்து வந்தவை அல்ல; அவைகள் ஆங்கிளிகன் பிரிவிலிருந்து வந்தவை).**

காரணம் என்ன? உலகமெங்கும் துண்டு துண்டாக கிடந்த கிறிஸ்தவ சபையானது, ரோமன் கத்தோலிக்க சபை, மார்டின் லூத்தரன் சபை, மெதடிஸ்ட் சபை, பாப்டிஸ்ட் சபை போன்ற சபைகளுக்கு கீழேயிருந்து வளர்ந்தது என்றால் - நமது திருச்சபை சரித்திரத்தில் இந்த சபைகளும் பெரும் பங்கு வகித்தன என்றால், இந்த சபைகளையும் கிறிஸ்தவ ஆவிக்குரிய சபைகள் என்று ஏற்றுக் கொள்ள வேண்டுமே! எபி.6:1,2ன் படியான மூல உபதேசமுள்ள சபைகளாய் இவைகள் எப்போதாவது இருந்தனவா? அப்படி இல்லாத பட்சத்தில் அவைகளை எப்படி, கிறிஸ்தவ சபைகள் என்று சொல்ல முடியும்? சிந்தியுங்கள். தற்காலத்தில், Children of God, Only Jesus, யோகோவா விட்னஸ், 7ம் நாள் போன்ற சபைகள் உருவாவது போல, கத்தோலிக்க சபை, சி.எஸ்.ஐ. லூத்தரன் போன்ற சபைகள், நமது சபையில் அல்ல; நமது சபை சரித்திரத்தில் அவை தொல்லைகளை உருவாக்கியவை என்று வேண்டுமானால் சொல்லலாம். அவைகளும் கிறிஸ்தவ சபைகள் என்றால், "திராவிட சமயம்" ஆசிரியர் சொல்வது போல, தோமாவுக்குப் பின் நம் நாட்டில் வெளியான சைவ, வைஷ்ணவ இந்து சபைகளையும், கிறிஸ்தவ சபைகள் என்று ஏற்று, திருச்சபைச் சரித்திரத்தில் சேர்க்க வேண்டுமே!

இப்படியாய், உலகம் முழுவதும் பற்பல இடங்களில் உண்மைக் கிறிஸ்தவர்கள் - கிறிஸ்தவ சபையார் - தேவனை ஆராதித்து வந்தார்கள். இப்படி ஆராதித்து வந்தவர்களுக்கு ஒட்டு மொத்தமான தலைமையிடம் பூமியில் எங்குமே இல்லை. தற்போதும் அப்படித்தானே உள்ளது. பல

குழுக்கள், சங்கங்கள், அரசாங்கங்கள், சன்மார்க்கர்கள் மூலம் அவ்வப்போது கிறிஸ்துவின் சத்தியத்தை பகிரங்கமாய் வெளிக் கொணர தேவன் அவர்களை தெரிந்து கொண்டார். பார்வேனைத் தெரிந்து கொள்ளவில்லையா? (ரோ.9:17) அப்படித்தான். இந்த நிலையில் 1905ம் ஆண்டு பரிசுத்த ஆவியானவரின் வல்லமை உலகிலே 5 இடங்களில் ஊற்றப்பட்டது. அதன் பின்பு தான் பெந்தகொஸ்தே என்ற பெயரில் சபைகள் பெருமளவில் உருவாயின. இயேசுவின் இரகசிய வருகை வரை இந்த சபைகள் இருக்கும். இந்த சபைகள் சத்தியத்தில் நிலை நிற்கத்தான் 5 விதமான ஊழியங்களை தேவன் தந்திருக்கிறார் (எபே.4:13). வருகை தாமதமானால் ஆவிக்குரிய சபையாராகிய நாமும் இந்த திருச்சபை சரித்திரத்தில் முக்கிய இடம் பெறுவோம். ஆமென்.

❖ ❖ ❖

# கள்ள உபதேச சபைகள்

## (1. கிறிஸ்துவின் சபை)

கடைசி நாட்களில் ஏராளமான கள்ள உபதேச சபைகள் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சித்துக் கொண்டிருக் கின்றன. இப்படிப்பட்ட சபைகளில் உள்ள கள்ள உபதேசங்களை ஒவ்வொன்றாய் ஆவியானவர் சொல்ல, காதுள்ள நாம் கேட்போம். இம்மாதம் **கிறிஸ்துவின் சபையிலுள்ள** (Church of Christ) கீழ்க்கண்ட கள்ள உபதேசங்களைப் பார்ப்போம்.

1. ரோ.16:16ன் படி கிறிஸ்துவின் சபை என்ற பெயருள்ள சபைதான் கிறிஸ்தவ சபை. மற்றப் பெயருள்ள சபைகளெல்லாம் கிறிஸ்தவ சபைகள் அல்ல.
2. ஞானஸ்நானம் எடுக்கும்போது எல்லோரும் பரிசுத்த ஆவி பெற்றாயிற்று. தற்கால அந்நிய பாஷை எல்லாம் வெறும் பொய்.
3. அற்புதங்கள் நடக்கின்றன என்று சொல்வதெல்லாம் ஏமாற்று வேலை. அப்போஸ்தலர் காலத்தோடு அவைகள் முடிந்துவிட்டன.
4. சபையில் கைதட்டிப் பாடுவதோ இசைக்கருவிகள் வாசிப்பதோ கூடாது.
5. ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளில்தான் அப்பம் பிட்க வேண்டும். மற்ற நாட்களில் பிட்கக் கூடாது.

6. முழுக்கு ஞானஸ்நானம் பெற்றால்தான் மறுபிறப்பு - இரட்சிப்பு - அடைந்ததாக அர்த்தம். அப்போதுதான் பாவம் அழிந்து போகிறது.
7. மணவாளன் நம்மோடு இருப்பதால், கிறிஸ்தவன் உபவாசம் இருக்கக்கூடாது.
8. பூ வைப்பதோ, பொட்டு வைப்பதோ, சினிமா பார்ப்பதோ தவறே இல்லை.
9. சபையிலே பாஸ்டர் பதவியே கிடையாது, பிரதர் பதவிதான் உண்டு.

இன்னும் பலப்பல!

**(குறிப்பு:** இது குறித்து ஆசிரியரோடு கலந்து பேச யாராவது விரும்பினால் நேரம், தேதி, இடம் குறிப்பிட்டு அழைத்தால் இலவசமாய் வந்து விளக்கமளிக்க தயார்)

❖ ❖ ❖

# கள்ள உபதேச சபைகள்

## (2. ஏழாம் நாள் அட்வெந்து சபை)

வேத வசனத்தை தவறாய்ப் போதிக்கும் பல சபைகளிலே ஒன்றான ஏழாம் நாள் அட்வெந்து சபையிலுள்ள ஒரு சில கள்ள உபதேசங்களை மட்டும் அறிந்து கொள்ளுங்கள்.

1. சனிக்கிழமையாகிய ஓய்வுநாளை ஆசரிக்காதவர்கள் 666 முத்திரையைத் தரித்துக் கொண்டிருப்போர். சனிக்கிழமையை ஆசரித்தால் மட்டுமே பரலோகம் போக முடியும்.
2. ஆத்மா என்ற ஒன்று கிடையாது.
3. நரகம் என்ற ஒன்று இல்லை. கடைசி நாளில் உலகை அக்கினியால் தேவன் அழிப்பாரே அதுதான் நரக ஆக்கினை
4. இயேசு கிறிஸ்து 1844 ஆம்ஆண்டுதான் பிதா இருக்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்திருக்கிறார். தானி. 8:13ன் விளக்கம்இதுதான்.
5. போப்தான் அந்திகிறிஸ்து. கி.பி. 538லிருந்து நடக்கும் இந்த அந்திகிறிஸ்துவின் ஆட்சியில்தான் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இந்த ஆட்சியின் இனி வரப்போகும் யாக்கோபின் இக்கட்டு காலத்திலும் இவர்கள் இருப்பார்கள். அப்போதுதான் யோவேல் 2:28ல் சொல்லப்பட்டது அவர்கள் மூலம் நிறைவேறும்.

6. மீதமான சபையார் நாங்கள்தான். 1,44,000 பேர் நாங்கள்தான்.
7. ஆயிர வருட அரசாட்சி பூலோகத்தில் இல்லை. பரலோகத்தில்தான்.
8. சபையை எடுத்துக் கொள்ளும் இரகசிய வருகை கிடையாது.
9. கிறிஸ்தவ சபை என்ற ஒரு சபையை இயேசு உருவாக்கவில்லை. இஸ்ரேல் சபையின் மறுமலர்ச்சியே கிறிஸ்தவ சபை.
10. மோசேயின் நியாயப் பிரமாணம் மாத்திரம் ஒழிந்துவிட்டது. 10 கற்பனை ஒழியவில்லை.
11. தனி.9:27ல் சொல்லப்பட்டது அந்திகிறிஸ்து அல்ல, இயேசுதான்.
12. இரட்சிக்கப்பட்டேன் என்று யாரும் சொல்ல முடியாது.
13. இயேசுவை ஏற்றுக் கொண்டபோதே பரிசுத்த ஆவியைப் பெற்று விட்டோம்.
14. தற்போது பெந்தெகொஸ்தே மக்களால் பேசப்படும் அந்நிய பாஷை தவளையின் பாஷை.
15. தற்போது நடப்பதாக சொல்லப்படும் அற்புதங்கள் எல்லாம் பொய், கடைசி நாட்களில் பின்மாரி ஊற்றப்பட்டு நாங்கள்தான் அற்புதம் செய்வோம்.
16. காபி, டீ குடிக்கக் கூடாது. கறி, மீன் சாப்பிடக்கூடாது.
17. பரதீசு, பாதாளம், என்பதெல்லாம் இல்லை.
18. மரித்தவர்களின் ஆவிகள் எல்லாமே தேவனிடம்தான் போய் இருக்கின்றன.
19. கழுத்திலே ஒரே ஒரு செயின் மட்டும் போடலாம். வேறே எந்த நகையும் போடக் கூடாது. தாலி கட்டிக் கொள்ளலாம்.
20. வெளி.12:14; 13:5; போன்ற காரியங்களெல்லாம் கி.பி.538-1798 வரை நடந்ததாகும்.

இன்னும் பல....

தேவனுடைய பிள்ளைகளே அடையாளம்கண்டு கொள்வீர் (மத்.28:20: 3 யோ.9, 11; யோ.3:3-8: 1 யோ.4:3)

**(குறிப்பு:** இது குறித்து ஆசிரியரோடு கலந்து பேச யாராவது விரும்பினால், நேரம், தேதி, இடம் குறிப்பிட்டு அழைத்தால் இலவசமாய் வந்து விளக்கமளிக்க தயார்).

❖ ❖ ❖

# கள்ள உபதேச சபைகள்

## (3. "யேகோவா சாட்சிகள் சபை")

யேகோவா விட்னஸ் சபையிலுள்ள முக்கியமான கள்ள உபதேசங்களை அறிந்து கொள்ளுங்கள்.

1. இயேசு கிறிஸ்து தேவனல்ல, அவர் சிருஷ்டிக்கப்பட்டவர்.
2. பரிசுத்த ஆவி என்பது ஒரு ஆட்தத்துவமுள்ள தேவனல்ல, அது ஒரு தேவ சக்தியாகும்.
3. இரட்சிக்கப்பட்டேன் என்று ஒருவனும் சொல்லமுடியாது; முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.
4. ஆத்மா என்ற ஒன்று இல்லை.
5. பாதாளம், நரகம், பரதீசு என்றெல்லாம் ஒன்றுமில்லை. மரித்தபின் மனிதனின் நிலை கல்லறையில்தான். அக்கினியால் தேவன் உலகை அழிப்பாரே அதுதான் நகரம். அதன்பின் ஆதிப்பெற்றோர் இழந்துபோன, ஏதேன் என்னும் பரதீசை தேவன் குடும்பமாய் மனிதனுக்கு வாழக்கொடுப்பார்.
6. இப்போது கிறிஸ்துவின் ராஜ்யம் நடந்து கொண்டிருக்கிறது. இயேசு பூமிக்கு வந்துவிட்டார். எனவே சத்தியமில்லாத கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே சத்தியம் சொல்ல வேண்டும்.
7. இராப்போஜன ஆராதனையில் அப்பமும் ரசமும் உட்கொள்ளக்கூடாது.
8. இரகசிய வருகையோ, பூமியில் 1000 வருட ஆட்சியோ கிடையாது.
9. மீதமான சபை இதுதான், 1,44,000 பேர் இவர்கள்தான்.
10. பெந்தகொஸ்தே மக்களால் பேசப்படும் அந்நிய பாஷை அந்நிய பாஷையே அல்ல.
11. இயேசுவை ஏற்றபோதே பரிசுத்த ஆவி பெற்றாயிற்று.
12. தற்போது நடப்பதாகச் சொல்லப்படும் அற்புதங்கள் எல்லாம் பொய். இன்னும் பலப்பல. தேவனுடைய பிள்ளைகளே! அடையாளம் கண்டு கொள்வீர்!

(**குறிப்பு:** இது குறித்து ஆசிரியரோடு கலந்து பேச யாராவது விரும்பினால், தேதி, நேரம், இடம் குறிப்பிட்டு அழைத்தால் இலவசமாய் வந்து விளக்கமளிக்கத் தயார்.)

# கள்ள உபதேச சபைகள்

## (4. இயேசு நாமக்காரர் சபை)

ஒன்லி ஜீஸஸ் - இயேசுவின் நாமம் - சபையிலுள்ள கள்ள உபதேசங்களைப் பார்ப்போம்.

1. திரித்துவம் என்பது கிடையாது.
2. இயேசுதான் பிதா, இயேசுதான் பரிசுத்த ஆவியானவர், இயேசு மட்டுமே தேவன்.
3. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமம் இயேசு.
4. இயேசுவின் நாமத்தினால் தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்காதவர்கள் அந்திகிறிஸ்துக்கள், இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறாத எவரும் பரலோகம் போகமாட்டார்க்ள.
5. நாமம் என்றாலே பெயர் என்று தான் பொருள். தேவனின் பெயர் இயேசுதான்.
6. **இதிலே பல கொள்கைப்பிரிவுகள் உள்ளன. அதிலே ஒரு கூட்டம் சொல்வதாவது:** அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவி பெற வேண்டும் என்பது பொய்; தற்காலத்தில் பேசுகிற அந்நிய பாஷை எல்லாம் பொய்யின் பாஷை.
7. **இன்னொரு கூட்டம் சொல்வதாவது;** ஏசா.9:6ல் சொல்லப்பட்ட பாலகன் இயேசு. குமாரன் என்பவர் பிரன்ஹாம்; இவர்தான் 2ம் வருகைக்கு முன் வந்த 7ம் தூதனாம் எலியா. இந்த "பிரன்ஹாம் இயேசு" தான் மறுபடியும் வரப்போகிறார்.
8. இரகசிய வருகை என்பது கிடையாது.
9. ஆவிகளும் பெண்களோடு உடலுறவு கொள்ளும். ஆவிகளுக்கும் வித்து உண்டு. அந்த வித்தில் குழந்தைகளும் பிறக்கும். அப்படியாய் பிசாசினால் உண்டானவன்தான் காயீன், ஏசா, யூதாஸ் போன்றோர்.
10. ஏதேனில் உண்டான மூலப்பாவம், பிசாசானவன் ஏவாளை உடலுறவு கொண்டு காயீனைப் பெற வைத்தாகும். இதுதான் "கனியைப் புசித்தல்" என்று எழுதப்பட்டுள்ளது.
11. நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் நொறுக்கப்பட்டவர், (ஏசா.53:5) ஆக்சிடெண்டில் தேவசித்தப்படி எலும்புகள் நொறுக்கப்பட்டு மரித்த

பிரன்ஹாம் தான்; மற்றப்படி இயேசுவின் எலும்புகள் நொறுக்கப்படவில்லையே!

12. பாலாசீர் லாரிதான் மனுஷகுமாரன்; இயேசு அல்ல.

13. பாலாசீர் லாரிதான் கிறிஸ்து.

இப்படி ஏராளம்.... ஏராளம்..... தேவனுடைய பிள்ளைகளே! அடையாளம் கண்டு கொள்வீர்!

**(குறிப்பு:** இது குறித்து ஆசிரியரோடு கலந்து பேச யாராவது விரும்பினால், தேதி,நேரம், இடம் குறிப்பிட்டு அழைத்தால் இலவசமாய் வந்து விளக்கமளிக்கத் தயார்.)

❖ ❖ ❖

# கள்ள உபதேச சபைகள்

## (5. "ரோமன் கத்தோலிக்க சபை")

ரோமன் கத்தோலிக்க சபையிலுள்ள கள்ள உபதேசங்களைப் பார்ப்போம் (மார்த்தோமா, சிரியன் கத்தோலிக், யாக்கோபைட் போன்ற சபைகளின் உபதேசமும் இதையே ஒத்திருக்கும்)

1. குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்.
2. சின்ன குறிப்பிடம் என்ற சபையின் ஜெபப்புத்தகத்தை படித்த பின் புது நன்மை எடுப்பது என்ற சடங்கின் மூலம் இராப்போஜனம் எடுக்கலாம்.
3. பரிசுத்த ஆவி பெற்றதற்கு அடையாளமாய் உறுதிப்பூசுதல் என்று, மேற்றிரணியாரின் (Bishop - ஆண்டவர்) ஆசீரோடு மோதிரக் கொட்டு பெற்றால் போதும்.
4. சபை மேய்ப்பரிடம் பாவங்களை இரகசியமாய் அறிக்கையிட்டு, மன்னிப்பு பெற வேண்டும்.
5. சிலைகளை உருவாக்குவதும் நமஸ்கரிப்பதும் தவறில்லை.
6. மரியாள் அவ்வப்போது பல்வேறு இடங்களில் பல்வேறு பெயர்களில் வெளிப்பட்டு அற்புதம் செய்கிறார்கள்.
7. மரியாள் உயிரோடே பரலோகம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவரிடம் நேரடியாய் ஜெபிக்க வேண்டும்; அவரை வணங்க வேண்டும்.

8. சின்ன குறிப்பிடம் என்ற சபை புத்தகத்தில் 10 கற்பனையில் உள்ள 2ம் கற்பனை இல்லை. பதிலாக 10ம் கற்பனை இரண்டு கற்பனையாக்கப்பட்டுள்ளது. ஓய்வு நாளாகிய சனிக்கிழமையை ஆசரிக்க வேண்டும் என்ற 4ம் கற்பனையை மாற்றி ஞாயிறு தான் ஒய்வு நாள், அதைத்தான் ஆசரிக்க வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளது.

9. பத்து கற்பனை கிறிஸ்தவனை ஆள்கிறது. நடத்துகிறது.

10. ஊழிய ஆண் பெண் இருபாலரும் திருமணம் செய்யக் கூடாது. அவர்களுக்கென்று உள்ள ஊழிய உடைகளையே அணிய வேண்டும்.

11. மரித்தப் பின்தான் போப்பின் விருப்பப்படி ஒரு சிலருக்கு "அர்ச்சிஸ்டவர்" அதாவது புனிதர் (Saint) பட்டம் கொடுக்கப்படும்.

12. பைபிளை யாரும் படிக்கக்கூடாது என்ற நிலை மாறி, படிக்கலாம் என்று வந்தாலும் பைபிளின் வார்த்தைக்கும் மேலாய், போப் என்ன சொல்கிறாரோ அதுதான் ஜீவவார்த்தை.

13. அப்போஸ்தலர், புனிதர், மரியாள், இயேசு ஆகியோருக்கு சிலை வைத்து வணங்க வேண்டும். தேர்கள் உருவாக்கி ஜோடித்து, அழைத்துச் செல்ல வேண்டும். இவர்களுக்கு என திருவிழாக்கள் கொண்டாட வேண்டும்.

14. உத்தரிக்கிற ஸ்தலம் (Purgatory) என்ற ஒன்று உண்டு. இதில் உள்ளவர்களுக்காய் ஜெபித்தால் தான் அவர்கள் பரலோகம் போவர்.

15. அந்நியர்களோடு சேர்ந்தும் கூட ஆராதனை செய்யலாம்.

16. ஜெபமாலை வைத்து ஜெபிப்பது மிக முக்கியம்.

17. சிலுவை ஒரு புனித சின்னமாகும். சிலுவையை வைத்து செயினோ, கயிறோ, கழுத்தில் போட வேண்டும். அதிலே ஒன்றுதான் உத்திரியம்.

18. மாதா திருவிழா, உத்தரிக்கிற ஆத்மாக்கள் திருவிழா, பஸ்கா பண்டிகை, ஈஸ்டர், கிறிஸ்துமஸ், 3 ராஜாக்கள் பண்டிகை, புனிதர் பண்டிகை. அந்தோணியார் பொங்கல் போன்ற பல பண்டிகைகளை கொண்டாடலாம்.

19. மரியாள் மற்றும் புனிதர்களுக்கு ஆடு, கோழி போன்ற பலி செலுத்தலாம்.

20. புனிததர்களை நோக்கியும் ஜெபித்து ஆசீர் பெறலாம்

21. வருடாவருடம் 40 நாள் தபசுகாலம் ஆசரிக்க வேண்டும்.

இப்படி ஏராளம்......... ஏராளம்.......... தேவனுடைய பிள்ளைகளே! அடையாளம் கண்டு கொள்வீர்!

(**குறிப்பு:** இது குறித்து ஆசிரியரோடு கலந்து பேச யாராவது விரும்பினால், தேதி, நேரம், இடம் குறிப்பிட்டு அழைத்தால் இலவசமாய் வந்து விளக்கமளிக்கத் தயார்.)

❖ ❖ ❖

# கள்ள உபதேச சபைகள்

## (6. "சி.எஸ்.ஐ; ஆங்கிளிக்கன்; லூத்தரன் போன்றவை)

சி.எஸ்.ஐ, சி.என்.ஐ, லூத்திரன், ஆங்கிலிக்கன் போன்ற புராட்டஸ்டண்ட் சபைகளில் உள்ள கள்ள உபதேசங்களைப் பார்ப்போம்.

1. குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்.
2. குழந்தை ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு மறுபடி ஞானஸ்நான மில்லை; வெளியிலிருந்து வரும் பெரியவர்களுக்கு தேவைப்பட்டால் முழுக்கு ஞானஸ்நானம்; இல்லையேல் பாரம்பரியப்படி தெளிப்பு ஞானஸ்நானம்.
3. பிஷப் மூலமாய் திடப்படுத்தல் பெறுவது என்பது இரட்சிப்புக்கும் பரிசுத்தஆவி பெற்றதற்கும் ஒத்ததாகும்.
4. ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாய் ஆசரிக்க வேண்டும்.
5. பூ வைப்பதோ நகை போடுவதோ தவறில்லை; பொட்டு வைப்பதுதான் பாவம்.
6. All saints Day என்று சொல்லி ஒரு நாள், ஆண்டுதோறும் மரித்த ஆத்மாக்களுக்காக ஜெபிக்க வேண்டும்.
7. கிறிஸ்துவுக்கு நிழலாட்டமான அறுப்பின் பண்டிகை - சேர்ப்பின் பண்டிகை, பஸ்கா பண்டிகை, போன்ற பல பண்டிகைகளை கண்டிப்பாய் கொண்டாட வேண்டும்.
8. மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், இரட்சிப்பு, பாவ மன்னிப்பு, முழுக்கு ஞானஸ்நானம், அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெறுதல் போன்ற அடிப்படைக் காரியங்களெல்லாம் நடைமுறைப்படுத்துவதில்லை.

9. நீதிமான் ஒருவருமில்லை; எனவே பாவி என்று சொல்லியே ஜெபிக்கலாம்; தவறில்லை.

10. ஆசாரியத்துவம் இயேசுவால் மாற்றப்பட்டும், ஊழியர்களுக் கென்று தனித்தனி வஸ்திரங்கள்தான் அணிய வேண்டும்; சிலுவை கழுத்தில் தொங்க விடவேண்டும்.

11. ஒருவருக்கு ஜெபிக்கும் போதோ, ஆசீர்வாதம் இடும் போதோ சிலுவை அடையாளம் போட வேண்டும்.

12. எப்படிப்பட்ட கொள்கையுடைய சபை யாரோடும் சேர்ந்து ஆராதிக்கலாம்.

13. பரிசுத்த ஆவியைப் பெறவோ, அற்புத அடையாளங்களைப் பெற்றுக் கொள்ளவோ, முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கவோ, பாரம்பரிய தாய்ச்பையை விட்டுவிடாமல் வேறே சபைகளின் எல்லா தேவ காரியங்களில் மட்டும் கலந்து கொள்ளலாம். மற்றப்படி, தொட்டிலுக்கு, கட்டிலுக்கு (Marriage), சவப்பெட்டிக்கு எல்லாமே தாய்ச்சபைதான்.

14. சிலை மாத்திரம் வைக்காமல், இயேசுவின் உண்டாக்கப்பட்ட உருவப்படம், சிலுவை போன்றவைகளை வைப்பதோ, சிலுவைகளில் துண்டுகள் அணிவதோ தவறில்லை.

15. பத்துக் கற்பனை கிறிஸ்தவனை ஆள்கிறது, நடத்துகிறது.

16. வருடா வருடம் 40 நாள் லெந்து நாட்கள் ஆசரிக்க வேண்டும். அப்போது மட்டும் கறி, மீன் சாப்பிடாமலும், திருமணம், புதுமனை புகுதல், போன்ற காரியங்கள் செய்யாமலும் இருக்க வேண்டும்.

17. இஷ்டார் தேவதையின் பண்டிகையை ஈஸ்டர் என்ற பெயரில் உயிர்த்தெழுந்த நாள் என்று கொண்டாட வேண்டும்.

18. கிறிஸ்மஸ், ஈஸ்டர், போன்ற பண்டிகைகளை கொண்டாட வேண்டும். கிறிஸ்மஸ் விழாவிற்கு கேரல் சர்வீஸ் நடத்த வேண்டும்; ஸ்டார் தொங்க விடவேண்டும்; கிறிஸ்மஸ் மரம் நட்டு, குடில் வைத்து, பாலன் சிலை வைக்க வேண்டும்; இப்படி ஏராளம்.... ஏராளம்....! தேவனுடைய பிள்ளைகளே அடையாளம் கண்டு கொள்வீர்!

(**குறிப்பு** : இது குறித்து ஆசிரியரோடு கலந்து பேச யாராவது விரும்பினால், தேதி, நேரம், இடம், குறிப்பிட்டு அழைத்தால் இலவசமாய் வந்து விளக்கமளிக்கத் தயார்.)

❖ ❖ ❖

# கள்ள உபதேச சபைகள்

## (7. "சிறிய புராட்டஸ்டண்டு சபைகள்")

இ.சி.ஐ. மெதடிஸ்ட், பாப்டிஸ்டு, யேகோவா ஷம்மா, சால்வேஷன் ஆர்மி, பிரதரன் சபை, பிரிஸ்பிடேரியன், புதிய எருசலேம் போன்ற சபைகளில் உள்ள கள்ள உபதேசங்களைப் பார்ப்போம்.

1. தண்ணீருக்குள் முழுக்கு ஞானஸ்நானம் இல்லை. கொடியின் கீழ்தான் ஞானஸ்நானம்.
2. பரிசுத்த ஆவியானவர்என்று ஒருவர் இல்லை; அது ஒரு சக்தி.
3. அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசத்தஆவியைப் பெறத் தேவையில்லை; ஞானஸ்நானம் பெற்ற போதே பரிசுத்த ஆவியைப் பெற்றாயிற்று.
4. நிழலாட்டமான பண்டிகைகளுக்கு ஈடாய் நிஜமான இயேசு வந்தபோதும், அந்தப் பழைய பண்டிகைகளைக் கொண்டாட வேண்டும்.
5. சிலுவை ஓர் புனித சின்னம்; அதைத் தான் முன்வைத்து அதற்கு மரியாதை செலுத்த வேண்டும்.
6. புறா வடிவில் ஆவியானவர் இருக்கிறார்.
7. திருமணம் மற்றும் ஊழிய விஷயத்தில் எந்த சபையோடும் பிணைபடலாம்.
8. நீதிமான் ஒருவனுமில்லை; எல்லாரும் பாவிகள்.
9. திடப்படுத்தல் முடிந்தால்தான் இராப்போஜனத்தில் பங்கு பெற முடியும்.
10. அப்பம்தான் இயேசுவின் சரீரம்; ரசம்தான் அவரின் இரத்தம்.
11. இயேசுவின் உருவப்படத்தை தொங்க விட்டு மரியாதை செய்யலாம்; தவறில்லை.
12. ஊழியர்கள் சபைகளுக்கு மட்டும் கண்டிப்பாய் தனி வஸ்திரம் - Uniform - தரித்தால்தான் புனிதம் உண்டு.
13. கற்களால் கட்டப்பட்டதுதான் தேவனின் ஆலயம்.
14. வருடா வருடம் 40 நாட்கள் லெந்த் நாட்கள் ஆசரிக்க வேண்டும்.
15. அந்நியர்களோடு சேர்ந்தும் ஆராதனை செய்யலாம்.
16. பத்துக் கற்பனை கிறிஸ்தவனை ஆள்கிறது; நடத்துகிறது.

17. மரித்த ஆத்மாக்களுக்காய் ஜெபிக்கலாம்.
18. சபையிலே பாஸ்டர் என்பதே கிடையாது. எல்லாரும் சகோதரரே.
19. சபையிலே தீர்க்கதரிசன ஊழியமே கிடையாது.
20. நியாயப் பிரமாணக்காரர் போல சட்டப்படி நடக்க வேண்டும்.
21. சபையிலே பகிரங்கமாய் எழும்பி நின்று பாவ அறிக்கை செய்ய வேண்டும்.
22. பரிசுத்த ஆவி பெறாதவர்களுக்கு திருவிருந்து கிடையாது.

இன்னும் பலப்பல உள்ளன. **இவைகள் எல்லாம் ஒரே சபையில் உள்ள உபதேசங்கள் அல்ல என்று முந்தி அறியுங்கள்.**

தேவனுடைய பிள்ளைகளே! அடையாளம் கண்டு கொள்வீர்!

**(குறிப்பு:** இது குறித்து ஆசிரியரோடு கலந்து பேச யாராவது விரும்பினால், தேதி, நேரம், இடம், குறிப்பிட்டு அழைத்தால், இலவசமாய் வந்து விளக்கமளிக்க தயார்,)

❖ ❖ ❖

# கள்ள உபதேச சபைகள்

## (8. LEF சபை)

எபி.6:1,2ல் உள்ள அடிப்படை மூலஉபதேசம் இல்லாத சபைகள் எல்லாம் கள்ள உபதேச சபைகள் என்று எழுதியிருக்கிறேன். இதைப் படித்த உடனே ஒரு LEF சபை ஊழியருக்கு என் மீது பெருங்கோபம். நான் **கள்ளஉபதேச சபைகளினுள்ள கொள்கைகளைத் தான் வசன ஆதாரத்தோடு விமர்சிக்கிறேனே அல்லாமல், மற்ற சபை ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் சொந்த செயல்பாடுகளை நான் விமர்சிப்பதே இல்லை.** ஆனால் இந்த சகோதரரோ, என் சொந்த காரியங்களை தவறான எண்ணத்தோடு விமர்சித்திருக்கிறார். நான் எழுதும் சத்தியங்களை வசனத்தோடு ஒப்பிட்டு, தவறு என்று எழுதுங்கள்; நான் ஏற்றுக் கொள்ள தயார்! வெறுமனே நாலாந்தர மனிதர்கள் போல விமர்சிப்பது சரியல்ல. அவர்கள் சபையின் போதகம் மூலம் நிறைய பெரிய ஊழியர்கள் இரட்சிப்பிற்கு வந்திருக்கிறார்களாம். அதையும் நான் தரம் தாழ்த்தவில்லை! நாம் சொல்வதெல்லாம் அடிப்படை மூல உபதேசம் இல்லை என்பது தான். 7 உபதேசங்களில் ஒன்றிலே தவறினாலும் கள்ள உபதேச சபைதானே!

**ஒன்றிரண்டை சொல்கிறேன்;** தியானியுங்கள். "ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்" என்ற மூல உபதேசம் அங்கே இல்லை. ஸ்நானங்கள் மூன்று உண்டு.

1. கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் (கலா.3:27; ரோ.6).
2. ஜலத்தினால் ஞானஸ்நானம்.
3. ஆவியினால் ஞானஸ்நானம். அப்.1:4, 8ன் படி இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் அந்நியபாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறவேண்டும். இது அந்த சபையில் இல்லை. (எபே.1:13ஐ ஆங்கிலத்திலும் மூலபாஷையிலும் வாசியுங்கள்). இந்த அந்நிய பாஷையும், தீர்க்கதரிசனமும் ஒழிந்து போய் விட்டது என்று அந்த சபை சொல்கிறது (1 கொரி.13:8). இப்போது அவைகள் ஒழியாது; இயேசு வரும் போது தான் (2ம் வருகை) ஒழிந்துபோம் (1 கொரி.13:10-12). அப்படியே பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் பெறும் ஞானஸ்நானத்தால் அற்புதம், அடையாளம் நடப்பது இப்போது இல்லை என்று இந்த சபை சொல்கிறது. ஆவியின் வரங்கள் எதற்கு? விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்கள் எதற்கு? சிந்திக்க வேண்டாமா! இப்படியாய் பல காரியங்கள் சொல்லிக் கொண்டே போகலாம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! கள்ள உபதேசங்களை கண்டு கொள்! வெளுத்ததெல்லாம் பாலல்ல! ஏமாறாதே! மத்.7:22ஐ மறவாதே!

❖ ❖ ❖

# 7ம் நாள் காரரே! வழக்காடுவோம் வாருங்கள்!

கள்ள உபதேசக்காரர்கள் எல்லோருமே நாம் கனிவாய் எடுத்து வைக்கும் கர்த்தரின் வசனத்தை ஆராயாமல், தாங்கள் வைத்திருக்கிற அதே பாரம் பரியத்திலேயே நின்று கொண்டு நம்மைத் தூஷிக்கிறார்கள். அதிலே ஒரு ரகத்தார் 7ம் நாள் சபையார்! இவர்கள் 1844க்குப் பிறகு, எலன். ஜி.ஒயிட் அம்மையாரின் வழியில் வந்தவர்கள். நாமோ மத்.16:18ன் படி முதலாம் நூற்றாண்டிலேயே இயேசுவாகிய கல்லின் மேல் கட்டப்பட்டவர்கள். வசனத்தை வாசிக்காமல் வாய் சவடால் தேவை இல்லை. நியாயத்தைத்

தேடுங்கள்.... வழக்காடுவோம் வாருங்கள் (ஏசா.1:17,18). நீங்களும் பரலோகம் வரவேண்டும் என்ற வாஞ்சையால் இந்த செய்தியை எழுதுகிறேன்.

7ம் நாள் சபை சகோதரர் ராஜு பத்மநாபன், காட்பாடி என்பவர் எவ்வளவோ கேள்விகள் கேட்டும், அவருக்கு கடந்த பல ஆண்டுகளாக பதிலளித்து வந்தேன்; நேரிலே இருவரும் சந்தித்துப் பேசுவோம் என்றும் எழுதினேன். அவரோ தன் கைக்கு வந்தபடி என்னை திட்டி எழுதுகிறாரே ஒழிய, நேரில் சந்திக்க விருப்பமில்லை. ஏன்? இன்றைக்கு நான் முழுமையாய் 7ம் நாள் சபை பற்றிய கள்ள உபதேசத்தை மறுபடியும், மொத்தமாக எடுத்து வைக்கிறேன். வாசித்து விட்டு, மாறுத்திரம் இருந்தால், வசன ஆதாரத்தோடு 7ம் நாள் சபையார் யாராயிருந்தாலும் என்னை சந்திக்க ஆயத்தமானால் உடன் தெரிவியுங்கள். உங்கள் இடத்திற்குக் கூட நான் வரத்தயார்! நீங்கள் தயார்தானா? இல்லையேல் தேவையில்லாமல் பேசுவதை - எழுதுவதை - உபதேசிப்பதை - நிறுத்தி விடுங்கள்.

1. மோசே எழுதிய நியாயப் பிரமாண புஸ்தகத்தில் 10 கற்பனை இருக்கிறது (யாத்.20:1-24:8) அதிலுள்ள 10 கற்பனையின் படியும் செய்வோம் என்று இஸ்ரேலர் கூறினர் (யாத்.24:3;7). இந்த புஸ்தகந்தான் நியாயப் பிரமாணத்தின் முழுமை. உடன்படிக்கைப் பெட்டிக்கு வெளியே வைக்கப்பட்ட 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணம் தான் இஸ்ரேல் மக்களுக்கு விரோதமான சாட்சியாயிருக்கும் (உபா.31:26). 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணமே அறியாத புறஜாதியிலிருந்து வந்த நமக்கோ, இந்த விரோதமான சாட்சியைப் பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாது. இந்த 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் தான் சிலுவையில் ஒழிந்தது (கொலோ.2:14-17).
2. சீனாய் மலையிலே 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணத்தை கொடுத்த தேவன் அதை அழிக்கவில்லை. எபே.2:14 - 16ன் படி, "தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து" என்று உள்ளதால், சிலுவையிலே அவர் மாம்சம் மரித்தது; அதோடு இந்த 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணமும் மரித்துப் போனது; ஒழிந்தது.
3. இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை அழிக்க வரவில்லை; நிறைவேற்றவே வந்தார். மத்.5:18ன் படி, நியாயப் பிரமாணத்தில் உள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் அது ஒழியாது. நிறைவேற்ற

வந்த இயேசு ரோ.10:4ன் படி நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார்; (Christ is the end of the law - KJV).

4. ரோ.7:1-6ன் படி, 10 கற்பனைகடங்கிய நியாயப் பிரமாணத்தால் கட்டப்பட்டிருந்தவர்கள், அதற்கு மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் நியாயப்பிரமாணமாகிய புருஷன் மாறி, அவர்கள் இப்போது மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி விட்டார்கள். அல்லேலூயா!

5. கலா.4:21-31ன் படி சீனாய் மலையில் உண்டான, 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணத்தை ஷரத்தாய்க் கொண்ட பழைய ஏற்பாடு - ஒப்பந்தம் - உடன்படிக்கை - அடிமைத் தனத்திற்குள்ளானது. அதை புறம்பே தள்ளி, ஈசாக்கைப் போல - வாக்குத்தத்த - சுயாதீனப் பிள்ளைகளாய் புதிய ஏற்பாட்டுக்குரியவர்கள் இருக்கிறார்கள்.

6. 2 கொரி.3:6-11ன் படி கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாண ஷரத்தை உடைய பழைய ஏற்பாட்டு ஊழியம் ஒழிந்து போகிற மகிமையுடையது; அது ஆக்கினைத் தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம்; முக்காடு போடும் ஊழியம். புதிய ஏற்பாட்டு ஊழியமோ ஆவிக்குரியது; நீதியைக் கொடுக்கிறது; நிலைத்திருக்கிற மகிமையுடையது; முக்காடு நீக்கப்படுகிறது.

7. எபி.8:13ன்படி, பழைய உடன்படிக்கையை, புது உடன்படிக்கையின் ஆரம்பத்தின் போதே பழமையாக்கினார்; அது பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது; அது உருவழிந்தே போகும்.

8. எபி.10:19 - 20ன் படி இயேசு கிறிஸ்து சிலுவையிலே, தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணியிருக்கிறார். இது புதிய ஏற்பாட்டின் மார்க்கம். இந்த மார்க்கத்தில் நாம், உலகத்தார் எல்லாருக்குமான இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தையும், அப்போஸ்தல உபதேசத்தையும் பின்பற்ற வேண்டும் (மத்.28:18 - 20; யூதா.17; ரோ.6:17).

9. பழைய உடன்படிக்கை ஷரத்தாகிய 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணத்தின் பிரதானம் "தேவனிடத்தில் அன்பு கூருதல்; உன்னைப் போல பிறனிடத்திலும் அன்பு கூருதல்" (மத்.22:36-39; உபா.6:5; லேவி.19:8). புது உடன்படிக்கையின் ஷரத்தோ, இயேசு பாவிகளாயிருந்த நம் மேல் அன்பாயிருந்து நமக்காய் ஜீவனைவிட்டது போல, நாமும் பிறனிடத்தில் அன்பாயிருக்க வேண்டும் என்ற

இயேசுவின் புதிதான, இதுவரை வேதத்திலே இல்லாத - கட்டளையாகும் (யோ.13:34; ரோ.5:5-8). இது தான் அவரின் கற்பனை (யோ.15:10-12). இந்த கற்பனைதான் இயேவின் உபதேசத்திற்கும் அப்போஸ்தலர் உபதேசத்திற்கும் அடிப்படை.

10. வேதத்திலே கற்பனை என்று சொன்னாலே 10 கற்பனை அல்ல. கற்பனை என்றால், வசனம் என்றும் (1 யோ. 2:7) அன்பு என்றும் (1 தீமோ. 1:5) கற்பித்தது, போதித்தது என்றும் (யோ. 15:12-14,17; மத். 11:29,30) அப்போஸ்தலர்களால் எழுதப்படுபவை (1 கொரி. 14:37) என்றும், Law - வேதம் - பிரமாணம் - சட்டம் என்றும் பல அர்த்தங்கள் உள்ளன. அந்தந்த இடத்திற்கு ஏற்றபடி ஆவியானவரின் ஒத்தாசையோடு அதன் அர்த்தங்களை புரிந்து கொள்ள வேண்டும்.

11. கலா. 3:24,25ன்படி 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணத்தைக் கொண்ட இஸ்ரேலர்களை கிறிஸ்துவினிடத்தில் நடத்தும் உபாத்தியாய் நியாயப்பிரமாணம் (Teacher, guide) இருந்தது. இயேசுவைப் பற்றும் விசுவாசம் வந்து நீதிமானாக்கப்பட்ட பிறகு, இவர்களுக்கு அந்த உபாத்தி-10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் - தேவையில்லை என்கிற போது, அதை அறியாத - கேளாத - புறஜாதியிலிருந்து கிறிஸ்துவைப்பற்றிக் கொண்ட நமக்கு எப்படி அது தேவையாகும்?

12. எபி. 9:4ன்படி உடன்படிக்கைப் பெட்டியில் மன்னா, ஆரோனுடைய தளிர்த்தகோல், 10 கற்பனை இருந்தனவே எதற்காக? தேவன் எழுதிய 10 கற்பனையை மட்டும் இஸ்ரேலர்கள் கைக்கொண்டது போல கைக்கொள்ள வேண்டுமென்றால், உடன்படிக்கைப் பெட்டியில் உள்ள மன்னாவைத்தானே நாம் இஸ்ரேலர்கள் சாப்பிட்டது போல சாப்பிட வேண்டும்! பின்னை ஏன் மற்ற உணவுகளை சாப்பிடுகிறோம்? அப்படியே இஸ்ரேலரைப் போல 10 கற்பனையை கைக்கொள்ளத்தான் உடன்படிக்கைப் பெட்டிக்குள் இருக்கிறது என்றால், இஸ்ரேலிலே லேவியர் கோத்திரத்தான் மட்டுமே ஆசாரியனாக இருக்க வேண்டும் என்பதற்கான அச்சாரமான ஆரோனின் தளிர்த்த கோலின்படி, லேவியன் தானே ஆசாரியனாய் இருக்க வேண்டும்! பின்னை ஏன் நாமெல்லாரும் ராஜரீக ஆசாரியக் கூட்டமென்று 1 பேது. 2:9 சொல்கின்றது? இந்த மூன்றும் உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைத்தது, எகிப்திலிருந்து விடுதலையாகி, 40 வருஷம் வனாந்திர வாழ்க்கையைத் தாண்டி கானானுக்குள் வந்ததின் தெய்வீக நினைவாய் - தேவன் செய்த ஞாபகார்த்தமாய் - இஸ்ரேல் சமுதாயம்

முழுவதும் புரிந்து கொள்வதற்காய் இவைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. அவைகள் மூன்றும் தெய்வீக - தேவனுக்கடுத்த - இஸ்ரேலர்களுக்கான காரியங்கள். அவைகளிலிருந்து நாம் ஆவிக்குரிய அர்த்தங்கள் தான் காண வேண்டுமே ஒழிய வேறல்ல.

இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணமே நம்மைக் கட்டுப்படுத்தாது என்கிற போது, 10 கற்பனையில் உள்ள 4ம் கற்பனையாகிய ஓய்வு நாள் ஆசரிப்பு நமக்கு தேவையே இல்லை. விசுவாசத் தகப்பனாம் ஆபிரகாமின் ஆவிக்குரிய பிள்ளைகளாயிருந்து, கலா.3:7,9,14ன் படி அவனின் ஆசீர்வாதங்களை கிறிஸ்து இயேசுவினால் பெறுவதை விட்டுவிட்டு, ஏசா.58:13,14ன் படி ஓய்வு நாளை ஆசரித்து யாக்கோபின் சுதந்திரத்தைப் பெற கிறிஸ்தவன் தயாரில்லை; அது தகுதியுமில்லை. இந்த 7ம் நாள் ஓய்வு நாட்கள் ஆசரிப்பு (எசே.20:12,20) கிறிஸ்துவுக்கு நிழலாட்டமாய் இருக்கும் போது, மத்.11:28-30ன் படி நிஜமாகிய இயேசுவினால் (கொலோ.2:16,17) நிரந்தர இளைப்பாறுதல் - ஆத்ம இளைப்பாறுதல் கிடைத்ததினாலே, அதைப் பெற்றுக் கொண்டவன், ஆத்மா வாழ்வது போல எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும் போது (3 யோ.2) சரீரப்பிரகாரமான ஓய்வு நாள் ஆசரிப்பு தேவையில்லை. **மேலும் ஆதி அப்போஸ்தல காலம் முதல் ஒருவரும் 7ம் நாளாகிய ஓய்வு நாளை ஆசரிக்கவும் இல்லை; ஆசரிக்க கட்டளையிடவுமில்லை.** இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம்.

இதை வாசிக்கும் என் தேவபிள்ளையே! **இந்த 7ம் நாள் காரர்கள் சொல்லும் கள்ள உபதேசங்களைப் பாருங்கள்.**

1. ஆத்மா என்ற ஒன்று கிடையாது.
2. நித்திய நரகம் என்ற ஒன்று கிடையாது.
3. மரித்தபின் நல்லவன் - கெட்டவன் எல்லாருடைய ஆவியும் பரலோகமே போகும்.
4. பாதாளம், பரதீசு என்ற ஒன்று இல்லவே இல்லை.
5. அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவி பெறுவதெல்லாம் தவளைகளின் சத்தம்.
6. சபையை எடுத்துக் கொள்ள வரும் வருகை இரகசிய வருகை இல்லை.
7. 1000 வருட அரசாட்சி இந்த பூமியில் இல்லை.

8. போப் தான் அந்திகிறிஸ்து.
9. மகா உபத்திரவ காலத்தில் சபை இருக்கும்.
10. தற்போது நடக்கும் அற்புதம் அடையாளம் எல்லாம் பிசாசின் கிரியை.
11. தேவன், வியாதி, வறுமை, தோல்வி, அகால மரணம் போன்றவற்றை கொடுத்து சிட்சிக்கிறார்.
12. உலகை அக்கினியால் அழிக்கும் போது ஆவியாயிருக்கிற பிசாசும் அழிந்து போகும்.
13. இரட்சிக்கப்பட்டவனெல்லாம் நீதிமானல்ல.
14. காபி, டீ. அசைவம் எல்லாம் கூடாது.
15. தாலிக் கயிறோ செயினோ மட்டும் போடலாம்; மற்றப்படி வேறு எந்த நகையும் போடக் கூடாது.
16. சிலுவைக்கு மகிமை கொடுக்கலாம்.
17. தானி. 8:13ன் படி பரலோக பரிசுத்த ஸ்தலம் தான் சுத்திகரிக்கப்பட்டது.
18. 1844ல் தான் இயேசு மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிதாவின் வலது பக்கம் அமர்ந்தார்.
19. 7ம் நாள் ஓய்வு நாள் ஆசரிப்பு தான் தேவனின் முத்திரை.
20. சூரிய தேவதையின் நாளான ஞாயிறு ஆசரிப்பு தான் அந்தி கிறிஸ்துவின் முத்திரை. இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம்.

இதை வாசிக்கும் அல்லது கேள்விப்படும் 7ம் நாள் காரரே! நீங்கள் யாராயிருந்தாலும் சரி! இனி மறைந்திருந்து எழுதுவதோ அம்பெய்வதோ வேண்டாம்! அது கோழைத்தனம். நேருக்கு நேராய் சந்திப்போம்! வசனத்தைக் கொண்டு நியாயமாய் வழக்காடுவோம்! தேவனே நியாயாதிபதி! நேரமும், நாளும், இடமும் குறித்து எழுதுங்கள். இயேசுவின் நாமத்தினாலே உங்களைச் சந்திக்க தயார்! நானிருக்கும் இடத்திற்கும் வர விருப்பமானாலும் உங்களை வரவேற்கிறேன்! வீணே ஆகாயத்தில் சிலம்பமாடியது போதும்! வசனத்தால் சிலம்பமாடுவோம்! அதுவரை, சேனையதிபனின் வீரனென்ற உணர்விருந்தால், அர்த்தமில்லாமல் - அபத்தமான - அநாகரிகமான வார்த்தைகளால், எழுத்துக்களால் அர்ச்சிப்பதை நிறுத்துங்கள்! இயேசு சீக்கிரம் வருகிறார்!

❖ ❖ ❖

# 7-ம் நாள் காரர்களே! சிந்தியுங்கள்!

1. நியாயப்பிரமாணம் சீனாய் மலையில்தான் கொடுக்கப்பட்டது (யோ.1:17). ஆதாம் ஏவாள் முதல், அப்போதைக்கப்போது தேவன் ஒருசில சட்டங்களை சொல்லி செயல்பட வைப்பார் அதுவரை. அவ்வளவுதான்.

2. ஆதாமும் ஏவாளும் ஆதி.2:17ஐத் தான் மீறினார்களே அன்றி, இச்சியாதிருப்பாயாக என்ற 10ஆம் கற்பனையை மீறவில்லை . அந்த 10 கற்பனையோடுகூடிய நியாயப்பிரமாணம் அவர்களுக்கு தெரியாது. (பிறருடையதை இச்சிக்கக்கூடாது என்பதுதான் 10 கற்பனை).

3. 10 கற்பனையோடு கூடிய நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருந்தால், காயீன், சேத், மற்றும் ஆதாமின் பெண்பிள்ளைகள் எல்லாம் 7ம் கற்பனையை மீறி பிள்ளைகளைப் பெற்றார்களா? விளக்குங்கள். நியாயப் பிரமாணம் இல்லாதிருந்ததால்தானே அந்தப் பாவம் அன்று எண்ணப்படவில்லை (ரோ.5:13).

4. 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணம் மனிதனுக்குத்தானே ஒழிய, சாத்தானுக்கும் - தேவதூதர்களுக்கும் இல்லை (see 1 தீமோ.1:9-11: மாற்.2:27). சாத்தான் செய்தது மேட்டிமை தானே ஒழிய, வேறொன்றும் இல்லை. 10 கற்பனை தேவதூதர்களுக்கு தேவையில்லை. தேவன், சுதந்திரம், அதிகாரம், வல்லமையும் கொடாவிட்டால் அவைகளால் ஒன்றும் செய்யமுடியாது. ஆவியாயிருப்ப வைகளுக்கு மாம்சீக செயல்பாடுகள் இல்லையே! (மத்.22:30).

5. இன்னொருவரின் மனைவியிடம் போவது தவறு என்று தேவன் சொல்லியிருந்ததால்தான் யோசேப்புக்கு பாவம் என்று தெரிந்ததே தவிர, நியாயப்பிரமாணம் அவனுக்கு கொடுக்கப்படவில்லை. அப்படி கொடுக்கப்பட்டிருந்தால், நியாயப்பிரமாணப்படி எகிப்து தேசத்தாளை மணப்பது தவறு என்று யோசேப்புக்கு தெரிந்திருக்குமே! மட்டுமல்ல.. தன் மருமகளோடு விபச்சாரம் செய்வது தவறு என்று யூதாவுக்கும் தாமாருக்கும் தெரிந்திருக்குமே! குடித்து வெறிப்பது தவறு என்று நோவாவுக்கு தெரிந்திருக்குமே! ஆகாரோடு போவது தவறு என்று ஆபிரகாமுக்கு தெரிந்திருக்குமே! தேவனும் கண்டிக்கவில்லையே! காரணம் நியாயப்பிரமாணம் என்று, வாய்மொழியாகக்கூட அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை.

6. கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாள் தான் ஆராதனை செய்யவேண்டும்; அதுதான் ஓய்வுநாள் என்று வேதத்தில் எங்குமே

சொல்லப்படவில்லை. நியாயப்பிரமாணப்படி சனிக்கிழமைதான் ஓய்வுநாள்.

7. 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் சிலுவையில் ஒழிக்கப்படவில்லை; இயேசுவின் சரீரத்தோடு அதுவும் மரித்துப் போய்விட்டது (எபே.2:15,16; ரோ.7:1-6; கொலோ.2:13,14).

8. ஓய்வுநாள் ஆசரிப்புக் கட்டளை இஸ்ரேலருக்குத் தான் கொடுத்தார் (உபா.5:15). அது தேவனுக்கும் இஸ்ரேலருக்கும் இடையே உள்ள அடையாளம். அதை ஆசரித்தால், ஆபிரகாமின் ஆசீர்வாதமல்ல (கலா.3:7,9) மாம்சப் பிரகாரமான யாக்கோபின் சுதந்திரம்தான் கிடைக்கும் (ஏசா.58:13, 14).

9. இயேசு பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாண காலத்தில் வாழ்ந்ததால், விருத்தசேதனம், பலிசெலுத்துதல், பண்டிகை ஆசரித்தல். ஓய்வுநாளை ஆசரித்தல் போன்ற எல்லாவற்றையும் கைக்கொண்டார். நாமோ, புதிய ஏற்பாட்டு, புது உடன்படிக்கைக்காரர்கள். மத்.5:17, 18ன் படி, நியாயப்பிரமாணம் நிறைவேறும் வரைக்குத்தான் அதற்கு ஜீவனுண்டு. இயேசு நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (ரோ.10:4). நியாயப்பிரமாண இஸ்ரேலராயிருந்து, கிறிஸ்துவர்களாய் வந்தவர்கள், நியாயப்பிரமாணம் என்ற புருஷனுக்கு மரித்து, கிறிஸ்து என்னும் புதிய மணவாளனைப் பெற்றுள்ளார்கள் (ரோ.7). புறஜாதியிலிருந்து வந்த நமக்கோ, 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் நமக்குத் தெரியவே தெரியாது. அதைப் பற்றிய சிந்தனையும் தேவையில்லை.

10. பழைய உடன்படிக்கை மோசேமூலம் சீனாய் மலையில் உண்டானது (யாத்.24:3-8). அதிலே இஸ்ரேலர்கள் நிலைத்து நிற்கவில்லை (எபி.8:9). எனவே புதிய உடன்படிக்கையை, இயேசு புதிய ஷரத்தோடு சிலுவையில் உறுதிப்படுத்தினார் (மத்.26:28; யோ.13:34; 15:2). மத்.19:16-19ல் சொல்லப்பட்ட இரண்டு பிரதான கற்பனைகளும் நியாயப்பிரமாணம்தான். அது புதிய ஏற்பாட்டு மக்களுக்கு அல்ல.

11. ஓய்வுநாள் "கர்த்தருடைய ஓய்வுநாள்" என்றுதான் உள்ளதே தவிர, "கர்த்தருடைய நாள்" என்று எங்குமே சொல்லப்படவில்லை. அதேபோல, ஞாயிற்றுக்கிழமையும், கர்த்தருடைய நாள் என்று சொல்லப்பட்டவே இல்லை. கர்த்தருடைய நாள் என்று, வருகையின் நாளையும், கோபாக்கினை நாளையும், நியாயத் தீர்ப்பின் நாளையும், 1000 வருட ஆட்சி மற்றும் புதியவானம் புதிய பூமி வரும் நாளையும் வேதம் விளக்குகின்றது.

12. முதல் பெந்தெகொஸ்தே நாள், வாரத்தின் முதல் நாள்தான் வந்தது. இயேசு உயிர்த்து 40 நாள் காட்சி தந்தார். இயேசு உயிர்த்தெழுந்த வருஷம், ஞாயிற்றுக்கிழமை உயிர்தெழுந்த நாளெனில், அது முதற்பேறை அசைவாட்டும் நாள் (லேவி.23:15,16). 40 ஆவது நாள் வியாழக்கிழமையே, 50 ஆவது நாள் ஞாயிற்றுக்கிழமைதான். (ஏழு ஓய்வுநாளுக்கும் மறுநாள் 50ஆவது நாள்). அதனாலேயே அந்த நாளை ஆசரிக்க வேண்டிய கட்டாயமில்லை. சங்.118:22-24ன்படி, அந்த நாள் மனமகிழ்ச்சியின் நாள், ஓய்வுநாளல்ல. போப்பால் அது ஓய்வு நாளாக்கப்பட்டது; அது கிறிஸ்தவனுக்கல்ல.

13. பிசாசுகளின் வார்த்தையாலேயே இயேசு தேவகுமாரனென்று நிரூபணமாகாது; தேவனே வானத்திலிருந்து சத்தமிட்டாலும், அவர் உயிர்த்தெழுந்ததினாலேதான் பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனானார் (ரோ.1:5) அது ஞாயிற்றுக் கிழமையில் உயிர்த்தெழுந்ததால் அல்ல. மரணத்தை ஜெயித்ததால்.

14. அப்போஸ்தலர்கள் ஓய்வுநாளில் பிரவேசித்து, பிரசங்கித்தது, யூதருடைய ஜெப ஆலயங்களில் (Syonogogue) தானேஒழிய, கிறிஸ்தவ சபைகளில் அல்ல.

15. பிலிப்பு பட்டணத்தில் ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுவார்கள் சீஷர்கள். அங்கே ஓய்வுநாள் விடுமுறையாய் இருந்ததால் அந்த ஊர் மக்கள் அன்றுதான் வருவார்கள் என்பதால், ஓய்வுநாளில் அங்கே கூடி உபதேசித்தார்கள். மற்றப்படி ஓய்வுநாளை ஆசரிக்கவில்லை.

16. கொலோ.2:16, 17ன் படி, ஓய்வுநாள் கிறிஸ்துவுக்கு நிழலாட்டம். மத்.11:28ன் படி, இயேசுவின் வசனத்தை ஏற்று அவர்பின் சென்றாலே இளைப்பாறுதல் உண்டு. இப்படி நிஜமான இளைப்பாறுதல் இயேசுவால் வந்தபிறகு, நிழலாகிய ஓய்வுநாள் இளைப்பாறுதல் தேவை இல்லை.

17. லேவி.23:1,2ன் படி, ஓய்வுநாள்தான் பிரதானமாய் எழுதப்பட்ட பண்டிகையாய் இருப்பதாலும், அதுமேலே சொன்னபடி கிறிஸ்துவுக்கு நிழலாட்டம் என்பதாலும் ஓய்வு நாள் ஆசரிப்பு தேவையில்லை.

18. ஏசா.66:22,23ல் உள்ள ஓய்வுநாள் ஆசாரிப்பு, 1000 வருட அரசாட்சியில் இந்த பூமியில், மற்றப்படி, இது புதிய வானம், புதிய பூமியில் அல்ல. ஏனென்றால் அங்கே சூரியன், சந்திரன் இல்லை; நாட்கணக்கும் இல்லை; அவர்கள் போய் பிரேதங்கள் எரிவதைப்

பார்க்கவும் முடியாது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் எல்லாமே இஸ்ரேலர் சம்பந்தப்பட்டதுதானே ஒழிய, கிறிஸ்தவ சபை சம்பந்தப் பட்டவை அல்ல. நமது சபை இரகசியமாய் வைக்கப்பட்டு பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டது (எபே.3:3-5); இது இயேசுவால் கட்டப்பட்டது (மத்.16:18; அப்.20:28). இந்த ஏசா.66:23, 24ல் சொல்லப்பட்ட மாம்சமானவர்கள் இஸ்ரேலர்களே (see யோவேல் 2:28). இது 1000 வருட ஆட்சியில் நடப்பதாகும்.

19. உடன்படிக்கைப் பெட்டிக்கு பக்கத்தில் வைக்கப்பட்ட நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியபடி செய்வோம் என்றனர் இஸ்ரேலர்கள், அதிலே 10 கற்பனையும் எழுதப்பட்டிருக்கிறது (யாத்.20-24). இந்த 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணமான, விரோதமான சாட்சிதான் சிலுவையிலே ஒழிந்தது இயேசுவின் சரீரத்தோடு (கொலோ.214,15). எனவே 10 கற்பனைகள் அடங்கிய நியாயப்பிரமாணம் நம்மை ஆளாது. நாம் அடிமையானவர்களுக்கு - நியாயப்பிரமாணத்திற்கு - பிள்ளைகள் அல்ல (கலா.4:21-31).

20. உடன்படிக்கைப் பெட்டிக்குள் 10 கற்பனை இருப்பதாலோ, இந்தப் பெட்டி பரலோகத்தில் தரிசனத்தில் காணப்பட்டதாலோ, 10 கற்பனையை நாம் கைக்கொள்ள வேண்டியதில்லை. 10 கற்பனை, மன்னா, ஆரோனின் தளிர்த்த கோல், போன்றவை வனாந்தர வாழ்வுக்கு அடையாளமாய் - நினைவுச் சின்னமாய் உடன்படிக்கை பெட்டிக்கு உள்ளே வைக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான்.

21. நாம் கைக்கொள்ள வேண்டியது இயேசுவின் உபதேசமும், அப்போஸ்தல உபதேசமும் மட்டும்தான் (மத்.28:20; ரோ.16:17; யூதா.17). அந்த உபதேசத்தில், எங்கும் பொய் சொல்லவோ, விபச்சாரம் பண்ணவோ, ஓய்வுநாள் ஆசரிக்கவோ சொல்லவே இல்லை.

22. நாமெல்லாரும் புது உடன்படிக்கையின் ஊழியக்காரர்கள். பழைய ஏற்பாட்டில் 10 கற்பனைகளடங்கிய மோசேயின் ஆகமம் வாசிக்கும் போது முக்காடு நீங்காது; கிறிஸ்துவால் முக்காடு நீங்கியது. கர்த்தருடைய ஆவியானவர் விடுதலை தந்தார் (2 கொரி.3); விடுதலை ஊழியத்தில் ஓய்வுநாள் ஆசரிப்பே இல்லை. இங்கே 3 வேளை, 5 வேளை தொழுகை இல்லை. இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும் (1 தெச.5:7). விழித்திருந்து ஜெபம் பண்ண வேண்டும்; 7 நாளும் பண்ண வேண்டும்.

23. என்றைக்கு சர்க்கார் விடுமுறை தருகிறேதா அன்றைக்கு சபையார் ஒன்று சேர்ந்து ஜெபம், ஆராதனை, அப்பம் பிட்குதல், உபவாசக் கூட்டம் எல்லாம் செய்வோம். ஞாயிறு, வாராவாரம் விடுமுறை என்பதால் ஞாயிறு கூடுகிறோம்; இது செவ்வாய், வெள்ளி என்று வந்தால் அன்றும் சபை கூடுவோம். முஸ்லீம் நாடுகளில் வெள்ளியன்று கிறிஸ்தவ ஆராதனை நடக்கிறதே!

24. அன்றும் விசுவாசத்தால்தான் நீதி (see எபி.11); இன்றும் விசுவாசத்தால்தான் நீதி. அன்றைக்கு விசுவாசக் கிரியைகள் (see யாக்.2:20) 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாண ஆசரிப்பால்; புது உடன்படிக்கையில் விசுவாசக் கிரியைகள், இயேசுவின் உபதேசத்தையும், அப்போஸ்தல உபதேசத்தையும் கைக் கொள்வதால். நியாயப் பிரமாணக்காரர்களை, நியாயப்பிரமாணம் உபாத்தியாயிருந்து இயேசுவிடம் விசுவாசத்தில் நடத்தியது. இயேசுவை விசுவாசிக்கும்போது உபாத்தியின் வேலை பூரணமாகிறது. இது நியாயப்பிரமாண இஸ்ரேலருக்கு. அதன்பின் இயேசுவின் வழியே - அப்போஸ்தலர் - வழி (கலா.3:24; ரோ.7) இந்த சட்டம் புறஜாதியாயிருந்த கிறிஸ்தவர்களுக்கு அல்ல.

25. உலகம் முழுவதும் ஒரே சமயத்தில் ஓய்வுநாளை ஆசரிக்க முடியாது. ஒரு தேசத்தில் வெள்ளி என்றால் இன்னொரு தேசத்தில் அது சனி, ஞாயிறு. அன்றைக்கு இஸ்ரேலர்களுக்கு ஒரே தேசம்; ஒரே அரசாங்க சட்டம்; ஒரே கூட்டம். எல்லோருக்கும் ஒரேநாள் ஓய்வுநாள், இன்றோ அப்படியில்லை. இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம்! எது எப்படியோ, வேதத்தின்படி, 7ம் நாள் ஆசரிப்பு நமக்கு இல்லை. (இது சகோ.ராஜு பத்மநாபன், காட்பாடி அவர்கள், "இயேசு சொன்னவைகளும் சொல்லாதவைகளும்" என்ற புத்தகத்திற்கான மறுப்பு விளக்கம் இது.)

❖ ❖ ❖

# இயேசு நாமக்காரர்களின் நூதனக் கேள்விகள்

(1) 1 யோ.5:7ல் பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர் என்றும், இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்றும் எழுதப்பட்டிருந்தும், மூவர் அல்ல

என்று சொல்வது அறிவீனமே. இந்த வசனம் அடைப்புக்குறிக்குள் போடப்பட்டுள்ளதால் மூலப் பதிப்பில் இல்லை என்கின்றனர். மூலத்தில் இல்லையென்றால் உங்கள் பைபிளில் ஏன் வைத்திருக்கிறீர்கள்? மூலத்தில் இல்லாததை ஏன் பிரிண்ட் பண்ண வேண்டும் என்று யோசித்தீர்களா? ஆங்கில பைபிளில் அடைப்புக் குறி இல்லை என்று அறிவீர்களா? இந்த வசனம் யோவானால் எழுதப்பட்டது என்று கி.பி.200-258ல் வாழ்ந்த கார்த்தேஜின் பிஷப் சிப்ரியன் கூறுகிறார் (Vol v, 418, 423, Ante - Nicene Fathers). 50 ம் நூற்றாண்டில் வாழ்ந்த Vigilius of Thapsus இந்த வசனத்தை மேற்கோள் காட்டுகிறார். The codex Montfortii and the vulgate contain it. உபா.6:4ஐ வாசியுங்கள் "The LORD our God is one LORD". மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்பது யோ.17:11, 21-23 வசனங்களில் சொல்லப்பட்டபடி ஒன்றாய் இருப்பதாகும். இதே வார்த்தையுள்ள ஆதி. 2:24; 11;6:1 கொரி.3:6-8; 12;13; எபே.214; எபி.2:11 போன்ற வசனங்களை அறிந்துணரலாம். ஆவி, ஆத்மா, சரீரம் ஆகிய மூன்றும் ஒன்றாய் ஒரே மனிதனாய் இருப்பது போல, பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். இந்த அதிசயத்தை பரலோகில் காணலாம்.

(2) அப்.7:55-56ஐ வைத்து பிதாவும், இயேசுவும் இரண்டு ஆள்தத்துவமாய் இருக்கிறார்கள் என்று சொன்னால் "இல்லை; இல்லை இயேசு மட்டும் தான்" என்று சொல்வது விதண்டாவாதம். தேவனை ஒருவரும் ஒருக்காலும் கண்டதில்லை (1 தீமோ.6:16). எனவே ஸ்தேவான், தேவனின் மகிமையை ஆவியில் காண்கிறான்; அந்த மகிமையின் வலதுபுறம் இயேசு நிற்கிறார். இரண்டு ஆள்தத்துவமில்லையா? (வெளி.3:21; எபி.8:1; அப்.2:35). அப்படி இரண்டு பேர் என்றால், பிதாவிடம் ஆவியைக் கொடுக்காமல் இயேசுவிடம் ஏன் ஸ்தேவானின் ஆவியைக் கொடுத்தார் என்பது அவர்கள் கேள்வி (வச.59). பிதாவின் மகிமையை மாத்திரம் கண்டு அவரை முழுமையாய்க் காண முடியாததால், காணப்படுகின்ற வார்த்தையாகிய இயேசு தேவனிடம், ஆவியை ஸ்தேவான் ஒப்புக் கொடுத்தார். அவ்வளவுதான்.

(3) பழைய எற்பாட்டில் வருகிற இரட்சகர், கன்மலை, கர்த்தாதி கர்த்தர், ஆண்டவர், மேய்ப்பர், மெய்யான தேவன், மகா தேவன், முந்தினவர், பிந்தினவர் என்ற வார்த்தைகள் எல்லாம் (ஏசா.43:11; 44:6, 8:51:22; உபா.10:17; சங்.23:1; 41:5; 95:3; எரே.10;10) பிதாவைக் குறிக்கிறது. புதிய ஏறபாட்டில் வரும் இதே வார்த்தைகள் (வெளி.1:17; 17:14; லூக்.2:11; யோ.1;10; 20:28; 10;11; 1 கொரி.10:4; 1 யோ. 5:20; தீத்.2;13) இயேசுவைக் குறிக்கின்றது

என்றும் சொல்லி, இரண்டு நபர்கள் அல்ல ஒருவரே என்கின்றனர். பழைய ஏற்பாட்டில் பிதா இருந்தார் என்றும், புதிய ஏற்பாட்டில் இயேசு வந்தார் என்றும் ஆவிக்குரிய சபையார் போதிக்கிற அறியாமைப் போதனையினாலே இந்தக் குளறுபடிகள். பழைய ஏற்பாட்டில் இருந்தவரும் வார்த்தையான தேவன் தான்; புதிய ஏற்பாட்டுக்கு வந்தவரும் அவர்தான் என்பதை அறியாதிருக்கிறார்கள். ஆனால் பிதாவாகிய தேவன் புதிய வானம் புதிய பூமியில் தான் ராஜ்யத்தை ஆளவருவார் (1 கொரி.15:24, வெளி.11:15). ஆக இரண்டு ஆள்தத்துவம் உண்டு என அறிகிறோம்.

(4) இயேசு ஞானஸ்நானம் எடுக்கிற போது வானத்திலிருந்து "என்னுடைய நேசகுமாரன்" என்று பிதாவின் சத்தம் வந்தது என்றும், பரிசுத்த ஆவியானவர் புறாபோல இறங்கி வந்தார் என்றும் சொல்லி, மூன்று ஆள்தத்துவம் என்று சொன்னால் (மத். 3:16, 17), அவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. "தேவன் எங்கும் வியாபித்திருக்கிறவர் (omnipresence); எனவே யோர்தான் நதியிலும் இருக்கிறார்; பரலோகிலும் இருந்தும் சத்தமிடுகிறார்; புறா போலவும் வருகிறார்" என வாதிடுகின்றனர். அப்படியானால் பிலி. 2:6-7ன் படி தேவனுக்குச் சமமாய் அமர்ந்திருந்த வார்த்தையாகிய தேவன், முழுமையாய் மனுஷரூபம் எடுத்து வந்து விட்டார் என்பது பொய்யாகுமா? பரலோகில் பிதாவும் ஆவியானவரும் இருந்தார்கள் என்பது தவறாகுமா?

(5) பிதா வார்த்தை பரிசுத்தஆவி ஆகிய மூவருமே ஒரே வல்லமை, ஒரே ஞானம், ஒரே மகிமை, ஒரே மாட்சிமை, ஒரே குணாதிசயம் உடையவர்கள்; மூவரும் ஒருவருக்கொருவர் பெரியவர்களல்ல; சமமானவர்கள்; **ஆனால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் வேறு வேறு என்ற விசுவாசத்தோடு இன்னும் நூதன கேள்விகளைப் பார்க்கலாம்.**

1. 1 பேதுரு 2:17ன் படி நியாயத்தீர்ப்பு செய்பவர் பிதா; வெளி.19:1-21ன் படி இயேசு நியாயந்தீர்க்கிறார். ஆகவே பிதாவும் இயேசுவும் ஒருவரே என்கின்றனர். நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் பிதா, குமாரனுக்குக் கொடுத்திருக்கிறார் (யோ.5:22; மாற்.2:10; அப்.17:31) என்ற வெளிப்பாடு இருந்தால் இருவரும் வேறு வேறு என்று அறிய முடியும்.
2. யோ.2:19-33ன் படி மரணத்திலிருந்து எழுப்புவர் இயேசு; ரோ.6:4ன் படி எழுப்பியவர் பிதா; ஆகவே இருவரும் ஒருவரே என்கின்றனர். ரோ.8:11ன் படி பரிசுத் ஆவியானவரும் எழுப்பினர் என்று அவர்கள்

அறியவில்லை. யோ.2:19-23ஐ மறுபடியும் வாசியுங்கள். அடையாளத்தை இயேசுவிடம் யூதர்கள் கேட்டார்கள். அபபோது தான், தம்முடைய சரீரமாகிய ஆலயத்தை மரணத்திலிருந்து எழுப்புவேன் என்றார். இப்படி இவர் சொல்லியது இவருக்கிருந்த அதிகாரத்தை, வல்லமையை வெளிக்காட்டுவதாகும்; இவர் தேவன் என்பதை வெளிக்காட்டுவதாகும். ஆனால் மரித்தபோது, இவர் நம் பாவங்களை சுமந்து பாவியாக்கப்பட்டார்; பாவியாய் மரித்தார் (ரோ.6:10; 2 கொரி.5:21). எனவே அவருக்கு பாவங்களை மன்னிக்கக்கூட இருந்த அதிகாரம் இல்லாமற் போயிற்று. (அதானால்தானே பிதாவே இவர்களை மன்னியும் என்றார்). ஆக, இவரை மரணத்திலிருந்து எழுப்பியது பிதாவும், ஆவியானவரும் இயேசுவும் (யோ. 10:18) தான் என்று அறிகிறோம்; இந்த விஷயத்தில் மூவரும் மூன்று ஆள்தத்துவமாய் செயல்படுகிறார்கள் என்று அறியலாம்.

3. அடுத்து யோ.15:13-14ன் படி ஜெபத்திற்கு பதிலளிப்பவர் இயேசு; யோ.15:16ன் படி பதிலளிப்பவர் பிதா. ஆகவே இருவரும் ஒருவரே என்கின்றனர். யோ.16:23, 26ஐ இவர்கள் வாசிப்பதில்லை. இயேசு மனிதனாய் உயிரோடு இருக்கும்போது அவரிடம் கேட்க வேண்டும்; கேட்டால் அவரே பதிலளிப்பார்; அவர் மரித்து உயிர்த்து பரலோகம் போனபின்பு, பிதாவிடத்திலே இயேசுவின் நாமத்தினாலே கேட்க வேண்டும்; அப்போது பிதா பதில் தருவார். ஆகவே பிதாவும், இயேசுவும் வேறு வேறு ஆள் தத்துவமானவர்கள் தானே! ஆமென்.

4. அடுத்து, ஆத்மாக்களை இழுத்துக் கொள்பவர் யோ.6:44ன் படி பிதா; யோ.12:32ன் படி இயேசு, ஆகவே பிதாவும் இயேசுவும் ஒருவரே என்கின்றனர். யோ.12:32ஐ மறுபடியும் வாசியுங்கள். இயேசுவின் கல்வாரி மரணமே ஆத்மாக்களை தேவனிடம் இழுத்துக் கொள்கிறது. இது தான் சத்தியம். இப்படி இழுத்துக் கொள்ள ஆத்மாக்களை இயேசுவின் கல்வாரியிடம் கொண்டு வருபவர் பரிசுத்த ஆவியானவர். அவர்களுக்கு மனமாற்றம் இயேசு சிலுவையால் தருகிறார். இவை இரண்டுமே பிதாவானவர் ஆத்மாக்களை இழுத்துக் கொள்ளும் உபாயம். உண்மை இப்படியிருக்க, பிதாவும் குமாரனும் ஒருவரே என்கின்றனர். அல்பா, ஒமேகா என்றால் ஆதியும், அந்தமுமாய் இருப்பதாகவும். இன்னும் கொஞ்சம் விளக்கமாய் சொன்னால், துவக்கமும் முடிவும் இல்லாத நித்தியமானவர் என்று பொருள். பிதாவும், வார்த்தையும் நித்தியமானவர்கள் தானே! இதனாலே ஒருவர் தான் என்று சொல்ல முடியாதே!

5. அடுத்து, யோ.14:3ன் படி வரப்போகிறவர் இயேசு; 1 யோ.3:1-2ன் படி வரப்போகிறவர் பிதா. எனவே இருவரும் ஒருவரே என்கின்றனர். 1 யோ.3:2ஐ மறுபடியும் வாசியுங்கள். யோவான் தன் நிருபத்தில் இயேசுவைப் பற்றியே விளக்கிக் கொண்டு வருகிறார். 1 யோ.2:22 முதல் வாசியுங்கள். "அவர் அவர்" என்று உள்ளதெல்லாம் இயேசுவையே குறிக்கிறது. 1 யோ.3:2ல் பிதாவை தேவனென்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு சொல்லப்பட்டுள்ள "அவர்" என்பது பிதாவை அல்ல; இயேசுவையே குறிக்கிறது. எப்படியெனில் வச.5ல் வரும் அவர் என்பது பிதாவைக் குறிக்காமல், இயேசுவைக் குறிக்கிறதல்லவா! ஆக வரப்போவது மனுஷகுமாரனாகிய இயேசுதான்; பிதா அல்ல. இங்கு சொல்லப்பட்டது இயேசு தான் என்று அறிக.

6. மத்.28:20ன் படி எப்போதும் நம்மோடிருப்பவர் இயேசு; யோ.14:16ன் படி பரிசுத்தஆவியானவர்; ஆகவே இயேசுவும் பரிசுத்த ஆவியானவரும் ஒருவரே என்கின்றனர். யோ.14:16ல் வேறொரு தேற்றரவாளன் என்று இயேசு சொன்னதினாலே பரிசுத்த ஆவியானவர் வேறொருவர் என்று புரியவில்லையா? இயேசு பரலோகம் போன பின்னும் எப்படி நம்மோடு இருப்பார்? மத்.28:20 ஆவிக்குரிய பிரசன்னம்; Actual அல்ல. யோ.14:23ஐ வாசியுங்கள். பிதாவும், குமாரனுமாகிய இருவரும் வாசம் பண்ணுவார்களாம். எப்படி? இது ஆவிக்குரிய பிரசன்னம். ஆமென் அப்படியே இயேசுவும், பிதாவும் ஆவிக்குரிய ரீதியில் நம்மோடிருக்கிறார்கள. ஆவியானவர் மட்டும் உண்மையிலேயே Actually - ஆள்தத்துவமாக நம்மோடு இருக்கிறார். ஆக ஒரே தேவன் மூன்று ஆள்தத்துவமாய் இருக்கிறார்.

6. அடுத்து, எபி.7:25ன் படி நமக்காக வேண்டுதல் செய்பவர் இயேசு; ரோ.8:26ன் படி பரிசுத்த ஆவி. ஆகவே இருவரும் ஒருவரே என்கின்றனர். இது சிந்தனையின் வழியில் வந்த கருத்தல்ல. இயேசு பிதாவிடம் பரலோகில் நமக்காய் பரிந்து பேசுகிறார் (1 யோ.2:2). பரிசுத்த ஆவியானவரோ பூமியிலிருந்து நாம் ஜெபிக்கும் போது நமக்கு உதவி செய்கிறார். இவர் பூமியில்உதவி; அவர் பரலோகில் சிபாரிசு. எனவே இருவரும் வெவ்வேறு ஆள்தத்துவமானவர்களே!

7. வெளி.1:12-13ன் படி யோவானுடன் பேசினவர் இயேசு; வெளி.2:7ன் படிபரிசுத்த ஆவியானவர். ஆகவே இருவரும் ஒருவரே என்கின்றனர்.

இது சிறு பிள்ளைத்தனமான வாதம். யோவானுடன் இரண்டு பேர் பேசக்கூடாதா? அப்படிப் பேசினால் இருவரும் ஒருவரா?

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இன்னும் எத்தனை நூதனக் கேள்விகளைக் கேட்டாலும் வசனம் தரும் பதில்:- **"ஒரே தேவன் மூன்று ஆள்தத்துவமாய் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் செயல்படுகிறார்கள்"** என்பதே! தியானியுங்கள்! திடன் கொள்ளுங்கள்! கள்ள உபதேசத்தை கண்டு கொள்ளுங்கள்!

❖ ❖ ❖

# பாரம்பரிய மற்றும் பெயர்க் கிறிஸ்தவர்களே கேளுங்கள்

1. சபை - Church - என்றால் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் கூட்டம் (எக்ளீசியா) என்பது தெரியுமா? அப். 2:47ன் படி அப்படிப்பட்ட கூட்டம்தான் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று தெரியுமா? அவர்கள்தான் கிறிஸ்தவ சபையார் என்பது புரியுமா?

2. ரோ.10:9,10ன் படி, இயேசுகிறிஸ்து என் பாவங்களுக்காய் மரித்து உயிர்த்தெழுந்தார் என்ற வார்த்தையை இருதயத்திலே விசுவாசிக்கும்போது நமக்கு தேவநீதி உண்டாயிற்று; அந்த விசுவாசத்தை அறிக்கை செய்யும்போது இரட்சிப்பு உண்டாகிறது. ஆவியிலே மறுபடியும் பிறந்து புது சிருஷ்டியாகிறோம்; நீதிமானாக்கப்படுகிறோம். பாவமெல்லாம் மன்னிக்கப்பட்டு அவரோடேகூட உன்னதத்தில் அமர்கிறோம் (1 கொரி. 6:11; 1 பேது.1:23; யாக்.1:18; 2 கொரி. 5:17; யோ. 3:3,5; எபே. 2:8). இந்த நிலையில் உள்ளவனுக்குத்தான் தண்ணீர் ஞானஸ்நானம் (அப். 2:38; மாற்.16:16). சத்தியம் இப்படியிருக்க, பாவமறியா பச்சிளம் குழந்தைகளுக்கு தண்ணீர் ஞானஸ்நானம் கொடுக்கலாமா?

3. பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைத்திருக்கிறேன் என்பதற்கு அடையாளமான தண்ணீர் ஞானஸ்நானம், இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் காட்டுகிறபோது, குழந்தைக்கு கொடுப்பது, தேவனின் மரணத்தை, உயிர்த்தெழுதலை அவமதிப்பது ஆகாதா?

4. குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கச் சொல்லி வேதம் எங்கே சொல்கின்றது? இந்த வழக்கம் கி.பி.4ம் நூற்றாண்டில் கான்ஸ்டாண்டில் நோபுளால் கொண்டு வரப்பட்டு, போப்பால் அங்கீகரிக்கப்பட்டது என்பது தெரியுமா?

5. இந்த ஞானஸ்நானம் என்பது தெளிப்போ, கொடியின் கீழோ அல்ல என்றும், தண்ணீருக்குள் மூழ்குதல் (Baptiso) என்றும் தெரியுமா? இயேசுவும், காந்தேகே மந்திரியும் இப்படித்தானே எடுத்தார்கள்?

6. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றால்தான் பரலோகம் போகமுடியும் என்று தெரியுமா? (மாற்.16:16)

7. அதற்காக வேறொரு ஆவிக்குரிய சபையாரிடம் முழுக்கு ஞானஸ்நானம் எடுத்துவிட்டு, மறுபடியும் பாரம்பரிய சபையிலேயே சேர்ந்து கொள்ளலாமா?

8. உங்கள் சபையிலேயே ஞானஸ்நான தொட்டி இருந்தாலும், "விருப்பப்பட்டவர்களுக்கு முழுக்கு; விருப்பப்பட்டவர்களுக்கு தெளிப்பு" என்ற நமது சுயசித்தப்படி செய்து தேவ கற்பனையை அவமாக்கலாமா?

9. ஞானஸ்நான தொட்டி வைத்துக் கொண்டே குழந்தை ஞானஸ்நானம் (தெளிப்பு) கொடுக்கலாமா?

10. இரட்சிக்கப்பட்டு, முழுக்கு ஞானஸ்நானம் பெற்றவன், சத்திய மாறுபாடு, ஜீவிய மாறுபாடு உள்ள சபையை விட்டு வெளியே வந்தால்தானே முழுமையான இரட்சிப்பு கிடைக்கும்? (அப்.2:40). அப்படியில்லாமல் அதே கூட்டத்தோடு இருந்து ஆராதிப்பது சரியல்லவே! மோசே எகிப்தைவிட்டு வெளியே அழைத்துக் கொண்டு வந்தது ஆராதனைக்காகத்தானே!

11. இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாட்டமான பஸ்கா, முதற்பலன், அறுப்பின் பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை போன்ற பண்டிகைகளை இன்னும் கொண்டாடுவது, இயேசுவின் முதலாம் வருகையை விசுவாசிக்காத பாவமல்லவா? பிசாசின் தந்திரங்களை நீங்கள் அறிந்திருக்க வேண்டுமே!

12. எபி.7:12ன் படி, ஆசாரியத்துவ முறைகளை இயேசு மாற்றிய பிறகு இன்னும் அங்கி, கச்சை, பலிபீடம், தூபம் காட்டுதல் போன்றவைகள் எல்லாம் தேவையா?

13. யாத்.20:4,5; ரோ.1:23-25; 2 கொரி. 5:16ன்படி இயேசுவின் உருவப் படங்களையோ, சிலைகளையோ உருவாக்குவதோ (விலைக்கு வாங்குவதோ) அவைகளை நமஸ்கரிப்பதோ விக்கிரக ஆராதனைப் பாவமல்லவா? பிசாசு உன்னை விழுங்குவது உனக்குத் தெரியுமா?

14. கலா.3:13; உபா.21:22, 23ன் படி ஈனச் சிலுவையில் இயேசு சபிக்கப்பட்டவராய் தொங்கினாரே அந்த சிலுவை எப்படி புனித சின்னமாகும்? உயிருள்ள நம்மைப் புனிதமாக்குவதுதான் இயேசுவின் இரத்தமா? அல்லது உயிரற்ற மரக்கட்டையை புனிதமாக்க இயேசுவின் இரத்தமா? அந்த ஈனச் சிலுவையை புனிதமாக்கி என்ன பயன்? அந்த சிலுவைக்கு மரியாதை கொடுப்பதும் வணங்குவதும் விக்கிரக ஆராதனைக்கு வழிவகுக்கும் பாவமல்லவா? இயேசுவின் இரத்தம் ஈனச்சிலுவையை புனிதமாக்கியது என்று சொல்வது அவரின் இரத்தத்தின் மகிமைக் குறைச்சல் அல்லவா!

15. உங்கள் சபை மூலமாய் இயேசுவின் நாமம் உலகிற்கு அறிவிக்கப்படுகிறது என்பதால் அந்த சபையோ அதன் ஊழியரோ பெரியதாகிவிடுமா? பார்வேனையும் தேவன் தனக்கென்று பயன்படுத்தினார் என்பதால் (ரோ.9:17) அந்த பார்வோன் பெரிய தேவ ஊழியக்காரனா? அவனின் சபை தேவ சபையா? மத்.7:21,22ன் அர்த்தம் புரிகிறதா?

16. பழைய ஏற்பாட்டு கற்பனையை கைக்கொள்கிற நீ, ஏன் 4ம் கற்பனைப்படி 7ம் நாளாகிய ஓய்வுநாளை - சனிக்கிழமையை - ஆசரிப்பதில்லை? இது மட்டும் தேவனுக்கு விரோதமானது இல்லையா?

17. வேதத்திலே சொல்லப்படாத யாருமே கொண்டாடாத, ரோமன் கத்தோலிக்கர் ஆரம்பித்த ஈஸ்டர், கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைகளை கொண்டாடி விட்டு, வேதத்திலே சொல்லியவற்றை மறந்து போவது பாவம்தானே? அந்நிய நுகத்தை விட்டு வெளியேற வேண்டாமா?

18. All Saints Day, All Souls Day என்பதெல்லாம் வேதத்திலே சொல்லாமலிருந்தும், தேவனின் கருத்துக்கு மாறான பண்டிகைகளை பாரம்பரியமாய் கொண்டாடுவது தவறல்லவா? (மத்.15:3,9)

19. பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கும், அற்புதம் நடப்பதற்கும், முழுக்கு ஞானஸ்நானம் எடுப்பதற்கும் மட்டும் ஆவிக்குரிய சபைக்குப்

போவதும், மற்றப்படி கட்டிலுக்கும் (திருமணம்), தொட்டிலுக்கும் (குழந்தை பெயர் சூட்டி தெளிப்பு ஞானஸ்நானம்), பெட்டிக்கும் (மரண-அடக்க ஆராதனை) மட்டும் பாரம்பரிய சபையில் உறுப்பினராய் இருப்பதும், தேவனை ஏமாற்றுவது ஆகாதா? பதவிகளுக்காய், லாபங்களுக்காய் ஆவிக்குரிய சபையை புறக்கணிக்கலாமா?

20. மேகம் போன்ற திரளான சாட்சிகள் இருந்தாலும், அற்புதமான ஊழியர்கள் இருந்தாலும், ஆட்களைப் பாராமல் ஆண்டவனாம் இயேசுவை நோக்கியே ஓடவேண்டும் என்பதுதானே தேவசித்தம் (எபி.12;1). அதை விட்டுவிட்டு யாரையோ மதித்து, யார் பின்னாலேயோ போவது தேவ துரோகம் அல்லவா?

21. இரட்சிக்கப்பட்ட நீ, இன்னும் உலக சலுகைக்காய் மத்.10:32, 33ன்படி உலகிற்குமுன் அறிக்கை செய்யும் காரியத்தில் ஈடுபடாமல், பழைய பெயரிலும், பழைய மதப் பெயரிலும் இருப்பது பரலோகிற்கு கொண்டு செல்லாது என்பது உனக்குத் தெரியுமா?

22. சங்.1:5ன் படி, இரட்சிக்கப்பட்ட நீதிமான்களின் சபையில் இணைந்திருக்காதவன் பாவிதானே! அந்த பாவிக்கு பரலோகம் இல்லையே!

23. சுவாமி என்றால் அந்நிய தெய்வம் (god) என்று நியா.17:5; யோனா.1:6ன் மூலம் அறிந்தும், இயேசுவை "இயேசு சுவாமி" என்று அழைத்து அவரை அந்நிய தெய்வத்தோடு இணைப்பவர்களோடு ஐக்கியம் கொள்வது பாவமல்லவா?

24. யோ.14:23; 15:6; 14:13,14 போன்ற வசனங்களின்படி இயேசுவின் நாமத்தினால் பிதாவிடம் ஜெபிக்காமல், வசனத்திற்கு விரோதமாய் இயேசுவிடம் ஜெபித்து, வார்த்தையை அவமதிப்பவரோடு என்ன கூட்டு உனக்கு?

25. வெற்றி வாழ்க்கை, தெய்வீக சுகம், பொருளாதார ஆசீர்வாதம் போன்ற சத்தியங்களை போதிக்கும் சபைகளில் அங்கம் வகித்தால்தானே சாட்சியுள்ள ஜீவியம்?

26. இயேசுவின் இரத்தத்தால் நீதிமானாக்கப்பட்டிருந்தும், பாவி பாவி என்று அறிக்கையிடும் பொல்லாத சபையில் குடியிருக்கலாமா?

27. இயேசுவை விசுவாசிப்பவன் வசனத்தை விசுவாசிக்க வேண்டும்; இயேசுவில் அன்புகூறுகிறவன் விசுவாசித்த வசனத்தைக் கைக்கொள்ள வேண்டும். இவை இரண்டும் இல்லாதவர்களோடு நாம் ஐக்கியம் கொள்ளலாமா? (சங்.1:1-2; அப்.2:40; 1 யோ.1:3, 6).

(28) உன் சபையாரை இரட்சிப்புக்குள் நடத்த நினைக்கும் நீ, முதலில் பவுலைப் போல, பெர்க்மான்ஸ் போல, ஜஸ்டின் பிரபாகரன் போல ஏன், நானும் என் மனைவியும் போல, அப்.2:40 ன் படியே வெளியே வந்து, அதன்பின்தானே அவர்களைப் போல ஊழியம் செய்ய வேண்டும் அல்லவா!

(இன்னும் ஏராளம் உண்டு; வசனமே வெளிச்சமாகட்டும்).

❖ ❖ ❖

# அடிப்படையைத் தகர்க்கும் அதிநவீன பிசாசின் பொல்லாத உபதேசங்கள்

### (இது ஆவிக்குரிய சபைகளிலே....)

## 1. முழங்கால் ஜெபத்தை விட்டொழிக்க வேண்டும்

இது முழங்காலில்லாத ஊழியன் - கிறிஸ்தவன் - சொல்லுகின்ற உபதேசமல்ல. "முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும்" என்ற வேத வாக்கியங்கள் பொய்யா? (ஏசா.45:22,23; ரோ.14:11; பிலி.2:10). முழங்கால் முடங்காதபட்சத்தில் உனக்கு இரட்சிப்பே இல்லை. அல்லேலூயா! வயோதிகர், முடியாதவர்கள். உடல் ஊனமுற்றோர் முழங்கால்படியிட முடியாது என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கது. மற்றப்படி முழங்கால் ஜெபத்தை விட்டொழிப்பது என்பது பொல்லாத உபதேசம். 2 நாளா.6:13; எஸ்றா 9:5; சங்.95:6; மத்.17:14; மாற்.1:40; 10:17; லூக்.22:41,42; அப்.7:60; 9:40; 20:36, 21:5; எபே.3:15 போன்ற பல வசனங்களில் முழங்கால்படியிட்டவர்களெல்லாம் முட்டாள்களா? பாகாலின் பிள்ளைகளா? இது குறித்து ஒரு பத்திரிகையில் வந்த செய்தியை தருகிறேன்; வாசியுங்கள்.

"விசுவாசிகளின் ஜெபத்தைக் குறைக்க, சாத்தான் எடுக்கும் தந்திரங்களில் நவீனமான ஒன்று முழங்கால்படியிட்டு ஜெபித்தால் தண்டனைக்குரிய ஒன்று" என்பதாகும். பள்ளியில் படிக்காத பிள்ளைகளை முழங்காலில் நிற்க வைப்பார்கள். வீட்டில் சொல்படி கேளாத பிள்ளைகளை முழங்காலில் நில் என்று பெற்றோர் தண்டிப்பதுண்டு. ஜெயிலில் கைதிகளை முழங்காலில் நிற்க வைப்பார்கள். அதுபோல, அன்புள்ள தேவன், தம்முடைய பிள்ளைகளை இத்தகைய தண்டனையிலேயே அதிக நேரம் செலவிடு என்று சொல்வாரா? அவர் கிருபை பொருந்தின தேவன். நம்மை தண்டிக்கும்

முழங்கால் ஜெபத்தை ஒருபோதும் செய்ய அனுமதிக்க மாட்டார். உங்களை தண்டித்து தானா, உங்கள் தேவைகளை நிறைவேற்றுவார் அந்த அன்புள்ள தகப்பன்? சிந்தியுங்கள். "முழங்கால் ஜெபத்தைவிட்டொழித்து தேவனை விசுவாசியுங்கள்" - **இப்படி ஒரு புதிய உபதேசம் தற்போது வந்துள்ளது.** இப்படி உபதேசிப்பது சாத்தானின் தந்திரங்களில் ஒன்று. பின்னே இயேசு ஏன் முழங்கால் படியிட்டு, முகங்குப்புற விழுந்து பிதாவை நோக்கி ஜெபம் பண்ணினார்? (மத்.26:39; லூக்.22:41, 42). பவுலும் முழங்கால் படியிட்டு விசுவாசிகளோடு ஜெபம் பண்ணினதும் (அப்.20:26; 21:5). அப்.பேதுரு முழங்கால்படியிட்டு ஜெபம் செய்ததும் (அப்.9:40), ஸ்தேவான் முழங்கால்படியிட்டு ஜெபித்ததும் (அப்.7:60) ஏன்? சாத்தானின் தந்திரங்கள் நாம் அறியாதவைகள் அல்லவே என்ற பவுலின் வெளிச்சமே காரணம்! உங்களுக்கு வெளிச்சம் இருந்தால் முழங்கால்படியிடுங்கள். இது ஆண்டவரோடுள்ள ஐக்கியத்திற்கு முதல்படி! அது தான் முழங்கால்படி."

முழங்கால்படியிட்டு, கீழ்ப்படிதலை - தாழ்மையை - நம்மை நாமே வெறுப்பதை - தேவனை மகிமைப்படுத்துவதை வெளிப்படுத்துங்கள். தாழ்மையில்லாதவனுக்கு கிருபை இல்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? (யாக்.4:6). கிருபை என்று சொன்னால் மட்டும் கிருபை கிடைக்காது.

❖ ❖ ❖

## 2. கிறிஸ்தவன் உபவாசமிருக்கக் கூடாது

இப்படிச் சொல்லுகிற பிசாசின் பொல்லாத உபதேசகர்கள் எடுத்துக் கொள்கிற வசனம் மத்.9:15. "மணவாளனாகிய இயேசு இருக்கையில் மணவாளனின் தோழர்கள் உபவாசிக்க தேவையில்லை; மணவாளன் எடுபட்டுப் போய்விட்டால் உபவாசிக்க வேண்டுமல்லவா!" எப்போது எடுபட்டார்? உயிர்த்தெழுந்த 40ம் நாள் ஒலிவ மலையிலிருந்து பரலோகம் போய்விட்டார். போனவர் அப்.1:11ன்படி, அவர் போய்த்தான் ஆவியானவராகிய வேறொரு தேற்றரவாளனை என்றென்றைக்கும் நம்முடனே இருக்கும்படிக்கு (யோ.14:16) பெந்தெகொஸ்தே நாளில் அனுப்பி வைத்தார். அந்த ஆவியானவர் நம்மில் தங்கி இருப்பதால் நம்முடைய சரீரம் தேவனுடைய ஆலயமாக மாறியிருக்கிறது (1 கொரி.6:19). அதனால்தான் உலகத்தில் இருக்கிறவனிலும் நமக்குள் இருக்கிறவர் பெரியவர் என்று சொல்கின்றோம் (யோ.4:4). இன்றைய தேதியில் இயேசுவானவர் பிதாவின் வலது பாரிசத்தில் இருந்து நமக்காய் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார் (1 யோ.2:1). அவர்

சொன்னபடி நம்மை அழைத்துக் கொண்டு போக சீக்கிரம் வருவார் (யோ.14:1-3). இப்போது இயேசுவின் வார்த்தை தான் நம்மில் இருக்க வேண்டும் (யோ.15:7). ஆட்தத்துவமாய் இயேசுவும், பிதாவும் நம்மோடு இல்லை; ஆவியானவரே இருக்கிறார். ஆனாலும், அவர்களின் பிரசன்னத்தை மாத்திரமே நாம் உணர முடியும். எனவே ஆட்தத்துவமான இயேசு இல்லாத இந்தக் காலத்தில் இயேசு சொன்ன மத்.9:15ன்படி, உபவசிக்கலாமல்லவா!

அதுவும்... இந்த வசனம் மணவாளனின் தோழர்களைப் பற்றித்தான் கூறுகிறது. நாமோ மணவாளனின் தோழர்களல்ல; பரலோகில் நடக்கப் போகும் கல்யாண விருந்துக்கான மணவாட்டிகள் (1 பேது.3:21). எனவே மத்.9:15 ஐக் காட்டி, உபவாசம் கூடாது என்று நம்மை யாரும் ஏமாற்ற முடியாது. அப்படி ஏமாற்றுகிறவர்களின் கருத்துப்படி, புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் மணவாளனின் தோழர்கள் என்றால், அவர்கள் சொல்லும் பொல்லாத சாத்தானின் உபதேசம் அவர்களுக்கே நிறைவேறட்டும்! தோழர்களுக்கும் கூட, மணவாளன் இப்போது ஆட்தத்துவமாய் பூமியில் இல்லை. மணவாட்டிகளுக்கும் இல்லை. எனவே உபவாசிக்கலாம்.

உபவாசம் எது என்று தெரியாமல் பலர் தங்களை பெரிய "மேதாவி" என்று பேசுகின்றனர். மத்.17:21ஐ வாசியுங்கள்: "இந்த ஜாதிப்பிசாசு, ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது." இந்த வசன விசுவாசம் இருந்தால், நம் ஆவியிலே, வல்லமையுள்ள பிசாசை விரட்டத் தக்கதான வல்லமையை, உபவாசமுள்ள ஜெபத்தால் பெற்றுக் கொள்ள முடியும். வசன விசுவாசத்தை கிரியையில் காட்டாதவரை பிரயோஜனமே இல்லை (யாக்.2:20). இயேசுவும் விசுவாசத்தோடு 40 நாள் உபவாச ஜெபத்திலிருந்துதானே வல்லமையைப் பெற்றுக் கொண்டு பிசாசை விரட்டினார். மாற்.16:17ன் படி, விசுவாசிகள் பிசாசைத் துரத்த வேண்டுமானால் - அதுவும் பலத்த வல்லமையுள்ளஜாதிப் பிசாசை - துரத்த வேண்டுமானால் - இப்படிப்பட்ட உபவாச ஜெபம் தேவை. மற்றப்படி சாதாரணப் பிசாசுகள் இயேசுவின் நாமத்தினாலேயே ஓடிப்போகும். இயேசுவின் நாம முழு வல்லமை எப்போது நமக்குத் தேவை.

1. உபவாச ஜெபத்தால் ஆவி பெலனடைகிறது; வசன விசுவாசம் வளர்கிறது அவிசுவாசம் ஒழிகிறது (see மத்.4:1-11).
2. Faith needs prayer; prayer needs fasting. விசுவாசத்திற்கு தேவை ஜெபம்; ஜெபம் செய்ய உபவாசம் தேவை.

3. தேவனுக்கு முன்பாக ஆத்மாவை தாழ்த்த கீழ்ப்படுத்த, கிருபையாய் வல்லமையைப் பெற - இது உதவும் (சங்.35:13).

4. உபவாசம் ஆத்மாவை சிட்சித்து வழிநடத்துகிறது (சங்.69:10; see நினிவே).

5. எல்லா உலகக் காரியங்களையும் விட்டுவிட்டு தேவனோடு இருக்க வைக்கிறது (1 கொரி.7:5).

6. பிசாசின் ஆவியை வெல்ல நம் ஆவியிலே வல்லமை வருகின்றது மாம்சத்தை கீழ்ப்படுத்தும்போது.

7. அற்புதம் அடையாளம் நடக்கும் விசுவாசத்தோடு கூடிய உபவாச ஜெபத்தின் பலனால். இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். மாம்சத்தையும் மாம்சீகத்தையும் ஒடுக்கி ஆவியிலே பெலனடைய உபவாசமானது வேதம் காட்டும் பிரதான வழி.

"ஏதோ ஒரு காரியம் நடக்க வேண்டுமானால் உபவாசம் இருக்க வேண்டும்; அப்படியாய் உபவாசம் இருந்து உடலை வருத்தி ஆண்டவரிடம் அழுது ஜெபித்தால் அவர் இரங்கி கண்ணீரைத் துடைத்து நன்மை செய்வார்" என்ற பாரம்பரிய கோட்பாடுகள் தலைதூக்குவதால்தான், இந்த பொல்லாத பிசாசின் போதனைகள் எழும்புகின்றன. **பாரம்பரியமும் ஒழிய வேண்டும்; பிசாசின் போதனைகளும் ஒழிய வேண்டும்; வசன வெளிச்சம் - விசுவாசம் - வெளிப்பாடு மிளிர வேண்டும்.** பழைய துருத்தியில் புதிய ரசம் சேரக்கூடாது (மத்.9:16, 17). பழைய ஏற்பாடுபோல, அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும் இருக்க வேண்டிய பாரம்பரியக் கட்டாயமில்லை. மாம்சத்தை உபவாசத்தால் கொஞ்சமாவது ஒடுக்கும்போது ஆவி பெலனடையும், கெத்சமனே தோட்டத்திலே உறங்கினார்களே சீஷர்கள் எதனாலே? இராப்போஜன விருந்தால்தானே! ஏதேனிலே விழுந்துபோகக் காரணமே உணவு - கனி - தானே! (see நீதி.23:20,21).

இயேசு உபவாசித்தார்; அதையே போதித்தார் (மத்.17:21) பவுலையும் பர்னபாவையும் ஊழியத்திற்கு அந்தியோகியா கிறிஸ்தவ சபையார், உபவாசித்து, ஜெபம்பண்ணி அவர்கள்மேல் கைகளை வைத்து அனுப்பினார்கள் (அப்.13:2,3). அப்.பவுல் அநேக முறை உபவாசத்தில் இருந்தான் (2 கொரி.11:27). உபவாசமும் ஜெபமும் குடும்ப விசுவாசிகளுக்குத் தேவை என்று பவுல் எழுதுகிறான் (1 கொரி.7:5). கப்பல் பிரயாணத்திலும் உபவாசம் பண்ணப்பட்டிருக்கிறது (அப்.27:9). கொர்நேலியு கூட உபவாசித்தான் (அப்.10:30). அப்போதுதான் தரிசனமும் வெளிப்பாடும்

கிடைத்தது அவனுக்கு. உபவாசிப்பது எப்படி என்று இயேசு சொல்லிக் கொடுத்தார் (மத்.6:16,17). மோசே, எலிசா, யோசுவா, இயேசு போன்றோர் 40 நாள் உபவாசமிருந்தனர். மற்றும் பாவநிவாரண நாளில் உபவாசம் (லேவி.23:27-32). இயேசுவுக்கு 500 ஆண்டுகளுக்கு முன் சகரியா காலத்தில் ஆண்டுக்கு 4 உபவாசம் (சக.8:19). ஒரு வருஷத்திற்கு 104 உபவாசம் (லூக்.18:12). நினிவே பட்டணத்தார் (யோனா.3:5-10) ஆகாப் ராஜா (1 ராஜா 21), தாவீது (2 சாமு. 12:16-29), எல்லோரும் உபவாசித்தார்கள். இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம்.

மொத்தத்தில் உபவாசம் இருக்கும்போது மாம்சமும் மாம்சீகமும் கீழ்ப்படுகிறது. நம் ஆவி உயர்கிறது; வல்லமையைப் பெறுகிறது; ஆவியான பிசாசின் கிரியைகளுக்கு எதிர்த்து நிற்க முடிகிறது; பிசாசை தோற்கடிப்பதால், நம் எதிரேவரும் அத்தனையையும் ஒன்றுமில்லாமல் ஆக்க முடிகிறது; அதிகார வார்த்தையினால், விசுவாச அறிக்கையினால் வெற்றியைக் காண முடிகிறது. உபவாசிப்பதால் ஜெயம் பெருகுகிறது; ஜெயம் பெருகுவதால் வசனவிசுவாசம் வளர்கிறது; விசுவாசம் வளர்வதால், உலகை - மாம்சத்தை - பிசாசை ஜெயிக்க முடிகிறது. ஒரே நாள் உபவாசத்தால் இவைகள் வந்து விடுவதில்லை. ஆத்மா மறுரூபமாக மறுரூபமாக (ரோ.12:2), ஆவியிலே வல்லமையைப் பெற, பெற இவைகளை அனுபவிக்க முடியும். இதனால்தான் சபைகளிலே உபவாச கூட்டங்கள் வைக்கப்படுகின்றது. கிறிஸ்தவனுக்கு உபவாசம் தேவையில்லை என்ற பிசாசின் ஆவியை விரட்டுவோம்.

❖ ❖ ❖

## 3. பாவ மன்னிப்பைப் பெற்று திருவிருந்தில் பங்கு கொள்ள தேவையில்லை

கிறிஸ்துவின் பஸ்கா பலியை திருவிருந்து மூலமாய் நினைவு கூருங்கள் என்று இயேசு சொன்னார் (1 கொரி.11:23-26). பஸ்கா பண்டிகை கிறிஸ்துவாகிய நிஜத்திற்கு நிழலாய் இருப்பதால் அதை ஆசரிக்கத் தேவையில்லை (கொலோ.216,17). மரணத்தை நினைவு கூருங்கள் என்றுதான் இயேசு சொன்னாரே ஒழிய மரண நாளை அல்ல. இன்றைக்கு ஏதோ ஒரு மரண நாளை, யாரோ கொடுத்த மரண நாளை, வருஷா வருஷம் மாறி மாறி வரும் மரண நாளை கொண்டாடுகிற கூட்டம் பெருகிவிட்டது. வீடுகள் தோறும் அப்பம்பிட்டு இயேசுவின் மரணத்தை. ஆதி

அப்போஸ்தலர்கள் நினைவு கூர்ந்தார்கள் என்றும் நாமறிவோம். இப்படி திருவிருந்தில் பங்கு கொள்ளும்போது எப்படி இருக்க வேண்டும்? 1 கொரி. 5:6-8 ஐ வாசித்தால் புரியும். துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்த மாவோடு இல்லாமல், துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே நினைவுகூர வேண்டும். இதைபவுல், 1 கொரி.11:27ல் "இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்து குற்றமுள்ளவனாயிருப்பான்" என்கிறான். இதனால்தான் பல ஆவிக்குரிய சபைகளில் சுத்திகரிப்பு என்றும், பாவ அறிக்கை செய்து, பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று பாத்திரமுள்ளவர்களாக வேண்டும் என்றும் போதிக்கப்படுகிறது. அபாத்திரமாய் அன்றைக்கு பங்கு பெற்றவர்கள் அநேகர் பலவீனமும், வியாதியுள்ளவர்களுமானார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்தார்கள். எனவே நம்மை நாமே நிதானித்து அறிந்து, உலக ஆக்கினைக்கு உட்படாதபடி, கர்த்தரின் வசன - போதக - சிட்சையை ஏற்று செயல்பட வேண்டும் (1 கொரி.11:30-32; நீதி.6:33; சங்.119:105; ஏசா.9:2; 49:6; 60:1).

இப்படிச் சொன்னால், **"இன்றைக்கு உங்கள் சபையில் எத்தனை பேர் வியாதியானார்கள், எத்தனை பேர் மரித்தார்கள்" என்று கேட்கிறவர்கள் பெருகிவிட்டார்கள்.** அன்று கொரிந்து சபையில் நடந்தது நமக்கு எச்சரிப்புக்காய், திருஷ்டாந்தமாய் எழுதப்பட்டுள்ளது என்று அவர்களுக்குப் புரியவில்லை. 1 கொரி.10:1-11 நமக்காகத் தானே சொல்லப்பட்டது! "இன்று, அன்றுபோல் எத்தனை பேர் பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; எத்தனை பேர் சங்காரக்காரனால் அழிக்கப்பட்டார்கள்; எத்தனை பேர் வேசித்தனம் பண்ணி ஒரே நாளில் 23000 பேராய் விழுந்தார்கள்?" இப்படியா கேள்வி கேட்பது? இதுவா ஆவியானவரின் வழி நடத்தல்? இது சாத்தானின் தூண்டுதலல்லவா! அன்றைக்கு அனனியா சப்பீராள் மரித்தார்களே அது எச்சரிப்புக்கு அல்லவா! (அப்.5). அவர்களைப்போல் நாம் இருக்கக் கூடாது என்று சொன்னால், உங்கள் சபையில் எத்தனைபேர் மரித்தார்கள்? என்று கேட்பதா ஞானம்?

**இப்படிப்பட்ட சாத்தானின் பொல்லாத போதகங்கள் உள்ளோர் சொல்கிறார்கள்:**

(1) எண்.9ல் தீட்டுப்பட்டவர்கள் பஸ்காவை ஆசரித்தார்களாம். தேவன் சொன்னதை இவர்கள் வாசிப்பதே இல்லை. (see எண்.9:9-14). அப்படிப்பட்டவர்கள் முதலாம் மாதம் 14ஆம் தேதியல்ல. 2ம் மாதம் 14ம் தேதி

ஆசரிக்க வேண்டும். இதுவே தேவ கட்டளை. ஏன் இந்த 1 மாத இடைவெளி? எண்.19:11-22 ஐ படித்திருந்தால் உண்மை புரியும். அவர்கள் சுதேசியானாலும் பரதேசியானாலும் சுத்தமுள்ளவர்களாகத்தான் ஆசரிக்க வேண்டும்.

(2) 1 கொரி.11ல் சொல்லப்பட்டது விக்கிரக ஆராதனைக்கமாம். உங்கள் சபையில் விக்கிரக ஆராதனைக்காரர்கள் இருக்கிறார்களா என்று கேட்கிறார்கள். விக்கிரக ஆராதனையிலே, விக்கிரகத்தை உருவாக்குவதும், நமஸ்கரிப்பதும் மட்டும் அல்ல; இரண்டகம் பண்ணுதல், முரட்டாட்டம், பொருளாசை, கோவில் பணத்தை கொள்ளையிடல் போன்ற ஆவிக்குரிய விக்கிரக ஆராதனைகளும் உண்டு என்று இவர்களுக்கு தெரியவில்லை. அவர்களின் மனக்கண்கள் பிரகாசமாக ஜெபிப்போம் (எபே.1:19). பவுல் சொல்கிற விக்கிரக ஆராதனைக்கான குற்றச்சாட்டுக்கள் 1 கொரி.10ம் அதிகாரத்தோடு முடிந்தது. 11ம் அதிகாரத்தில் விக்கிரக காரியங்களைக் குறித்துப் பேசவே இல்லை. மாறாக கிறிஸ்தவ ஒழுங்கைப் பற்றியும், இராப் போஜனம் பற்றியும் பேசுகிறான் (Christian order & Lord's supper). எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில்புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணவேண்டும் (1 கொரி.11:28). இப்படி பானம் பண்ணாததால் தானே, யூதாஸ் நான்று கொண்டு செத்தான். இதுவும் நமக்கு திருஷ்டாந்தம் - எச்சரிக்கை.

நம்மை நாமே சோதித்தறிந்து. பிட்கப்பட்டசரீரம்,சிந்தப்பட்ட இரத்தம் குறித்த ஆழமான விசுவாசம் கொண்டு. பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று, பாத்திரமுள்ளவர்களாய் பங்கு பெறுவோம். 1 தீமோ.5:24ஐ நினைவுகூர்வோம். இப்படியில்லாமல் "வெறுமனே பங்கு கொள்ளலாம்" என்று அடிப்படை சத்தியத்திற்கு உலைவைக்கிற அதிநவீன பொல்லாத சாத்தானின் உபதேசங்களுக்கு எதிர்த்து நிற்போம்! விரட்டியடிப்போம்! இயேசு சீக்கிரம் வருகிறார்!

❖ ❖ ❖

## 4. பஸ்கா நித்ய நித்யமாய் ஆசரிக்க வேண்டுமாம்

எகிப்திலிருந்து இஸ்ரேலர் விடுதலையாகும்போது முதன் முதலில் பஸ்கா ஆசரிக்கப்பட்டது (யாத்.12). இது ஆபிப்மாதம் 14ம் தேதி. இதே ஆசரிப்பை அவர்கள் போய்ச் சேரும் கானானிலும் ஆசரிக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார் (யாத.13:4,5). இதை இஸ்ரேல் சபை, பண்டிகையாக ஆசரிக்க வேண்டும் என்று நியாயப்பிரமாணத்தில்

சேர்க்கப்பட்டது (லேவி.23:5). "அதை உங்கள் தலைமுறை தோறும் நித்திய நியமமாய் ஆசரிக்கக் கடவீர்கள்" (யாத்.12:14)என்று தேவன் சொன்னதால், அதை நித்ய நித்தியமாய், இஸ்ரேல் சபையார் மட்டுமல்ல; கிறிஸ்தவ சபையாரும் ஆசரிக்க வேண்டுமென்று ஒரு பொல்லாத, பிசாசின் உபதேசம் இந்த நவீன காலத்தில் தோன்றி பரவி வருகின்றது.

லேவி 23ல் சொல்லப்பட்ட 8 பண்டிகைகளும் கிறிஸ்துவுக்கு நிழலாட்டமானவை. நிஜமாகிய கிறிஸ்து வந்த பிறகு, வார்த்தையாகிய கிறிஸ்துவின்மேல் கட்டப்பட்ட கிறிஸ்தவ சபையார். இந்தப் பண்டிகைகளை ஆசரிக்கத் தேவையில்லை என்று கொலோ.2:16,17 சொல்கின்றது. அப்படி யாராவது ஆசரித்தால், அவர்கள் நிஜமாகிய இயேசுவின் முதலாம் வருகையை விசுவாசிக்காதவர்கள்; இயேசுவை விசுவாசிக்காத இஸ்ரேலரும் இந்தப் பண்டிகைகளை ஆசரிக்கின்றனரே! நாமென்ன இயேசுவைக் கொன்ற இஸ்ரேலரன் சந்ததியா? நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும் மாம்சப் பிரகாரமான யாக்கோபின் சந்ததியா? இருதய விருத்தசேதனம் பண்ணப்பட்ட - கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் பெற்ற - ஆவிக்குரிய இஸ்ரேலர்கள் அல்லவா! நாம் இஸ்ரேலரின் - யாக்கோபின் சந்ததி அல்ல; ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிறிஸ்துவின் சந்ததியார் நாம்! (கலா.3:16). நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டாரே! பின்னை ஏன் இந்த ஆசரிப்பு நமக்கு?

உங்கள் தலைமுறைதோறும், நித்திய நியமமாய் ஆசரிக்கக் கடவீர்கள் என்று தேவன் சொன்னதால், நித்திய நித்தியமாய் அதை ஆசரிக்க வேண்டுமென்று பொல்லாத உபதேசக்காரர்கள் சொல்கிறார்கள். இவர்களின் உபதேசமெல்லாம் கிறிஸ்தவத்தின் அடிப்படை உபதேசத்தையே உடைத்தெறிவதாகும்! "என் விருத்தசேதன உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்திய உடன்படிக்கையாயிருகக்கடவது" (ஆதி.17:13) என்று ஆபிரகாமிடம் தேவன் சொன்னதால், அதை நித்திய நியமமாய் நாமும் கைக்கொள்ள வேண்டுமா? லேவி கோத்திர ஆரோனின் மகன் பினேகாஸுக்கும், அவன் சந்ததிக்கும் ஆசாரிய பட்டத்திற்கான உடன்படிக்கை நித்தியமாய் தரப்பட்டதால், இந்த ஆசாரியத்துவம் புதிய ஏற்பாட்டில் உண்டா? (எண்.25:13; எபி.7:11,12). தீட்டுப் பட்டவன் சம்பந்தமான கட்டளை நித்தியக் கட்டளை என்று எண்.19:10,22ல் சொல்லப்பட்டிருப்பதால் அது நமக்கும் உண்டா? கொழுப்பையும் இரத்தத்தையும் புசிக்கலாகாது என்ற கட்டளை நித்திய கட்டளை என்பதால் (லேவி.3:17) அதை நாம் கைக்கொள்ள வேண்டுமா? அசைவாட்டும் முன்னந் தொடையும், மார்க்கண்டமும்

ஆசாரியக் குடும்பத்திற்கு நித்திய கட்டளை என்பதால் (லேவி.10:15) அது நமக்கும் உண்டா? இப்படி ஏராளம் கேட்டுக்கொண்டே போகலாம். "நித்தியம்" என்ற ஒரு வார்த்தையை வைத்து மாத்திரம் எதையும் எடைபோடக் கூடாது. அதன் ஆழத்தை அறிந்து நிதானிக்க, ஆவியானவருக்கு இடங்கொடுத்து செயல்பட வேண்டும்.

அப்படி ஆசரிக்க வேண்டுமென்றால், மாலை 3 மணிக்கு ஆசரிக்கிறார்களா? ஆபீப் மாதம் 14ம் தேதி ஆசரிக்கிறார்களா? அப்படி ஆசரித்தால் எப்படி அந்தநாள் வருடா வருடம் சரியாய் வெள்ளிக்கிழமை வரும்! சிந்தியுங்கள். 2014ம் வருடம், இஸ்ரேலர் காலண்டர்படி, ஆபீப் மாதம் 14ம் தேதி, ஏப்ரல் 14- திங்கட்கிழமை வருகிறது. அன்று ஆசரிக்காமல், ஏப்ரல் 18ம் தேதி வெள்ளிக்கிழமை - Good Friday - என்று ஆசரிக்கிறார்களே ஏன்? இது அறியாமையா? வேதப் புரட்டா? அல்லது பிசாசின் தந்திரமா? 2013ல் மார்ச் 18 திங்கட்கிழமையும், 2012ல் ஏப்ரல் 6லும், 2011ல் ஏப்ரல் 18லும் ஏன் கொண்டாடவில்லை? இப்படி பஸ்கா பண்டிகை தேதியை மாற்றி மாற்றியும், அப்படி மாற்றினாலும் அந்த நாளைத்தான் கொண்டாடவேண்டும் என்றும் அபூர்வ கொள்கைகளை, அள்ளி வீசும், அதிநவீன, பொல்லாத, பிசாசின் பிரசங்கியார்களைக் கண்டு கொள்ளுங்கள். பஸ்காவை ஆசரிப்பது என்பது நியாயப் பிரமாணச் சட்டம். **நியாயப் பிரமணக்கார கிறிஸ்தவர்கள் எல்லாரும் சாபத்திற்கு உட்பட்டவர்கள் என்று முந்தி அறியுங்கள் (கலா.3:10). (பழைய ஏற்பாட்டு இஸ்ரேலர்கள் அல்ல).**

1 கொரி.5:8ல் பண்டிகையை ஆசரிக்க சொல்லியிருக்கிறாரே என்று வாதிடுவோரும் உண்டு. கொலோ.2:16,17ல் தேவையில்லை என்ற பவுல், இங்கே சொன்னதன் அர்த்தமென்ன? 1 கொரி.11:24, 25ல், இயேசுவின் மரணத்தை நினைவுகூரும்படி, இதைச் செய்யுங்கள் என்று இயேசு சொன்னதை இங்கே பவுல் சொல்கிறார். ஆதி அப்போஸ்தலர் காலத்தில் அனுதினமும் வீடுகள் தோறும் அப்பம் பிட்டனர் (அப்.2:46). அதன்பின் சபை கூடிவரும் போதெல்லாம் அப்பம் பிட்டார்கள். ஏதாவது ஒரு முக்கிய நிகழ்வின் போது அப்பம் பிட்டார்கள் (அப்.20:7- பவுலுக்கு பிரிவு உபச்சார விழா). அதன் படியே, கொரிந்து சபைக்கு பவுல் எழுதும் போது, அங்குள்ள விபச்சாரக்காரனை நீக்கிவிட்டு - புளித்த மாவை நீக்கிவிட்டு - பரிசுத்தமாய் திருவிருந்து ஆராதனை பண்டிகையை - இயேசுவின் பஸ்காவை நினைவுகூரும் வண்ணமாய் ஆசரியுங்கள் என்று தான் கட்டளை யிடுகின்றான் (1 கொரி.5:8). கிறிஸ்தவனுக்கு ஒரு பண்டிகை உண்டு என்றால் அது பஸ்கா பண்டிகைக்கு அடையாளமான - கிறிஸ்துவின் மரணத்திற்கு

நினைவான - இராப்போஜனப் பண்டிகைதான். அது இரவிலல்ல; பகலிலல்ல; வாரத்தின் முதல் நாளிலல்ல; மாதாமாதம் அல்ல. இயேசு வரும் வரை அவரின் மரணத்தை நினைவு கூரும் வண்ணமாய் எப்போதும் கைக்கொள்ளலாம். இதைப் பஸ்கா நாளன்று அல்ல; பஸ்கா பண்டிகையாய் அல்ல. பாரம்பரியமாய் அல்ல; விசுவாசத்தோடு எப்போதும் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட விசுவாசத்தை வளர்க்க விடாமல், பாரம்பரிய பண்டிகையை நித்தியம் நித்தியமாய் ஆசரிக்க வேண்டும் என்று கூறும், பக்க வழியாய் நுழையும் கள்ளப்போதகர்களுக்கு எச்சரிக்கையாய் இருங்கள்! ஆதி அப்போஸ்தலர் யாருமே பஸ்கா பண்டிகையை ஆசரிக்கவில்லையே! பஸ்கா அஸ்காவானது இவர்களுக்குத் தெரியாதோ! இவர்கள் மனக்கண்கள் திறக்கப்பட்டு, பிரகாசமடைய ஜெபிப்போம்!

❖ ❖ ❖

## 5. பந்தியில் பிரவேசிக்க பரிசுத்த அளவுகோல் இல்லையாம்

“அளவுகோல் ஒன்றும் கிடையாது; எல்லோரும் பங்கு பெறலாம்; யூதாஸ் பங்கு பெறவில்லையா?” - இப்படியாய் பொல்லாத போதகம் கொடி கட்டிப் பறக்கிறது; பக்க வழியாய் ஆவிக்குரிய சபையில் நுழைந்திருக்கிற இவர்களை அடையாளம் கண்டு கொள்ள இயலாமல், “ஆமென்! அல்லேலூயா!” போடும் ஆவிக்குரிய சபை என்னும் போர்வையில் இருக்கும் ஊழியர் கூட்டம் ஏராளம். எல்லாவற்றுக்கும் காரணம், பணம், பவுசு, கூட்டம், ஜாதி, கவர்ச்சி போன்றவைதான். இந்த மாயையிலிருந்து விடுதலையாகத் தான் நம் விசுவாச முழக்கம் முழங்குகிறது.

### பரிசுத்த அளவுகோல்கள்:

1. கர்த்தரின் மரணத்தை விசுவாசித்து, பந்தியில் பிரவேசித்து, அவருடைய மரணத்தை தெரிவிக்க வேண்டும் (1 கொரி.11:26). “எதற்காய் மரித்தார்? ஏன் மரித்தார்? மரித்ததால் என்ன ஆயிற்று? மரித்தவர் உயிர்த்தாரா? உயிர்த்ததால் என்ன கிடைத்தது” போன்ற பலவற்றை தெரிவிக்கிற இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளாய் இருந்து இதில் பிரவேசிக்க வேண்டும்.

2. அபாத்திரமாய் பந்தியிருக்கக்கூடாது. தன்னைத்தானே சோதித்தறிந்து, “இந்த சரீரமும், இரத்தமும் என்னை இதில் பங்குபெற தகுதிப் படுத்தியிருக்கிறதா?; நான் இதிலே பங்கு பெற பாத்திரமுள்ளவனாய் இருக்கிறேனா?” என்பதை உணர்ந்து பங்கு பெற வேண்டும்.

இல்லையென்றால், ஆக்கினைத் தீர்ப்பு வந்து சேரும் (1 கொரி.11:27-29).

3. கர்த்தருடைய போதக சிட்சையை அசட்டை பண்ணாமல், (நீதி.6:23; சங்.119; 105; ஏசா.9:2) வசனத்தாலே நம்மை நாமே நிதானித்து அறிந்து, தேவனோடே ஒப்புரவாக வேண்டும்.

4. நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றிருக்க வேண்டும் (1 யோ.1:7-10). அப்படிப் பட்டவனே இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன். இப்படியான இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன் மாத்திரமே இந்த திருவிருந்து ஆராதனைப் பண்டிகையில் கலந்து கொள்ள வேண்டும்.

5. துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்த மாவோடு இல்லாமல், துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடு இந்த திருவிருந்து ஆராதனைப் பண்டிகையில் பங்கு பெறவேண்டும் (1 கொரி.5:8).

இன்னும் ஏராளம் சொல்லிக்கொண்டே போகலாம். அபாத்திரமாய் பானம் பண்ணியவர்கள் கொரிந்து சபையில், பலவீனரும், வியாதியஸ்தரும், மரண மடைந்தவர்களுமாகி விட்டார்களாம் (1 கொரி.11:30). இது நமக்கு எச்சரிப்புக்காய் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி நம்முடைய சபையில் நடக்கவில்லை என்பதால், பவுல் சொன்னது பொய்யா? 1 தீமோ.5:24ஐப் புரியாத - அறியாத - பொல்லாத பிசாசின் உபதேசகர்களின் கணிப்பு இது. அபாத்திரமாய் பானம் பண்ணிய யூதாஸ், நான்று கொண்டு செத்தானே புரியவில்லையா? பஸ்கா பண்டிகை முதல், 7 நாளைக்கு புளிப்பில்லா அப்பப் பண்டிகை கொண்டாடுவது எதற்கு? 7 என்பது முழுமை. பஸ்காவால், பரிசுத்தமாக்கப்பட்ட - புளிப்பில்லாத அப்பமான நாம், வாழ்நாள் முழுவதும் (முழுமை) பரிசுத்தமாய் வாழவேண்டும் என்பதற்காய்! முதல் நாளே ஏனோ தானோ வென்று பங்கெடுக்கவா இந்த நிழலாட்டங்களெல்லாம்! சிந்தியுங்கள்.

இஸ்ரேலர், முதல் பஸ்காவை ஆசரித்தபோது எப்படி ஆசரித்தார்கள்? எண்.19:11-22ன் படி தீட்டுப்பட்டவர்கள் தகுதியற்றவர்கள் (எண்.9:9), முதல்மாதம் அல்ல; சத்திகரிக்கப்பட்டபின் 2ம் மாதம் அல்ல; சுத்திகரிக்கப்பட்டபின் 2ம்மாதம் 14ம் தேதி ஆசரித்தார்கள் (எண்.9:11). கானானுக்குள் நுழைந்தபோது, விருத்தசேதனம் பண்ணப்பட்டு, எகிப்தின் நிந்தை வராத நிலையில் தான், கில்காலில் பஸ்காவை ஆசரித்தார்கள் (யோசு.5:7-10). 2 நாளா 30:3ஐ வாசித்தால், பரிசுத்த மில்லாததால் பஸ்காவை ஆசரிக்கவில்லை. எஸ்றா 6:19,20லும் பரிசுத்தமாகவே

ஆசரித்தார்கள். எசே.46:21, 22லும் பாவ நிவாரணம் பண்ணிதான் ஆசரித்தார்கள். 2 ராஜா 23:21-23லும் மோசேயின் புஸ்தகத்தில் சொல்லப்பட்டபடியே தான் ஆசரித்தார்கள். எனவே ஏனோதானோ வென்றோ, பரிசுத்தப்படுத்திக்கொள்ளாமலோ திருவிருந்து ஆராதனையில் பங்கு பெறுவது கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் அவமதிப்பதாகும். பொல்லாத போதனைகளை போதிப்பவர்கள் கள்ள உபதேசக்காரர்களின் கைக்கூலிகள் என்பதை அறிந்து கொள்க. சி.பி.எம் போன்ற சபைகளில்கூட திருவிருந்துக்கென்று, சுத்திகரிப்புக் கூட்டம் வைப்பது எதற்கு? கத்தோலிக்க சபையில் கூட திருவிருந்துக்கு முன் பாவ சங்கீர்த்தனம் பண்ணி விட்டுத் தான் பங்கு பெறுகிறார்கள். சிந்தியுங்கள்! சத்திய மாறுபாடுள்ள சந்ததியை விட்டு விலகுங்கள் (அப்.2:40).

❖ ❖ ❖

## 6. நியாயத்தீர்ப்பு சபையாருக்கு இல்லையாம்!

இப்படியும் ஒரு பொல்லாத உபதேசம். நியாயத் தீர்ப்பு என்றால் இவர்களுக்கு அர்த்தமே புரியவில்லை. உலகிலுள்ள மனிதர்கள் எல்லோருக்கும் மனுஷகுமாரனால் நியாயத் தீர்ப்பு உண்டு (அப்.17:31). அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு இயேசு அளிக்கும் பலன் அவரோடுகூட வருகிறது (வெளி.22:12). பாவிகளாய் இருந்த நம்மை கிருபையாய் இரட்சித்து நீதிமானாய் ஆக்கியிருக்கிறார் தேவன் (ரோ.3:23; 1 கொரி.6:11). உண்மையிலேயே நாம் கிரியையால் நீதிமான்களல்ல. பெற்ற நீதியிலே முடிவுபரியந்தம் நாம் நிலைத்திருந்தால் இறுதி இரட்சிப்பு உண்டு (மத்.24:13). இப்படி நிற்கிறார்கள் அவருடைய பிள்ளைகள் என்று தீர்ப்பிடத்தான், நமக்கு ஜீவ புஸ்தகம், ஞாபகப் புஸ்தகம் போன்ற பலகுறிப்புப் புத்தகங்கங்களை தேவன் வைத்திருக்கிறார். ஆதி அப்போஸ்தல காலத்திலேயே நியாயத் தீர்ப்பு, தேவனுடைய வீடாகிய சபைக்கு - சபையாருக்கு - துவங்கிவிட்டது (1 பேது.4:17,18). இந்த வசனத்தை எருசலேம் தேவாலயம் அழிவது சம்பந்தமானது என்று இந்த பொல்லாத பிசாசின் நவீன உபதேசிகள் சொல்கிறார்கள். தேவனுடைய வீடு என்றால் சபை என்று நாமறிவோம் (1 கொரி.3:6). ஆனால் இது எருசலேம் தேவாலயம் என்கிறார்கள். என்றைக்கு இயேசு மரிக்கும்போது தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாய் இரண்டாய் கிழிந்ததோ அன்றே தேவாலயத்தின் மகிமை இரட்சிக்கப்பட்ட நம்மிடம் வந்துவிட்டது (1

கொரி.6:19). அதன் பின் கிறிஸ்தவனுக்கு கற்களால் கட்டப்பட்ட ஆலயமே கிடையாது. உண்மை இப்படியிருக்க, இன்னும் அந்த இஸ்ரேலரின் ஆலயத்திற்கு மகிமை கொடுத்துப் பேசும் இவர்கள் இயேசுவின் பிள்ளைகளாயிருக்க முடியுமா?

அந்த 1 பேது.4:17ஐ இன்னும் தியானித்தால், சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த நமக்கும் நியாயத்தீர்ப்பு உண்டு; கீழ்ப்படியாதவர்களுக்கும் உண்டு என அறியலாம். "நல்லவன் - நீதிமான்" என்று தீர்ப்பளிப்பதும் நியாயத் தீர்ப்புதான்; "குற்றவாளி" என்று தீர்ப்பளிப்பதும் நியாயத்தீர்ப்புதான். குற்றவாளி என்றதீர்ப்பு ஆக்கினைத் தீர்ப்பாகும் (ரோ.8:1; யோ.3:18). இப்படிப்பட்டதான ஆக்கினைத் தீர்ப்பு நமக்கு இல்லை (யோ.3:18; 5:24). தேவனுடைய சபையாராகிய நாமெல்லாரும் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, கிறிஸ்துவின் நியாயசானத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் (2 கொரி.5:10). இரட்சிப்பின் போது நம் எல்லாப் பாவமும் அழிக்கப்பட்டது (ஏசா.43:25; 44;22) இரட்சிக்கப்பட்டபின், 1 யோ.1:8-10; 2:1,2ன் படி நாம் செய்யும் பாவங்கள் அப்போதைக்கப்போது அழிக்கப்படுகின்றன. எனவே no sin; no ஆக்கினை. இந்த தீர்ப்பு நமது வரத்தினாலோ, ஊழியச் செயல்பாட்டினாலோ, அனாதை இல்லம், பத்திரிக்கை. T.V. போன்ற ஊழியத்தாலோ வருவது அல்ல. மத்.7:22, 23ன் படி, வசனத்தின்படி, தேவ சித்தத்தை செயல்படுத்தி, பரிசுத்த நிலையிலுள்ள ஆவியின் கனி, நீதியின் கனி, உள்ளாருக்கு மட்டுமே உண்டு (வெளி.22:12; யாக்.2:20).

உலகிலே 3வித மனிதர்கள் இருக்கிறார்கள் (1 கொரி.10:33). மூவருக்கும் நியாயத்தீர்ப்பு, விசுவாசத்தோடுகூடிய கிரியைகளால், கனிகளால் கிடைப்பதாகும். இந்தக் கிரியைகள் - கனிகள் பெருக, தேவகிருபை நம்மைத் தாங்க வேண்டும். மற்றப்படி, "கிருபை ஒன்றே போதும் கிரியை வேண்டாம்" என்று சொல்வோர்தான் விசுவாசத்தில் செத்தவர்கள் (யாக்.2;20); அவர்கள்தான், நியாயத்தீர்ப்பு, கிறிஸ்தவர்களுக்கு இல்லை என்று பொல்லாத போதனைகளை கட்டவிழ்த்து விடுபவர்கள். தேவ ஜனமே! காலம் கடைசி காலம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்! நல்ல நியாயத்தீர்ப்பு நமக்கு உண்டு! ஆக்கினைத்தீர்ப்பு நமக்கில்லை. ஆமென்!

❖ ❖ ❖

## 7. கிரியை தேவையில்லை; கிருபையே போதுமாம்

கிரியை இல்லாத விசுவாசம் செத்தது (யாக்.2:20); கிரியையினால் தான் ஆவியின் கனி, நீதியின் கனியாய் வெளிப்படும். கனி இல்லாத மரமெல்லாம் நியாயத்தீர்ப்பில் வெட்டப்படும்; அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்குப் போகும் (மத்.7:19; வெளி.22:12; 2 கொரி.5:10; ரோ.2:6). பரலோகம் போக வேண்டுமென்றால் வசனவிசுவாசக் கிரியை தேவை; இந்த பூமியிலேயே நூறு மடங்கு ஆசீர்வாதத்தோடு வாழவேண்டுமென்றாலும் விசுவாசக் கிரியை தேவை. ஏனென்றால் ஆசீர்வாதம், தானாய் எல்லோருக்கும் வருவதில்லை; அது நிபந்தனைக்குட்பட்டது; நமது கிரியைக்குட்பட்டது. (see உபா.11:26-28; 30:15, 19; 28; 1,2,15).

உண்மை இப்படியிருக்க, தற்கால நவீனப் பொல்லாத பிரசங்கியார், "கிரியையே வேண்டாம் கிருபையே போதும்" என்கின்றனர். கிருபையே போதுமென்றால், சபையிலே 5 விதமான ஊழியங்கள் எதற்கு? பைபிள் எதற்கு? போதனைகள் எதற்கு? ஜெபம் எதற்கு? கிருபை என்றாலே தகுதியில்லா தவனைத் தகுதிப்படுத்துவதாகும். அந்தக் கிருபையினாலே எல்லா ஆசீர்வாதமும் கிடைக்கிறது என்றால், சபையிலே ஏன் ஏழ்மை தலைவிரித்தாடுகிறது? வியாதிப் பிரச்சனை விரிந்து கொண்டு போகிறது? சமாதானமின்மை - சங்காரத்தன்மை - தொடர்கிறது? தேவனிடமிருந்து கிருபை கிடைப்பதற்குக் கூட தாழ்மை என்றகிரியை தேவைப்படுகிறதல்லவா! (யாக்.4:6). கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம்; இது கிருபையினால் வந்தது; கிரியையினால் வந்தது அல்ல (எபே.2:8). ஆனால், பெற்ற இந்த இரட்சிப்பில் கடைசிவரை நிலைத்திருந்து பூரணப் புருஷராய் வாழ்ந்து நடந்தால்தான் பரலோகம் உண்டென்று வேதம் சொல்லவில்லையா? (மத்.24:13; 5:48). வேத வார்த்தையை உதறித் தள்ளி விட்டு, பொல்லாத உபதேசங்களைப் போதிக்கும் ஊழியர்களிடம் எச்சரிக்கையாயிருங்கள்.

❖ ❖ ❖

## 8. கண்ணீரை மாற்றுமாம் கட்டைச் சிலுவை

கட்டைச் சிலுவை, கண்ணீரை, கசப்பை மாற்றுமென்றால் இயேசு எதற்கு? வீடுகள் தோறும் கட்டைச் சிலுவைக்கு தூபங்காட்டி நமஸ்கரிக்கலாமே! இப்படித்தானே வெண்கல சர்ப்பத்தை இஸ்ரேல் மக்கள் பாதுகாத்து ஆசரித்தார்கள்; அதை எசேக்கியா ராஜா தகர்த்துப் போட்டான்

(2 ராஜா. 18:4). விக்கிரக ஆராதனைக்கு வழிவகுக்கும் பொல்லாத உபதேசிகள், ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாயாக கிறிஸ்தவ விசுவாசிகளுக்குள் நுழைந்து விட்டார்கள். இந்தப் பிசாசின் உபதேசத்திற்கு ஆதாரமாய், "கசந்த மாரா மதுரமானது மரக் கட்டையால் தானே" என்கின்றனர் (யாத்.15:25). அப்படிப் பார்த்தால், எலிசாவின் காலத்தில், எரிகோ பட்டணத்திலுள்ள நீரூற்று, உப்பைப் போட்டவுடனே ஆரோக்கியமாய், நல்ல தண்ணீராய் மாறியதே (2 ராஜா. 2:19-21). இப்படியான உலக உப்பைப் பார்த்தால், நம் கண்ணீர் - கசப்பு - வியாதி எல்லாம் மாறிவிடுமா? அந்த மரத்தை சிலுவைக்கு நிழலாய்க் காட்டிய பொல்லாத உபதேசிகள், இந்த உப்பை எதற்கு நிழலாய்க் காட்டப் போகிறார்கள்? வேதத்திலே உப்பானது பரிசுத்தவான்களுக்கு, பரிசுத்த வசனத்திற்கு ஒப்புமையாய்ச் சொல்லப்பட்டுள்ளது (மத்.5:13). அப்படியானால், பரிசுத்தவான்களை - ஊழியர்களை நோக்கிப் பார்த்தால் கசப்பு, கண்ணீர் எல்லாம் மாறுமா? அன்றைக்கு பேதுரு பிறவிச் சப்பாணியைப் பார்த்து, "எங்களை நோக்கிப்பார் என்றானே" (அப்.3:4) எதற்கு? உப்புக்கா? அல்ல.. அவர்களிடத்திலே இருக்கும் இயேசுவின் நாமமாகிய தேவ வார்த்தைக்கு (வெளி.19:13). உப்பால் அல்ல.. சிலுவைக் கட்டையால் அல்ல; வார்த்தையாகிய தேவனை விசுவாசிப்பதால்தான் கசப்பு மாறும், ஆமென். எசே.16:4ல், உப்பால் சுத்திகரிக்கப்படுதல் என்பது, ஆரோக்கியமான உபதேசத்தால் - மகிமையின் சுவிசேஷத்தால் - சுத்தப்படுத்துதல், சிட்சிக்கப்படுதல் என்பதாகும் (யோ.15:3; அப்.2:37; 1 கொரி.11:32). ஆக கட்டைச் சிலுவையில் தொங்கிய, சுத்திகரிக்கும் உப்பாகிய வார்த்தையை உடைய தேவனை, விசுவாசத்தோடு நோக்கிப் பார்த்தால் கசப்பு மாறும்; கண்ணீர் தீரும்.

மட்டுமல்ல.. எலிசாவின் நாட்களிலே, தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு காய்ச்சிய கூழிலே, பேய்க் கொம்மட்டிக் காய்களைப் போட்டதால், அந்தக் கூழ் சாப்பிடக் கூடாமல், சாவுக்கேதுவாய் ஆனபோது, மாவை எலிசா அதிலே போட்டு, தோஷத்தை நீக்கினானே (2 ராஜா 4:39, 40, 41) அப்படிப் போல, அந்த மாவையே நோக்கிப் பார்த்தால், கசப்பு, கண்ணீர்மாறுமா? இந்த மாவை, எப்படி கசந்த மாராவில் போட்ட கட்டையை சிலுவைக் கட்டைக்கு நிழலாட்டமாய் சொன்னதுபோல சொல்லப் போகிறார்கள் அடிப்படைச் சத்தியத்தை தகர்க்கும் அதிநவீன பொல்லாத உபதேசகர்கள்? வேதத்தின்படி மாவு உணவுக்குரியது; இதை ஆவிக்குரிய ரீதியில் எடுத்தால், ஆவிக்குரிய உணவாம் வசனமாகும் (see 1 கொரி.5:6-8; மத்.11:33). ஆக, மாவைப் பார்த்தால் கசப்பு மாறாது. ஆவிக்குரிய மாவாம் தேவ வசனத்தை, இயேசுவாகிய வார்த்தையை விசுவாசத்தோடு ஏற்றுக் கொண்டால், வாழ்க்கை கசப்பாகாது; களிப்பாகும்.

தேவ ஜனமே! கட்டைச் சிலுவையைப் பார்க்காதே! உப்பைப் பார்க்காதே! மாவைப் பார்க்காதே! கட்டைச் சிலுவையிலே பாவமாக்கப்பட்டு பாவியாய்த் தொங்கிய சர்ப்பமாக்கப்பட்ட - உருவத்தை விசுவாசக் கண்ணோட்டத்தோடு வார்த்தையாகப் பார்! (அந்த ஆவிக்குரிய உருவம் உனக்கு தெரிகிறதா?) ஆரோக்கியமான உப்பாகிய வசன கர்த்தாவைப் பார்! புளிப்பில்லாத வசனமாவாகிய உயிர்தெழுந்த தேவனைப் பார்! உன் கசப்பு, கண்ணீர், கஷ்டம் எல்லாம் மாறும். மற்றப்படி, விக்கிரகமான கட்டைச் சிலுவையைப் பார்க்காதே! நம் தேவன் விக்கிரக ஆராதனைக்கு எதிர்த்து நிற்பவர். இந்த பொல்லாத பிலேயாம் போதகர்களுக்கும் எதிர்த்து நிற்கிறவர்... ஜாக்கிரதை!

❖ ❖ ❖

## 9. இயேசு பிதாவுக்கு இரண்டாவது மகனாம்

எப்போதுமே ஆதிமுதல் 2வது மகனுக்குத்தான் வேதத்தில் மகிமையும், முக்கியத்துவமும் இருந்ததாம். உதாரணத்திற்கு, ஆதாமின் 2வது மகன் ஆபேல்தான் எபி.11ல் உள்ள விசுவாசிகள் பட்டியலில் முதல் ஆளாய் இருக்கிறானாம்; ஆபிரகாமின் 2வது மகன் ஈசாக்கு வழியாகத்தான் (முதல் மகன் இஸ்மவேலாம்) இயேசுவே வந்தாராம்; ஈசாக்கின் 2வது மகனைத்தான் தேவன் தெரிந்துகொண்டு ஆசீர்வதித்தாராம்; யோசேப்பின் 2வதுமகனைத்தான் தேவன் தெரிந்துகொண்டு ஆசீர்வதித்தாராம்; யோசேப்பின் 2வது மகன் எப்பிராயீம் தலையில்தான் கைகளை, சிலுவைபோல (CROSS) யாக்கோபு வைத்து ஆசீர்வாதமாம். இப்படிச் சொல்பவர்கள். “ஆதாம் தேவனால் உண்டாக்கப்பட்ட முதல் மகன்; இயேசுவோ இரண்டாவதாய் கன்னியின் வயிற்றில் உண்டாக்கப்பட்டவர்” என்று வேதக் கலாபம் பண்ணுகிறார்கள். இவர்களுக்கு, ராஜாகுலமாய் மாறின யூதா, 4வது மகன் என்று தெரியாதா? ஆசாரிய ஊழியக் குலமான லேவி, 3வதுமகன் என தெரியாதா? ராஜாவான தாவீது 8வது மகனென்று தெரியாதா? சாலமோன் 4வது மகனென்று தெரியாதா? முதல் மகனுக்குத்தான் சேஷ்ட புத்திர பாகம் என்ற பிரமாணச் சட்டம் புரியவில்லையா? இயேசு மரியாளுக்கு முதல் மகன்தானே! எகிப்திலே தலைச்சன் பிள்ளைகள்தானே மரித்தன! தலைச்சன் பிள்ளையை விட்டுவிட்டு 2வது பிள்ளையை தூக்கிப் பிடிக்கும் ஆவி என்ன ஆவியோ!

இரட்சிப்புக்காய் உண்டாக்கப்பட்ட தேவ குமாரனை, ஆராதிக்கவே இருக்கிற ஆண்டவரை, கேவலம், பக்தியுள்ள சந்ததி உருவாக்கப்

படைக்கப்பட்ட - ஆண்டவரை, ஆராதிக்கப் படைக்கப்பட்ட - மண்ணான மனிதனாம் ஆதாமுக்கு அடுத்ததான 2வது மகனென்று சொல்ல எப்படித்தான் இந்த பிசாசின் போதகர்களுக்கு வாய் வந்ததோ! லூக்.3:38ல் Adam, which was son of God" என்று உள்ளது. இங்கே மகன் என்பதை small 's'ல் எழுதப்பட்டுள்ளது. ஆனால், இயேசுவை வேதம், Son of God என்று சொல்லும்போது Capital Sல் எழுதப்பட்டிருக்கும். இந்த உண்மைகூட இவர்களுக்குப் புரியவில்லையா! மட்டுமல்ல... ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு வழியில் இயேசுவைக் கணக்கிடும் வேதம், ஆகாருக்குப் பிறந்த இஸ்மவேலை, அடிமையின் மகனென்றும், வாக்குத்தத்தத்தின் பிள்ளை ஈசாக்கை, சுயாதீனமுள்ளவளின் குமாரனென்றும் சொல்கிறதை வாசியுங்கள் (கலா.4:22-31). இப்படியாய், இஸ்மவேலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மரணத்தை ஜெயித்த மாதேவன் இயேசுவை, நபி என்றழைக்கும் இஸ்லாமியர்களின் ஆவி உள்ளவர்கள்தான் இப்படிப்பட்ட பிசாசின் போதனைக்காரர்கள். ஆதாம், மண்ணிலிருந்து உண்டான மனுஷன்; இயேசுவோ வானத்திலிருந்து வந்த கர்த்தர் (1 கொரி.5:47; யோ.16:51; சங்.40:6-8). இயேசுவின் இரத்தமும் சரீரமும் தேவனுடையது (அப்.20:28). அழியாதது. ஆதாமின் இரத்தமும் சரீரமும் அழிந்தது; அது மண்ணுக்குரியது இயேசுதான் தேவனின் இரத்தமுள்ள முதல்மகன்.

இவர்கள் சொல்வதுபோல தேவனுக்கு 2மகன்கள் இல்லை. யோ.3:16 சொல்கின்றது தம்முடைய ஒரே பேறான குமாரன் என்று, **ஆக, இயேசு ஒருவர்தான் தேவனுக்கு மகன்,** வார்த்தையாகிய தேவனே மகனாக வந்தார்; அவரே முந்தின பேறு என்று கொலோ.1:15 (see also சங்.89:27) சொல்கின்றது. மட்டுமல்ல.. எல்லாவற்றிலும் அவர் முதல்வராயிருக்கும்படி, ஆதியில் மட்டுமல்ல மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறும் அவரே (கொலோ.1:18). இந்த இயேசுவின் மூலம் இரட்சிப்பைப் பெற்றதேவனின் பிள்ளைகளாயிருக்கும் நாம் (யோ.1:14) இயேசுவுக்கு இளைய சகோதரர்கள் என்றும், அவரே நமக்கெல்லாம் முதற் சகோதரர் - அதாவது அண்ணன் - என்றும் ரோ.8:29 சொல்வது இவர்களுக்கு விளங்க வில்லையா? பிசாசானவன் இப்படிப்பட்ட கள்ளப் போதகர்களின் மனக்கண்களை குருடாக்கி விட்டானா? ( 2 கொரி.4:4). இவர்கள் மனக்கண்களை பிசாசுதான் திறந்திருக்கிறானா? (ஆதி.3:7). என்றைக்குத்தான் இவர்களின் மனக்கண்கள் தேவனால் திறக்கப்பட்டு, பிரகாசமடையுமோ தெரியவில்லை! (எபே.1:19). எங்காவது வேதம்,. பாவி ஆதாமை, தேவனின் 2வது மகன், 3வது மகன் என்றாவது சொல்லியிருக்கிறதா? புறம்பே தள்ள வேண்டியவனை தூக்கிப்

பிடித்துக்கொண்டு தேவனின் முதல் மகன் என்று சொல்வது பிசாசின் துணிகரச் செயல்; இயேசு, தேவனின் 2வது மகன் அல்ல; இரட்சிப்பின் பணியை பூரணப்படுத்தும்வரை அவர் ஒருவர்தான்மகன்; அதன்பின் நாமெல்லாலரும் குமாரர்கள்! அல்லேலூயா! இந்த சத்தியம் வளரட்டும்! அதிநவீன பிசாசின் பொல்லாத உபதேசங்கள் அழிந்து போகட்டும் இயேசுவின் நாமத்தினாலே! ("கிறிஸ்து பிறக்கும் முன்னும், பிறக்கும் போதும், பிறந்த பின்னும் தடை" என்ற செய்தியை "தெரிந்து கொள்ளுங்கள் பாகம்-2 என்ற ஆராய்ச்சி நூலில் படியுங்கள்). இயேசு சீக்கிரம் வருகிறார்!

❖ ❖ ❖

## 10. மோசேக்கு ஒப்பானவர் மகாத்மா காந்தியாம்

"மோசே 400 வருடம் அடிமையாயிருந்த இஸ்ரேலருக்கு விடுதலை பெற்றதுபோல, காந்தி இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்தாராம்; மோசேயிடம் இருந்த கோல்போல, காந்தியிடம் கோல் இருந்ததாம்; மோசேக்கு பின்னாலே நம் தேவன் இருந்ததுபோல, காந்திக்குப் பின்னால் மத்.5:5 என்கிற சத்தியம் இருந்ததாம்; மோசே காலத்தில் தேவன் வெளியரங்கமாய் வேலை செய்தாராம்; காந்தி காலத்தில் மறைமுகமாய் வேலை செய்தாராம்." இப்படித்தான் அதிநவீன பொல்லாத உபதேசங்கள் வெளிவருகின்றன. தேவனால் நற்சாட்சி பெற்ற மோசே (எண்.12:7,8), அபிஷேகம் பண்ணப்பட்டு ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட மோசே, அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்த மோசே, தேவனின் மகிமை நிறை பின்புறத்தைக் கண்ட பாக்கியமுள்ள மோசே, தேவனால் அடக்கம் பண்ணப்பட்ட மோசே, இன்றுவரை இங்கிலாந்து, இந்தியா முதற்கொண்டு அத்தனை நாடுகளும் பின்பற்றும் நியாயப் பிரமாணத்தைத் தந்த மோசே, எப்படி இரட்சிப்புக்குள் வராத இந்து தெய்வத்தை வணங்கிய சன்மார்க்கராம் காந்திக்கு ஒப்புமை ஆவார்? இதை தேவஞானமுள்ள யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாது; நினைத்துப் பார்க்கக்கூட முடியாது. நம்முடைய இயேசு கிறிஸ்துதான் மோசேயாகக் காட்டப்படுகிறார் (எபி.3:2) மோசேயைப் போன்ற தீர்க்கதரிசி எனப்படுகிறார் (உபா.18:18; அப்.3:22). போகிற போக்கைப் பார்த்தால், ஒரு நாளைக்கு கிறிஸ்தவ வட்டாரத்தில் பக்கவழியாய் நுழைந்து, அடிப்படை சத்தியத்தை தகர்த்தெரியும் அதி நவீன பொல்லாத உபதேசகர்கள், இயேசுவையும் காந்திக்கு சமமாக்கி விடுவார்கள் போலிருக்கிறது!

இதனால்தானோ என்னவோ, “புத்தன், இயேசு, காந்தி பிறந்தது பூமியில் எதற்காக?” என்ற சினிமாப் பாட்டைப் பாடி, தேவத்துவம் நிறைந்த இயேசுவை, மண்ணோடு மண்ணாய்ப் போகும் புத்தரோடும் காந்தியோடும் ஒப்புமைப்படுத்திப் பாடியிருக்கிறார்கள் போலும்!

காந்தி மாத்திரம் விடுதலைக்கு உழைக்கவில்லை; இரத்தம் சிந்திய தியாகிகள் வீரபாண்டிய கட்டபொம்மன், வ.உ.சிதம்பரனார், லாலா லஜபதிராய், நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ், பாரதியார், அம்பேத்கார், கொடி காத்த குமரன் போன்ற ஏராளமானவர்களால் சுதந்திரம் கிடைத்தது. இறுதி முயற்சி காந்தியால் நடந்தது. ஆனால் எகிப்திலிருந்து இஸ்ரேலர் விடுதலை பெற, மோசே மட்டும் முதலும் முடிவுமாக பாடுபட்டு வெற்றிகரமாய் நடத்தும்போது, தேவ மகிமை, வல்லமை எல்லாம் இருந்தது. காந்திக்குப் பின்னால் நம் தேவன் இல்லை; நம் தேவன் இருந்து அவர் மூலமாய் நடப்பதாய் காந்தி சொல்லவுமில்லை. ஏராளமான தொண்டர்கள் - தியாகிகள்தான் கூட இருந்தனர். மோசேயோடு இருந்த கோல், காந்தியின் கோலல்ல. அது ஆடு மேய்க்கும் கோல்தான்; ஆனால் அது தேவ வல்லமை நிறைந்த கோல்; அந்த கோலை கீழே போட்டால் பாம்பு - அந்த பாம்பு புறஜாதி சாமியார்களின் பாம்பை சாகடித்தது - அந்த பாம்பு மறுபடியும் கோலானது; தாவீது சொன்னதுபோல (சங்.23:4) இந்தக்கோல் தேவனின் வார்த்தை. இந்தக் கோலால்தான் செங்கடல் பிளந்தது; கன்மலை உடைந்தது. இப்படிப்பட்ட மகத்துவத்தை உணராமல் விசுவாசிக்காமல், ஊழியர் என்ற போர்வையில் அலைவோர் சொல்லும் பொல்லாத உபதேசத்தைப் பாருங்கள்! கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்ட விசுவாசிகளை (மத்.24:24) கவர்ச்சிகரமாய் சொல்லி இழுத்து, மறைமுகமாய் இயேசுவுக்கு துரோகிகளாய் மாற்றத் துடிக்கிறார்கள். பணமோ, பகட்டோ, கூட்டமோ, ஜாதியோ, இனமோ, எல்லாமே கானல்நீர் என்று உணருங்கள். உண்மையான ஜீவத்தண்ணீரை உற்றுப் பாருங்கள்; பருகுங்கள். ஆமென்.

காந்திக்குப் பின்னால் நம் தேவனின் சத்தியம் இருந்திருந்தால், அவர் கிறிஸ்தவராய் மாறியிருப்பாரே! அவர் இருந்தது தேவனுடைய ராஜ்யத்தில் அல்ல; அந்தகார இருளிலிருந்தார்; நேபுகாத்நேச்சாரைப் போலக்கூட மனமாற்றம் இவருக்கு வரவில்லையே! காந்தியின் சுதந்திரப் போராட்ட பணியில், நம் தேவன் மறைமுகமாய் இருந்து உதவினாராம்; இது யாரை மயக்குகின்ற மாயச்சொல்; மந்திரச் சொல்? இப்படி இவர்கள் இன்னும் சொல்லிக் கொண்டே போனால், முஸ்லீம் சகோதரர்கள் சொல்வதுபோல, நம் தேவன் இயேசு, ஒரு நபியாகவே ஆக்கப்படுவார் போலிருக்கிறது; யேகோவா

சாட்சிகள் சொல்வது போல நம் தேவன் இயேசு, ஒரு சிருஷ்டியாய் ஆகிவிடுவார் போலிருக்கிறது; தேவபிள்ளைகளே! காலம் பொல்லாத காலம்; வெளுத்ததெல்லாம் பாலென்று நம்பி விடாதீர்கள்! மயக்கும் குடுகுடுப்பைக்காரனை நம்பி, தாயின் மடியிலிருந்து இறங்கிப் போகும் குழந்தையைப் போலாகி விடாதீர்கள்! உன்னிடத்திலுள்ள ஆவியானவருக்கு இடங்கொடு; சாத்தானுக்கு இடங்கொடாதே; அவர் உன்னை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார். ஆமென்.

❖ ❖ ❖

## 11. தேவனிடம் ஜெபம் பண்ண தேவையில்லையாம்

"ஜெபமே ஜெயம்" என்ற நேரடி வார்த்தை வேதத்தில் எங்கும் இல்லாவிட்டாலும், வேத வசனங்களின்படி இது சரியே என்று கிறிஸ்தவ வட்டாரமே விசுவாசித்து, வசன விசுவாசமுள்ள ஜெபத்தை (யாக்.5:15) ஏறெடுத்து, ஜெயத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் போது, ஜெபம் பண்ணவே தேவையில்லை என்ற அதிநவீன பிசாசின் பொல்லாத உபதேசம் தலை தூக்கியிருக்கிறது. ஜாக்கிரதை! இது கடைசிக் காலம்! "இயேசு எல்லாவற்றையும் நமக்காய் செய்து முடித்து விட்டார்; எனவே நீ அவரிடம், நமது தேவைகளைச் சொல்லி ஜெபிக்காமல், அவர் கொடுத்ததை அப்படியே அனுபவிக்க வேண்டும்" என்று சொல்கிறார்கள். **இவர்களுக்கு ஜெபம் (Prayer) என்றால் அர்த்தம் என்ன என்று தெரியவில்லை.** ஜெபம் என்பது தேவனோடு சம்பாஷிப்பது; பேசுவது. Communcation with God. ஜெபத்திலே அவரைத் துதித்து ஆராதிக்கலாம்; நன்றி சொல்லலாம்; நம் தேவைகளைச் சொல்லலாம்; மற்றவர்களுக்காகவும் வேண்டலாம். மொத்தத்தில் ஜெபம் என்பது ஆராதனையின் முழுப்பகுதி. **ஆராதனை என்றால் பாடல் மட்டுமல்ல...** ஆராதனைக்குப் போகிறோம் என்று சொல்லி, சபைக்குப் போகிறோமே அங்கே நாம் செய்வதெல்லாமே ஆராதனைதான். ஜெபம் வேண்டாம் என்பவர்கள் ஆராதனையும் வேண்டாம் என்று கூறும் பிசாசின் ஆவி உள்ளவர்கள்தான்!

சீஷர்களுக்கு ஜெபிக்க, ஒரு "மாதிரி" ஜெபத்தை சொல்லிக் கொடுத்தவரே நம் இயேசுதானே (மத்.6:9-13). அதிலே தேவனைத் துதித்து ஆராதிக்கிறோம்; அவரின் ராஜ்யம் வேண்டும் என்கிறோம்; பரலோகம் போல பூலோகம் ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும் என்கிறோம்; அன்றாட ஆகாரம் கேட்கிறோம்; மன்னிப்பு கேட்கிறோம்; சோதனைக்குள் விழாமல் இரட்சிக்க

வேண்டுகிறோம். “இப்படி நாம் கேட்பதையெல்லாம் சிலுவையிலே கொடுத்து விட்டாரே ஏன் கேட்க வேண்டும்?” இது பொல்லாத பிரசங்கியாரின் கேள்வி. அப்படியானால் இந்த “மாதிரி” ஜெபம் எதற்கு? **கேளுங்கள் கொடுக்கப்படும்; தேடுங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் திறக்கப்படும்** (மத்.7:7) என்ற வசனம் எதற்கு? “அந்த நாளிலே (இயேசு பரலோகம் போனபின்பு) என்னிடம் ஒன்றும் கேட்க மாட்டீர்கள்; மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்ளுவது எதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்” (யோ.16:23; 15:16). இயேசுதான் எல்லாம் முடித்து விட்டுப் போய்விட்டாரே, பின்னை ஏன் பிதாவிடம் கேட்க வேண்டும்என்கிறார்? சிந்தியுங்கள். தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், இரவும் பகலும் கூப்பிடுவார்கள் என்று லூக்.18:7ல் சொன்னதன் அர்த்தமென்ன? கெத்சமனேயில் விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்று இரண்டு முறை சொன்னவர் (லூக்.22:40, 46). ஜெபம் பண்ண வேண்டாம் என்பாரா? மத்.26:45ல் “இனி நித்திரை பண்ணி இளைப்பாறுங்கள்; இதோ மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக் கொடுக்கப்படுகிற வேளை வந்தது” என்று சொன்னதால், “இனி ஜெபமே பண்ண வேண்டாம்” என்று சொன்னாரென, திரிக்கிற பொல்லா உபதேசங்கள் பெருகி விட்டன. “அன்றைய ஜெபம் போதும்; இது வரை என்னோடு ஜெபிக்காது நித்திரை பண்ணிய உங்களைப் பார்த்து நான் ஜெபியுங்கள் என்றேன். இப்போது நான் சிலுவையிலறையப்படப் போகிறேன் இனி உங்கள் இஷ்டப்படி நித்திரை பண்ணி இளைப்பாறுங்கள்” என்ற அர்த்தத்தில்தான் இயேசு சொன்னார். அதன்பிறகு எப்போதுமே ஜெபமே வேண்டாமென்றால், அப்போஸ்தல நடபடிகள் - உபதேசங்கள் எல்லாம் பொய்யா?

**கிறிஸ்தவர்கள், இயேசுவின் உபதேசத்தையும் அப்போஸ்தலர்கள் உபதேசத்தையும் கைக்கொள்ள வேண்டும்** (மத்.28:20; ரோ.6:17; யூதா.17). இயேசு பரலோகம் போனபின், சீஷர்களெல்லாரும் ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்களே ஏன்? (அப்.1:14) இயேசுதான் பரிசுத்த ஆவியானவரைக் கூடத் தருவேன் என்று சொல்லி விட்டாரே பின்னை ஏன் ஜெபம்? பரிசுத்த ஆவி பெற்ற பிறகும்கூட ஜெபம் பண்ணுவதில் உறுதியாய்த் தரித்திருந்தார்களே (அப்.2:42) ஏன் அவர்கள் என்ன இயேசுவை அறியா மூடர்களா? வரங்களும், வல்லமைகளும், தைரியமும், ஆவியானவர் மூலம் பெற்ற பின்னும், அப்.4:29, 30ன் படி ஏன் ஜெபிக்க வேண்டும்? ஜெபித்த போதுதானே அன்று இடம் அசைந்தது; பரிசுத்த ஆவியினால் மறுபடியும் நிரப்பப்பட்டார்கள்; வசனத்தை தைரியமாய்ச் சொன்னார்கள் (அப்.4:31). அப்போஸ்தலர் நடபடிகைகளில் ஆதி

அப்போஸ்தலர்கள் ஜெபம் பண்ணியதை வாசியுங்கள். (அப். 6:4,6; 8:16; 9:40; 10:9; 11:5; 12:5,12; 13:3; 14:23; 16:13, 25; 20:36; 21:5; 22:17; 28:8). ஆதி அப்போஸ்தல கால இந்த செயல்பாடுகள் தேவனுக்கு விரோதமானதா? அப்போஸ்தலர்கள் ஜெபம் பண்ணுங்கள் என்று நமக்கு கொடுத்த கட்டளைகள் வீணா? (ரோ.12:2; 1 கொரி. 7:5. எபே. 6:18; பிலி. 4:6; கொலோ. 4:2; 1 தெச. 5:17; 1 தீமோ. 2:1, 8; 4: 5; 5:5; யாக். 5:13-16; 1 பேது. 3:17; 4:7; யூதா. 20). "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்; ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்; விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள்" போன்ற வார்த்தைகளெல்லாம் இந்த பொல்லாத பிரசங்கியார்களின் ஆவியில் எழுதப்படவில்லையா? அல்லது எழுதப்பட்டவைகளை, அவர்களோடு வாசம் பண்ணும் பிசாசின் ஆவி எடுத்துப் போட்டுவிட்டதா? வியாதிப்பட்டால் ஜெபம், ஊழியத்திற்கு புறப்பட ஜெபம்; ஊழியத்திற்கு தடை ஏற்பட்டால் ஜெபம்; பொருளாதார மேம்பாட்டிற்காக ஜெபம்; விசுவாசம் வளர ஜெபம்; மனக்கண் பிரகாசமடைய ஜெபம்; வெற்றி வாழ்க்கைக்கு ஜெபம்; இரட்சிக்கப்பட ஜெபம்; அரசாங்க அனுகூலத்திற்கு ஜெபம்; பிசாசை விரட்டும் வல்லமைக்கு ஜெபம். இப்படி ஏராளமான காரியங்களுக்காய் வேதத்தில் ஜெபித்து, பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதே, இதெல்லாம் இவர்கள் பார்வையில் முட்டாள்தனமா? வேதத்திற்கு புறம்பானதா?

தரிசனத்தில்கூட, ஜெபம் என்பது தேவனுக்கு பரிசுத்தவான்கள் எடுக்கும் தூபவர்க்கம் என்று வெளி. 5:8; 8:3,4 சொல்லியிருக்கிறதே! இயேசு சிலுவையில் எல்லா நன்மைகளையும் செய்து முடித்தாலும், அதை விசுவாசித்து, தேவனிடம் ஜெபித்துத்தான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்க, ஜெபிக்க தேவையில்லை என்பது தேவனோடு நாம் கொண்டிருக்கிற தொடர்பை (communication) - ஐக்கியத்தை துண்டிக்கிற பிசாசின் செயலல்லவா! பழைய ஏற்பாட்டிலே சிலுவையிலே சம்பவிக்கப் போகிறவைகளை விசுவாசித்து ஜெபித்தார்கள்; புதிய ஏற்பாட்டிலே சிலுவையிலே சம்பவித்தவைகளை விசுவாசித்து ஜெபிக்கிறோம். மொத்தத்தில் ஜெபம் இல்லாமல் ஒன்றும் நடக்காது. வசன விசுவாச அறிக்கைகூட ஜெபம்தான் என்று முதலில் அறியுங்கள்; நன்றி சொல்வதும் ஜெபம்தான் என்று முந்தி அறியுங்கள். இப்படியாய் ஜெபமே தேவையில்லை என்பவர்கள்தான், முழங்கால் படியிட்டே ஜெபிக்கக்கூடாது என்பவர்கள் (see இதே நூலில் பக்கம். 53). இதை வாசிக்கும் தேவ ஜனமே! **இப்படிப்பட்டவர்களின் Body language, பொருளாதாரம், சமுதாய நிலை, கூட்டம், இவைகளை வைத்து ஏமாந்து போகாதே!** இயேசு சீக்கிரம் வருகிறார்!

## 12. மோசேக்கு இரண்டு மனைவியாம்

மோசேக்கு எத்தனை மனைவியிருந்தால் உனக்கென்ன? "மோசேக்கு இரண்டு மனைவி இருந்ததுபோல மோசேயைப் போல எங்கும் உண்மையுள்ள ஊழியக்காரர்களாகிய நாங்களும் வைத்துக் கொள்வோம்" என்ற எண்ணத்தில் இப்படி பிசாசின் பொல்லாத உபதேசங்களைப் பரப்புகிறார்களா? விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாமுக்கு 3 மனைவி; தேவனின் இருதயத்திற்கேற்ற தாவீதுக்கு 9 மனைவி என்று வேத வசன ஆதாரத்தோடு சொல்லி, அவர்கள் ஆசையை தீர்த்துக் கொள்ளாமல், இப்படியா துர்ச்செய்தியைப் பரப்புவது?

ஒருவனுக்கு ஒருத்தி என்ற தேவனின் பரிபூரண சித்தப்படி (மத்.19: 4-6) வாழ்ந்த மோசேயை, குருட்டு மனக்கண்ணோடு பார்க்கிறார்களே. இவர்கள் எடுக்கும் வசனம், எண்.12:1ஐ அடிப்படையாய் வைத்து எழுந்ததாகும். மோசே, மீதியானிய ஆசாரியனின் மகளான சிப்போராளை மணந்தான் என்று, யாத்.2:15-25; 3:1; 4:18-26; 181-27; எண்.10:29-36; நியா.1:16; 4:11; 1 சாமு. 15:6; போன்ற வசனங்கள் சொல்கின்றன. ஆபிரகாமுக்கும் கேத்தூராளுக்கும் பிறந்த மீதியானின் வம்சத்தை சேர்ந்தவள் இவள் (ஆதி.25:1-4). மீதியான் என்பவன் ஆபிரகாமின் மகன் என்றாலும் வாக்குத்தத்தின் மகனல்ல (கலா.5:23). சி.எஸ்.ஐ. லூத்திரன், கத்தோலிக் போன்ற சபைகள் தங்களை கிறிஸ்துவின் சபைகள் - பிள்ளைகள் - என்று சொல்லிக் கொண்டாலும், அவர்கள் தேவனின் ஆவிக்குரிய சபையாரில்லை; கிறிஸ்தவர்களில்லை; அல்லவா! அப்படிப்போல, இந்த சிப்போராள் ஆதியில் அந்நிய ஸ்திரிதான். அதனால்தான் யாத்.4:24-26 நடந்தது. (இதுகுறித்து பழைய முழக்க செய்தியை வாசித்துப் பாருங்கள்).

எண்.12:1ல், எத்தியோப்பியா தேசத்து ஸ்திரியை மோசே மணந்தான் என்று மீரியாம் சொன்னதால், "இந்த எத்தியோப்பியா ஸ்திரி வேறு; மீதியானின் வழிவந்த சிப்போராள் ஸ்திரி வேறு. எனவே மோசேக்கு இரண்டு மனைவிகள் உண்டு" என்று பொல்லாத பிசாசின் உபதேசங்கள் பெருகி வருகின்றன. சில ஊழியர்கள், மோசேக்கு 2 மனைவிகள் என்று DAKES பைபிளே சொல்கிறது என்கிறார்கள். **DAKES பைபிள் சொல்கிறது:** "தேவதூதர்கள் மனிதப் பெண்களோடு உடலுறவு கொண்டு ராட்சதர்களைப் பெற்றனர். இயேசு புதன்கிழமை மரித்தார்; ஞாயிறன்று உயிர்த்தார். கிறிஸ்துவ சபை இயேசுவுக்கு மணவாட்டி சபை அல்ல; மனைவி, கிறிஸ்தவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைதான் ஓய்வுநாள்" என்றெல்லாம் பல

கருத்துக்களை சொல்கின்றது என்பதால் அவைகளையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியுமா? அப்படியே பார்த்தாலும், ஒரு இடத்தில்கூட மோசேக்கு 2 மனைவி என்று DAKES Bible கூறவே இல்லை. "Some say that she was a second wife of Moses, but we have no grounds for this supposition" என்றுதான் பக்கம் 169 (O.T) - 4th Coloumn-ல் போடப்பட்டுள்ளது. **மீரியாம் சொன்ன எத்தியோப்பிய ஸ்திரியும், சிப்போராள் என்ற மீதியானிய ஸ்திரியும் ஒன்றா?** மோசே ஊழியத்திற்கு புறப்படும்போது சிப்போராளைத் தானே கூட்டி வந்தான்; 2 மனைவிகளை கூட்டி வந்ததாக இல்லையே! 2 மனைவிகளை திருமணம் செய்ததாகவும் வசனம் இல்லையே! மீரியாம் குற்றம் சுமத்தும்போது திடீரென வந்த இந்த எத்தியோப்பிய ஸ்திரி யார்? நோவா மகன் காமின் வழியில் கூஷ் என்பவன் வந்தான். இவன் சந்ததியை கூஷியர் என்றும், எத்தியோப்பியர் என்றும் சரித்திரமும் வேதமும் சொல்கிறது. இந்த வம்சம்தான் நீக்ரோ வம்சம். ஆதியிலிருந்து கூஷியரும் (எத்தியோப்பியரும்) குடியேறி வாழ்ந்த அரேபியா பகுதிதான் மீதியானியரும் வாழ்ந்த பகுதி. ஆக, எத்தியோப்பியாவின் தேசத்தில்தான் மீதியானியர் வாழ்ந்தனர். அமெரிக்காவில், குடியுரிமைத் தகுதியோடு இத்தாலியரோ, ஜெர்மானியரோ வாழ்ந்தால், குடியுரிமை இருப்பதால் சட்டப்படி அவர்கள் அமெரிக்கர்தான், ஆனால், உண்மையிலேயே அவர்கள் இத்தாலியர்; ஜெர்மானியர். அப்படித்தான், மீதியானிய சிப்போராள் (மோசேயின் மனைவி) எத்தியோப்பிய தேசத்தாள் என்று மீரியாமால் சொல்லப்பட்டாள். மட்டுமல்ல.. அமெரிக்க குடியுரிமை உடைய இத்தாலியர் அமெரிக்கரைப் போல இருக்கமாட்டார்கள் அல்லவா! அப்படியே மோசே அழைத்து வந்த, மீதியானியரின் சிப்போராள் எத்தியோப்பியரைப் போல நீக்ரோவாய் காட்சியளிக்கவில்லை. அப்படி காட்சியளித்திருந்தால், மீரியாமுக்கு முன்னாலேயே, இஸ்ரேலரே அவளைத் தள்ளிவிட்டிருப்பார்கள். இனம் விஷயத்தில் இஸ்ரேலர்கள் உறுதி உள்ளவர்கள் அல்லவா! ஆக, மீரியாம் சொல்லிய எத்தியோப்பியா ஸ்திரியும், சிப்போராளும் ஒருவரே! மோசேக்கு ஒரு மனைவி தான். இன்னொரு மனைவியை அவன் மணந்தான் என்றோ, அவளையும் ஊழியத்திற்கு அழைத்து வந்தான் என்றோ வேதம் எங்குமே சொல்லவில்லை. அப்படி இருந்திருந்தால், "ஊழியன் உனக்கு இரண்டு மனைவியோ" என்று மீரியாமே கேட்டிருப்பாளே! எங்குமே சொல்லவில்லை. இஸ்ரேல் சபை என்ற ஒரே மனைவி நம் தேவனுக்கு - வார்த்தையானவருக்கு இருந்ததுபோல, முந்தின மோசேயாம் மீரியாமின் தம்பிக்கு ஒரே மனைவி தான் இருந்தாள். ஒருவனுக்கு ஒரு மனைவிதான் என்ற நியாயப்பிரமாண சட்டத்தை

சொல்பவன், 2 மனைவிகளை வைத்திருக்க முடியுமா? சிந்தியுங்கள். இப்டி உண்மை சத்தியத்தை தகர்க்கும் அதிநவீன பொல்லாத உபதேசங்களை விட்டு விலகுங்கள்! இயேசு சீக்கிரம் வருகிறார்!

❖ ❖ ❖

## 13. யோனா மரித்தானாம்; உயிர்த்தானாம்

"மத்.12:40ன் படி யோனா 3நாள் மீனின் வயிற்றில் இருந்தது இயேசுவுக்கு அடையாளமாய் இருப்பதால் இயேசு மரித்து, பாதாளம் சென்று உயிர்த்தெழுந்தார்; யோனாவும் மரித்து பாதாளம் சென்று உயிர்த்து வந்தான்" என்று பொல்லாத உபதேசங்கள் தலை தூக்குகின்றன. யோனா 3 நாள் இரவும் பகலும் மீனின் வயிற்றில் இருந்ததுபோல இயேசுவும் 3 நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார் என்பதுதான் சத்தியமே ஒழிய வேறல்ல. இதுகுறித்து பழைய முழக்கங்களில் விளக்கியிருக்கிறேன். இன்றைய கேள்வி "யோனா மரித்தானா" என்பதுதான். யோனாவின் வேண்டுகோளின் படிதான், மாலுமிகள் அவனை சமுத்திரத்தில் போட்டார்கள் (யோனா.1;12,15). ஆனால் யோனா சொல்கிறான்: "சமுத்திரத்தின் நடுமையமாகிய ஆழத்திலே நீர் என்னைத் தள்ளிவிட்டீர் என்று". என்னே பொய்யான காரியம்! உபத்திரவத்தின் மத்தியில் இருக்கும்போது, தான் பேசுகிறது இன்னதென்று அறியாமல் பேசுகிறான்; ஆனால் தனக்கு விடுதலை கிடைக்கும் என்று நம்பியும் பேசுகிறான்.

யோனா மரித்து பாதாளம் போயிருந்தால், பாதாளத்திலிருந்து ஜெபிக்கிற ஜெபத்திற்கு தேவன் பதில் தருவாரா? லாசரு - ஐஸ்வர்யவான் காரியத்தில், ஐஸ்வர்யவான் தன் சகோதரர்களுக்காக கேட்டது நிறைவேறாத போது (லூக்.16), யோனாவின் ஜெபம் கேட்டு பதில் எப்படி தேவன் கொடுத்திருப்பார்? எபி.9:27 யோனாவுக்குப் பொருந்தும் அல்லவா! யோனா இதற்கு விதிவிலக்கு என்றால், யோனா உயிர்த்தெழுந்ததுபோல, இயேசுவும் எழுந்தாரெனில், யோனாவும் மரணத்தை ஜெயித்த தேவனா? சிந்தியுங்கள். மீனின் வயிற்றிலிருந்து யோனா விண்ணப்பம் பண்ணுகிறான் என்றால், மீனுக்குள் உயிரோடிருக்கிறான் என்று பொருள். மீனுக்குள் உயிரோடிருந்த யோனா, தான் கடலில் தூக்கி எறியப்பட்ட போது பட்ட துயரங்களைத்தான் யோனா.2:2-7ல் சொல்லி, தேவன் மீனை அனுப்பி விழுங்க வைத்து அவன் பிராணனை பாதுகாத்தார் என்று சொல்வதால் (யோனா.2:6), யோனா சாகவில்லை என்று அறிகிறோம். யோனா.2;2ல் சொல்லப்பட்ட பாதாளம்,

ஐஸ்வர்யவான் இருந்த பாதாளமல்ல; சமுத்திரத்தின் ஊடே, அவன் அனுபவித்த கொடுமையை "பாதாளம்" என்று உவமானப்படுத்திக் கூறுகிறான். சமுத்திரப் பாதாளத்தில் மரண இருளின் பள்ளத்தாக்கில் அவன் தத்தளித்து ஜெபித்தபோது, மீனை அனுப்பி பாதுகாத்தார் "தேவன்" என்று சொல்கின்றான். அவ்வளவுதான். மீனுக்குள்ளிருந்தவன் உயிரோடிருக்க முடியும்; பூமிக்குள்ளிருந்த இயேசுவும் அப்படியே உயிரோடிருக்க முடியுமா? சிந்தியுங்கள். கடலில் செத்த யோனாவையா மீன் விழுங்கியது? மீனுக்குள் இருந்த செத்த பிணம் ஜெபிக்குமா? (யோனா 2:1) சிந்தியுங்கள். ஜெபித்தாலும் பதில் கிடைக்குமா?

மத்.12:41ல் உள்ள யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்பதை சிந்தித்தால் உண்மை புரியும். எப்படி பெரியவர்? யோனா மரிக்காமலே 3ம் நாள் மீனிலிருந்து வெளியே வந்தான்; இயேசுவோ மரித்து 3 நாள் மண்ணிலிருந்து மரணத்தை ஜெயித்து வந்தார். அல்லேலூயா! யோனா மரிக்கவில்லை; இயேசு மரித்தார். யோனா மரணத்தை ஜெயிக்கவில்லை; இயேசு ஒருவரே மரணத்தை ஜெயித்த சரித்திரப் புருஷர் (கொலோ. 1:18) அல்லேலூயா! (இது குறித்த DAKES பைபிளின் விளக்கமும் தவறு என்று உணர்க.)

❖ ❖ ❖

## 14. படைக்கப்பட்ட ஆதாம் தேவன்தான்

ஆதாமை தேவனென்று சொல்லும் அதிநவீன பொல்லாத பிசாசின் உபதேசகர்களை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். ஆதாமின் பிறப்பும், இயேசுவின் பிறப்பும் ஒன்று என்று வாதிடும் முஸ்லீம் சகோதரர்களின் ஆவி இவர்களிடம் உள்ளது. ஆதாம் தேவனாயிருந்தால், அவர்களைப் பார்த்து, "கனியைப் புசிக்கும் நாளிலே.. தேவர்களைப் போலாவீர்கள்" (ஆதி.3:5) என்று பிசாசு எப்படி சொல்லுவான்? பிசாசே ஆதாமை மனிதன் என்று புரிந்து கொள்ளும்போது, அவனை தேவனென்று சொல்பவர்கள் பிசாசிலும் கீழான மதி உள்ளவர்கள்தானே! சிந்தியுங்கள். மட்டுமல்ல... கனியை சாப்பிட்டபின்தான் "மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவனைப் போலானான்" என்று தேவனே சொல்லும்போது, படைக்கும்போதே தேவன் என்றால், இந்த ஆதி.3:22 பொய்யா? இவர்கள் தேவனுக்கு மேலே அறிவாளிகளா? அறியாப் பையனாயிருந்த ஆதாம், இந்த தவறு செய்ததால், அறிந்த பையனாய் - அறியும் பையனாய் -

ஆகிவிட்டபடியால், தேவனின் ஒரு கடுகளவு சாயல் வந்திருக்கிறது; அது கூட தேவசித்தத்திற்கு பிரியமானது அல்ல. தவறு செய்யாதவனாய் - அறியாப் பையனாய் - இருக்க வேண்டும் என்பதுதான் தேவசித்தம்.

"சங்.82ன் படி தேவனுடைய பிள்ளைகள் எல்லாம் தேவர்கள் என்பதால் (யோ.10:34). ஆதாமும் தேவனுடைய குமாரன்; எனவே தேவனாய்த்தான் படைக்கப்பட்டான்" என்கிறார்கள். இவர்கள் "Adam, who was the son of God (லூக்.3:38) என்பதைப் புரியாதவர்கள். இயேசு ஒருவர்தான் "Son of God" அதாவது தேவன்; மற்றவர்களெல்லாம் ஆதாம் போலவே "son of God." இதை இஸ்ரேலர் அறிந்துதானே இயேசுவை மறுபடியும் பிடிக்கத் தேடினார்கள்! (யோ.10:36, 39). இயேசுவை விசுவாசிக்காத இஸ்ரேலருக்கு புரிகிற உண்மைச் சத்தியம்கூட இந்த பொல்லாத உபதேசிகளுக்குப் புரியவில்லையே! தேவர்கள் = gods; தேவன் = God. சங்கீதக்காரன் சொல்லுகிற "தேவர்கள்" உலகிலுள்ள அந்நிய தெய்வங்களல்ல என்று உணர வேண்டும் (see 1 கொரி.8:5). ஆதாமை நம் தேவன் உலக அந்நிய தேவனாகவும் (god) படைக்கவில்லை; தேவனாகவும் (God) படைக்கவில்லை; ஆமென். மோசேயைப் போல, யாருக்கும் ஆதாம் தேவனாய் (god) இருப்பான் என்றுகூட நம் தேவன் சொல்லவில்லையே! (யாத்.7:1;4:16).

❖ ❖ ❖

## 15. இயேசு, தானே உயிர்த்தெழவில்லை என்பதால் அவர் தேவனல்ல

"இயேசு தானே உயிர்த்தெழவில்லையாம்; உயிர்ப்பிக்கப்பட்டாராம்" என்று வெளிவந்த செய்தியை மறுபடியும் வாசியுங்கள். "இயேசுவை தேவன் எழுப்பினார்; தேவஆவி எழுப்பியது; பிதாவின் மகிமை எழுப்பியது" என்ற வசனங்களே கள்ள உபதேசக் காரர்களால் மேற்கோள் காட்டப்படுகிறது. இயேசு மரணத்தை ஜெயித்த சரித்திரப் புருஷர் என்பதாலேதானே அவர் தேவனென்று பலமாய் நிரூபிக்கப்படுகிறார்! (ரோ.1:5). லாசரு, தொற்காள், ஐத்திகு, சூனேமியாளின் மகன் போன்ற பலர் உயிர்த்தெழுந்தார்கள். இவர்கள் தாங்களாகவே உயிர்த்தெழவில்லை; எனவே இவர்கள் தெய்வமில்லை. அப்படியேதான் இயேசுவும் "தானே உயிர்த்தெழவில்லை; உயிர்ப்பிக்கப்பட்டார்" என்பதால், இவர் தேவனில்லை என்று சொல்லுகிற

கூட்டம் பெருகிவிட்டது. ஒன்றான மெய்த்தேவன் மூன்று ஆட்தத்துவமாய் செயல்படுகிறார் என்ற சத்தியம் தெரியாதவர்கள் சொல்கின்ற வார்த்தை இது; "திரித்துவம் - திரியேக தேவன்" என்ற உண்மை புரியாதவர்கள் சொல்கின்ற வார்த்தை இது. மனிதனாய் வந்த இயேசுவின் உயிர்த்தெழுதலில் மூன்று ஆட்தத்துவமாய் செயல்படும் பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்ற மூவரின் வல்லமையும் வெளிப்பட்டது என்று அப்.2:23, 24; யோ.2:19; 1 பேது.318 போன்ற பல வசனங்களால் அறியலாம்.

பலருக்கு, தேவன், கர்த்தர், குமாரன், இயேசு என்பதற்கான முழு அர்த்தமும் புரியவில்லை. (ஆசிரியரின் "கருகலான சத்தியம் - பாகம் I" என்ற நூலில் உள்ள, "வார்த்தையாகிய தேவன் எப்பொழுது குமாரனானார்? இயேசுவானார்? கிறிஸ்துவானார்? கர்த்தரானார்?" என்ற செய்தியை வாசியுங்கள்). வேதத்தின்படி பிதாவும் தேவனே (1 கொரி.8:6); இயேசுவும் தேவனே (எபி.1:8; யோ.1:1,2; 20:28) ஆவியானவரும் தேவனே (அப்.5:3,4). 1 யோ.5:7ன் படி பரலோகத்திலேயே இயேசுவைப் பற்றி சாட்சியிடுபவர்கள் இம்மூவருமே. ஆவியானவர் அப்போஸ்தலர் காலத்திலேயே நம்மோடு இருக்கும்படி பூமிக்கு வந்துவிட்டாரே எப்படி பரலோகில் சாட்சி கொடுப்பார்? சிந்தியுங்கள். தேவன் என்றால் "ஏலோகிம்" என்ற இரண்டுக்கும் மேற்பட்ட பன்மையை சொல்லும் எபிரேய வார்த்தை. இது ஆதி.1:26; 3:22, 11:7; ஏசா.6:8; யோ.14:23; 17:11 போன்ற பல வசனங்களில் வெளிப்படையாகவே "நாம், நமது" என்ற பன்மையில் உள்ளது. இதே வார்த்தை "தேவர்கள்" என்று வெளிப்படையாய் பன்மையிலும் சொல்லப்படுகிறது. (ஆதி.3:5; 1 சாமு.4:8; தானி.4:6-9). அப்படியானால், "தேவனே தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர் என்று" இயேசு சிலுவையில் கூறும்போது, இயேசுதான் பூமியிலிருக்கிறாரே அப்புறம் எப்படி பரலோகில், மூன்று ஆட்தத்துவமுள்ள தேவனிருப்பார்? இது கேள்வி.

**ஒரு சிறிய புரிந்து கொள்ளும்படியான உதாரணத்தை சொல்லுகிறேன்:** சூரியனிலே வெளிச்சமும் உண்டு; வெப்பமும் உண்டு. சூரிய ஒளி பூமியில் இருக்கும் போது. சூரிய கிரகத்தில் வெப்பம் இருக்குமா? குளிராயிருக்குமா? சிந்தியுங்கள். இது எப்படியோ அப்படியேதான் திரியேக தேவனின் நிலையும் செயல்பாடும். மூன்று ஆட்தத்துவமான ஒரே தேவன் "Omni Present" என்பதை மறக்கவே கூடாது. அப்படியே, தேவன் எழுப்பினார் என்றால் மூவருமே எழுப்பியதாகத்தான் அர்த்தம். இஸ்ரேல் மக்கள், தேவனை அறிந்தவர்கள்; அவர்களிடம் மனிதனாய் வந்த

இயேசுவை, வணங்கத் தக்கவராய் தெய்வ நிலையில் காட்ட வேண்டுமானால் "தேவனே எழுப்பினார்; பிதாவாகிய தேவனின் மகிமை, தேவ ஆவியின் வல்லமை எழுப்பியது" என்று சொல்லித்தான் விளங்க வைக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான், பிலி. 3:10ல் இயேசுவுக்கு உயிர்த்தெழுதலின் வல்லமை உண்டு என்றும், 1 கொரி. 15:45ல் இயேசு உயிர்ப்பிக்கிற ஆவியாயிருக்கிறார் என்றும், 2 தீமோ.1:10ல் இயேசு மரணத்தை பரிகரித்தார் என்றும், எபி.2:4ல் மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசை தமது மரணத்தினாலே அழித்தார் என்றும், வெளி.1:18ல் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல் இயேசுவிடம் உண்டு என்றும், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் இயேசுவிடம் இருந்தது என்றும், ரோ.1:5ல் மரித்தோரிலிருந்து இயேசு உயிர்த்தெழுந்து தேவனென்று நிரூபித்தார் என்றும் அப்போஸ்தலர்கள், இடத்திற்கு ஏற்றாற் போல் விளக்கியிருப்பதை தியானித்தால் உண்மை புரியும். இயேசுவே தன்னை, தன் மகிமையை, வல்லமையை, யோ.11:25; மாற்.16:6; யோ.10:18; 2:19 போன்ற பல வசனங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். இதை வாசிக்கும் தேவ ஜனமே! மூன்று ஆட்தத்துவமாகிய ஒரே தேவன் உயிர்த்தெழுதலில் பங்கு கொண்டதால், வார்த்தையாயிருந்து, குமாரனாகி, இயேசுவாகி, கிறிஸ்துவாகி இருந்தவரும், இருக்கிறவரும் வருகிறவருமாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, மரணத்தை ஜெயித்தார்; அவரே மெய்யான தேவன்; சர்வ வல்லமையுள்ள தேவன். ஆமென்! (யோ.5:20; ரோ.9:6; வெளி.1:8; 4:8; 11:17; 16:14). அந்நிய தெய்வங்களையும் சில மனிதர்களையும் தேவன் என்று பல இடங்களில் தமிழில் சொன்னாலும் (1 கொரி.8:5; யாத்.7:1; 4:16) சில இடங்களில் "சுவாமி" என்றும் சொல்லப்பட்டுள்ளது (யோனா.1:6; நியாயா 17:5). ஆனால் எபிரேய பாஷையில் இப்படி வித்தியாசமில்லை. முன்னும் பின்னும் உள்ள வசனங்களை வைத்துத்தான் எது சர்வ வல்லமையுள்ள தேவனைக் குறிக்கிறது என்று உணர முடியும்; ஆனால் ஆங்கிலத்தில் (Captial 'G' (God) போட்டாலே சர்வ வல்லமையுள்ள தேவனைக் குறிக்கும். **மேலும், எங்காவது பிரதான ஆசாரியரோ பரிசேயரோ இயேசு மரிக்கவில்லையென்றோ, உயிர்க்கவில்லையென்றோ சொன்னதாக சம்பவம் ஏதுமில்லை.** அவர்கள் சொன்னதெல்லாம் இந்த இயேசுவை பிரசங்கிக்கக் கூடாது என்பதே! ஏன்? இவர்தான் மரணத்தை ஜெயித்த கர்த்தராகிய தேவனல்லவா!

❖ ❖ ❖

## 16. அந்நிய தெய்வங்களின் பெயரை கிறிஸ்தவன் வைக்கலாமா

உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவன்தான் கிறிஸ்தவன் (எக்லீசியா). உலகம் என்றாலே பாவம், மாம்சம், பிசாசு. கிறிஸ்துவை தரித்துக் கொண்டவர்கள் கிறிஸ்தவர்கள் (கலா.3:27; ரோ.13:14; 63). யோ.3:5; 1 பேது.1:23 போன்ற வசனங்களின்படி, ஜலமாகிய வார்த்தையினால், ஆவியானவரைக் கொண்டு, நமது ஆவியிலே நமது இருதயத்திலே - மறுபடியும் பிறப்பவர்கள்தான் (ரோ.10:9,10; 1 கொரி.6:11; யாக்.1:18) கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள். இவர்கள், இயேசுவாகிய தெய்வத்தை விசுவாசிக்கும், தேவனின் பிள்ளைகள் (யோ.1:12). இவர்கள் மேல் அந்நிய தெய்வங்கள் அதிகாரம் செலுத்தக்கூடாது என்பது தேவசித்தம்; இவர்களை ஆள்பவர் (ஆண்டவர்) நம் தேவன் மட்டுமே! இப்படியிருக்க, "இந்த அந்நிய தெய்வங்களின் பெயரால், இரட்சிக்கப்பட்டவனை அழைக்கலாம்; தவறில்லை; அது பாவமுமல்ல" என்று வக்காலத்து வாங்கி, அடிப்படை சத்தியத்தையே தகர்க்கும். பிசாசின் பொல்லாத உபதேசங்களை பரப்புகிற, அதிநவீன பிரசங்கியார்கள் எழும்பியிருக்கின்றனர். ஜாக்கிரதை!

1 கொரி.8:5ன் படி வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் எண்ணப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு. ஆதியிலிருந்து,அந்நிய தெய்வங்களை வணங்கும் புறஜாதி மக்களுக்கு, விக்கிரகங்களெல்லாம் தெய்வங்களாயிருந்தன. அந்தப்படி, சூரியன், சந்திரன் நட்சத்திரங்கள், சமுத்திரங்கள், ஆறுகள், மரங்கள் போன்ற எல்லா சிருஷ்டிப்புகளுமே தெய்வங்களாய் மாறின. அவர்களின் அறிவுப்படி, தங்கள் சக்திக்கு மேற்பட்ட படைப்புகளெல்லாம் தெய்வங்களாயின. ஆதி திராவிடர்கள் கூட, ஐம்பெரும் பூதங்களை வணங்கினர் என்று நாமறிவோம். காலம் மாற, மாற, உண்மைத் தெய்வம் இருக்க வேண்டிய இடத்தில் எது இருந்தாலும் அது தெய்வமாக (god) விக்கிரகமாக மாறிப்போனது; சுயமும், உலகப் பிரியமும் தெய்வமாகிவிட்டது (2 தீமோ.3:1,4). இதனால்தான் நம் தேவன், "நானே கர்த்தர்; வேறொருவர் இல்லை; என்னைத் தவிர தேவன் இல்லை" (ஏசா.45:5), "நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்" (ஏசா.42:8; 48:11) என்று சொல்லியிருக்கிறார். இஸ்ரேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்து வரும்போது, நியாயப் பிரமாணத்தில் கொடுத்த 10 கட்டளையில் முதல் கட்டளை இதுதானே! (யாத்.20:1-5). இப்படி அந்நிய

தெய்வங்களை உண்டாக்கி, நமஸ்கரித்து சேவித்தால், அவர் எரிச்சலைடைவாராம்; இந்த அக்கிரமம் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் தொடருமாம். சங்.16:4ன் படி, அந்நிய தேவனை நாடி பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும்.

மத்.23:13 சொல்கின்றது: "நான் உங்களுக்கு சொன்னவைகள் யாவற்றிலும் சாவதனமாயிருங்கள். **அந்நிய தேவர்களின் பேரைச் சொல்லவேண்டாம்; உன் வாயிலிருந்து பிறக்க கேட்கப்படவும் வேண்டாம்.**" சங்கீதக்காரன் சொல்கிறான்: "அவர்கள் நாமங்களை என் உதடுகளினால் உச்சரிக்கவும் மாட்டேன்" (சங்.16:4). இந்த விஷயத்திலே புறஜாதி மக்கள், தங்கள் தெய்வங்களின் நாமங்கள்தான் தங்கள் மக்களுக்கு இடவேண்டும் என்பதில் மிகவும் உறதியாய் இருக்கிறார்கள். இதற்கு உதாரணமாய் தானி.1:7ஐ வாசித்தால், நேபுகாச்நேச்சார், அடிமையாக்கப்பட்ட யூத புத்திரராகிய தானியேல், அனனியா, மிஷாவேல், அசரியா என்பவர்களுக்கு, தங்கள் தெய்வங்களின் பெயர்களான, பெல்தெஷாத்சார், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற பெயர்களிட்டு அழைத்தான் என்று அறிகிறோம். அந்த புறஜாதி ராஜாவுக்கு இருந்த தேவபக்தி, தெய்வ பயம்கூட நமது கிறிஸ்தவர்களுக்கு இல்லையே! மனக்கண் குருடாகிவிட்டதே! (2 கொரி.4:4) இன்றும் நம்மவர்கள் இந்த அந்நிய தெய்வப் பெயர்களையே சூட்டிக் கொண்டிருக்கிறார்களே! இது அறியாமையா? கீழ்ப்படியாமையா? கர்த்தருக்கே வெளிச்சம். நாமெல்லாரும் ஒரே அப்பாவாகிய நம் தேவனுக்குப் பிறந்த பிள்ளைகள் (மல்.2:10). நம்மூலமாக தேவநாமம் மகிமைப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். எனவே எக்காரணத்தைக் கொண்டும் அந்நிய தெய்வத்தின் பேரோ, மகிமையோ நம்மூலம் வெளிப்படவே கூடாது. மற்றப்படி புறஜாதி மக்களுக்கு அவர்கள் வைத்திருக்கும் பெயரில் நாம் அவர்களை அழைப்பதில் தவறில்லை; ஏனெனில் நாம் அவர்களாேடேதானே வாழ்கிறோம். (1 கொரி. 5:9,10ஐ தியானியுங்கள்)

மட்டுமல்ல... சேஷ்ட புத்திர பாகம் அன்றுமுதல் தலைமகனுக்குத்தான் உண்டு. ஆனால், ஏசாவோ, கேவலம் ஒருவாய்க் கூழுக்காய், தன் தம்பியாகிய யாக்கோபுக்கு சேஷ்ட புத்ரபாகத்தை விற்றுப் போட்டான் (ஆதி.25:33, 34). ஏசா இப்படியாய் தன் சேஷ்ட புத்ர பாகத்தை அலட்சியம் பண்ணினான் என்றும், வேசிக்கள்ளன் என்றும், சீர்கெட்டவன் என்றும் (எபி.12:16) வேதம் சொல்கின்றது. இப்படித்தான் தேவபிள்ளையே! யோ.1:12ன் படி தேவனுடைய பிள்ளை என்ற அதிகாரம் பெற்ற கிறிஸ்தவர்களில் பலர் (ரோ.8:15; கலா.4:6) கேவலம், வெகு சீக்கிரத்தில் அழிந்துபோகும் இந்த உலக வாழ்க்கைக்காய், சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப்போட்டு, ஆபீசிலோ,

“இந்து - இந்துப் பெயர்”, சபையிலோ, “கிறிஸ்தவன் - கிறிஸ்தவப் பெயர்” என்று இரட்டை வேடம் போடுகிறார்கள். இப்படிப்பட்ட சபையாரைக் கண்டும், காணாமலும், விட்விடுகின்ற, கண்டித்துணர்த்தாத மேய்ப்பர்கள் ஏராளம், ஏராளம். இரகசிய கிறிஸ்தவர்களாயிருக்கவே உதவி செய்கிறார்களே ஏன்? கூட்டமும் காணிக்கையும், பேரும் புகழும் குறைந்துவிடும் என்பதாலா? அப்.1:8ன் படி உலகமெங்கும் கிறிஸ்தவன் சாட்சியாய் இருக்க வேண்டுமே! மற்றவர் முன்னிலையில் இயேசுவை அறிக்கை பண்ணுபவன் எவனோ, அவனைத்தான் பரலோகிலே பிதா முன்னிலையில் அறிக்கை பண்ணுவேன் என்று இயேசு சொன்னதை மறக்கலாமோ! (மத்.10:32, 33). ஆபீசிலே, உலகிலே பெரியசாமி; சபையிலே பீட்டரா? ஆபீசிலே, உலகிலே, பரமேஸ்வரன், வெங்கடேசன், பரமசிவம், மோகன்; சபையிலே பர்னபாஸ், ஜோஷ்வா, லாசரஸ், பவுல்ராஜ் என்று பெயர்களா? அப்படியே கிறிஸ்தவராக மாறி, கிறிஸ்தவப் பெயர் மட்டுமே சூட்டிக் கொள்ள வேண்டியவர்கள், இந்துப் பெயர்களையும் சேர்த்து, மோகன் சி.லாசரஸ், சாம் சுந்தர், டேவிட் மோகன், சக்தி சாமுவேல் என்று வைத்துக் கொள்கிறார்களே, ஏன் அந்த பழைய பெயரின் மோகம் போகவில்லையா? அந்நிய தெய்வத்தை வைத்திருப்பதுதான் சாட்சி என்று நினைக்கிறார்களோ? அந்நிய தெய்வப் பெயரோடுதான் ஞானஸ்நானம் பெற்றார்களோ? கிறிஸ்துவிலிருந்து முஸ்லீமாக, இந்துவாக மாறியவர் யாரும் கிறிஸ்தவப் பெயரை சேர்ப்பதே இல்லையே! (உதாரணம்: எட்வர்ட் எபிநேசருக்கு தாரிக் இஸ்மாயில்; கிறிஸ்து ராஜாவுக்கு அகமது). அவர்களுக்குள்ள தேவநாம விசுவாசம் நம்மவர்களுக்கு ஏன் இல்லை? சிந்தியுங்கள். மேலும் ஒரிசாவிலே ஸ்டெயின்ஸ் என்ற மிஷனரியை காரில் குழந்தைகளோடு எரித்துக் கொன்றனர் அல்லவா! அந்தக் கொலையாளி பஜ்ரங்தள் கட்சியைச் சேர்ந்தவர். அவர் கொன்றதற்கு சொன்ன காரியம் என்ன தெரியுமா? “இங்கு உள்ள மலைவாழ் மக்களுக்கு பல உதவிகள் - சலுகைகள் செய்து கிறிஸ்தவர்களாக்குகிறார். அதே நேரம், அரசாங்கத்திற்கு இந்து பெயர் கொண்டு சலுகைகள் பெறுகிறார்கள். இதை அந்த மிஷனரி கண்டு கொள்ளாததால், இந்துக்களுக்கு கிடைக்க வேண்டிய சட்டப்படியான சலுகை கிறிஸ்தவர்களுக்குப் போகிறது. இதை வளர்த்துவிடுவது இந்த மிஷனரி தானே” என்பதாகும். ஆக இரட்சிப்புக்குள் வருகிற ஒவ்வொரு விசுவாசிக்கும் உத்திரவாதம் பாஸ்டர்தான் என்று அறியுங்கள். காலம் பொல்லாத காலம்! ஜாக்கிரதை யாயிருப்போம்.

மேலும் ஓசி.2;17ஐ வாசித்தால், இஸ்ரேலர் சோரம் போனதற்கு ஒரு காரணம் அந்நிய தெய்வப் பெயர் உச்சரிப்புதான் என அறியலாம். எகிப்திலிருந்து விடுதலையாக்கி கொண்டு வந்த நம்தேவன். “அப்பொழுது

கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு உனக்குப் பயப்படுவார்கள்" என்கிறார். (உபா.28:10). ஆக நாம், புதிய ஏற்பாட்டு மக்களாகிய நாம், இயேசுவின் நாமத்தைத் தரித்தே இருக்கிறோம் (கலா.3:27; ரோ.13:14). கோலியாத்தை தாவீது ஜெயித்ததே கர்த்தரின் நாமத்தில்தானே! (1 சாமு.17:45) அந்த நாமம்தானே நமக்கு இரட்சிப்பிற்கு - பாதுகாப்பிற்கு - வெற்றி வாழ்க்கைக்கு பூமியில் கொடுக்கப்பட்டிருக்கிறது (அப்.4:12). அந்த நாமம்தான், அதிகாரம், வல்லமை, மகிமை, மாட்சிமை எல்லாம் கொண்டது. எரே.15:16; 14:9ஐ தியானியுங்கள். அந்தி கிறிஸ்துவின் காலத்தில் கூட 1,44,000 பேருக்கு தேவநாமம் தரிப்பிக்கப்படுமே! (வெளி.7:3; 14;1). அந்நிய தெய்வ நாமம் தேவனுக்கு அருவருப்பு என்பதை மறவாதீர். கிறிஸ்தவப் பெயரோடு - நாமத்தோடு - வாழ்வதுதான் அவருக்குச் சாட்சி (அப்.1:8); அவருக்கு சாட்சியாய் வாழ்ந்தால் மட்டுமே பரலோகம் நமக்குண்டு. 2 நாளா. 7:14ன் படி தேவநாமம் தரித்திருந்தால்தான் நமக்கு ஷேமம் கிடைக்கும். ஆமென். ("நாமம்" என்பதில் பெயரும் உண்டு என்பதை அறிக).

**மட்டுமல்ல... தேவனே பல பெயர் மாற்றங்களை செய்து. நமக்கு முன் உதாரணத்தைக் காட்டியிருக்கிறார்.** ஆபிராம் - ஆபிரகாமானான்; சாராய் - சாராளானாள்; யாக்கோபு - இஸ்ரவேலானான்; சீமோன் - பேதுருவானான்; சவுல் - பவுலானான். ஒரு சிலருக்கு பிறக்கும் முன்னமேயே தேவநாம மகிமைக்கேற்றபடி பெயரைச் சூட்டுகிறார் தேவன். உதாரணம்; இயேசு; யோவான் ஸ்நானன்; ஈசாக்கு. இதை வாசிக்கும் தேவபிள்ளையே! உலகத்தார் மத்தியிலே நீ கிறிஸ்தவன் என்று முதலில் அறியப்பட வேண்டுமானால், உன் பெயர், தேவநாமம் மகிமைப்படும்படியான கிறிஸ்தவப் பெயராய் இருந்தே ஆக வேண்டும். இதற்குப் பிறகு தான் உன்னுடைய பேச்சும் செயலும் உன்னை இன்னார்தான் என்று உறுதி செய்யும்! அந்நிய தெய்வப் பெயரை நீ சுமப்பதால் உனக்கென்ன லாபம்! அந்த தெய்வத்துக்குத்தான் சந்தோஷம். கிறிஸ்தவன் என்று காட்டிக் கொள்ளும் உன்னை ஆள்வது, அந்நிய தெய்வம்தான் என்று, சொல்லாமல் சொல்லி அது மகிழ்கின்றது. நம் தேவனுக்கோ அது மிகுந்த மனவருத்தம். உன் கிரியைகள் கர்த்தருக்கு சுகந்த வாசனையாய் இருக்க வேண்டாமா? சிந்திப்பீர்! செயல்படுவீர்! தமிழார்வம் உள்ள செந்தமிழன் கூட தன் பெயரை தமிழில் மாற்றிக் கொள்கிறான்; அரசாங்கம்கூட தமிழ்ப்பெயர் உள்ள சினிமாக்களுக்கு வரிவிலக்கு தருகிறது. இரட்சிக்கப்படாதவர்களுக்கு இருக்கிற அந்த உணர்வு உனக்கு ஏன் இல்லை? "உடல் மண்ணுக்கு; உயிர் இயேசுவுக்கு" என்ற விசுவாசமிருந்தால் நிச்சயம் அவர் நாமம் உயர்த்திப் பிடிப்பாய்! இல்லையேல்

இம்மையிலும் வேதனை; மறுமையிலும் நித்திய ஜீவனில்லை. **மத்.10: 32, 33 உனக்கு எச்சரிப்பாக இருக்கட்டும்!** அடிப்படையைத் தகர்க்கும் அதிநவீன பொல்லாத பிசாசின் உபதேசம் தவிடு பொடியாகட்டும். இயேசுவின் நாமம் தரித்து உலகத்தார் முன் தேவனை அறிக்கை பண்ணாத உன்னை, இயேசு பிதாவிடம் அறிக்கை பண்ணாவிட்டால், உனக்கு பரலோகம் கிடைக்குமா? சிந்தியுங்கள்.

❖ ❖ ❖

# புரட்டுக்காரர்கள் மத்தியில் புரட்சிக்காரனாய் இரு!

காலத்திற்கேற்றபடி எழும்பும் வேதப்புரட்டர்களின் ஒரு சில கேள்விகளையும் அதற்கான விளக்கத்தையும் சென்ற செய்திகளில் பார்த்தோம். அதன் தொடர்ச்சியான ஒருசில கேள்விகளை தருகிறேன். தியானியுங்கள்.

1) **ஆதி. 1:2ல் இருளும் ஜலமும் இருந்ததாகத்தான் சொல்லப் பட்டிருக்கிறதே தவிர, இருள் உண்டாகக்கடவது; ஜலம் உண்டாகக்கடவது என்று சொல்லவில்லை. அப்படியானால் ஜலத்தையும் இருளையும் யார் படைத்தது?**

★ வேதத்தில் ஒரு வசனத்தை வைத்துக் கொண்டு முழுக் கருத்துக்களையும் புரிந்து கொள்ள முடியாது. அதனால்தான் வேத வசனங்கள் ஒன்றும் ஜோடில்லாதது என்று எழுதப்பட்டுள்ளது. வெளி.14:7; சங்.104:13 போன்ற பல வசனங்களை வாசித்தால், சமுத்திரத்தையும், நீரூற்றுகளையும் (ஜலம் - தண்ணீர்) உண்டாக்கியது தேவனே என்று அறியலாம். மேலும் ஏசா.45:7 ஐ வாசித்தால் இருளும் தேவனாலே உண்டாக்கப்பட்டது என அறியலாம். (ஒன்றுமில்லாமையிலிருந்து சிருஷ்டிக்கப்படவில்லை என்பதை அறிக) சுத்தம் இல்லையேல் அசுத்தம் தானாய் வரும்; சௌகரியம் இல்லையேல் அசௌகரியம் தானாய் வரும். அப்படியே ஒளி இல்லையேல் இருள்தானாய் வரும்.

2) **சூரியன், சந்திரனை 4வது நாள் தானே உண்டாக்கினார். அதற்குப்பின் தான் இரவு, பகல் உண்டாயிருக்க வேண்டும். சூரியன் வருமுன் எப்படி இரவு பகல் வந்தது? வெளிச்சம்**

**உண்டாக்ககடவது என்று முதலாம் நாள் சொன்னாரே அந்த வெளிச்சத்தை, சூரியனைத் தவிர வேறு ஏதும் கொடுக்க முடியாதே! அப்படியானல் இவ்வளவு பெரிய சூரிய அக்கினிக் கோளத்தை உண்டாக்கு முன் எங்கே அதை வைத்திருப்பார்?**

★ நான் எழுதிய "படைப்பின் இரகசியம்" என்ற வேதபாடப்பகுதியில் இது விளக்கப்பட்டிருக்கிறது. இது "உங்களுக்குத் தெரியுமா?" என்ற ஆராய்ச்சி நூலில் உள்ளது. 'let there be light" என்றார். வெளிச்சம் வந்தது. வெளிச்சத்தை சிருஷ்டித்தார் என்று வேதம் சொல்லவில்லை. கேள்வியிலேயே பதிலும் இருக்கிறது. பூமியை விட்டு மறைக்கப்பட்டிருந்த சூரியனிலிருந்து தான் ஒளி வந்திருக்கும் என்ற அவரின் கருத்து சரியே. ஒருவன் தான் மீதமாயிருப்பதாக, தன்னைப்பற்றி எலியா தன் அறிவுப்படி தேவனிடம் விண்ணப்பிக்கும் போது, எலியா அல்லாத 7000 பேரை மறைத்து வைத்திருந்த தேவனால் (ரோ.11:2,3,4) சிருஷ்டிக்கப்பட்ட சூரிய கோளத்தை மறைத்து வைத்திருக்க முடியாதா? உயிரோடே எடுத்துக் கொள்ளப்பட்ட எலியா, ஏனோக்கு மற்றும் மரித்தபின் எடுத்துக் கொள்ளப்பட்ட மோசே ஆகியோரில் இரண்டு பேரை மறுரூப மலையில் காட்டிய தேவன், அவர்களை எங்கோ வைத்திருக்கிறார் அல்லவா! அந்த தேவன், சூரியனை மறைத்து வைத்திருக்க முடியாதா? இயேசுவை அறியாமல் வாழ்ந்த சன்மார்க்கரை வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பு வரை பாதுகாத்து வைத்திருக்கும் தேவனால், சூரியனை பாதுகாக்க முடியாதா? எப்போதோ சிருஷ்டிக்கப்பட்டு, ஆதி.1:1க்கும் 2க்கும் இடைப்பட்ட காலத்தில் மறைத்து வைத்திருந்த சூரியன் நாலாம் நாள்தான் வெளிக் கொண்டு வரப்பட்டது. மேலும் பூமி அந்தரத்தில் தொங்கி சுழல்கின்றது என்பதை உணர்ந்தால் போதும், சூரியனிலிருந்து வரவழைக்கப்பட்ட ஒளியினாலே - பூமி சூழற்சியின் போதே, சாயங்காலமும், விடியற்காலமும் உருவாகி நாள் உண்டாகுமே!

**3) தேவன் தம்முடைய ரூபத்தின்படியும் சாயலின் படியும் தானே மனிதனை ஆணும் பெண்ணுமாக படைத்தார். அப்படியானால் தேவனுக்கு ரூபமுண்டே! ரூபமுள்ளவர் என்றால் ஏன் பெரிய பாதிரியார்களுக்கு கூட தன்னை காட்டிக் கொள்ளாமல் மறைக்க வேண்டும்?**

★ "படைப்பின் இரகசியம்" பகுதியில் இதற்குரிய முழு விளக்கமும் இருக்கிறது. வாசித்து அறியுங்கள்.

**4) ஆதி.2:21ல் ஆதாமுக்கு ஆழ்ந்த நித்திரை வரப்பண்ணி, அவன் விலா எலும்பில் ஒன்றை எடுத்து அந்த இடத்தை தசையினால் அடைத்தார் என்றும் எடுத்து விலா எலும்பிலிருந்து ஏவாளை உருவாக்கினார் என்றும் உள்ளது. அப்படியானால் எலும்பை எடுத்த இடத்தில் யாருடைய தசையை வைத்தார்? மயக்க மருந்து கொடுக்காமல் கொசுக்கடியை கூட தாங்க முடியாத மனுஷன் எப்படி பொறுத்துக் கொண்டிருந்தான்? ஆதாமை படைத்தது போலவே ஏவாளை தனியாக படைத்திருக்கலாம் அல்லவா!**

★ ஆணும், பெண்ணும் ஒரே மாமிசத்தில் இருக்கிறார்கள் (ஆதி.2; எபே.5:31, 32) என்ற இரகசியம் தான் இது. அதனால் தான் ஆதாமின் விலாவினை எடுத்து ஏவாளை உருவாக்கினார். மீன் வயிற்றுக்குள் இருந்த யோனாவை காத்த தேவன். விலா எலும்பை எடுத்த போது அவனுக்கிருந்த வலியிலிருந்து விடுதலை தந்திருக்க மாட்டாரா? மேலும் ஆதாமின் தசையில் ஏதாவது ஒன்றை எடுத்து விலா இருந்த இடத்தில் வைத்து அடைத்திருக்கலாமல்லவா! இன்றும் ஆணின் விலா எலும்புகள், பெண் விலா எலும்புகளை விட ஒன்று குறைவாக இருக்கிறது என்று மருத்துவ உலகமே ஒத்துக் கொள்கிறதே! அனஸ்தீசா (மயக்க மருந்து) கண்டு பிடித்த விஞ்ஞானியே. "ஆதாமுக்கு வலியில்லா ஆபிரேஷன் நடத்தப்பட்டது" என்பதை உணர்ந்து, "நானும் அப்படியே கண்டுப் பிடித்தேன்" என்று சொல்லியிருக்க, கேள்வி கேட்போருக்கு சிந்தனையே இல்லையா! மட்டுமல்ல... ஆதாமின் சரீரம் மகிமையின் சாயலில் இருந்திருக்க வேண்டும் என்பதையும் யோசிக்கலாமே!

**5) ஆதி.3:1ல் "காட்டு ஜீவன்" என்று சொல்லிவிட்டு, ஏவாளிடம் பேசியதாக உள்ளதே, சர்ப்பம் எப்படிப் பேசும்? இதை எப்போது படைத்தார் என்று குறிப்பு இல்லையே?**

★ நாட்டு மிருகமான கழுதையைப் பேச வைத்த தேவன் (எண்.22;28) சர்ப்பத்தை பேச வைக்க முடியாதா? கழுதையும், சர்ப்பமும் பேசியது என்பதால், மனிதனைப் போல பேசத்தக்கதான அவயவங்களை தேவன் அவைகளுக்கும் தந்திருக்கிறார் (Vocal Organs) என அறியலாம். இதை விஞ்ஞான மருத்துவமும் ஒத்துக் கொள்கிறது. மேலும் தேவ மகிமையினால் மூடப்பட்டிருந்த காலத்தில் - அறியாமையின் காலத்தில் மிருகங்கள் பேசவில்லை என்று வசனமே

இல்லை. ஆதாமின் பாவத்தினால் பூமியும் பூமியிலுள்ளவைகள் எல்லாம் சபிக்கப்பட்டன (ஆதி.3;17) சபிக்கப்பட்டதன் விளைவால் மிருகங்கள் அதன் பின் பேசாமல் போனதோ தெரியவில்லை. ரோ.8:19-22ஐ வாசித்தால், பழைய ஏதேன் நிலை வரவேண்டுமென்று சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப்பிரசவ வேதனைப்படுகிறது என அறிகிறோம். அப்படியானால் பழைய ஏதேனின் நிலையில் சர்ப்பம் பேசியிருக்கலாம். ஐயமில்லை. இதை 5ம் நாள் (ஆதி.1:24,25) படைத்தார்.

**6) தேவனின் சாபத்தினால் சர்ப்பம் உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்ன வேண்டும் (ஆதி.3:14) சர்ப்பம் தற்போது மண்ணையா தின்கிறது? உயிர்களையல்லவா தின்கின்றது! ஆண்டவர் கொடுத்த சாபத்தை பாம்பு மீறிவிட்டதா? அல்லது சாபம் கொடுத்ததில் கோளாறா?**

★ எல்லா ஜீவராசிகளும் சைவ உணவு தான் சாப்பிட வேண்டும் என்பது தேவனின் நியமம் (ஆதி.1:30). எனவே ஏதேனில் சர்ப்பம், உயிர்களை கொன்று தின்னவில்லை. இது நோவாவின் ஜலப்பிரளயம் வரை மனிதனுக்கும் இருந்தது (ஆதி.1:29) என்றைக்கு அசைவம் சாப்பிட தேவன் அனுமதி தந்தாரோ அன்றிலிருந்துதான் சர்ப்பம் போன்ற ஜீவராசிகள் உயிர்களை கொன்று தின்ன ஆரம்பித்திருக்கும் (ஆதி.9:1-4) சர்ப்பம் போன்ற ஜீவராசிகள் மற்றவைகளைக் கொன்று தின்றிருந்தால், பேழைக்குள் எப்படி அவைகள் எல்லாம் ஜீவனோடு கிட்டதட்ட ஒரு ஆண்டு இருந்திருக்க முடியும்? சிந்தியுங்கள். மண்ணை மட்டுமே சாப்பிட வேண்டும் என்று தேவன் சாபம் கொடுக்கவில்லை. ஏற்கெனவே சாப்பிட்ட சைவ உணவை சாப்பிட வேண்டாமென்றும் தேவன் சபிக்கவில்லை. இரண்டுமே செயல் வடிவம் ஆனது. ஆமென். வரப்போகும் 1000 வருட ஆட்சியில் சைவ உணவுதான் எல்லா உயிரினங்களுக்கும். அப்போது கூட தேவன் தந்த சாபத்தின்படி சர்ப்பம், புழுதியை - மண்ணை சாப்பிடும் என்று ஏசா.65:25 சொல்கின்றது. எனவே சாபத்தில் கோளாறோ மீறுதலோ ஒன்றுமில்லை.

**7) காயீனுக்கு மனைவியார்? எங்கிருந்து வந்தார்? ஆபேல் தான் கொலை செய்யப்பட்டான்; மீதமுள்ளோர் ஆதாம், ஏவாள், காயீன் அவ்வளவுதானே! காயீன் தேவனை விட்டுப் பிரிந்து போய் நோத் என்னும் ஊரில் இருந்தானே அது யாரால்**

**உண்டாக்கப்பட்டது? அதிலுள்ள மனிதர்களை படைத்த கர்த்தர் யார்? எப்போது?**

★ மல்.2:15ன் படியும் ஆதி.1,2ன் படியும் தேவன், ஆதாம், ஏவாள் ஆகிய இரவரைத் தான் படைத்தார். இவர்கள் வழியில் தான் உலக சந்ததி. நோத் என்றால் (Heb. Nod) "Wandering Place" என்று பொருள். அதாவது காயீன் அலைந்து திரிந்த பகுதி என்று பொருள். அந்த பகுதி கிழக்கத்திய ஐரோப்பாவும், மேற்கு ஆசியாவும் சேர்ந்த பகுதியாய் இருக்கலாமென்றும், சீனா பகுதியாய் இருக்கலாம் என்றும் வேத வல்லுநர்கள் கணிக்கிறார்கள். இது யாரும் உண்டாக்கின ஊரோ தேசமோ அல்ல. காயீன் மனைவியை அறிந்தது எப்படி? இது "நோத்"ல் அல்ல என்று முந்தி அறியுங்கள். வேதத்தில் ஆண் பிள்ளைகளைப் பெறுவது மாத்திரமே எழுதப்பட்டிருக்கும்; பெண் பிள்ளைகள் பிறப்பது எழுதப்படவே இல்லை. மேலும் இயேசு கிறிஸ்து வரையிலான வம்ச வரலாறு தான் வேதத்தில் காட்டப்படுமே ஒழிய மற்றவைகள் காட்டப்படுவதில்லை. ஆதாம் ஆபேலுக்குப் பதிலாகசேத் என்பவனை பிறப்பித்தது தனது 130வது வயதிலே தான். சேத் வழிதானே கிறிஸ்துவின் சந்ததி! ஆரம்ப முதல் ஆதி விசுவாசியாகிய ஆபேலைப் போல ஒருவனை தேவன் தர 130 வயதாகியிருக்கிறது. (ஆதி.4:25 5:3) அப்படியானால் அவனுக்கு (சேத்துக்கு) முன்னாலே 130 வருஷமாய், காயீன், ஆபேலுக்குப் பின், ஆதாம்பிள்ளைகளைப் பெற்றிருக்கலாமே! அந்தப் பிள்ளைகள் கிறிஸ்துவின் வம்சத்தில் இல்லாததால் எழுதப்படவில்லை. வேதமானது, ஆதியாகமம் முதல், வெளிப்படுத்தல் விசேஷம் வரை இயேசுவை நோக்கியே எழுதப்பட்டது என்று முந்தி அறிய வேண்டும். இந்த 130 ஆண்டுகளில் ஆதாம் பெற்ற - இயேசுவின் வம்ச வரலாறு அல்லாத - பிள்ளைகள் பலுகிப் பெருகினால் கிட்டத்தட்ட 5 லட்சம் பேர் ஆவார்கள் என வேத வல்லுநர்களால் கணிக்கப்படுகிறது. இதனால் தான் காயீன் ஒரு நகரத்தையே கட்டியிருக்கிறான். (ஆதி.4:17) இவர்களில் ஒருவரை மனைவியாய் காயீன் ஏற்றிருக்கலாமே! பலர் கூறுவது போல், காயீனின் சகோதரிகளே கூட அவனுக்கு மனைவியாகியிருக்கலாம். நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் வரை, இவையெல்லாம் பாவமாய் எண்ணப்படவில்லை (ரோ.5:13) ஆக படைத்தவர் ஒருவரே! படைக்கப்பட்டவன் ஆதாம் என்ற ஒருவனே!

8) **ஆதி.6:3ல் மனிதன் மாம்சம் தானே; இருக்கப் போகிறது 120 வருஷம் தான், என்றுள்ளது. ஆனால் ஆதி.5:27ல் மெத்தூசலா**

**969 வருஷம் இருந்தான் என்றுள்ளது. இது முன்னுக்குப் பின் முரணில்லையா?**

★ மனிதனுக்கு வாழ்வு "70வருஷமா" என்ற தலைப்பில் ஆசிரியர் எழுதியுள்ள செய்தியை "விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்" என்ற ஆராய்ச்சிப் புத்தகத்தில் வாசியுங்கள். "மனித வாழ்வு நோவாவுக்கு முன் 120 வருஷம்; ஜலப் பிரளயத்துக்குப் பின் 70 வருஷம்" என்று நம்மவர்கள் அறியாமல் பிரசங்கிப்பதால், வரும் கேள்விகள் இவைகள். இந்த அதிகாரத்தில் மனுஷன் என்ற வார்த்தை ஆதாம் என்று மூல பாஷையில் ஒருமையில் (with definite article) உள்ளது. ஆக 6ம் அதிகாரம் வரை ஆதாம் வாழ்ந்திருக்கிறான். பாவத்தை ஆரம்பித்த பாவி இவனே! இவனோடே தான் ஆவியானவரின் போராட்டம். இவனும் திருந்தவில்லை; மற்றவர்களைத் திருந்தவும் விடவில்லை. இவன் இன்னும் வாழப் போகிறது 120 வருஷம் தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஆதாமுக்கு தேவன் மனந்திரும்ப வேண்டுமென்பதற்காய் கொடுத்த வாழ்நாள். ஆனாலும் அவன் திருந்தியதாகத் தெரியவில்லை. ஆதி.6:3, ஆதாமின் 810வது வயதில் சொல்லப்பட்டுள்ளது. நோவாவின் தகப்பனான லாமேக்கின் காலம் வரை ஆதாம் வாழ்ந்திருக்கிறான். மனிதனை சங்.91:16ன் படி நீடித்த நாளாய் வாழ வைக்க வேண்டுமென்பதே தேவ சித்தம். அதற்கு அளவு கோல் இல்லை. அப்படித்தான் மெத்தூசலா நீடித்த நாள் வாழ்ந்தான். மற்றப்படி முரண் ஏதுமே இல்லை.

9) **ஆதி.6:4ல் சொல்லப்பட்ட இராட்சதர்கள் எப்படி, யாரால், எங்கு உண்டாக்கப்பட்டிருந்தார்கள்? தேவ குமாரர்கள் யார்? அவர்களுக்கு தேவ குமாரத்திகள் இல்லாதிருந்தார்களா? மனித குமாரத்திகளோடு கூடுவதற்கு காரணம் என்ன? அந்த கூடுகையில் பிறந்தவர்கள், பேர் பெற்ற பெலவான்கள் என்று கூறப்பட்டுள்ளதே அப்படியானால் அந்த இனம் யார்? எங்கே இருக்கிறது? சிந்தியுங்கள்.**

★ இராட்சதர்களை தேவன் படைக்கவே இல்லை. இந்த பூமியில் ஆதாம் ஒருவனைத்தான் படைத்தார் (மல்.2:15) வித்தியாசமான தோற்றத்தையும் பெலத்தையும் உணர்வுகளையும் உடையவர்கள் இவர்கள். 6 கைகால் விரல்களோடும், 10 முதல் 25 பவுண்ட் எடையுள்ள ஈட்டியை தூக்க முடிகிற பெலனோடும் இருந்தார்கள்.

(1 நாளா.2:4-8) கோலியாத் போன்ற இராட்சதர்கள் 13 அடி உயரமும் 196 பவுண்டு உலோக போர்க் கவசம் அணிந்தவர்களாய் இருந்தார்கள் (1 சாமு.17:4-6); ஏனாக்கின் குமாரராகிய இராட்சதர்களுக்கு முன் இஸ்ரேலர்கள் வெட்டுக் கிளிகளைப் போலிருந்தார்கள் என்றால் பாருங்களேன் (எண்.13:33). இந்த இராட்சதர்கள் மனுஷீக ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசமாய் - வேறுபாடாய் - ஒழுங்கின்மையாய்ப் பிறந்தவர்கள். வீட்டைக் கட்ட - பிள்ளைகள் உருவாக - கர்த்தரின் துணையும் கிருபையும் இருந்தால் நல்ல பிள்ளைகளை சுதந்திரமாய்த் தருவார் (சங்.127). அப்படி இல்லாமல் சாராளைப் போல சுயமாய் பிள்ளைகள் உருவாக முற்பட்டால் (ஆதி.16:2) இப்படிப்பட்ட அவல நிலையிலுள்ள பிள்ளைகள் பிறப்பதுமுண்டு. இது சாபத்தின் சின்னம். இப்படித் தான் இராட்சதர்கள் தோன்றியிருக்கிறார்கள். தேவனை விசுவாசிப்பவர்கள் தேவனின் பிள்ளைகள்; குமாரர்கள்; நம்மைப் போல (யோ.1:12)! தேவனுக்குள்ளே ஆணென்றுமில்லை பெண் என்றும் இல்லை (கலா.3:28) என்பதால் விசுவாசமுள்ள ஆண், பெண் எல்லோருமே தேவகுமாரர்கள் தான். தேவனின் பிள்ளைகளாயில்லாதவர்கள் உலகத்தார்; மனுஷர் - அதாவது ஆதாமியர் (பாவ ஆதாமின் ஆவி உடையவர்). இந்த ஆதாமியப் பெண்களோடு தேவ பிள்ளைகள் கூடினார்கள். இது விக்ரக ஆராதனை - அந்நிய நுகப்பிணைப்பு (2 கொரி. 6). இதை சாலமோன் செய்ததால் தானே எபி.11ல் அவன் பெயரே இல்லை. தேவகுமாரர்களாகிய இஸ்ரேலரில் குராமரத்திகள் அவனுக்கு இல்லையா? (1 ராஜா 11:3) அவன் இருதயத்தை உலகப் பெண்கள் பக்கம் வழுவிப் போக வைத்தான் பிசாசு. அப்படியே நோவா காலத்துக்கு முற்பட்ட தேவ பிள்ளைகளின் நிலை ஆயிற்று. அப்படியாய்ப் பிறந்த பிள்ளைகளும் பேர் பெற்ற பெலவானாய் இருந்தார்கள். நோவா குடும்பம் தவிர மற்ற அனைவரும் இப்படியாய் வழி விலகிப் போனதால் அல்லவோ அத்தனைபேரும் அழிக்கப்பட்டனர்.

10) **ஜலப் பிரளயம் நடந்திருக்குமா? 8848 மீட்டர் உயரமுள்ள எவரெஸ்ட்டையும் மறைக்கும் அளவிற்கு இருந்த மழை வெள்ளம் எந்த சமுத்திரத்தில் போய் அடங்கியிருக்க முடியும்? ஒரு சிறிய ஜன்னலும் ஒரே ஒரு கதவும் உடைய பேழைக்குள் எப்படி எல்லா ஜீவராசிகள் மாதக்கணக்கில் இருந்திருக்க முடியும்?**

**யானையும் ஒட்டகமும் எப்படி நுழைந்திருக்கும்? எல்லாமே நம்ப முடியாதவை. சிந்தியுங்கள்.**

★ நோவா காலம் வரை கிட்டத்தட்ட 1600 ஆண்டுகள் மழையையே மக்கள் காணவில்லை என்பது தவறு. ஆதி.1:6-8ன் படி வானம் ஜலத்தால் நிறைந்திருந்தது. இதனால், வனாந்தரத்தில் 40 ஆண்டுகள் இஸ்ரேலருக்கு பகலில் மேகஸ்தம்பம் இருந்து ஏர்-கண்டிஷன் நிலையில் காணப்பட்டது போல நோவா காலம் வரை பூமி இருந்திருக்கும். ஆதி.1:9,10ன் படி வெட்டாந்தரை தான் பூமி என்பதால், தற்போது போல பூமியில் பல கண்டங்கள் (Continents), பல சமுத்திரங்களால் பிரிக்கப்பட்டு இருக்கவில்லை. இந்த அடிப்படையில் நோவாவின் ஜலப்பிரளயத்தைப் பார்ப்போம். மகா ஆழத்தின் ஊற்றுக்கண்கள் பிளந்தன (ஆதி.7:11) என்பதால் உருண்டையாய், நேராய் இருந்த பூமியின் ஒரு பகுதியில் அதிக ஊற்றுக்கண் நேரிட்டு வரும்போது அந்த பக்கம் சாய வாய்ப்புண்டு. இப்போது விஞ்ஞான ரீதியாய் பூமி 23.5 டிகிரி சாய்ந்திருக்கிறது என்பது இதனால்தான் ஏற்பட்டிருக்க வேண்டும்; அதனால்தான் சீதோஷண நிலைகள் மாறி மாறி வருகின்றன. தேவன் சாய்வாய்ப் படைத்தாரென்றோ, சீதோஷ்ண நிலைகள் நோவாவுக்கு முன் இருந்தன என்றோ வேதத்தில் இல்லை. மேலும் வானத்தின் மதகுகள் திறவுண்டதால் (ஆதி.7:11) வானிலுள்ள ஜலத்திரைகளெல்லாம் கீழே வந்து விட்டதால் சூரிய ஒளி நேரிடையாக பூமியில் விழுந்திருக்கும். அதிக வெப்பத்தை பூமி உணர்ந்திருக்கும். இதனால் 150 நாள் கழிந்து ஜலம் முழுவதுமாய் வற்றியிருக்கிறது (ஆதி.8:3). கொஞ்ச ஜலம் சமுத்திரத்திற்கு போயிருக்கலாம். கொஞ்சம் ஜலம் சமுத்திரமாகவே வெட்டாந்தரையின் மேல் நின்று வெட்டாந்தரைகளைப் பிரித்திருக்கலாம். உலக நிலப்பரப்பே மாறியிருக்கலாம். இனி மேல் இப்படியாய் பெருமளவு மழை பொழிய வைத்து பூமியை நிக்ரகம் பண்ணாதபடி, வானவில்லை அடையாளமாய் தேவன் வைத்திருக்கிறார் (ஆதி.9;12-17). இன்று கன மழை பெய்யும் போது வானில் வானவில் தோன்றினால் அதற்கு மேல் மழை பொய்யாது என்று நாமும் புரிந்து கொள்கின்றோம்; விஞ்ஞானமும் இதற்கு ஆமென் என்கின்றது. இதிலிருந்து நாமறிவது என்ன? தேவன் பெருமழை பொழிந்து, ஜலப்பிரளயம் உருவாக்கியதாலேயே இப்படி நடக்கிறது அல்லவா! சிந்தியுங்கள். நோவா காலத்தில் பல பாஷைகள்

இல்லை; ஒரே பாஷை தான். (ஆதி.11;1) எனவே நாம் நினைக்கிறபடி பல நாடுகள் இல்லை. உலகம் முழுவதும் தற்போதுள்ள பரப்பளவு என்று சொல்ல முடியாது. "அன்றிருந்த உலகம் முழுமைக்கும் நோவா சுவிசேஷம் சொன்னான்; அவர்கள் யாரும் கேட்காது அழிந்தார்கள், என்பதை உணர்ந்தால் இந்த வெள்ளம் நோவா வாழ்ந்த பகுதியில் மட்டும் தான் என்று சொல்ல வாய்ப்பே இல்லை. எவரெஸ்ட் சிகரம் அப்போது இருந்ததா நாமறியோம்; ஆதாரமும் இல்லை. ஆதி.6;15ன் படி பேழையின் நீளம் 625 அடி; அகலம் 104 அடி; உயரம் 62.5 அடி. கி.பி. 1850 வரை இவ்வளவு பெரிய கப்பல் உலகிலேயே உருவாக்க வில்லை என்று சரித்திரம் சொல்கிறது. இதன் கொள்ளளவு 90,000,000 பவுண்டு என்று கணிக்கப்படுகிறது. இதற்கு மூன்று தளங்கள் உண்டு. ஒவ்வொரு தளத்திலும் பல அறைகள் உருவாக்கப்பட்டது. மேல் தளத்தில் மாத்திரம் ஒரு ஜன்னலும், கதவும் வைக்கப்பட்டன என்று ஆதி.6:16ஐ வைத்து சிலர் கருதுகிறார்கள். மூல பாஷையைப் பார்க்கும் போது ஒவ்வொரு தளத்திலும் ஜன்னல் வைத்து இடுக்கம் இல்லாமல், காற்றோட்ட வசதியோடு இருக்கச் செய்திருக்கிறார் என அறிகிறோம். எனவே இந்தப் பேழையில் யானை, ஒட்டகம் போன்ற பல பிராணிகள் 1 வருடமும் 17 நாட்களும், உணவுப் பொருட்களோடு இலகுவாய் இருந்திருக்க முடியும். சந்தேகப்படவே தேவையில்லை.

11) **கொலை செய்யாதிருப்பாயாக என்ற கட்டளை கொடுத்த தேவன் ஊசாவைக் கொல்லலாமா? அதுவும் மாடுகள் மிரண்டு உடன்படிக்கைப் பெட்டியை அசைத்ததால் பெட்டி விழாமல் இருப்பதற்காக பெட்டியை தொட்டுப் பிடித்ததற்காக அவனை அடித்துக் கொன்றாரே இவரைப் போய் இரக்கமுள்ள, கருணையுள்ள அன்புள்ள ஆண்டவர் என்று எப்படி நம்புவது? (2 சாமு.6:6,7).**

★ நம் தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பதற்கு (1 யோ.4:8) ஏராளமான நிகழ்ச்சிகள் வேதத்தில் தாராளமாய் உண்டு. இன்றுவரை அவரது வருகை தாமதமாகி, நியாயத் தீர்ப்பு தள்ளிப் போடப்பட்டுக் கொண்டு இருப்பதே மனிதர்கள் எல்லாம் மனம் மாற வேண்டும் என்ற அன்பால்தானே! (2 பேது.3:9,10). ஒரு மனிதனும் கெட்டுப் போகாமல் - நரகம் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்று தம்முடைய ஒரே பேறான குமாரனையே சாகக் கொடுத்தவர்

அன்பானவர் இல்லையா? (யோ. 3:16) சாலமோன் அந்நிய பெண்களோடு இணைந்த போதும் அவனை அழிக்க வில்லையே! விபச்சார ஸ்திரியையும் களவுமாய் பிடிப்பட்ட போதும் அவளை கல்லெறியவில்லையே! சோதோம் கொமாரா போல இன்றும் பல நகரங்கள் இருந்தும் தேவன் இன்னும் அழிக்க வில்லையே ஏன்? அனனியா சப்பிராள் போல அநேக கிறிஸ்தவர்கள் காணிக்கைகளை ஏமாற்றியும், அவர்களை சாகடிக்கவில்லையே ஏன்? சிந்தியுங்கள். தேவன் அன்பாய், பொறுமையாய் இல்லையா? வேதத்தில் தேவன் சில சட்ட திட்டங்களை வைத்திருக்கிறார். அதை மீறிப் போகும் போது எப்போதுமே தண்டனை கொடுப்பவராய் அவரில்லாமல், (அப்படி எப்போதுமே கொடுத்தால் உலகில் ஒரு மனிதனும் இருக்க மாட்டான்), மற்றவர்களுக்கு அந்த மீறுதல்களை உணர்த்த வேண்டும் என்பதற்காய் திருஷ்டாந்தமாய் சட்டப்படியான சில நியாயத்தீர்ப்புகளை தேவன் செய்கிறார். (see 2 பேது. 2:) இதை வைத்து மட்டும் தேவனை எடை போட முடியாது. ஊசா விஷயத்திற்கு வருவோம். ஆசாரியர், லேவியர் தான் தாங்களே உடன்படிக்கை பெட்டியை - தேவ வார்த்தையை - தேவனை சுமக்க வேண்டும் என்று சட்டமிருக்க (யாத். 37:5; எண். 4:15; 7:9; 10:21; உபா.10:8; யோசு. 3:8-14; 1 நாளா.13:7; 15:2) அதை விடுத்து தம் சுய அறிவுப்படி தாவீதும் அவனோடிருந்தவர்களும் ஒரு புதிய ரதத்தில் வைத்து எருசலேமுக்கு கொண்டு வருகிறார்கள். ஊசா, அபிநாத் ஆகிய லேவியர்கள் உடன் வந்தார்கள். இந்த லேவியர் தாம் செய்கிறது தவறு என உணரவில்லை. "வார்த்தையை நீ சுமந்தால் தேவன் உன்னைச் சுமப்பார்" என்பது ஒரு வேத வல்லுநரின் கருத்து. வார்த்தையே ஜீவன் என்பதில் உறுதி உள்ளவர் நம் தேவன். தாங்களும் உணர்வின்றி, தனக்குச் செம்மையானதாய்த் தோன்றுகிறதை செய்து, மற்றவர்களுக்கு சாட்சியாய் நடந்து காட்டாமல் போனார்கள். முடிவு மரணம் (நீதி.14:22). மரண மிரட்டலால் - பயத்தால் - உடன்படிக்கைப் பெட்டியை தொடக்கூடாது என்பது தேவசட்டம். இங்கே ஊசா, சட்டம் மீறி வண்டியில் கொண்டு போகிறான்; மாடு மிரளும் போது பயந்தான்; சட்டம் மீறி பெட்டியைத் தொட்டான். வார்த்தையை இவன் சுமந்திருந்தால் பயம் வருமா? இஸ்ரேலர் மத்தியில் ஒரு ஆவிக்குரிய காரியத்தை வெளிப்படுத்த, தேவன் நியாயத் தீர்ப்பு செய்தார்; **இது சரித்திர நியாயத் தீர்ப்பு.** இது போல பெட்டியை தொட்டதற்கு வேறெங்கும் அவர் சாகடிக்கவில்லையே!

அவர் அன்புள்ளவர்; நீதியுள்ளவர்; அதே நேரம் வழி நடத்துகிற போதகர். ஆமென். இது கொலையல்ல; தண்டனை. கொலை தான் பாவம்; தண்டனை தருவது பாவமல்ல. நரகத்தை சிந்தியுங்கள்; அக்கினியால் உலகம் அழியப் போவதை சிந்தியுங்கள்.

❖ ❖ ❖

# பெந்தகொஸ்தே சபைகளில் - குறிப்பாக சி.பி.எம். சபையில் உள்ள தவறான உபதேசங்கள்

சிலோன் பெந்கெகொஸ்தே மிஷன் (சி.பி.எம்) என்ற பெயர் மாறி, த. பெந்தெகொஸ்தே மிஷன் என்று தற்போது அழைக்கப்படுகிறது. சென்னையிலே பெந்தெகொஸ்தே மார்க்கம் ஆரம்பமானதே இவர்கள் மூலமாய்த்தான். இந்த சபையிலிருந்து பிரிந்து வந்த பாஸ்டர். சுந்தரம், பாஸ்டர், பிரபுதாஸ், பாஸ்டர்.செல்லத்துரை, பாஸ்டர்.ஹென்றி ஜோசப் போன்றோரால் தமிழ் நாடெங்கும் பெந்தெகொஸ்தே மார்க்கம் பரவியது. தவறான உபதேசங்கள் என்பது வேறு. கள்ள உபதேசம் என்பது வேறு. கள்ள உபதேசம் உள்ள சபைகள் கிறிஸ்தவ சபைகள் அல்ல. அவைகள் வருகையில் எடுத்துக் கொள்ளப்படாது; அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலே அவைகளுக்கு முடிவு. சி.பி.எம். சபை ஒரு ஆவிக்குரிய சபை. எபி.6:1,2 ல் சொல்லப்படும் அடிப்படை உபதேசத்தில் கட்டப்பட்ட சபை. உலகிலுள்ள எல்லா ஆவிக்குரிய கிறிஸ்தவ சபைகளிலுமே 100க்கு நூறு சரியான உபதேசங்கள் இல்லை. ஒருசில தவறான உபதேசம் நிச்சயம் இருந்தே ஆகும். ஆனாலும், இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் இந்த சபைகளை ஆராய்ந்து பார்த்து புல்லுள்ள இடங்களைக் கண்டு (சங்.23:2) ஆவியானவருககு விட்டுக் கொடுத்து, உறுப்பினர்களாய் மாற வேண்டும். அப்போதுதான் பூமியிலே நூறத்தனை ஆசீர்வாதமும், மறுமையிலே நித்திய ஜீவனும் கிடைக்கும் (மாற்.10:29,30). இல்லையெனில், பூமியிலே வாழப் பிறந்த நாம், ஆளப்பிறந்த நாம் (ஆதி.1:28) கண்ணீரோடும், கவலையோடும், வியாதியோடும், வேதனையோடும், வறுமையோடும், அகால மரணமடைந்து போக வாய்ப்புண்டு. ஆனாலும் பரலோகம் போய்விடலாம்.

**இந்த சபையில் என்னைக் கவர்ந்த நல்ல உபதேசங்களில் சில:**

1. மறுபடியும் பிறந்த தேவபிள்ளைக்கு மட்டும் பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்.
2. தெய்வீக சுகம் என்பது பிள்ளைகளுக்குரிய அப்பமாகும்.
3. பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷையே.
4. மாறுபாடுள்ள சந்ததியை விட்டு வெளியே வரவேண்டும்.
5. பூரண பரிசுத்தம் ஆக வேண்டும்.
6. ஜெய ஜீவியம் வாழவேண்டும்.
7. இரகசிய வருகை உண்டு.
8. உபத்திரவ காலமும் அந்திக்கிறிஸ்து ஆட்சியும் உண்டு.

**சில வாசகர்கள் கேட்டதினால் சி.பி.எம் சபையிலுள்ள ஒருசில தவறான உபதேசங்களை தருகிறேன்.** வாசியுங்கள். சிந்தியுங்கள்.

(1) மறுபடியும் பிறக்கும் அனுபவமுள்ளவர் 1 யோ.1:8,9 ன் படி பாவ அறிக்கை பண்ணவேண்டும் என்ற உபதேசம் தவறு. வேதத்திலுள்ள 66 புத்தகங்களுமே கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டதே ஒழிய இரட்சிக்கப்படாத உலகத்தாருக்கு அல்ல. 1 யோ.1:8-10ஐ வாசித்தால் யோவான் தன்னையும் இணைத்து "நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால்" என்று எழுதுகிறார். இது இரட்சிக்கப்பட்டவர்கள் பாவம் செய்யும்போது பண்ண வேண்டிய அறிக்கையே ஒழிய, இரட்சிப்புக்குள் வரும்போது பண்ண வேண்டியது அல்ல. எந்த மனுஷனும் இரட்சிக்கப்படும் போது அதுவரைக்கும் அவன் செய்த எல்லா பாவங்களையும் ஞாபகத்தில் வைத்திருக்க முடியாது. மொத்தத்தில் யோ.16:8,9ன் படி, இயேசுவை விசுவாசிக்காத அந்த பாவத்தை அறிக்கையிட்டாலே (அப்.2:37) இயேசு இதயத்தில் இல்லாமல் இருக்கும் போது செய்த அத்தனை பாவங்களும் மன்னிக்கப்படும். ரோ.10:9,10ன் படி, பாவி என்று உணர்ந்து, "நம் எல்லாப் பாவங்களையும் அவர் சுமந்து தீர்த்த இரட்சகர், இனி நான் பாவியல்ல" என்ற பாவ மன்னிப்பின் நிச்சயத்தோடு தேவ நீதியைப் பெற்று கொண்டாலே போதும்; அப்படிப்பட்ட ஆள் மறுபடியும் பிறந்திருக்கிறான். யோ.3:5ம் வசனத்தில் சொல்லப்பட்டபடி ஜலமாகிய வசனத்தால், ஆவியானவரால் மறுபடியும் நம் ஆவியில் புதுசிருஷ்டியாய் பிறக்கும் அனுபவமே இது (எசே.36:25, 26; 2 கொரி.5:17; யோ.3:3).

(2) மறுபடியும் பிறக்கிறவர் தேவனோடும் மனுஷரோடும் ஒப்புரவாக வேண்டும் என்பதும் (2 கொரி.5:20; மத்.5:21-26) திருப்பிக் கொடுக்க

வேண்டும் என்பதும் (லூக்.19:8) தவறு. இதுவெல்லாம் இரட்சிக்கப்பட்ட பின்னே வர வேண்டிய அனுபவங்களாகும்.

(3) தெய்வீக சுகம் என்பது பிள்ளைகளுக்குரிய அப்பம் என்பது சரிதான் (மத்.15:26). ஆனால் தெய்வீக சுகம் என்று சொல்லி டாக்டர்களிடம் போக வேண்டாம்; மருந்து சாப்பிடுவது பாவம் என்றெல்லாம் போதிப்பது தவறு. அப்படி உபதேசிப்பவர்கள் கண்ணுக்கு கண்ணாடி ஏன் போடுகிறார்கள்? வெந்நீரில் ஏன் குளிக்கிறார்கள்? மின்விசிறி எதற்கு? சோப், டூத் பேஸ்ட், எல்லாம் எதற்கு? தேவ வசனமாகிய பிள்ளைக்குரிய அப்பம் இருக்கும்போது இவைகளால் வரும் நன்மைகளை எதற்கு என்று கேட்கலாமல்லவா! தேவன் உலகத்தையும் உலகத்திலுள்ளவைகளையும் படைத்ததே நமக்காகத்தான். நெல்மணியை விதைத்து பயிராக்கி, விளைவித்து, அரிசியாக்கி சமைத்து உணவாக சாப்பிடும் நாம், தேவன் தந்த உலகப் பொருள்களை எடுத்து, அவர் தரும் ஞானத்தைக் கொண்டு மாத்திரை மருந்துகள் செய்து நம் உடல் ஆரோக்கியத்திற்கு உபயோகிப்பது எப்படி தவறாகும்? நன்மையான எந்த ஈவும் அவர் தருவதுதானே (யாக்.1;17). 1 யோ.2:13, 14ன் படி, இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள், பிள்ளைகள் என்றும், வாலிபர் என்றும், பிதாக்கள் என்றும் மூன்று பிரிவுகாளய் இருக்கிறார்கள். வசன விசுவாசத்தில் பூரணராயிருக்கும் பிதாக்கள் நிலையில் இல்லாதவர்கள், மருந்து மாத்திரை சாப்பிட்டாலும் சுகம் கிடைப்பது இயேசுவின் தழும்புகளால்தான்; டாக்டர்களால் அல்ல. டாக்டர்களுக்கு ஞானத்தைக் கொடுப்பதே தேவன்தான் என்ற விசுவாசத்தோடு செயல்படுவது பாவமல்லவே. கிறிஸ்தவர்கள் எல்லாரும் பிதாக்கள் நிலைக்கு வரவேண்டும் என்பது தேவசித்தம். அதை நோக்கி நாம் நடை போடுவோம்.

(4) பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றதற்கு ஆவியானவர் தந்தருளும் வரத்தின்படியே அந்நிய பாஷை பேசுவது தான் அடையாளம் என்பது தவறு. வரம் மூலமாய் பேசும் அந்நியபாஷை வேறு; பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கான அடையாளமாகிய அந்நியபாஷை என்பது வேறு. வரம் மூலம் பேசும் பாஷை, வரமாகிய பாஷை ஆகும் (1 கொரி.12:10); நிச்சயமாய் அது உலக பாஷையாய்த்தான் இருக்க வேண்டும்; அது மற்றவர்களுக்குப் பிரயோஜனமாய் இருக்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, பரிசுத்த ஆவியைப் பெற்றேன் என்பதற்காக தற்காலத்தில் பேசப்படும் பாஷை அடையாளமாகிய பாஷை; இது வரமாகிய அந்நிய பாஷை அல்ல. ஏனெனில் வரத்தை தேவன் தம் சித்தப்படி யாருக்கு வேண்டுமானாலும் தருவார் (1 கொரி.12:11). கள்ள உபதேச சபைப் போதகரும்

வரமாகிய அந்நிய பாஷை பேசியிருக்கிறாரே (இது குறித்து "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற ஆசிரியரின் புத்தகத்திலுள்ள" அந்நிய பாஷையா அடையாளமா? என்ற செய்தியை வாசியுங்கள்)

(5) திருமணமாகாமல்தான் ஊழியம் செய்ய வேண்டும் என்று கூறுவது தவறு. அதுதான் மெல்கிசேதேக்கின் ஊழியமாம். இதற்கு ஆதாரமாய் லூக்.14:26, 27ஐ சொல்கின்றனர். இந்த வசனங்கள் எபே.4:13ல் சொல்லப்பட்ட 5 விதமான சபை ஊழியர்களுக்கு மட்டுமல்ல; சபை விசுவாசிகளாகிய சீஷர்கள் அனைவருக்கும் பொருந்தும். அக்டோபர் 2002 முழக்கத்தின் தலைப்புச் செய்தியிலேயே. சீஷர்கள் என்றால் விசுவாசிகள் என்று சொல்லிவிட்டு சீஷர்களுக்குரிய குணாதிசயங்களில் முதலாவதாக இதை எழுதியிருக்கிறேன். சீஷர்கள் எல்லோரும் திருமணம் முடிக்காமல் இருக்கவேண்டுமா? அப்படியானால் படைப்பின் காரணம் பொய்யாய்ப் போகுமே! (மல்.2:15; ஆதி.1:28) இந்த சபையார் விசுவாசிகளுக்கு திருமணம் செய்வதும், தேவன், ஆதாம் முதற்கொண்டு நமது திருமணங்களை அங்கீரிப்பதும் தவறாய்ப் போய்விடுமே! அப்படியே திருமணம் செய்தபிறகு ஊழியத்திற்கு வரும்போது கணவன்-மனைவி பிரிந்து தான் வரவேண்டுமென்றால், அது மத்.19:6ன் படி பாவமல்லவா! மனைவியைத் தான் வெறுக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதால் (லூக்.8:26) கணவனை வெறுக்க வேண்டாம் அல்லவா! அப்படியானால் கணவரோடு மண வாழ்க்கையில் இருந்து கொண்டே பெண்கள் ஊழியம் செய்யலாமா? அன்றியும் தன் ஜீவனையும் வெறுக்க வேண்டுமென்றால், ஜீவனை விட்டுவிட்டு - அதாவது மரித்து - எப்படி இயேசுவின் பின் வருவது? யாக்கோபு எப்படி லேயாளை மனைவியாக்கிக் கொண்டிருந்தும், அவளை விட அதிகமாய் ராகேல் மேல் நேசம் வைத்திருந்தானோ அப்படியே உலகத்தை விட, மனைவி, தகப்பன், தாய், வீட்டை விட (லேயாள் போல் அவைகளும் நம்முடையவைகள் தான்) தேவனையும், தேவனுடைய வார்த்தையையும் நேசிக்க வேண்டும் (ஆதி.29:30,31) என்பதுதான் அதன் பொருள். மெல்கிசேதேக்கு முறைமைக்குட்பட்டவர்கள் திருமணம் முடிக்கக் கூடாது என்று எந்த வசனம் சொல்கின்றது? எபி.9:11ஐ வாசியுங்கள். இங்கே இரண்டு முறைமைகள் சொல்லப்படுகின்றன. ஒன்று ஆரோனின் முறைமைகள் சொல்லப்படுகின்றன. அதுஎ ன்ன? லேவி கோத்திரத்தில் பிறந்தவர்தான் ஆசாரியராக வேண்டும். இரண்டாவது மெல்கிசேதேக்கின் முறைமை. அது என்ன? நியாயப்பிரமாணச் சட்டப்படி, ஆசாரியராகாமல் ஆசாரியத்துவ முறைமை இல்லாத யூதா கோத்திர இயேசு, லேவி கோத்திர மல்லாத மெல்கிசேதேக்கு ஆபிரகாம் நாட்களில் அசாரியராய் இருந்ததுபோல,

ஆசாரியரானார். ஆமென். (எபி.9:12-22). இந்த முறைமையின்படியே 1 பேது.2:9ன்படி, லேவி கோத்திரத்தில் வராத நாம், தேவனின் பிள்ளைகளானபடியால் (யோ.1;12). பிரதான ஆசாரியர் இயேசுவைப்போல் நாமும் ஆசாரியராய் இருக்கிறோம். அல்லேலூயா! கிறிஸ்து வினிமித்தம் அண்ணகர்களாக நம் இஷ்டப்படி வாழலாம் (மத்.19:12) ஆனால் அது சட்டமல்ல.

(6) கிறிஸ்து இயேசுவிலுள்ள பூரணத்தை அடைந்து கொள்வதற்கான சிலாக்கியம் புதிய ஏற்பாட்டு சபைக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது (மத்.5:48; கொலோ. 1:28) என்று சொல்வது தவறு. எபி.11:39, 40ஐ வாசியுங்கள். நாம் பூரணமான பின்பு பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் நமக்குக் கிடைத்த விசேஷித்த மேன்மையினால் விசுவாசத்தைக் கொண்டு பூரணம் அடைகிறார்கள் என்பது சத்தியமே.

(7) ஜெயங்கொண்ட விசுவாசிகள்தான் புதிய ஏற்பாட்டு சபை என்றும், அவர்களுக்குத்தான் புதிய எருசலேம் என்றும் சொல்வது சரிதான் (1 கொரி.15:23: வெளி.21:2). அனால் இவர்களல்லாமல், இரட்சிக்கப் பட்டவர்கள் என்ற ஒரு கூட்டம் இருப்பதாகவும் அவர்களுக்குத்தான் புதிய பூமி என்று சொல்வது தவறு. புதிய எருசலேமுக்கு சொந்தக்காரர்கள் அல்லாத எவரும் இரட்சிக்கப்பட்டவர்கள் என்ற கூட்டத்தில் வரமாட்டார்கள். அப்படிப் பார்த்தால் இரட்சிக்கப்பட்டு பின்மாற்றம் அடைந்தவர்கள் எல்லாருக்குமே புதிய பூமி உண்டடென்பது "இரட்சிப்பு- நித்திய ஜீவன்" என்ற வேத சத்தியத்திற்கு முரணானாதாகும். இரகசிய வருகையில் கைவிடப்பட்ட இரட்சிக்கப்பட்டவன், அந்திக் கிறிஸ்து ஆட்சியிலே இரத்த சாட்சியாய் மரித்தால் புதிய எருசலேம் நிச்சயம் உண்டு (வெளி.20:4). மற்றப்படியானவர்களுக்கு நரகம்தான் உண்டு. இயேசுவை அறியாத காலங்களில் - நிலையில் இருப்பவர்கள், கிடைத்த சத்திய வெளிச்சத்தின்படி நடந்தவர்கள், சத்தியம் அறியாதபோது மனச்சாட்சிப்படி வாழ்ந்தவர்கள், 1000 வருட அரசாட்சி முடிந்தபின் கோகே மாகே யுத்தத்தில் சேராதவர்கள். தேவனால் முன்குறிக்கப்பட்ட நினிவே பட்டணத்தார். தென்தேசத்து ராஜஸ்திரி போன்றவர்கள் நிலை என்ன? இப்படிப் பட்டவர்களுக்குத்தான் புதியபூமி, மற்றப்படி இரட்சிக்கப்பட்டு அரைகுறையாய் நின்று, ஜெயஜீவியம் செய்யாத அத்தனை கிறிஸ்தவர்களும் நரகம்தான் செல்வர். துன்மார்க்கரும், இரட்சிக்கப்படாதவரும் இவர்களும் ஒரே கூட்டமே (1 பேது.4:17).

(8) ஜெயங்கொண்ட தேவ ஊழியர் 1,44,000 பேர்தான் சீயோன் போவார்கள் என்பது தவறு. சீயோன் என்பது பிதாவின் வீடு. அந்த

வீட்டிற்குத்தானே சபையார் எல்லோரையும் கூட்டிப்போக மேகமீதில் இயேசு வருகிறார். அதுதானே இரகசிய வருகை (யோ.14:1-4; 1 தெச.4:16). அப்படியிருக்க எல்லா சபையாரும் சீயோனுக்கு போகமாட்டார்கள் என்பது தவறான உபதேசம். வேத ஊழியர், விசுவாசி ஆகியோரடங்கிய சபை புதிய எருசலேமில் இருக்கும். அது சீயோனுக்கும், புதிய பூமிக்கும் லிப்டுபோல போய்க்கொண்டு வந்துகொண்டு இருக்கும். வெளி.7 மற்றும் 14ல் சொல்லப்பட்ட 1,44,000 பேர் இஸ்ரேலர்கள். வெளி. 7ல் பூமியில் இருக்கிறார்கள். 14ல் பரலோகில் இருக்கிறார்கள். இவர்கள் 12 கோத்திரத்தார். பிதாவின் நாமம் தரிக்கப்பட்டவர்கள் (நாம் இயேசுவின் நாமம் தரித்துள்ளோம்) ஸ்திரிகளால் கறைபடாதவர்கள் என்றால் திருமணமாகாதவர்கள் என்கிறார்கள், அப்படியானால் திருமணம் செய்வது கறையா? பாவமா? விவாக மஞ்சம் பரிசுத்தமுள்ளது (எபி.13:4) என்ற வார்த்தை பொய்யா? ஸ்திரிகளால் கறைபடாதவர் என்றால் இந்த 1,44,000 பேரும் ஆண்களா? பெண்கள் சீயோனுக்குப் போக அருகதையே இல்லையா? கற்புள்ளவர்கள் இவர்களே (வெளி.14:4) என்பதற்கு Virgins (கன்னியர்) என்று ஆங்கிலத்தில் உள்ளதே; அப்படியானால் பெண்களும் இந்தக் கூட்டத்தில் உண்டல்லவா? இந்த 1,44,000 பேர் பற்றி “வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்” என்ற ஆசிரியரின் நூலை வாசித்து அறியுங்கள்.

(9) மத்.25:3, 34,41 வசனங்களை வைத்து நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கும் நீதிமான்களாகிய நாம்தான் செம்மறியாடுகள் என்றும், பாவிகள் வெள்ளாடுகள் என்றும் போதிப்பது தவறு. இந்தப் பிரிக்கும் நிகழ்ச்சி இரகசிய வருகைக்குப் பிறகு பூமிக்கு இயேசு ஒலிவமலையில் கால் வைத்து வரும் 2ம் வருகையில் நடப்பது: மகிமையுள்ள ராஜாவாய் வரும்போது நடப்பது (மத்.25:31); இரகசிய வருகையின் போது ராஜாவாய் வருவதில்லை; அப்போது தேவதூதர்கள், தேவ ஜனங்களை மத்.24:31; 25:32 ன்படி கூட்டிச் சேர்ப்பதில்லை என்பதை முதலில் அறியுங்கள். ஒலிவமலையில் இறங்கும் போதே இரட்சிக்கப்படும் இஸ்ரேலர் போக (வெளி.1:8; ரோ.11; அப்.15) மீதமுள்ள உலக மக்கள்தான் அவர்கள். இதுகுறித்து இன்னும் விளக்கமாய் பழைய முழக்கங்களில் எழுதியுள்ளேன்.

(10) நகை அணிந்தால், வெள்ளை உடை அணியாதிருந்தால், பூ வைத்தால் பரலோகம் கிடையாது என்பது தவறு. இதற்கு எந்த வசன ஆதாரமும் இல்லை. விக்கிரகங்கள் நிறைந்த நகைகளைத்தான் கழற்றி எறிய வேண்டும்; புதைக்க வேண்டும். மற்றப்படி நகையைப் போட்டு அழகு பார்க்க வேண்டும் என்பது தேவ சித்தம் (யாத்.3:22). நகையிலே உடையிலே

அலங்காரத்திலே பைத்தியமாயிராதே என்பதுதான் தேவனின் எச்சரிப்பு. சாப்பிடுவது தவறல்ல; போஜனப் பிரியனாய் இருப்பது தவறு. அதுபோலத்தான் இதுவும். நகை போன்ற அலங்காரமில்லாமல் வாழ்வது நல்லது; திருமணமின்றி வாழ்வது போல! ஆனால் அது சட்டமல்ல.

இப்படி பல காரியங்கள் சொல்லிக் கொண்டே போகலாம். மொத்தத்தில், அடிப்படைச சத்தியம் இருப்பதால் சி.எ.பி.எம். சபையில் அங்கம் வகிப்பதில் தவறில்லை; அதிலுள்ள தவறான உபதேசங்கள் இல்லாத வேறு சபை அந்தப்பகுதியில் ஏதாவது இருந்தால் அதிலே இணைந்து கொள்வது நல்லது. சிந்திப்போம்! செயல்படுவோம்!! இது கடைசி காலம்!!!

❖ ❖ ❖

# கள்ள தீர்க்கதரிசனமும் கள்ள உபதேசமும்

மத். 24:24ன்படி, தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாக அநேக கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கத்தரிசிகளும் இந்தக் கடைசிக் காலத்தில் எழும்பி இருக்கிறார்கள். இந்த இரு திறத்தாரும் இரட்டையர்கள். இன்றைக்கு எங்கு பார்த்தாலும் தீர்க்கதரிசன அலை வீசுகிறது. "என்னைப் பற்றி சொல்ல மாட்டாரா? என்னைப் பற்றிச் சொல்ல மாட்டாரா?" என்று கிறிஸ்தவன் ஓடுகின்றான். பெயர் சொல்லி அழைப்பது; டிரஸ்ஸை சொல்லி அழைப்பது; வாந்தி எடுக்க வைப்பது; ஊதியே விழத்தள்ளுவது; அந்நிய பாஷையோடே ஜோஷ்யம் சொல்வது போன்ற பல காரியங்கள் இன்று நடக்கின்றன. இவைகள் முழு இரவு ஜெபங்களிலும், உபவாசக் கூட்டங்களிலும், சுவிசேஷக் கூட்டங்களிலும் எங்கும் வியாபித்துள்ளன. பழைய ஏற்பாட்டு கால தீர்க்கதரிசிகளெல்லாம், உலகில் நடக்கப் போகும் காரியங்களை தேவ சித்தப்படி, வீதியெங்கும், வீடெங்கும், அரண்மனை முதல் ஆண்டிகள் இருக்கும் இடம் வரைக்கும் சொல்லுவார்கள். இந்த தீர்க்கதரிசனம் யோவான் ஸ்நானன் வரைக்குந்தான் உள்ளது என்று மத். 11:13 சொல்கின்றது. இப்போது, வெளியில் இருந்த இந்த தீர்க்கதரிசன ஊழியம், பரிசுத்தவான்கள், சீர்பொருந்தப் பண்ணும் பொருட்டு, தேவன் கட்டிய புதிய ஏற்பாட்டு சபைக்குள்ளேயே வந்துவிட்டது (எபே. 4:11-13). இந்த தீர்க்கதரிசன ஊழியம் புறஜாதிகளுக்கல்ல; எல்லா இடங்களிலுமல்ல; சபையாருக்கு மட்டும் சபைக்குள்ளேயே நடக்க வேண்டியதாகும். இந்த

ஊழியம் விசுவாசிகளுக்கு அடையாளமாய் இருக்கிறது என்று 1 கொரி. 14:22 சொல்கின்றது. இன்றோ இதற்கு நேர்மாறாய், மெரினா பீச்சுகளிலும், பெரியார் திடல்களிலும், மண்டபங்களிலும், TVகளிலும், ஜோஷ்யம் போல எங்கும் சொல்லப்படுகின்றது; புறஜாதிகளுக்கும் சொல்லப்படுகின்றது. இது வேதத்திற்கு முரணான காரியம். ஒரு தனி மனிதனைப் பற்றியோ, சபையைப் பற்றியோ, நாட்டைப் பற்றியோ வேதத்தில் முற்றும் முடிய எழுதப்பட்டிருக்க, இதற்கு மிஞ்சி இன்னும் என்ன சொல்லப் போகிறாய்? கேட்கப் போகிறாய்? வேதமில்லாத காலமா இது?

ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல தீர்க்கதரிசன ஊழியத்திற்கும் இரண்டு பக்கங்கள் உள்ளன. ஒன்று சபையில் செய்வது. இன்னொன்று வெளியில் செய்வது. வெளியே போய் சொல்ல வேண்டிய தீர்க்கதரிசனம் எது தெரியுமா? வெளி. 19:10ன்படி அது இயேசுவைப் பற்றிய சாட்சிகள்; அவரைப் பற்றிய தியானங்கள். மற்றப்படி தற்காலத்தில் செய்வதெல்லாம் தேவகிரியை அல்ல. எனவே கள்ள தீர்க்கதரிசிகளை பகுத்தறிய வேண்டிய காரியங்களை அறியுங்கள்.

(1) உபா. 13:1-5 வசனங்களை வாசியுங்கள். வேத வசனத்திற்கு மிஞ்சி யாரையும் நம்ப வேண்டாம்.

(2) செவி கொடுக்க வேண்டியது இயேசுவின் வார்த்தைக்கு மட்டுந்தானே ஒழிய இப்படிப்பட்ட ஜோஷ்யம் போன்ற தீர்க்கதரிசனங் களுக்கல்ல (உபா. 18:14,15).

(3) வசனப்படி இல்லாத எதுவும் பொய் (உபா. 18:20-22).

(4) ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள் தீர்க்கதரிசிகள் வடிவில் உண்டு. எச்சரிக்கை தேவை (மத். 7:15).

(5) எல்லா ஆவிகளையும் சோதித்தறியுங்கள் (1 யோ. 4:1).

(6) இவர்களெல்லாம் பாலைவனத்தில் தேடிவந்தும் காண்கிற தண்ணீரில்லா கிணறுகள்.

(7) மழையில்லா மேகங்கள் இவர்கள் (2 பேதுரு 2).

கள்ளத் தீர்க்கதரிசிகள் மட்டுமல்ல; கள்ள உபதேசக்காரர்களும் இப்படித்தான்; பாரம்பரியக் கருத்துக்களுக்குக் கீழ்க்கண்ட கள்ள உபதேசங்களை பயமின்றி வெளிப்படுத்துவார்கள்:

(1) இயேசு தேவனல்ல; சிருஷ்டிக்கப்பட்டவர்.

(2) நரகம் என்று ஒன்று இல்லை.

(3) ஆத்மா இல்லை; மரித்த உடனே எல்லாம் அழியும்.

(4) திரித்துவம் என்பது இல்லை.

(5) இயேசுதான் பிதா, இயேசு, பரிசுத்த ஆவியின் நாமம். இந்த நாமத்தில்தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்.

(6) 7ம் நாளாகிய சனிக்கிழமையை ஆசரிக்காதவர்கள் எல்லாம் அந்தி கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள்.

(7) நகையோ, பூவோ, பொட்டோ, கலர் உடையோ அணிந்தால் பரலோகம் இல்லை.

(8) குழந்தை ஞானஸ்நானம் கொடுப்பதில் தவறில்லை.

(9) முழுக்கு ஞானஸ்நானம் தேவையில்லை.

(10) இரட்சிப்பின் அனுபவம் இல்லாத சபையைச் சேர்ந்த, ஆனால் இரட்சிக்கப்பட்டு வெளியே வராத ஒருவரோடு இணைந்து ஊழியம் செய்யலாம்.

(11) இரட்சிக்கப்பட்டேன் என்ற நிலை கிறிஸ்தவனுக்கு இப்போது இல்லை.

(12) வியாதியை தேவன் தந்து அனுமதித்து சிட்சித்து புத்தி புகட்டுகிறார்.

(13) வெற்றி வாழ்க்கை இந்த பூமியில் இல்லை.

(14) திருமணமாகாமல் ஊழியம் செய்வதுதான் அப்போஸ்தல ஊழியம்.

(15) அந்நிய பாஷை, அற்புதம் என்பதெல்லாம் பொய்.

(16) தெய்வீக சுகம், தெய்வீக ஆரோக்கியம் என்பதெல்லாம் இல்லை.

(17) இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் நீதிமான்களல்ல; இன்னும் பாவிகள்தான்.

இப்படி எத்தனையோ சொல்லிக் கொண்டே போகலாம். எழுத இடமும் நேரமும் இல்லை. இப்படிப்பட்ட கள்ள உபதேசக்காரர்கள்தான் விசுவாச துரோகிகள்; அந்தி கிறிஸ்துவின் ஆவிகள் (1 யோ. 4:3; 2 தெச. 2:7); சிலுவைக்குப் பகைவர்; அவர்கள் தேவன் வயிறு (பிலி. 3:18,19); தேவ பக்தியின் வேஷதாரிகள் (2 தீமோ. 3:5). யூதா 11ன்படி இவர்கள் காயீன்கள்; பிலேயாம்கள்; கோராகுகள்; சபையிலே பக்கவழியாய் நுழைந்தவர்கள்.

**காயீன்** என்பவன் இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்பதை மறுதலிப்பவன்; அதனால்தான் பலி செலுத்தவில்லை (எபி. 11:4; ஆதி. 4:3,4). இவனுக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. தேவையான மெய்யான விசுவாசம் இல்லை; வார்த்தையை, வார்த்தையாகிய இயேசுவை மதிப்பதில்லை. இப்படிப்பட்ட காயீன்கள் சபையிலே உண்டு. இன்னும்

இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் பாவி, குப்பை, தூசி, சாம்பல், மண் என்றே தங்களை சொல்கின்றார்கள். யாரும் நீதிமானாக்கப்படவில்லை என்கிறார்கள். இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு அல்ல. கிரியைகளினாலே எல்லாரும் நீதிமான்களாகிறார்கள் என்கிறார்கள்.

**பிலேயாம்கள்** சன்மார்க்க வழியிலேயே தேவ பிள்ளைகளைப் பார்க்கிறார்கள். தாவீதையும், ஆபிரகாமையும் தேவன் அப்படியா பார்த்தார்? (அப். 13:22; கலா. 3:7). சிலுவையின் உபதேசம் பலருக்குப் புரியவில்லை (1 கொரி. 1: ). தவறான எண்ணத்தால், பணத்திற்காய் பிலேயாம் சபிக்கப் போனதுபோல, பணம், பெருமை, புகழ், பாராட்டு, கூட்டம் இவைகளுக்காய் துர்உபதேசம் பேசுபவர்கள்; செய்பவர்கள். தேவ அழைப்பை, தேவ வரத்தை வியாபாரமாக்குபவர்கள் (2 பேது. 2:15). வெள்ளைக் காகத்தைத் தேடும் கருப்பு எலியாக்கள் இவர்களே! சபிக்கப்பட்ட அந்நிய மோவாபிய ஸ்திரீகளை மணமுடிக்க இஸ்ரேலர்களைத் தூண்டி மாம்ச விபச்சாரம் செய்யவும், அந்நிய நுகப்பிணைப்பை உருவாக்கவும், உலகத்தை இணைத்து வாழவும் பாலாக்குக்கு சொல்லிக் கொடுத்த பிலேயாம் தீர்க்கதரிசி போல, தற்கால பிலேயாம்கள் ஆவிக்குரிய விபச்சாரங்களை சபைகளில் வளர்க்கிறார்கள் (எண். 31:15,16; 22:5; 23:8).

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு விரோதமாய் வார்த்தைகளைப் பேசும் **கோராகுகள்** ஏராளம்; இவர்கள் தற்கால அரசியல்வாதிகளைப் போன்றோர் (எண். 16). இவர்கள் பார்வையில், “படாடோபம் மற்றும் பத்திரிகைகளில் பெயர், பல்லாயிர மக்கள் மத்தியில் பிரசங்கம், ஊரிலே உலக சபையிலே பெரியவர்” போன்றவைதான் தேவனால் தெரிந்து கொண்டவர்களுக்கு உண்டான இலக்கணம். எலியாவைப் போல 7000 பேரை தேவன் வைத்திருக்கிறார் என்பதை அறியாதவர்கள் இவர்கள்.

இப்படிப்பட்ட கள்ள தீர்க்கதரிசிகளையும், கள்ள உபதேசக்காரர் களையும் இனம் கண்டு கொள்வது எப்படி? கீழ்க்கண்டவைகளை வைத்துக் கொண்டு கண்டு கொள்ளலாம்.

(1) இயேசுவைப் பற்றிய அவர்கள் அறிக்கை

(2) வேத வார்த்தைப்படி அவர்களின் நிலை (2 கொரி. 4:4; 2 தீமோ. 3:16; 1 யோ. 5:10).

(3) தேவனுடைய கட்டளைகளின்மேல் அவர்களுக்குள்ள எண்ணம் (யோ. 14:15; 1 யோ. 3:20-24).

(4) உலகத்தோடு அவர்களுக்குள்ள தொடர்பு (யாக். 4:4: 1 யோ. 2:15-17).

(5) கிறிஸ்துவத்தை அவர்கள் பெற்றுக் கொண்ட முறை.

(6) சகோதரர்களோடு அவர்களுக்குள்ள அன்பு (யோ. 3:34,35; 15:12-15).

(7) அவர்களுக்குள் இருக்கும் ஆவி (1 யோ. 4:4-6).

(8) அவர்கள் சார்ந்திருக்கும் சபை.

(9) அவர்களைப் பற்றிய உலக சாட்சி.

இப்படியாய் உள்ள இன்னும் பல காரியங்களை வைத்து அவர்களைக் கண்டு கொள்ளலாம். இதுபோன்ற இலக்கணங்களை வைத்துக் கண்டுகொள்ள சிரமப்படாதபடிக்கு ஆரம்பத்திலேயே அவர்களை விட்டு விலகு. இப்படிப்பட்டவர்கள் தொற்று நோயாளிகள் (Infections). இவர்கள் நீதிமான்களின் சபையில் நிலைத்திருப்பதில்லை (சங். 1). இப்படியாய் இவர்களை கண்டுகொள்ள சிரமப்பட்டு அலையாதபடி, உன்னை நீயே காத்துக்கொள். வசனத்தை நம்பி வாழ்! வேறு எதையுமே நம்பி வாழாதே! நம்பி ஓடாதே! வெற்றி உனதே! வசனத்தை நம்பி நீயும் வா!

❖ ❖ ❖

# அந்திகிறிஸ்துவின் ஆவி இப்பொழுதே கிரியை செய்கிறது

முதலாம் நூற்றாண்டிலேயே உலகில் இருக்கிறது என்று யோவானால் சொல்லப்பட்ட (1 யோ. 2:3) அந்திகிறிஸ்துவின் ஆவி இப்பொழுதே கிரியை செய்கிறது. இயேசுவாகிய வார்த்தையை விசுவாசிக்காமல், அதற்கு எதிராக போதகம் செய்யும் மோசமான ஆவி அது. அன்புச் சகோதரர் ஏ.வி. ராயன், தூத்துக்குடி அவர்கள் அனுப்பி வைத்த விவிலியக் கல்வித் தாள்களைப் படித்த உடனேயே இந்த ஆவியின் கிரியை மிகவும் அதிகமாய் இருப்பதை உணர்ந்தேன். இந்தத் தாள்களை வெளியிடுவோர் புனித பவுல் விவிலியக் கல்வி நிலையம், பூந்தமல்லி, சென்னை. இது ரோமன் கத்தோலிக்கரின் ஸ்தாபனம். இதிலே மோசே எழுதிய ஐந்து ஆகமங்களை தங்களின் அறிவுக்கு ஏற்றபடி சிந்தித்து, மிகவும் மோசமாய் எழுதி இருக்கிறார்கள். தேவஞானம் இல்லாத இப்படிப்பட்ட வெளியீடுகள், "வானமும் பூமியும் ஒழிந்து போகும்; தேவனுடைய வார்த்தைகளோ ஒழிந்து போகாது" என்ற தேவ வார்த்தைக்கு விரோதமானவை; மறுதலிப்பவை. கிறிஸ்தவ சபை என்ற போர்வையில்

செய்யும் தேவதுரோகம் இது. ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள் என்று வேதம் சொல்வது இப்படிப்பட்டவர்களைத்தான். இந்த விவிலியக் கல்வித் தாள்களில் போடப்பட்ட ஒரு சிலவற்றை மட்டும் காண்போம்.

## பவுல் விவிலிய நிலையத்தாரின் கருத்து

(1) நியாயப் பிரமாணங்களடங்கிய 5 ஆகமங்களையும் மோசே கி.மு. 1300ல் எழுதவில்லை. கி.மு. 600ல் வேறொரு நபர் எழுதி உள்ளார்.

(2) தேவனே மெசபதோமியாவிலிருந்து பாலஸ்தீனா போகும்படி ஆபிரகாமுக்கு அழைப்பு கொடுக்கவில்லை. அவனே தன் தந்தையோடு மேய்ச்சலுக்கு வசதியான கானானுக்குப் புறப்பட்டான்.

(3) ஆப்பிரிக்க மலைப் பிரதேசத்தில் அவ்வப்போது மழை பெய்வதால் புது வெள்ளம் நைல் நதியில் கலங்கித் தோன்றும். எகிப்தியர் அதை சிவப்பு நைல் நதி என்பர். இந்தப் பின்னணியில்தான் மோசே கோலால் அடிக்க நைல் நதி மற்றும் எகிப்தின் நீர்நிலைகள் முழுவதும் இரத்தமாயிற்று என்று எழுதப்பட்டதே ஒழிய தேவனின் வல்லமையினால் அல்ல.

(4) மோசே தலைமையில் ஒட்டு மொத்தமாக இஸ்ரேலர் எகிப்தை விட்டு வெளிவரவில்லை. மோசே, ஆரோன், யோசுவா, மீரியாம் போன்ற வெவ்வேறு தலைவர்களின் கீழ் சிறுசிறு கூட்டங்களாக வெளியேறி பயணம் செய்தனர்.

(5) ஆசிய ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்யும் பறவைகள் நீண்ட தூரப் பயணக் களைப்பால் இளைப்பாறுதல் வாடிக்கை. இதைத்தான் கடவுள் கொடுத்த காடை என்று மோசே எழுதியுள்ளார்.

(6) பாலைவன தென்புறம் உள்ள மன்னா என்ற மரங்களிலிருந்து ஒருவித பிசின், ஒரு சிறு கூட்டம் உண்ணுமளவுக்கு ஜூலை, ஆகஸ்ட்டில் வெளிவரும். இஸ்ரேலர் சிறுசிறு கூட்டமாய்ப் போகும்போது இதைத்தான் சாப்பிட்டனர். இதையே வானிலிருந்து வந்தது என எழுதப்பட்டுள்ளது.

(7) இயற்கையாகவே சீனாய் பாலைவனப் பகுதியில் மலை இடுக்குகளில் தண்ணீர் வழிகிறது. மேய்க்கிறவர்கள் தாகம் தீர்க்கின்றனர். இதை வைத்தே கர்த்தர் கொடுத்தார் தண்ணீரை என்று மிகைப்படுத்தி எழுதப்பட்டுள்ளது.

(8) வரலாற்று ஆராய்ச்சிப்படி கானானில்தான் இஸ்ரேலர் சிலை வழிபாடு செய்தனர். இதைக் கண்டித்தே உடன்படிக்கைப் பெட்டியும், கூடாரமும் உண்டாக்கப்பட்டது. பிற்காலத்தில் நடந்ததை முன்பே கன்று செய்து வழிபட்டதாக மோசே எழுதி உள்ளார்.

## மேலே உள்ள ஒவ்வொரு கருத்துக்கும் வேதம் என்ன சொல்கின்றது?

(1) யாத். 17:14; 24:4; 25:16; 34:27-28; எண். 33:2; உபா. 31:9; 9:24; மாற். 10:5; 12:19; யோ. 5:46; 7:19 போன்ற பல வசனங்களால் மோசே எழுதினார் என உறுதியாகிறது.

(2) அப். 7:2,3; ஆதி. 15:7; 12:1 போன்ற பல வசனங்கள் தேவன்தான் அழைத்தார் என்று உறுதிப்படுத்துகிறது.

(3) தேவனின் வல்லமையால்தான் மோசே இந்த அற்புதத்தை செய்தான் என்று யாத். 7:19-21; சங். 105:29; 78:44 போன்ற வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

(4) மோசே தலைமையில்தான் ஒரே நாளில் வெளியேறினர் என யாத். 12:31-37; எண். 1:46; 11:21ன்படி அறியலாம்.

(5) எண். 11:31; யாத். 16:13; சங். 78:26-28; 105:40 வாசித்தால் ஆண்டவரிடமிருந்து புறப்பட்டுச் சென்ற காற்றுதான் காடைகளை கொண்டு வந்தது என அறியலாம். இது தேவனின் அற்புதம்.

(6) யாத். 16:4; 35:14,15; எண். 11:7,9; நெகே. 9:15-21; சங். 78:24; 105:40; யோ. 6:31ன்படி தேவனே வானிலிருந்து அப்பத்தை 40 ஆண்டுகளாகப் பொழிந்தார் என அறியலாம்.

(7) தேவன் செய்த அற்புதத்தால்தான் பாறையை இருமுறை அடித்தும் தண்ணீர் வந்தது. See யாத். 17:6; எண். 20:7,11; நெகே. 9:15; ஏசா. 48:21; சங். 78:15, 16; 105:41.

(8) யாத். 32:1-11ல் தான் கன்று வழிபாடு. ஆனால் அதற்கு முன்பே உடன்படிக்கைப் பெட்டியெல்லாம் சொல்லப்பட்டாயிற்று. யாத். 25:8,9,10,22.

வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியால் எழுதப்பட்டிருக்கும் போது (2 தீமோ. 3:16) மோசே தன் விருப்பப்படி, அந்த காலக்கட்ட புராணப்படி நிகழ்ச்சிகளை எழுதியிருக்கிறார் என்று சொன்னால் அது ஆவியாகிய தேவனுக்கு விரோதமான காரியமாகும். ஐந்து ஆகமங்களையும் மோசே எழுதவில்லை என்று சொல்லிவிட்டு, பின்னாலே மோசே தன் கருத்துப்படி

எழுதியிருக்கிறான் என்று சொல்வது பெரிதும் முரணான ஒன்று. வெளி. 22:18, 19ன்படி வேத வசனங்களிலிருந்து எதையாவது கூட்டினாலோ, குறைத்தாலோ தேவ கோபம் மெய்யாகவே வந்து சேரும். எனவே இப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபடும் அந்தி கிறிஸ்துவின் ஆவிகள் யாரென்று கண்டு அவர்களை விட்டு விலகுவோம். வேத வசனங்களை வாசிக்கிறவர்களாயும், கேட்கிறவர்களாயும், அவைகளைக் கைக்கொள்ளு கிறவர்களாயுமிருந்து, மாறுபாடுள்ள சந்ததியை விட்டு விலகி நம்மை இரட்சித்துக் கொள்வோம் (வெளி. 1:3; அப். 2:40).

❖ ❖ ❖

# கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்

## அத்தியாயம் - 1

**(1) திரித்துவம் (Trinity) என்றோ, திரியேகம் (Triune) என்றோ வேதம் சொல்லவில்லை. அப்படி வசனமே இல்லை.**

★ நேரிடையாக "திரித்துவம்" என்ற வார்த்தை இல்லையென்பதால், அது பொய்யாகுமா? ஜெபமே ஜெயம் என்று வேதவசனம் இருக்கிறதா? இல்லையென்பதால் அது பொய்யா? முழுக்கு ஞானஸ்நானம், இரகசிய வருகை, ஆதி அப்போஸ்தலர்கள் திருவிருந்தில் அப்பமும் ரசமும் சாப்பிட்டார்கள் என்றெல்லாம் வசனம் நேரிடையாய் வேதத்தில் இல்லை என்பதால் அவைகள் பொய்யா? வேதத்தில் வரும் தேவன் - God - ஏலோகிம் (Heb) என்பதன் பொருள் more than two- அதாவது இரண்டுக்கும் மேற்பட்டதைக் குறிக்கும். உபா.6:4 ஐ வாசித்தால் ஒருமையில் பன்மையை உணரலாம். யோர்தானில் இயேசு, வேறொரு தேற்றரவாளனான பரிசுத்த ஆவியானவர் ஆகியோரைப் பார்க்கிறோம். 1 யோ. 5:7ல், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்று உள்ளது. பரிசுத்த ஆவியானவரால் நிறைந்த நிலையில், ஸ்தேவான், இயேசுவையும், அருகில் பிதாவாகிய தேவனையும் காண்பதாக அப்.7:55, 56 சொல்கின்றது. மட்டுமல்ல ஒரே தேவன் இரு ஆட்தத்துவமாய் இருக்கிறார் என்று சங்.2:7; 110:1; யோ 14:23; 8:17, 18 சொல்கின்றது. மொத்தத்தில், ஒரே தேவனுக்கு, வார்த்தை (word), ஆவி (Spirit) போன்ற பல உண்டு. அந்த ஒரே தேவனை பிதா என்றும், அவரின்

வார்த்தை குமாரனாய் மனித இயேசுவாய் ஆனது என்னும், அவரது ஆவி, பரிசுத்த ஆவியானவராய் செயல்பட்டது என்றும் உணரலாம். சூரியனிலிருந்து ஒளியும், வெப்பமும் வெளிப்படுவது போல. ஆமென்.

**(2) 1 யோ. 5:7, அடைப்புக்குறிக்குள் இருப்பதால், மூலபாதையில் அது இல்லை.**

★ மூலபாஷையில் இல்லை என்றால், ஏன் உன் பைபிளில் வைத்திருக்கிறாய்? ஆங்கில பைபிளில் அடைப்புக் குறி இல்லையே ஏன்? அடைப்புக் குறிக்குள் போட்டதன் அர்த்தம், இந்த வசனம், ஒரு சில manuscript ல் இல்லை என்று பொருள். அதனால் original லேயே இல்லை என்று எப்படி சொல்ல முடியும்? கார்த்தேஜின் பிஷப், சிப்ரியன் என்வர் (கிபி 200-258) இந்த வசனம் யோவானால் எழுதப்பட்டதுதான் என்று, Ante fathers, என்ற தனது நூலில் vol.V, 418, 423 ல் சொல்லியிருக்கிறார். 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த vigilius of Thapsus என்பவர் இந்த வசனத்தை மேற்கோள் காட்டுகிறார். The codex montfortii மற்றும் vulgateலும் இந்த வசனம் உள்ளது.

**(3) யோ.14:7,9 போன்ற வசனங்களின் படி இயேசுதான் பிதா; இயேசுதான் ஆவியானவர், இயேசு மட்டுமே தேவன்.**

★ அப்படியானால் "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை; பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" (யோ. 1:18).

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோ.14:16),

"என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான்:" (யோ.120:45),

"ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் என் வசனத்தைக் கைக்கொள்வான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" (யோ.14:23, 24).

"ஒன்றான மெய்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோ.17:3).

"நான் என்னைக்குறித்து சாட்சி கொடுக்கிறவனாயிருக்கிறேன். பிதாவும் என்னைக்குறித்து சாட்சி கொடுக்கிறார்" (யோ.8:17, 18)

"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல, அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன்" (யோ.17:21, 22) போன்ற பல வசனங்களின்படி இயேசு வேறு, பிதா வேறு என்று அறிகிறோம்.

மேலும், "நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது, என்றென்றைக்கும் உங்களுடனே இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றாவாளனை அவர் உங்களுக்குத் தந்தருள்வார்" (யோ.14:16).

"பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்து சாட்சி கொடுப்பார்" (யோ.15:26).

"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவது .... எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப்.1:8) போன்ற பல வசனங்களின்படி, இயேசு வேறு, பிதா வேறு, பரிசுத்த ஆவி வேறு என்று அறியலாம்.

**(4) ஏசா.9:6ல், நித்திய பிதா என்று இயேசுவைச் சொல்வதால், இயேசு பிதாதானே?**

★ நித்திய பிதா என்பது இயேசுவுக்கான குணாதிசயம்; குணாதிசயத்தால் வந்த காரணப் பெயர் இது. எபி.1:2ன்படி இவர் சகலத்தையும் படைத்த கர்த்தர். எனவே, நித்தியத்தின் பிதா - நித்தியத்தின் மூலம் - Father of eternity என்றும், காலகாலங்களையே நிர்மாணித்தவர் என்பதால், planner of Ages என்ற அர்த்தத்தில், Father of all time - எல்லா காலங்களுக்கும் முன்னவர் - மூலகர் என்றும் சொல்லாம். மற்றப்படி, பிதா என்ற தேவனை குறிக்கின்றது என்று சொன்னால், இயேசுவேறு, பிதாவேறு என்று மேலே சொன்ன வசனங்கள் பொய்யாகிவரும். இயேசுவான வார்த்தையும், ஆவியானவரான ஆவியும் பிதாவான தேவனுக்குள் தேவனின் அங்கங்கள்.

**(5) "......... பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானவர்" (1 கொரி. 15:45) என்று உள்ளதால், இயேசு மரித்து உயிர்த்தெழுந்து, அவரே ஆவியானவராய் செயல்பட்டார். அதனால்தான் மத். 28:20ல் பூமியின் கடைசிபரியந்தம் உன்னோடு இருப்பேன் என்றார்.**

★ தவறு. அப்படியானால் இயேசுவேறு, ஆவியானவர் வேறு என்று மேலே சொன்ன வசனங்கள் பொய்யாகிவிடும்? இந்த வசனத்தை நன்கு வாசியுங்கள். 1 பேது. 3:18ன் படி, பிந்தின ஆதாமாகிய இயேசு, மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்ட நிலையில் ஆவியாயிருக்கிற தேவதூதர்கள்தான் அவரை கண்டிருக்கிறார்கள் (1 தீமோ.3:16). உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியாய் ஆனவர், மனிதர்களை உயிர்ப்பிக்கிறவராய் இருக்கிறார். Life giving spirit ஆக - தேவநிலையில் இருக்கிறார் என்று பவுல் கூறுகிறார். அவரது வசனமே நம்மை உயிர்ப்பிக்கிறது; புதுசிருஷ்டியாக்குகிறது (1 பேது.1:23; யோ.3:5; 5:21). அந்த வார்த்தை யோ. 15:7ன்படி நமக்குள் பூமியின் கடைசி பரியந்தம் இருக்க வேண்டும். அந்த வார்த்தையின் மனுஷ உருவம்தான் பரலோகில் நமக்காய் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறது (1 யோ. 2:1,2). உயிர்த்த இயேசு, பரிசுத்த ஆவியானவராய் ஆகவில்லை; அப்படி ஆகியிருந்தால் உயிர்த்தபின் 40 நாளும் அவர் யாராய் காட்சி தந்தார்? 50வது நாள் அவர் யாரை அனுப்பினார்? சிந்தியுங்கள் (மாறுவேடம் போடுபவர் நம் தேவன் அல்ல; அப்படிப்போடவும் அவசியமில்லை)

**(6) "நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோ.5:43) "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன்..." (யோ.14:26) போன்ற வசனங்களின்படி பிதாவின் நாமமும், பரிசுத்த ஆவியானவரின் நாமமும் இயேசுதான்.**

★ முதலில் நாமம் என்றால் என்ன என்று புரிய வேண்டும். நாமம் என்றால் பெயரைத்தான் குறிக்கிறதா? 1 சாமு. 17:45ல் தாவீது, கோலியாத்திடம்,

".... நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய ராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்" என்றானே, அவன் கொண்டிருக்கும் "தாவீது" என்ற பெயர் தான் நம் தேவனின் நாமமா? சிந்தியுங்கள்! 2 நாளா. 7:14ல் என் நாமம் தரித்த ஜனங்கள்.... என்று இருப்பதால், நம்முடைய பெயர்கள் எல்லாம் தேவனுடைய பெயரா?

எரே.14:9ல் "உம்முடைய நாமம் எங்களுக்கு தரிப்பிக்கப்பட்டு மிருக்கிறதே...." என்று உள்ளதே, நம்முடைய பெயர்களெல்லாம் தேவனுடைய பெயர்களா?

"அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்கு தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள்" என்று உபா. 28:10ல் உள்ளதே, அப்படியானால் இஸ்ரேலர் எல்லாருக்கும் கர்த்தரின் நாமந்தான் தரிக்கப்பட்டிருக்கிறதா? சிந்தியுங்கள்.

மட்டுமல்ல.... "என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்து சாட்சி கொடுக்கிறது" என்று இயேசு சொல்கிறாரே (யோ:25), கள்ள உபதேசக்காரர்கள் சொல்லுகிறபடி பிதாவின் நாமமாகிய இயேசு என்ற பெயரைச் சொல்லி, அற்புதம் அடையாளம் செய்தாரா? அல்லது பிதாவின் வேறே எந்தப் பெயரையாவது சொல்லி செய்தாரா? இல்லையே! அப்படியானால் பிதாவின் நாமத்தில் செய்வது என்பது, பெயரைக் குறிப்பிடவில்லை என்றும், **பிதாவின் வல்லமையில், அதிகாரத்தில் மகிமையில் மாட்சிமையில் செய்யப்பட்டதைத்தான் குறிப்பிடப்படுகின்றது என்றும் அறிக!**

இந்த அடிப்படை உண்மையோடு யோ.5:43 மற்றும் 14:26ஐ வாசித்தால் நாமம் என்பது பெயரல்ல என்று புரியும். மேலும், **நமது ஒரே தேவனான பிதாவுக்கு நம்மைப்போல பெயரே (Name) இல்லையென்றும்,** வார்த்தை மாம்ச மனிதனாய் வந்தால்தான், இயேசு என்ற பெயர் வைக்கப்பட்டது என்றும், பிதாவிடமிருந்து வந்த பரிசுத்த ஆவியானவர் போல வேறு ஒருவரும் இல்லையென்பதால் அவருக்கும் பெயரே இல்லையென்றும், இந்த மூன்று personalityக்கும் காரணப் பெயர்கள்தான் உண்டு என்றும் முதலில் அறிக!

**(7) இயேசுவின் நாமத்தில்தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். ஆதி அப்போஸ்தலர்கள் அப்படித்தான் கொடுத்தார்கள் (see அப்.2:38)**

★ ஞானஸ்நானம், பிதா - குமாரன் - பரிசத்த ஆவியின் நாமத்தினாலேதான் கொடுக்க வேண்டும் என்பது இயேசுவின் கட்டளை (மத்.28:18-20). இங்கு "நாமங்களினாலே" என்று சொல்லாமல் "நாமத்தினாலே" என்று சொல்லப்பட்டு இருப்பதால், இங்கே பெயர்களைக் கூறவில்லை (அவர்களுக்குத்தான் பெயரே இல்லையே!) எனவே திரித்துவமாய் செயல்படும் ஏக தேவனின் அதிகாரத்தினால், வல்லமையினால், மகிமையினால் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்.

அப்.2:38ல், "இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று பெறுகின்ற விசுவாசிகளுக்குத்தான் சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய, கொடுப்பதைப் பற்றி பேதுரு சொல்லவில்லை. இரட்சிக்கப்பட்டவன் - பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று நீதிமானாக்கப்பட்டவன், இயேசுவின் நாமத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் கழுவப்பட்டிருக்கிறான் (1 கொரி.6:11; கலா.3:27; யோ.3:5). இயேசுவின் நாமம் தரித்து, ஞானஸ்நானத் தொட்டியின்முன் விசுவாசி நிற்கவேண்டும்; பாஸ்டர், பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே, இயேசுவின் கட்டளைப்படி ஞானஸ்நானம் கொடுப்பார் (இங்கும் நாமம் என்பது பெயர் மட்டுமல்ல என்பதை முந்தி அறிக). இதுதான் நியதி ஒழுங்கு; இதைவிட்டுவிட்டு ஞானஸ்நானம் கொடுப்பவர், பெறுபவர் செய்ய வேண்டியதை செய்யக்கூடாது. அவரவர் அவரவருக்கு சொல்லப்பட்டபடி செயல்பட வேண்டும். இயேசுவின் நாமம் தரித்தால்தான், "இவன் என்னுடைய நேசகுமாரன்" என்று சர்டிபிகேட் தேவனிடமிருந்து கிடைக்கும். அன்றைக்கு யோர்தான் நதிக்கரையில் இயேசுவுக்கு வந்த சத்தம் இது தானே அல்லேலூயா!

**ஆதி அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் கொடுத்த ஒரு சில இடங்களைப் பார்க்கலாம்.** பிலிப்பு பட்டணத்தில் லீதியாளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது (அப்.16:15). எப்படி எந்த நாமத்தில் என்றெல்லாம் சொல்லப்பட இல்லையே! நாமும் அப்படியே கொடுக்கலாமா? சிறைச்சாலைக்காரனுக்கு பவுல் எப்படி, எந்த நாமத்தில் கொடுத்தான் என்று சொல்லப்படவில்லையே! (அப்.16:33). எபேசு மக்களுக்கு பவுல் ஞானஸ்நானம் கொடுத்தது எந்த நாமத்தில் என்று எழுதப்படவில்லையே, நாமும் நம் விருப்பப்படி கொடுக்கலாமா? அல்லது இயேசுவின் கட்டளைப்படி செய்யலாமா? சிந்தியுங்கள். கொர்நேலியு வீட்டிலே, பேதுரு, "கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான்" (அப்.10:48). தமிழ் மொழிபெயர்ப்பின்படி பார்த்தால், பேதுரு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை என்றும், வேறு யாரையோ கொடுக்க கட்டளையிட்டார் என்றும் தெரிகிறது. (அங்கே வேறே அப்போஸ்தலர்கள் இல்லை; யோப்பா பட்டண சகோதரர்தான் இருந்தனர் - அப்.10:23) அப்படிப் பார்த்தால்கூட, கர்த்தர் என்றால், யேகோவா, LORD என்று பொருள். அவருக்குப் பெயருண்டா? தேவையா? இல்லையே! வேதத்தின்படி பிதாவும் கர்த்தர்; குமாரனும்

கர்த்தர்; ஆவியானவரும் கர்த்தர்தான் (2 கொரி.3:17). கர்த்தரின் நாமத்தில் என்றால், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் கொடுப்பது என்றுதான் அர்த்தம். மேலும், ஆங்கில மொழி பெயர்ப்பில், "Peter commanded them to be baptised in the name of the Lord" என்று உள்ளது. எனவே, பேதுரு கட்டளையிட்டது ஞானஸ்நானம் கொடுக்கச் சொல்லி அல்ல என்றும், ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளத்தான் என்றும் அறிந்தால், அப்.2:38ல் அவர் சொன்ன அதேபோல, இயேசுவின் நாமம் தரித்து (அதாவது அதிகாரம், வல்லமை, மகிமை, மாட்சிமைத் தரித்து) பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது புரியும்.

ஆக கொடுக்கிற போதகர் இயேசுவின் உபதேசப்படி (மத்.28:18-20) கொடுக்க வேண்டும்; பெறுகிறவர் இயேசுவின் நாமம் தரித்து - இயேசுவின் நாமத்தினாலே (அப்.2:38) பேதுரு சொன்னபடி பெறவேண்டும். பெறுகிறவரின் செயலை, கொடுக்கிறவர் எடுத்துக்கொண்டால் அது வசன விரோதமாகும்.

**(8) தேவதூதர்கள் பெண்களோடு உடலுறவு கொள்ளும்; குழந்தைகளும் பிறக்கும் (ஆதி.6:1,2) இப்படிப் பிறந்தவர்கள்தான் இராட்சதர்கள். அப்படியாய் சாத்தானால் ஏவாளுக்குப் பிறந்தவன்தான் காயீன் (1 யோ.3;12). விலக்கப்பட்ட கனியைப் புசித்தாள் என்பது இதுதான்.**

★ ஆதி.6:1,2 ல் தேவதூதர்கள் (Angels) என்றே இல்லை; தேவபுத்திரர்கள் (sons of God) என்றுதான் உள்ளது. தேவபுத்திரர்கள் என்றால், நம்மைப்போல தேவனை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் என்று பொருள் (யோ.1:12; ரோ.8:14). இவர்கள் உலகப் பிரகாரமான மனுஷகுமாரத்திகளோடு திருமணம் செய்து பிள்ளைகளைப் பெற்றார்கள் என்றுதான் சொல்லப்பட்டுள்ளது. இப்படிப்பட்டதான அந்நிய நுகப்பிணைப்பு என்றுமே தேவனுக்குப் பிடிக்காத ஒன்று (See 2 கொரி.6:14-18)

தேவதூதர்கள் என்பவர்கள் ஆணுமில்லை; பெண்ணுமில்லை; அவர்களுக்கு கொள்வினையும் இல்லை. கொடுப்பினையும் இல்லை; பலுகிப் பெருக அவர்களுக்கு அதிகாரமில்லை; அவர்கள் ஆவியாயிருக்கிறார்கள் (மத்.22:30; ஆதி.1:28). ஆவியாய் தேவனின் சாயலிலும் ரூபத்திலும் படைக்கப்பட்ட ஆதாமும் ஏவாளும் (ஆதி.1:26) பலுகிப் பெருக வேண்டுமானால் சரீரம் தேவை

என்றுதானே சரீரம் தந்தார். சரீரமே இல்லாத Embodied spirits எப்படி சரீரத்தோடு உடலுறவு கொள்ளும்? சிந்தியுங்கள். அப்படியானால், குழந்தையில்லாத பெண்கள், இப்படிப்பட்ட தேவதூதர்களுடன் உடலுறவு கொண்டு பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளலாமே!

மேலும், ஆதி.6:4ஐ வாசித்தால், இராட்சதர்கள் தேவதூதர்களுக்கும் பெண்களுக்கும் பிறந்தவர்கள் அல்ல என்றும், அந்நிய நுகப்பிணைப்பில் பிறந்த பிள்ளைகளும், இராட்சதர் போல பலவான்களாய் இருந்தார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மருத்துவ விஞ்ஞானப்படி, ஆண் - பெண்ணின் ஜீன்ஸ் மற்றும் பரம்பரை இவைகளைப் பொறுத்து, ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறந்து, சற்று விகாரமாய், விநோதமாய் காணப்படுபவர்கள்தான் இராட்சதர்கள். கோலியாத்தும் இராட்சதன்தான்.

ஆக, ஆவியாயிருக்கிற சாத்தான், மகிமையிலிருக்கும் சரீரமுடைய ஏவாளோடு உடலுறவு கொள்ள முடியாது என்று அறிகிறோம்.இப்படி கர்ப்பமாகி பிறந்தவன் காயீன் என்றும், இதுதான் விலக்கப்பட்ட கனியைப் புசித்தது என்றால் எப்படி நம்புவது? ஆதி.4:1 ஐ வாசித்தால் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பிறந்தவன்தான் காயீன் என்று அறிகிறோம். 1 யோ.3:12ஐ வைத்து, காயீன் பிசாசினால் உண்டானவன் என்று சொன்னால், யோ.8:44ல், யூதர்களைப் பார்த்து, "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள்" என்று சொன்னதால், அந்த யூதர்கள் எல்லாரும், மனுஷீக அப்பாக்களுக்குப் பிறக்காமல், பிசாசுக்கு பிறந்தவர்களா? சிந்தியுங்கள். தேவ வசனத்திற்கு செவிகொடாதவர்கள் எல்லோரும், மறுபடியும் பரிசுத்த ஆவியினால் பிறவாதவன் (யோ.3:3,5), பிசாசினால் பிறந்திருக்கிறார்கள். இது மனுஷீகப் பிறப்பல்ல; ஆவிக்குரிய பிறப்பு. இப்படிப்பட்ட பிறவியை உடையவன் காயீன் என்றுதான் 1 யோ.3:12 சொல்கின்றது.

**(9) நித்திய நரகம் ( Eternal Hell) என்பது இல்லை. கோகே மாகே யுத்தத்தின்போது அக்கினியால் இந்த உலகை அழிப்பாரே அதுதான் நரகம் (2 பேது.3:7; வெளி.20:9; மல்.4:1)**

★ 2 பேது.3:6,7 ன்படி ஜலப்பிரளயத்தால் அழிப்பதும், அக்கினியால் அழிப்பதும் கொஞ்ச நேரம்தான். கோகேமாகே யுத்தத்தின்போது அக்கினி வந்து அழிப்பதும் கொஞ்ச நேரம். அதன் பிறகுதான் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு என்றும், அதில்தான் பிசாசும் அவன் தூதர்களும், ஜீவபுஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டவனாகக்

காணப்படாத பாவியும் நித்திய நரகத்திற்கு போவானென்று வெளி.20:10-15 விவரிக்கிறது. மத்.25:41ன்படி நரகம் பிசாசுக்காகவும் அவனது தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியாகும். இதிலே, 1000 வருட ஆட்சிக்குமுன், அர்மகதோன் பள்ளத்தாக்கிலே பிடிப்பட்ட அந்திகிறிஸ்துவும், கள்ள தீர்க்கதரிசியும் உயிரோடே தள்ளப்பட்டார்கள் (வெளி.19:20). அதன்பின் 1000 வருட ஆட்சி மற்றும் கோகேமாகேயுத்தம் முடிந்து, பிசாசும் அதே நரகத்திற்கு தள்ளப்படும்போது, 1000 வருடத்திற்கு முன் தள்ளப்பட்ட அந்திகிறிஸ்துவும், கள்ள கிறிஸ்துவும் அக்கினியில் வாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வெளி.20:10ல் வாசிக்கும்போது, நரகம் நித்தியம் என்பது புரிகிறதா? மட்டுமல்ல.... சதாகாலம் - நித்தியமாய் - Eternal என்ற வார்த்தைகள் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலாகிய நரகத்திற்கு சொல்லும் போது, எபிரேய பாஷையில், "OLAM" என்றும், கிரேக்க பாஷையில் "AIONOIOS" என்றும் உள்ளதால், இது நித்தியம் என்றே அறிகிறோம். மேலும், மத்.25:46ல், நித்திய ஜீவன், நித்திய ஆக்கினை என்று இருப்பதால், பரலோக ஜீவன் நித்தியம் என்றால், நரக ஆக்கினையும் நித்தியம்தானே!

**(10) மத்.5:44ல் எல்லோர் மேலும் மழை பெய்வது போல, யோவே. 2:28, 29ன் படி, எல்லோர் மேலும் பரிசுத்த ,ஆவி ஊற்றப்படும்.**

★ இது தவறு. மத்தேயுவையும், யோவேலையும் இணைப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. "மாம்சமான யாவர் மேலும் ஊற்றுவேன்" என்றால், பைத்தியக்காரன், Baby, இரட்சிக்கப்படாதவன், சிறுவர் போன்ற எல்லோர் மேலும் ஊற்றப்படுமா? வசனத்தை வாசித்தால், குமாரர், குமாரத்திகள், மூப்பர், ஊழியக்காரர், ஊழியக்காரிகள் மேல் என்று இருக்கிறது. அதுவும் "உங்கள்....." என்று உள்ளது. எல்லா மனிதர் மேலுமல்ல. இரட்சிக்கப்படாத பாவிக்கு இயேசு ஒரு Gift - ஈவு; அதேபோல, இரட்சிக்கப்பட்டவனுக்கு பரிசுத்த ஆவி ஒரு Gift - ஈவு. இதைத்தான் பேதுரு. அப்.2:38ல் சொல்கிறார். பரிசுத்த ஆவியாகிய ஈவைப் பெற வேண்டுமானால், இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்.10ல், கொர்நேலியு என்பவன் இரட்சிப்பின் அனுபவம் இருந்ததால்தானே பரிசுத்த ஆவியைப் பெற்றான். அப்.2:39ன்படி, கர்த்தர் யாரையெல்லாம் வரவழைக்கிறாரோ, தெரிந்து கொள்ளுகிறாரோ, அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியைப் பெறமுடியும். யோ.1:16,17ஐ ஆங்கிலத்தில் வாசியுங்கள். உலகம் அந்த சத்திய ஆவியானவரைக் காணாமலும், அறியாமலும்

இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது. ஆனால், இரட்சிக்கப்பட்டவர்களுடனே அவர் இருப்பதால், அவரை அவர்கள் அறிவதால், அவர்கள் பெற்றுக் கொள்வார்கள். பரிசுத்த ஆவியைப் பெறுவது என்பது நமக்குள் அவர் வரும் அனுபவம்.

**(11) வரமாகிய அந்நிய பாஷை உண்டு, அதற்கு அர்த்தம் சொல்ல வேண்டும். மற்றப்படி அர்த்தமில்லா, தற்கால பெந்தகொஸ்தே சபையார் பேசுவது தேவன் தரும் பாஷையல்ல; தவளையின் சத்தம்.**

★ வரமாகிய அந்நியபாஷை ஆத்ம ஆதாயத்திற்காக என்பதால் அர்த்தம் கண்டிப்பாய் தேவை. இது எல்லா கிறிஸ்தவனுக்கும் கிடைக்காது. வரம் என்பது தேவசித்தப்படிதான் கிடைக்கும் (1 கொரி.12:11). இந்த அந்நியபாஷை உலக பாஷை. இது பிசாசுக்கும் தெரிந்த பாஷை. இஃதல்லாமல், 1 கொரி. 14:2,4ஐ வாசித்தால், தேவனோடு பேசுகிற இரகசிய பாஷை; (ஒருவனுக்கும் தெரியாது; பிசாசுக்கும் தெரியாது); பக்தி விருத்தி உண்டாகப்பேசுகிற பாஷை. இது பேசுகிறவனுக்கும் தேவனுக்கும் மட்டும் தான் தெரியும். இது பரிசுத்த ஆவியை பெற்றவனுக்குத் தேவை; பரிசுத்த ஆவி பெற்றதற்கே இந்த அந்நிய பாஷைதான் அடையாளம் (அப்.2,8,10,19). இந்த அடையாளமான அந்நிய பாஷையை தினமும் பேசி, பக்திவிருத்தி உண்டாக்குகிறான். இப்படிப்பட்ட பாஷையின் கருத்து தெரியவில்லை என்றும், எல்லோரும் ஒரே மாதிரியாய் பேசுகிறதினாலும் மட்டுந்தான், இப்படிப்பட்ட பாஷை தவளையின் பாஷை என்கிறார்கள். இன்றைக்கு எல்லா மனிதபாஷைகளும் பெரும்பாலும் எல்லாருக்கும் தெரிவதால், ஆத்ம ஆதாயத்திற்காய், வரமாகிய அந்நிய பாஷை அவ்வளவாய் தேவையில்லை. ஆனால் அடையாளமாகிய அந்நிய பாஷை தினமும் தேவை; விசுவாசத்தில் வளர்ச்சிதேவை; ஆவியை அனலாக்க வேண்டும். இதற்கான மாற்றம் பாரம்பரிய பெந்தகொஸ்தே சபைகளில் உருவாகட்டும். இந்த அடையாளமாகிய அந்நிய பாஷை பேசுகிறவன், தான் எதற்காய் பேசுகிறேன் என்று உணர்ந்து பேச வேண்டும். என்னவெல்லாம் பேசுகிறேன் என்று மற்றவர்களுக்கு சொல்லத் தேவையில்லை. சொல்லவும் தெரியாது.

**(12) வில்லியம் பிரன்ஹாம்தான் 7ம் தூதன்; அவர்களின் கொள்கையுடையவர்களின் ONLY Jesus (இயேசு நாமக்காரர் சபை) சபைதான் லவோதிக்கேய சபை. பிரன்ஹராம் இயேசுதான் ஏசா.9:6ல் உள்ள குமாரன்; ஏசா.53:5 ல் நொறுக்கப்பட்டவர். இவரே மீண்டும் வருவார்.**

★ வெளி.10:6ல் தான் 7ம் தூதன் காணப்படுகிறான். சபை இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டபின், பரலோகில் 7 முத்திரைகள் உடைக்கப்பட்டு, 7ம் முத்திரை உடைக்கும் போது ஏழு எக்காளம் ஊதுபவன்தான் 7ம்தூதன். இவன் மனிதனோ, ஊழியனோ அல்லது இவன் தேவதூதன். இன்னும் சபையே எடுத்துக் கொள்ளப் படாததாலும், பிரன்ஹாம் மனிதன் என்பதாலும் இவரல்ல 7ம் தூதன்.

இயேசு நாமக்காரரின் சத்தியமே வேதத்தின்படி கள்ள உபதேசம் என்பதால், அப்படிப் படிப்பவர்கள், வெளி.3ல் உள்ள லவோதிக்கேய சபையாயிருக்க முடியாது. மேலும், வெளி, 2,3ல் உள்ள 7 விதமான சபைககளின் குணாதிசயம் முதலாம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை உள்ள எல்லா சபைகளிலும் உண்டு. யோவான் காலத்திலிருந்த 7 சபைகள் அவைகள். அந்த குணாதிசயங்கள் இரகசிய வருகை வரை எல்லா சபைகளிலும் இருக்கும்; அல்லது அதே போன்ற சபைகளிலும் இருக்கலாம்.

ஏசா.9:6ல் உள்ள பாலகனும் குமாரனும் இயேசுதான் என்பவனே கிறிஸ்தவன். ரோ.1:5ன் படி, மரணத்தை ஜெயித்ததால் பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரன் இயேசு. இந்த பிரன்ஹாம் 1965ல், விபத்தில் மரித்தார்; இவர் உயிர்த்தெழுவார் என்றெண்ணி 1966 வரை அடக்கமே செய்யாமல் அவருடைய சபையார் பாதுகாத்தும் அவர் எழவில்லை. எனவே இவர் ஏசா.9:6ல் உள்ள குமாரன் இல்லை. மேலும், இயேசுவின் எலும்புகள் முறிக்கப்படாததாலும், இவர் ஆக்சிடெண்டில் நொறுக்கப்பட்டு மரித்ததாலும், ஏசா.53:5ல் சொல்லப்பட்டவர் பிரன்ஹாம் என்கின்றனர். நம்முடைய அக்கிரமத்தினிமித்தமா இவர் நொறுக்கப்பட்டார்? இல்லையே! ஆக்சிடெண்ட்டில் நொறுக்கப்பட்டார். மேலும் நொறுக்கப்படுதல் என்பது எலும்பு முறிவு அல்ல. "DAKA" என்ற எபிரேயு பாஷை. இது ஏசா.53:10; 3:15; யோபு.19:2 சங்.72:4; 94:5 போன்ற இடங்களில் வருகின்றன. சாட்டையடியால் வந்த சதைகிழிப்பு, முள்முடியால் வந்த வெட்டுக்கள், சரீரப் பிரகாரமான உபத்திரவங்கள் போன்றவைகளைக் குறிக்கின்றன. ஆமென்!

இயேசுதான் மீண்டும் வருவேன் என்று சொல்லி விட்டுப் போனார் (யோ.14:1-3) பிரன்ஹாம் வருவாரென்று வசனமும் இல்லை; அவரது போதகச் செய்தியும் இல்லை. எபி.9:27 வசனம் மனிதனான அவருக்கும் தானே! அல்லேலூயா!

**(13) இயேசு மனுஷகுமாரனல்ல; பாலாசீர் லாரிதான் மனுஷகுமாரன். தாவீதின் சந்ததியான செரூபாபேல் வழிவந்த, அப்பா அம்மாவுக்குப் பிறந்தவர். இவர்தான் மீண்டும் வந்து 1000 வருடம் ஆள்வார். (See சங்.89:4; 2 சாமு. 7:12)**

★ மனுஷகுமாரன் என்றால் மனுஷர்களுக்கு பிறந்தவர் என்று பொருளல்ல. தாவீதின் குமாரன் என்றால் தாவீதுக்கு பிறந்தவரா? அதிகாலையின் மகனென்றால் அதிகாலைக்கு பிறந்தவரா? ஆறுதலின் மகன் பர்னபா என்றால் ஆறுதலுக்கு பிறந்தவனா? யோவானும், யாக்கோபும் இடிமுழக்கத்தின் பிள்ளைகள் என்பதால், இடிமுழக்கத்திற்கு பிறந்தவர்களா? இல்லை. தாவீது ராஜாவின் Nature & Glory - குணாதியம், வல்லமை, அதிகாரம் - உடையவர் என்று பொருள். அப்படித்தான் மனுஷகுமாரன் என்றால், மனுஷனின் Nature & Glory உள்ளவர் என்று பொருள். எபி.2:6ன் படி மனுஷனுடைய குமாரன் என்றால்தான், மனிதப் பெற்றோருக்குப் பிறந்தவர் என்றுபொருள். இயேசு மனுஷனுடைய குமாரனல்ல. தன்னை மனுஷகுமாரன் என்று கிட்டத்தட்ட இயேசுவே 40 முறை சொல்லியிருக்க, பாலாசீர்லாறி எப்படி மனுஷ குமாரனாவார். அவர் மனுஷனுடைய குமாரன்தான்.

2 சாமு. 7:12 தாவீதின் சாலமோன் பற்றியதுதான். ஆனால் 2 சாமு.7:16ல் "உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் எனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும். உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபற்றிருக்கும்" என்று உள்ளது. மனுஷீகப் பிரகாரமான தாவீது. சாலமோன் பற்றியது என்றால், லூக்.1:32, 33 மற்றும் ஏசா.9:7ல் சொல்லப்பட்ட இதே தீர்க்கதரிசனம் எல்லாம் இந்த மனுஷீக சந்ததி பற்றியதா? இல்லையே! இயேசுவைப் பற்றியதாயிற்றே. சங்.89:4ம் இயேசுபற்றிதானே! ஒருவேளை சரித்திரக் கணக்குப்படி பாலாசீர்லாறி, தாவீதின் மாம்சீக சந்ததியாய் இருந்தாலும், இந்த பூமியை - யாக்கோபை - 1000 வருஷம் ஆள்பவர் இயேசு கிறிஸ்து மட்டுமே! (1 சாமு. 8:7; வெளி.5:10; ரோ.5:17; வெளி.20:4; 11;15; 26:27; 3:21 போன்ற பலவசனங்களை தியானியுங்கள்).

**(14) பிரன்ஹாம் தான் கிறிஸ்து; பாலாசீர் லாறிதான் கிறிஸ்து.**

★ மத்.24:4,5,23,24 வசனங்கள்தான் இதற்குப் பதில். இயேசு ஒருவரே கிறிஸ்து (1 கொரி.8:6) ஆமென்.

❖ ❖ ❖

# அத்தியாயம் - 2

**(1) சங்.2:7; நீதி.8:30; கொலோ.1:15 போன்ற வசனங்களின்படி இயேசு கிறிஸ்து தேவனல்ல; அவர் சிருஷ்டிக்கப்பட்டவர்.**

★ தவறு. அப்.13:32, 33; எபி.5:5; 1:5 போன்ற வசனங்களை வாசித்தால், சங்.2:7 உயிர்த்தெழுதலைப் பற்றியது என்று அறியலாம். ("நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெபிப்பித்தேன் என்று இரண்டம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே, இயேசுவை எழுப்பினதினாலே....").

நீதி.8:30ல், "நான் அவர் அருகே செல்லப் பிள்ளையா யிருந்தேன்...." என்பது ஞானத்தை குறிக்கிறது. இந்த அதிகாரம் முதல் 3 வசனங்களைப்பாருங்கள். "ஞானம் கூப்பிடுகிறதில்லையோ? புத்தி சத்தமிடுகிறதில்லையோ, அது வழியருகேயுள்ள மேடைகளிலும் நாற்சந்திகளிலும் நிற்கிறது; அது ஊர்வாசல்களின் ஓரத்திலும், பட்டணத்தின் முகப்பிலும், நடை கூடங்களிலும் நின்று சத்தமிட்டு...." ஆக ஞானம் என்பது அஃறிணையிலேயே சொல்லப்பட்டுள்ளது. தொடர்ந்து அந்த அதிகாரம் முழுவதும் வாசித்தால், ஞானம் என்பது, தேவனிடமிருந்த குணாதிசயத்தில் ஒன்று என அறியலாம். நீதி.8:23ஐ வாசித்தால், இந்த ஞானம் பூமி உண்டாகும் முன்னமே அபிஷேகம் பண்ணப்பட்டதாம். ஆனால் மனிதனாய் வந்த இயேசுவோ, யோர்தான் நதிக்கரையில் தான் அபிஷேகம் பண்ணப்பட்டார். "தீமையை பெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படுகிற பயம்; கர்த்தருககுப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (நீதி.8:13; 1:7). ஆக ஞானம் என்பது ஒரு தெய்வீக குணாதிசயம். சாலமோன் கேட்டபடி ஞானம் கொடுக்கப்பட்டதே, அவன் இயேசுவையா பெற்றான்? அப்போது இயேசுவே பிறக்கவில்லையே! சிந்தியுங்கள். கொலோ 2:3ன் படி, தேவனுக்குள் ஞானம், அறிவு, என்பவைகளாகிய பொக்கிஷங் களெல்லாம் அடங்கியிருக்கிறது. அந்த பொக்கிஷங்களான ஞானம். நீதி, பரிசுத்தம், மீட்பு ஆகியவை இயேசுவோடு பூமிக்கு வந்தது. (1 கொரி.1:31). இயேசு ஞானம் என்றால், இயேசு பரிசுத்தமா? இயேசு மீட்பா? இயேசு நீதியா? சிந்தியுங்கள்.

"அவர் (இயேசு) அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்" (கொலோ.1:15). தேவனின் தற்சுரூபம் இயேசு என்பதை வெளிப்படையாய்ப் பார்த்தால், தேவனுக்கு இயேசுவின் மனித ரூபம் உண்டு என்றாகிறது. அப்படியானால் தேவன்

ஆவியாயிருக்கிறார் என்றும், அவரை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை என்பதும், காணக்கூடாததென்றும், வேதம் சொல்வதெல்லாம் பொய்யாகுமா? (யோ.4: 1 தீமோ. 6:16). அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம் என்றால், ஆவியாயிருக்கிற தேவனின் ஆவிக்குரிய குணாதிசயங்கள் (Liteners) என்று பொருள். அது போல, "சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்" என்பதையும் ஆவிக்குரிய ரீதியியில்தான் எடுக்க வேண்டும். உலக சிருஷ்டிகளிலே முதன்மையானது மனித இனம்தான். அந்த மனித இனத்தில் மனிதனாய்ப் பிறந்த இயேசு எப்படி முந்தின பேறுமானார்? இதை அறிய, சங்.89:27ஐ வாசியுங்கள்:- "நான் அவனை (தாவீதை) எனக்கு முதற்பேறானவனும், பூமியின் ராஜாக்களைப் பார்க்கிலும், மகா உயர்ந்தவனுமாக்குவேன்". தாவீது தேவனுக்கு முதற்பேறானவன் என்றால், ஆதாமுக்கு முன்னாலே உண்டாக்கப்பட்டவன் என்றா பொருள்? இல்லை. பூமியிலுள்ள அத்தனை ராஜாக்களிலும் முதன்மையானவன்; முன்னானவன் என்று பொருள். அப்படித்தான், மனித சிருஷ்டியாய் வந்த இயேசு (பிலி.2: யோ:1:1,) உலகிலுள்ள அத்தனை சிருஷ்டிக்கும் முதன்மையானவர்; மேலானவர் என்று பொருள். அல்லேலூயா! முதலில் படைக்கப்பட்டவர் என்று அர்த்தமில்லை. அப்படியே கொலோ.1:17 ஐ வாசித்தால், அவர் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவர் என்று பொருள் (1 கொரி.15:20 23; வெளி. 1:5), கொலோ 1;15ல் "முந்தினபேறு" - First Born - என்பதற்கான கிரேக்க வார்த்தை "probotokos", அதன் பொருள், "priority of position, not origin" என்பதாகும். அல்லேலூயா!

யாத்.3:14ல் மோசேயுடன் முட்செடியில் பேசிய யோகோவா தேவன்தான் மனிதனாய் வந்த இயேசு கிறிஸ்து என்று, யோ.8:24, 28, 58, 18:33; அப்.7:30 போன்ற பல வசனங்களால் அறியலாம். "கர்த்தர்" என்றாலே, எபிரேயு பாஷையிலே யேகோவா; ஆங்கிலத்தில் "LORD" என்பதாகும். வேதத்தில் இயேசுவை "கர்த்தராகிய இயேசுகிறிஸ்து" என்று பல இடங்களில் எழுதப்பட்டிருக்கிறதே! யோ.1;1; எபி.1:8,10; 1 தீமோ.3:16; 1 யோ.5:20 போன்ற பல வசனங்களை வாசித்தால், இயேசு தேவன்தான் என்று புரியும். பிதாவாகிய தேவன், குமாரனை நோக்கி, "தேவனே" என்று அழைக்கிறாரே, இவர் எப்படி சிருஷ்டியாவார்? (எபி1:8-13; சங்.45:6,7; 110:1) மட்டுமல்ல... அப்.1:8ல், "சீஷர்கள் எல்லோரும் எனக்குச்

சாட்சியாயிருங்கள்" என்று சொன்னதால்தான், "யேகோவாவின் சாட்சிகள்" என்று பெயரை வைத்துக் கொண்டு, இயேசுவுக்கு விரோதமாய் சாட்சியில்லாமல் போதித்துக் கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை!

**(2) பரிசுத்த ஆவி என்பது ஒரு ஆள் தத்துவமுள்ள தேவனல்ல; அது ஒரு தேவசக்தியாகும்.**

★ "கர்த்தரே ஆவியானவர்" (2 கொரி.3:17) என்று சொல்லியிருக்க, ஆவியானவர் கர்த்தரில்லை; தேவனில்லை என்று சொல்வது கள்ள உபதேசமில்லையா? அனனியா - சப்பீராளின் பாவங்களை கண்டிக்கும் பேதுரு, அப்.5:3,4 ல், பரிசுத்த ஆவியாகிய தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்று அனனியாவிடம் சொன்னதை தியானியுங்கள். ஆதி.1:2; லூக்.3:22; யோ.14:16, 26 போன்ற பல வசனங்களை வாசித்தால், ஆவியானவர் ஆள்தத்துவமானவர் என்றும், இயேசு கிறிஸ்துபோன்ற வேறொரு தேற்றரவாளன் என்றும், மணவாட்டியை இயேசுவுக்காய் ஆயத்தம் பண்ணுகிறவர் (ஈசாக்குக்கு எலியேசர் போல) என்றும் அறியலாம். எபி. 1:9ல் உள்ள தோழர் என்பது இவர்தானே!

பரிசுத்த ஆவியானவர் என்பது ஒருசக்தியல்ல; தேவனின் Power - வல்லமை - சக்தி முழுமையும் அவர் மூலமாய் வெளிப்படுகிறது என்று பொருள். வேதத்தில் சில இடங்களில், "ஆவி" என்றும், ஆவியானவர் என்றும் வருகின்றன. ஆவியானவர் என்று வந்தால் அது ஆள்தத்துவமுள்ள தேவனையே குறிக்கும்; ஆவி என்று வந்தால் தேவனின் வல்லமை (Power), குணாதிசயம் போன்றவற்றைக் குறிக்கும் (சில இடங்களில் ஆவியை ஆவியானவர் என்றும், ஆவியானவரை ஆவி என்றும் தவறாய் மொழி பெயர்க்கப்பட்டும் இருக்கிறது). திரித்துவம் - திரியேகம் - போன்ற சத்தியத்தைப் புரியாதவரைக்கும் இந்தக் கேள்விகள் எழும்பிக் கொண்டே தானிருக்கும்.

**(3) ஆத்துமா என்ற ஒன்று இல்லை. ஆவியும் சரீரமும் சேரும்போது அதற்குப்பெயர் ஆத்துமா.**

★ பெரியாரின் கொள்கையும் இதுதான். இயேசு கிறிஸ்து வரும்போது, நம் ஆவி, ஆத்மா, சரீரம் மூன்றும் குற்றமில்லாதிருக்க வேண்டும் என்று 1 தெச.5:23 சொல்வதால், மனிதனுக்கு ஆவியும் உண்டு; ஆத்மாவும் உண்டு; சரீரமும் உண்டு என அறிகிறோம்.

2 கொரி.4:16ஐ வாசித்தால், உள்ளான மனுஷன், புறம்பான மனுஷன் என்று இரண்டு உண்டு என்றும், புறம்பான மனுஷன்தான் நாம் காணும் சரீரம் என்றும் அறிகிறோம். உள்ளான மனுஷன் எது? ஆதி.1:26, 27 ஐ வாசித்தால், தேவனுடைய சாயலின் படியும் (character), ரூபத்தின் படியும் (Image, figure) மனிதனை ஆணும் பெண்ணுமாய் சிருஷ்டித்தார் என அறிகிறோம். (சிருஷ்டித்தல் என்றால் ஒன்றும்மில்லாமையிலிருந்து உருவாக்குதல்). இங்கே மண்ணினால் உருவாக்கப்படவில்லை. ஆதி.2:7ல் தான் மண்ணினால், நமது உறுப்புகளுடைய புறம்பான மனுஷனை சரீரத்தை உருவாக்கினார். அப்படியானால், ஆதி.1:26, 27ல், சிருஷ்டித்தது என்ன? அதுதான் உள்ளான மனுஷன். எபி.4:12ஐ வாசித்தால், ஆவியும் ஆத்மாவும் ஒன்றோடொன்று இணைந்து பிரிக்கக்கூடாததாயிருக்கிறது என்று அறிகிறோம். அப்படியானால், அன்றைக்கு தேவன் சிருஷ்டித்த உள்ளான மனுஷனாகிய ஆவியோடு ஆத்மாவும் இணைந்தே படைக்கப்பட்டது என அறியலாம்.

லூக்.12:20ல், "இந்த இராத்திரியில் உன் ஆத்மா எடுத்துக் கொள்ளப்படும்" என்று இயேசு, சொல்கிறாரே, அப்படியானால் ஆத்மா என்ற ஒன்று இருக்கின்றது என்றுதானே பொருள். 1 ராஜா 17:21ஐ வாசித்தால், சாறிபாத் விதவையின் மகன் மரித்தபோது அவனைவிட்டு வெளியேறிய ஆத்மா, எலியாவின் விண்ணப்பத்தால், திரும்பி அவனுக்குள் வந்தது என்பதால், இது ஒரு things - matter - பொருள்தானே! சிந்தியுங்கள். மேலும், மத்.11:29, 26, 38; யோ.12:27; உபா.6:5; 1 சாமு.18:1; யோபு.14:23; சங்.42:2; நீதி.24:14; 2:10 லூக்.1:46, 47; போன்ற பல வசனங்களை தியானியுங்கள். நாம் ஜெபம் பண்ணி முடித்தபின், இன்னொரு ஜெபம், "என் ஆத்துமாவே! கர்த்தரை தோத்தரி..." (சங்.103:1-3) என்று ஆத்மாவைப் பார்த்து சொல்கிறோமே, அப்படியானால் ஆத்மா என்ற ஒன்று உண்டுதானே! மேலும், 3 யோ.2ல், உன் ஆத்மா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்பாய் என்று சொல்வதால், ஆத்மா என்ற ஒன்று "வாழவேண்டும்" என அறிகிறோம். சில இடங்களில் மனிதர்களை மொத்தமாக "ஆத்மாக்கள்" என்று சொல்வதும் உண்டு. மொத்தத்தில் ஆவியோடு இணைந்து ஆத்மா என்ற ஒன்று இருக்கிறது.

**(4) பாதாளம், நரகம், பரதீசு என்றெல்லாம் ஒன்றுமில்லை. மரித்தபின் மனிதனின் நிலை கல்லறையில்தான்.**

★ மனிதனுக்கு ஆவி, ஆத்மா, சரீரம் என்ற மூன்று உண்டு என்ற சத்தியம் அறியாதவர்களின் நியாயமான கேள்வி இது. மரித்தபின், மனிதனின் மண்ணாலான சரீரம் மண்ணுக்கு - கல்லறைக்கு போகும் (ஆதி.3;19). உள்ளான மனுஷனாம் ஆவி - ஆத்மாவின் நிலை என்ன? ஆவியும் ஆத்மாவும் சரீரத்தைவிட்டுப் பிரிந்து, இரத்த ஓட்டம் நின்றுபோவதுதான் மரணம் (யாக்.2:26; பிர. 12:7; லூக்.12:20). ஆவியும் ஆத்மாவும் எங்கே போகும்? லூக்.23:43ன் படி மரித்தபின், இரட்சிப்புக்குள் வந்த கள்ளன் பரதீசில் இருப்பான் என்று அறிகிறோம். பரதீசு தற்போது 3ம் வானத்தில் இருக்கிறது (2 கொரி.12:3) நல்லவன் லாசரு மரித்தபின் அவனது உள்ளான மனுஷன், ஆபிரகாமின் மடிக்குப் போனது. ஆபிரகாம் இருக்குமிடம் பரதீசு; இது உள்ளான மனுஷன் இளைப்பாறுகிற இடம் (தானி.12:13) பாவி ஐஸ்வரியவானின் ஆவியும் ஆத்மாவும், பாதாளத்தில் இருந்தது. பாவம் சுமந்து - பாவியாக்கப்பட்டு மரித்த இயேசுவும் மரித்தபின் பாதாளம் சென்றார். (சங்.16:10). இந்தப் பாதாளம் - மிகவும் உக்கிரமான இடம் - பூமிக்குள் இருப்பதாய் வேதம் சொல்லுகிறபடியே, weekly world news, April 24, 1990ல் ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டதாகக் கூறுகிறது.

நித்திய நரகம் உண்டென்று, **"கேள்விகள் - அத்தியாயம் I"**ல் விவரிக்கப்பட்டிருக்கிறது. நரகத்தை, Gahenna என்று எபிரேயு பாஷையிலும், Geena என்று கிரேக்க பாஷையிலும் அழைக்கப்படுகிறது. அப்படியே பாதாளம் என்பதை Sheol என்று எபிரேயுவிலும், Hades என்று கிரேக்கிலும் சொல்லப்படுகிறது. பாதாளம் பூமிக்குள் இருக்கிறது; பரதீசு, இயேசுவுக்குமுன் பூமிக்குள் இருந்தது. அதற்கு "மேல்பாதாளம்" என்று வேத வல்லுநர்கள் பெயரிட்டு, லூக்.16:19-31 ஐ விளக்கினார்கள். பவுல் போய்ப் பார்த்ததினாலும், எபே.4ன் படியும், அது 3ம் வானத்தில் இயேசுவுக்குப்பின் இருப்பதாகவும் அறியப்படுகிறது. மரித்தவர்களின் ஆவியும் ஆத்மாவும், அவைகளின் நிலையைப் பொறுத்து இந்த இடங்களுக்கு செல்கின்றன. இயேசுவின் வருகையில், இங்குள்ளவர்கள் சரீரத்தோடு இணைந்துவிடுவர். நீதிமான்கள் மறுரூபமாகி மோட்சத்திற்கும், பாவிகள் மனித உருவிலேயே மத்.25:41ன் படி ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நரகத்திற்கும் போவார்கள். இதுதான் சரீரப் பாவத்தின் சம்பளமாகிய இரண்டாம் மரணம் (வெளி.22:12; 2 கொரி.5:10; ரோ.2:6 போன்ற வசனங்களை தியானியுங்கள்).

இஃதல்லாமல், படுபாதாளம் - Bottomlespit - ABYSS என்ற ஒன்றும் (வெளி.20:1; 9:1), TARTAROS (2 பேது.2:4; யூதா.6) என்ற ஒன்றும் இருக்கின்றன என அறியவேண்டும். இவைகளை நரகம் என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது சில இடங்களில்.

ஏதேன் தோட்டம் பரதீசு அல்ல. John Milton என்ற யேகோவா விட்னஸ் சபை கவிஞர் அப்படி எழுதி உள்ளார். பொதுவாக பரதீசு என்பது இளைப்பாறும், அமைதியான சாந்தமுள்ள, தேவபிரசன்னம் நிறைந்த இடமாகும்.

**(5) இரட்சிக்கப்பட்டேன் என்று ஒருவனும் சொல்லமுடியாது; முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.**

★ அப்.2:47ல் "..... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" என்று இருப்பதால், ஆதி அப்போஸ்தல காலத்திலிருந்தே இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம்தான் கிறிஸ்தவ சபை. எபே.2:5,8 வசனங்களில் சொல்லப்படும் இரட்சிக்கப்பட்டடோர், சபையார்தானே! இந்த இரட்சிப்பு என்பது இன்று நேற்றல்ல; ஆதியிலிருந்தே இருக்கிறது. இதைத்தான் நிக்கோதேமுவுடன் யோ.3:3,5ல் பழைய ஏற்பாட்டு காலத்திலேயே, இயேசு கூறுகிறார். இந்த இரட்சிப்பிலே 3 வகை உண்டு. ரோம. 10:9,10; 1 பேது.1:23; யோ.3:5; 1 கொரி.6:11; யாக்.1;18ன்படி மறுபடியும் இருதயமாகிய ஆவியில் பிறப்பதுதான் ஆரம்ப இரட்சிப்பு. இதைத்தான் இருதய விருத்தசேதனம் என்று ஆதிமுதல் வேதம் சொல்கின்றது. (உபா.10:16; 30:6; 1 பேது.3:15; கொலோ.2:11; ரோ.2:29; எரே.4:4; 6:10). ரோ.12:2; யாக் 1:21; 1 பேது.1:9 போன்ற வசனங்களின்படி தினந்தோறும் ஆத்மாவிலே மறுரூபமாவது ஆத்ம இரட்சிப்பு. ரோ.8:23, 24ன்படி இறுதியில் சரீர மீட்பாவது சரீர இரட்சிப்பு. ஆவிக்குரிய இரட்சிப்பில் நிலைத்திருந்து, ஆவியின்கனி, நீதியின் கனி வெளிப்படும்போது இறுதி இரட்சிப்பு மத்.24:13ன் படி இயேசுவின் வருகையில் கிடைக்கும்.

**(6) இப்போது கிறிஸ்துவின் ராஜ்யம் நடந்து கொண்டிருக்கிறது. எனவே, சத்தியம் அறியாமலிருக்கிற கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே சத்தியம் சொல்ல வேண்டும்.**

★ "வேதமாணாக்கர்" என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்த ரஸ்சல் என்பவர் கி.பி.1879ல் "வாட்ச்டவர்" என்ற பத்திரிக்கையை ஆரம்பித்து 1874ல் இயேசு பூமிக்கு வந்துவிட்டார் என்றவர், 1914ல் மரித்துப் போனார்.

அவர் 1881ல் ஆரம்பித்த Bible & Tract Society, 1930ல், இயேசு வந்துவிட்டார் என்ற கி.பி. 1874 வருஷத்தை மாற்றி, 1914ல் வருவார் என்று சொல்லி, அன்று முதல் யேகோவா ராஜ்யம் பூமியில் நடக்கிறது என்றனர். அப்போதுதான், யேகோவா விட்னஸ் என்ற பெயரே பிரபலமானது. **இயேசு வரவே இல்லை** (See மத்.24: ) ஆனாலும் வந்துவிட்டார் என்றும் சங்.110:1,2 ன்படி கிறிஸ்துவின் ராஜ்யம் தான் நடக்கிறது என்றும், பிற்பாடு வருஷத்தை மாற்றி, 1975லிருந்து மறைமுகமாகவே வந்துவிட்டார் என்றும், சங்.110:1,2ன் படி கிறிஸ்துவின் ராஜ்யம்தான் நடக்கிறது என்றும் 1960ல் சொல்கின்றனர். இன்னும் சபையே எடுத்துக் கொள்ளப்படவில்லை; அந்தி கிறிஸ்து வரவே இல்லை. பின்பு எப்படி கிறிஸ்துவின் ராஜ்யம் நடக்கும்? இப்படித்தான் ஆதி அப்போஸ்தல தெசலோக்கிய சபையில் நடந்ததாகவும் பவுல் கூறுகிறார் (2 தெச.2). எனவே இயேசு வந்து எம்மை அழைத்துக் கொண்டுபோகும் வரை மத்.28:18-20; 1 பேது.2:9ன் படி அனைவருக்கும் விசேஷம் அறிவிப்பது நமக்கு தேவன் கொடுத்துள்ள கற்பனை. அதிலேயே நிலைத்திருப்போம்.

**(7) இயேசு, 1 கொரி.8:5ல் சொல்லப்பட்டபடி உள்ள அநேக தேவர்களில் ஒருவர். ஆனால் அவர் சர்வ வல்லமையுள்ள தேவனல்ல.**

★ ஏசா.42:8 ஐ வாசித்துவிட்டு, பிலி.2:6; யோ.14:9, 10; 10:30; 17:21; வெளி.1:18; 4:8; 11:17; 16:14; ரோ.9:6 போன்ற பல வசனங்களை தியானித்தால் இயேசுவாய் பூமிக்கு வந்தவர் சர்வவல்லமையுள்ள தேவன் தான் என்று அறியலாம். கொலோ. 2:9 ஐயும் தியானியுங்கள். மட்டுமல்ல...மன்னிக்கும் அதிகாரமுள்ள தேவன் இவர் (மாற்.5:11); நித்திய பிதா இவர்; வல்லமையுள்ள தேவன் இவர் (ஏசா.9:6-7); மகாதேவன் இவர் (தீத்.2:13); மெய்யான தேவன் இவர் (யோ.5:20; எசே.10:10) நம்முடைய தேவன் இவர் (2பேது.1:1).

**(8) இராப்போஜன ஆராதனை நடந்தாலும் அப்பமும் ரசமும் உட்கொள்ளக்கூடாது. ஏனெனில், இயேசு வரும் வரைக்கும் தான் இதைச் செய்ய வேண்டும். இயேசுதான் 1914ல் வந்துவிட்டாரே!**

★ இயேசு இன்னும் வந்து நம்மை அழைத்துக்கொண்டு போகாததால் (யோ.14:1-3) இராப்போஜன ஆராதனை இயேசு சொன்னபடியே கைக்கொண்டே ஆகவேண்டும். அதை அசட்டை செய்வோர் இயேசுவின் மரணம் உயிர்தெழுதலை அவமதிக்கிறவர்கள்.

**(9) ஏழாம் நாள் சபை, யேகோவா விட்னஸ் சபை, சிபிஎம் சபை போன்றவர்கள் தாங்கள் தான் மீதமான சபையார் என்கிறார்கள்; இவர்கள் தான் 144,000 பேர் என்கிறார்கள்.**

★ இது வேதத்திலே, அந்திகிறிஸ்துவின் காலத்தில் மேசியா மேல் விசுவாசமுள்ளவர்களாய், மறைந்து மறைந்து காத்திருக்கும், இஸ்ரேல் சபையார்தான் மீதமுள்ள சபையார் என்று வேதம் சொல்கின்றது (வெளி.12:17) மேலும் வெளி.7ல் சொல்லப்படும் பூமியிலுள்ள 14,4000 பேரும், வெளி.14ல் சொல்லப்படும் பரலோகிலுள்ள 144000 பேரும், இஸ்ரேலர்கள்தான்; பிதாவின் நாமம் தரிக்கப்பட்டவர்கள்தான். 24 மூப்பர்களோடு பரலோகில் இருக்கும் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்ட கிறிஸ்துவுக்குள்ளான கிறிஸ்தவர்களும், அந்திகிறிஸ்துவின் ஆட்சியில் இரத்த சாட்சியாக கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் புரிந்துகொள்ள முடியாத பாடலை பாடுகிறார்கள் என்றால், அவர்கள் கிறிஸ்தவப் பெயருடையவர்களே அல்லர் என்பதே உண்மை (வெளி.14:3)

**(10) எபே.1:13ன்படி, இயேசுவை ஏற்றுக்கொண்டபோதே எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஆவிபெற்றாயிற்று.**

★ இது மகாதவறு. அப்.2,8,10,19 போன்ற அதிகாரங்களில் பரிசுத்த ஆவி பெற்றவர்கள் எல்லோருமே இரட்சிக்கப்பட்ட பிற்பாடுதான் பெற்றுக் கொண்டனர். எபேசிய மக்களின் சரித்திரத்தை பவுல் காலத்தில், அப்.19ல் பார்க்கலாம். அவர்கள் இரட்சிக்கப்பட்டு, யோவான் கொடுக்கும் மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானம் பெற்றதாலும், பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே பெறாததாலும், பரிசுத்த ஆவியைப் பற்றி தெரியாததாலும், ஞானஸ்நானம் அப்பொல்லோ மூலம் எடுத்த போதும் பரிசுத்த ஆவியைப் பெறவில்லை; பவுல் கொடுத்த போதும் பெறவில்லை. பவுல் ஞானஸ்நானம் கொடுத்தபின், அவர்கள் தலையின் மேல் கைகளை வைத்தபோதுதான் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். இதைத்தான் பவுல் எபே.1:13ல் சொல்கிறான். தமிழில் சரியாக மொழிபெயர்பபு இல்லாததால் ஆங்கிலத்தில் வாசியுங்கள். They received Holy spirit not at the time of belief. ஆங்கிலத்தில், "After ye believe" - அதாவது விசுவாசிகளான பிற்பாடு தான் பெற்றார்கள் என்று உள்ளது. இதுவே சரி.

❖ ❖ ❖

# அத்தியாயம் - 3

**(1) ரோம.16:16ன் படி, "கிறிஸ்துவின் சபை" என்ற பெயருள்ள சபைதான் கிறிஸ்தவ சபை. மற்ற சபைகள் எல்லாம் கிறிஸ்தவ சபை அல்ல.**

★ வெளி.2,3ல் 7 விதமான சபைகள் ஊர்களின் பெயரை வைத்து உள்ளனவே அவைகள் கிறிஸ்தவ சபைகள் இல்லையா? 1 கொரி. 1:2; 10:33; 2 கொரி. 1:1; 2 தெச. 1:14 போன்ற வசனங்களில், "தேவனுடைய சபை" என்று உள்ளதே அது கிறிஸ்தவ சபை இல்லையா? 1 தீமோ.3;15ல் உள்ள "ஜீவனுள்ள தேவனுடைய சபை" என்பது கிறிஸ்தவ சபைதானே! மத்.16:18ன்படி கற்பாறையாகிய இயேசுவின் மேல் இயேசுவால் கட்டப்பட்ட சபைதான் கிறிஸ்துவின் சபை (Church of Christ). அந்த ஆவிக்குரிய கிறிஸ்தவ சபையின் அங்கங்கள் தான், இன்றைக்கு எபி.6:1, 2 ன்படியான மூல உபதேசங்களில், பலதரப்பட்ட பெயர்களில் இயங்கும் சபைகள். சபையின் பெயர் யாரையும் இரட்சிக்காது. அதற்காக, தேவ நாமத்திற்கு மகிமையில்லாத, "சாத்தான் சபை" போன்ற பெயர்களுள்ள சபைகளெல்லாம் கிறிஸ்தவ சபைகள் அல்ல. ரோமாபுரியிலுள்ள சபையும், இயேசு கட்டிய சபையில் அங்கம் என்பதால், "கிறிஸ்துவின் சபையார்" என்று பவுல் எழுதுகிறான். நாம் உண்டாக்குகிற சபைகளுக்கு தேவநாமம் மகிமைப்படும்படியாய் பெயர்கள் வைப்பதில் தவறில்லை.

**(2) தற்போது அற்புதங்கள் நடக்கின்றன என்று சொல்வதெல்லாம் பொய்; அப்போஸ்தலர் காலத்தோடு அவைகள் முடிந்துவிட்டன. 1 கொரி.3:10ன் படி அற்பதம், அந்நியபாஷை எல்லாமே ஒழிந்துபோயின.**

★ யோ.14:12ல் என்னிலும் மேலான காரியங்களைச் செய்வீர்கள் என்று சொன்னது பொய்யா? அது ஆதி அப்போஸ்தலர்கள் காலத்திற்குரியதா? என் ஊழியத்திலே என் மூலமாக தேவன், பிறவி செவிடனுக்கு சுகம் தந்தாரே; கிட்னி பிராப்ளம் உள்ளவர்களுக்கு சுகம் தந்தாரே; வயிற்றுவலி, கேன்சர், கால் ஊனம் போன்ற பலவற்றிலும் விடுதலை தந்தாரே; இந்த சரீர அற்புதங்கள் அல்லாமல், ஆயிரக்கணக்கான ஆவிக்குரிய அற்புதங்கள் நடந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களே, இவைகளெல்லாம் பொய்யா? 1 கொரி.13:10ஐ வாசிக்கும்முன், 1 கொரி.13:8,9 ஐயும் வாசியுங்கள். அறிவு ஒழிந்துபோம் என்று

உள்ளதே, இன்றைக்கு அறிவே இல்லையா? தானி.12:4 பொய்யா? தீர்க்கதரிசனம், அறிவு, அந்நியபாஷை எல்லாம் எப்போது அழியுமாம்? நிறைவானது வரும்போது. எப்போது? 1 கொரி.13:11, 12ஐ தியானித்தால் புரியும். இப்போது தேவனை - தேவனுடைய ராஜ்யத்தை - மகிமையை, நிழலாட்டமாய் கண்ணாடியில் பார்ப்பதுபோல பார்க்கிறோம். நிஜமாகவே தேவன் வரும்போது - நிறைவானது வரும்போது - குறைவான இவைகள் ஒழிந்துபோகும். ஆனால் தேவ அன்பு மாத்திரம் எப்போதும் நிலைத்திருக்கும். ஆக, இயேசுகிறிஸ்துவின் பூமி ஆளுகையின்போது, நம் அறிவு, வரங்கள் எல்லாம் ஒழிந்துபோகும் தேவையில்லை.

**(3) சபையிலே கைதட்டிப்பாடுவதோ, இசைக்கருவிகள் வாசிப்பதோ கூடாது.**

★ பரலோக சபையிலும் இசை உண்டு (எசே.28:13; வெளி.5:8); இஸ்ரேல் சபையிலும் இசை உண்டு (சங்.150:3-5:47:5; 144:9; 147:7). புதிய ஏற்பாட்டு சபையிலும் சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளாலும், ஞானப்பாட்டுகளாலும் கர்த்தரைப் பாடித் துதிக்க வேண்டும் என்று எபே.5:19 சொல்கின்றது. பாட்டும் இசையும் சேர்ந்ததுதான் சங்கீதம் - Psalm என்று ஆங்கில Dictionaryயே கூறுகிறது. கொலோ. 3:16; யாக் 5:13 போன்ற வசனங்களையும் தியானியுங்கள்.

**(4) ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளில்தான் அப்பம் பிட்க வேண்டும். மற்ற நாட்களில் பிட்கக்கூடாது. இதற்கு ஆதாரம் அப்.20:7.**

★ அப்.20:7ல் உள்ளது பவுலுக்கு கொடுக்கப்படும் பிரிவு உபச்சார கூட்டத்தில் நடக்கும் இராப்போஜனம். இன்றும் பல சபைகளில் இது நடக்கின்றன. இது பிரிவு உபச்சார கூட்ட அப்பம் பிட்குதல் என்று எடுக்காமல், ரெகுலராக வாரத்தின் முதல் நாள் அப்பம் பிட்கும் முறை என்று எடுத்துக்கொண்டால், அன்று இரவில்தான் அப்பம் பிட்டார்கள். நாமும் இரவில்தான் பிட்கவேண்டுமா? அப்பம் பிட்கும்படி வாரத்தில் முதல் நாள், விருந்து நேரம் கூடினார்கள். நியாயப்பிரமாணப்படி - இஸ்ரேலர் முறைப்படி - சனிக்கிழமை சூரியன் அஸ்தமித்தாலே வாரத்தின் முதல் நாள் வந்து விடுகின்றது; மேலும் பிரிவு உபச்சாரக் கூட்டமே எப்போதுமே மாலையில்தான் நடக்கும். ஆக, அன்றைக்கு சனிக்கிழமை மாலை - சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு அப்பம் பிட்க கூடுவது போல நாமும் கூடவேண்டுமா? ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை

வைத்து எதையுமே எடை போடக்கூடாது. மேலும், அப்.2:46ன் படி, வீடுகள்தோறும் அனுதினமும் அப்பம் பிட்டார்களே நாமும் அனுதினமும் சபைகளில் பிட்காமல், வீடுகளில் பிட்கவேண்டுமா? சிந்தியுங்கள். இயேசுவின் மரணத்திற்கு நினைவாய் இதைச் செய்யுங்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறாரே (லூக்.22:19; 1O கொரி.11:23-25) அப்படியானால் வாரத்தின் முதல் நாள்தான் அதை நினைக்க வேண்டுமா? மேலும், ஆதி அப்போஸ்தலர்கள் ரசம் சாப்பிட்டதாக வசனமே இல்லாததால், நாம் அப்பம் மட்டுந்தான் பிய்க்க வேண்டுமா? ஆவியானவரின் ஒத்தாசையோடு வசனத்தை தியானித்து செயல்படுவோம்.

**(5) முழுக்கு ஞானஸ்நானம் பெற்றால்தான் மறுபிறப்பு அடைந்ததாக – இரட்சிக்கப்பட்டதாக – பாவம் கழுவப்பட்டதாக அர்த்தம்.**

★ தவறு. இரட்சிக்கப்பட்டேன் - மறு பிறப்படைந்தேன் - பாவம் கழுவப்பட்டேன் என்பதற்கு அடையாளம்தான் முழுக்கு ஞானஸ்நானம் (1 பேது.3:21 ரோ.6:3; கலா.3:27; ரோ13:14 போற வசனங்களை ரோ.10:9,10; 1 கொரி.6:11; மாற்.16:16; யாக்.1:18; யோ.3:3,5 போற வசனங்களுடன் தியானியுங்கள்). மறுபிறப்பு - இரட்சிப்பு - என்பது, விசுவாச வசனத்தால், பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு மரித்துப்போன நமது ஆவி மறுபடியும் பிறப்பதாகும் (எபே.2:1). இதைத்தான் நிக்கோதேமுவுடன் இயேசு, பழைய ஏற்பாட்டில் சொன்னார். அப்போது முழுக்கு ஞானஸ்நானம் இல்லை. இயேசுதான், சீஷராக்கப்பட்டவர்களுக்கு - இரட்சிக்கப்பட்டவர்களுக்கு - பாவம் கழுவப்பட்டவர்களுக்கு, தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்க கட்டளையிட்டார் (மத்.28:18-20). பேதுரு, பெந்தகொஸ்தே நாளில் இதை கடைப்பிடித்தார் (அப்.2:38). இரட்சிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளையாய் மாறி, இயேசுவின் நாமம் தரித்து, ஞானஸ்நானத் தொட்டிக்கு முன் நிற்கும் போதுதான், பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைத்துவிட்டோம் என்பதற்கு அடையாளமான முழுக்கு ஞானஸ்நானம், ஊரும் உலகும் அறிய இயேசுவுக்கு கொடுத்தது போல கொடுக்கப்படும்; அப்போதுதான் தேவனோடு உடன்படிக்கை உண்டாகிறது. ஆமென்.

**(6) சபையிலே பாஸ்டர் என்று யாரையும் அழைக்கக்கூடாது. எல்லோரையும் ஊழியக்காரார் – Servant of God என்றுதான் அழைக்க வேண்டும் அல்லது பிரதர் என்று அழைக்க வேண்டும்.**

★ கிறிஸ்தவ சபையிலே தேவன் 5 விதமான ஊழியம் வைத்திருக்கிறார் (எபே.4:11-13). அதிலே ஒன்றுதான் பாஸ்டர் - மேய்ப்பர் ஊழியம். தேவன் ஏற்படுத்தியதை வேண்டாமென்று சொல்பவர்கள் தேவனுக்கு விரோதிகள் தானே! சபை என்று இருந்தால் அதற்கு ஒரு மேய்ப்பன் இல்லையென்றால், ஆடுகளின் நிலை என்ன? "மேய்ப்பன்" என்ற பதவிப் பெயரில்லாமல், எப்படி பதவிப் பணியை செய்ய முடியும்? சிந்தியுங்கள். இது உலகக் காரியங்களுக்கே ஒத்துவராது. எல்லோரையும் "ஊழியர்" என்று சொன்னால் எந்தப் பணியை யார் செய்கிறார் என்று தெரிய வேண்டாமா? மேலும் சபையிலுள்ள எல்லோருமே சகோதரர்கள்தான். அப்படியிருக்க, எல்லோரையும் பிரதர் என்றே அழைத்தால் சபையின் ஒவ்வொரு குறிப்பிட்ட பணியையும் செய்பவரை எப்படி அறிந்து கொள்வது? இயேசு கிறிஸ்துவுக்கே, பிரதான மேய்ப்பர், பிரதான ஆசாரியர் என்று உள்ளது (எபி; 1 பேது.5:4). மேய்ப்பன் என்பவன் போதக ஊழியமும் இணைந்து செய்ய வேண்டும். எனவே மேய்ப்பரை, போதகர் என்றும் அழைக்கலாம் தவறில்லை. இப்படியெல்லாம் அழைப்பது ஒரு identification க்காகத்தான்.

**(7) பூவைப்பதோ, பொட்டுவைப்பதோ, நகைபோடுவதோ, சினிமா பார்ப்பதோ தவறே இல்லை.**

★ உலகத்திலே எந்த காரியம் செய்தாலும் ரோ.14:21; பிலி.4:8ன் படி செய்தால், தவறே இல்லை.

❖ ❖ ❖

# அத்தியாயம் - 4

**(1) சனிக்கிழமையாகிய ஓய்வு நாளை ஆசரிக்காதவர்கள் 666 முத்திரையைத் தரித்துக்கொண்டிருப்போர். சனிக்கிழமையை ஆசரித்தால் மட்டுமே பரலோகம் போகமுடியும்.**

★ ஆதியாகமம் முதல் இஸ்ரேலர் எகிப்திலிருந்து வெளிவந்த சீன் வனாந்திரம் வரை, ஓய்வுநாள் ஆசரிக்கச் சொல்லி வேதம் சொல்லவில்லை. இதை அந்த காலகட்டத்தில் எந்த மனிதனும் ஆசரிக்கவில்லை. இந்த முறை சீனாயில்தான் ஆரம்பமானது (நெகே. 9:13,14). (ஆதி. 2:3ல் படைப்பிலிருந்து தேவன் ஓய்ந்திருந்தார்;

மனிதனுக்கு அப்போது தரப்படவில்லை) உபா.5:15ன் படி அடிமைத்தனத்திலிருந்து வந்த மனித இஸ்ரேலர் மறுபடியும் தொடர்ந்து ஓய்வின்றி வேலை செய்யாமல் ஓய்வை அனுசரிக்க தேவன் கட்டளை தந்தார் (மாற்.2:27). அதுவும், தான் ஓய்ந்திருந்த அதே ஓய்வு நாளில் ஓய்ந்திருக்கச் சொன்னார். இதை ஆசரித்தால் ஏசா.58:13-14ல் உள்ள யாக்கோபின் ஆசீர்வாதம் கிடைக்கும். கலா 3ன்படி, ஆபிரகாமின் ஆசீர்வாதம், ஆவிக்குரிய இஸ்ரேலர்களாகிய நமக்குத் தேவையே ஒழிய, மாம்சீக இஸ்ரேலருக்குரிய யாக்கோபின் ஆசீர்வாதம் நமக்குத் தேவையில்லை. வேதத்தின்படி, ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள் அல்ல என்றும், அதுவாரத்தின் முதல் நாள் - உயிர்த்தெழுந்த நாள் என்றும் அறிய வேண்டும். (சங்.118:22-24); சனிக்கிழமைதான் ஓய்வுநாள் (லூக்.23:54, மத்.28:1). கி.பி.598ல் போப் தன் அதிகாரத்தோடு ஞாயிறுதான் ஓய்வுநாள் என்று மாற்றியிருக்கிறார். Refer "Lucious Feraris prompta publication & Catholic official organ of Cordinal Gibbons". ஞாயிறை அரசாங்க விடுமுறை நாளாக்கியதால் மட்டுமே சபைகூடி ஆராதிக்கிறோம். ஓய்வுநாள் என்று அல்ல. ஞாயிறு விடுமுறை மாற்றப்பட்டால், மாற்றப்படும் நாளில் ஆராதிப்போம்.

பழைய உடன் படிக்கையில் ஓய்வுநாள் ஆசரிப்பு கற்பனை அடங்கிய 10 கற்பனையும் உள்ளது (யாத்.20 முதல் 24:8 வரை). இந்த 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணமாகிய பழைய உடன்படிக்கையை இயேசு நிறைவேற்றிவிட்டார் (மத்.5:17,18; ரோம.10:4; எபே.2:14-16). இஸ்ரேலருக்கு விரோதமான சாட்சியாயிருந்த இது, கிறிஸ்துவோடு கூட சிலுவையில் மரித்து ஒழிந்தது. (கொலோ.2:14, 15; எபி.8:13) கொலோ 2:16-17ன் படி, ஓய்வு நாள் ஆசரிப்பு கிறிஸ்துவுக்கு நிழலாட்டம். மத்.11:28-30 ன் படி, நிஜமாகிய இயேசுவும் வந்ததால், ஆத்ம இளைப்பாறுதல் உண்டு. நிஜம் வந்துவிட்டதால்நிழல் தேவையில்லை. மட்டுமல்ல. லேவி. 23: 1-3ன்படி,ஓய்வு நாள் என்பது ஒரு பண்டிகை (யாத்.31:13; லேவி.19:3; எசே.20:20). அந்த வகையில் பார்த்தாலும் கொலோ. 2:16, 17ன் படி பண்டிகையின் நிஜமாகிய இயேசு வந்ததால், இந்த நிழல் பண்டிகையும் வேண்டாம். மேலும் கொலோ. 2:16ல், "ஓய்வு நாட்கள்" என்று இருப்பதால், இது சனிக்கிழமை ஓய்வு நாளல்ல; பண்டிகை ஓய்வு நாட்கள் என்கின்றனர். "ஓய்வு நாட்கள்" என்று எல்லா manuscriptகளிலும் இல்லை. "ஓய்வு நாள்" என்றும்

போடப்பட்டுள்ளது. ** 20:20ல் சொல்லப்பட்ட "ஓய்வுநாட்கள்" என்பது சனிக்கிழமை ஓய்வுநாளைத்தானே குறிக்கிறது.

**(2) 1000 வருட அரசாட்சி பூலோகத்தில் இல்லை; பரலோகில் தான்.**

★ முதலில், பரலோகில்தான் ஆட்சி என்றால், குடிமக்கள் யார் என்று சொல்லுங்கள்? கர்த்தர் கற்பித்த ஜெபத்தில், "உம்முடைய ராஜ்யம் வருவதாக" (மத்.6) என்பதில் உள்ள ராஜ்யம் எது? எங்கே வரவேண்டும்? அது பூமியில்தானே; 1 கொரி.15:22-24ல் இயேசு, பிதாவிடம் ஒப்படைக்கும் ஆட்சி, இந்த பூமியிலுள்ள ஆட்சியைத்தானே; அதன்பின் தானே நித்தியம் ஆரம்பம்; புதியவானம், புதிய பூமி! ஆமென். இந்த ஆட்சி வருமென்றுதானே இயேசுவும், யோவான்ஸ்நானனும் ஆரம்பத்தில் பிரசங்கித்தார்கள் (மத்.4: ); இயேசு பரலோகம் போகும் போதும் இதைத்தானே சீஷர்கள் கேட்டனர்! (அப்.1:6). இந்த அடிப்படையில்தானே குருத்தோலை பிடித்து ஓசன்னாபாடி எருசலேம் போனார்கள் ( ). பூமியில்தான் ஆளுவோம்; பூமியில்தான் ஆட்சி என்று வெளி.5:10; 2:26,27; 11:15; 20:4; ரோ.3:17 போன்ற பல வசனங்களால் அறியலாம். எசே.40 முதல் 48வரை உள்ளவை பூமியிலே இஸ்ரேலர் அனுபவிக்கப் போகிற கானான் தேசம் பற்றிதானே! 1000 வருட ஆட்சி பற்றித்தானே! (ஆதி.15:18-21; உபா.30:3)

**(3) சபையை எடுத்துக் கொள்ளும் இரகசிய வருகை கிடையாது.**

★ சபையாரை அழைத்துக் கொண்டு போக வருவேன் என்று இயேசு சொன்னார் (யோ.14:1-3). வேதத்தில் இயேசு பூமிக்கு வருவது இரண்டுமுறை என்று உள்ளது (எபி.9:27,28), முதல் முறையும் பிரதானமாய் இஸ்ரேலரை காக்கத்தான் வந்தார்; அவர்களோடுதான் உடன்படிக்கை பண்ணினார். அவர்கள் ஏற்கவில்லை. 2ம் முறையும் பிரதானமாய் அவர்களுக்காகத்தான் வருவார்; அப்போது அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் (ரோ.11:25,26 ; சகரி.14:4; வெளி.1:7). அப்படியானால் சபையாரை அழைக்க வருவது எப்போது? எங்கே? மத்.24:30,31ன் படி பூமிக்கு வருகிறார்; பூமியிலுள்ள சகல கோத்திரத்தாகும் கண்டு புலம்புகிறார்கள். அப்போது நாம் பூமியில் இருந்தால், நாமும் புலம்புவோமா? இல்லையே... களிகூருவேமே! அப்படியானால் சபையாராகிய நாம் எங்கே? 1 தெச.4:16-18; 1 கொரி.15:51-53 போன்றவற்றை வாசித்தால், இயேசு பூமிக்கு வராமல், ஆகாயத்தில் இருப்பார்; கிறிஸ்துவுக்குள் மரித்த,

உயிரோடிருக்கிற நாமெல்லாரும் வானத்தில் இணைவோம்; இதுதான் இரகசிய வருகை. இதில் எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள்தான்,பூமிக்கு வரும் 2ம் வருகையில், இயேசுவோடு வருவோம் (சக.14:4; யூதா 14,15).

இது எப்படி இரகசிய வருகை? பூமிக்கு இயேசு வரவில்லை; நாம் மறுரூபமாகிப் போவதைக்கூட பூமியிலுள்ள யாரும் காண்பதாக வசனமே இல்லை. ஆரவாரம், பிரதான தூதர் சத்தம், தேவ எக்காளம் (இதை இன்று வரையாகும் கேட்டதில்லை) எல்லாமே வானத்தில்தான். தமஸ்குவுக்கு போகும் வழியில் இயேசு பேசியது, பவுலுக்கு மட்டும் புரிந்தது; அவனுடன் வந்த யாருக்கும் புரியவில்லை. ஏலியோடு இருந்த சாமுவேலிடம் தேவன் பேசியது, ஏலிக்குக் கேட்வில்லை. இயேசு உயிர்த்ததை ஒருவரும் பார்க்கவில்லை; அப்படித்தான் நாம் உயிர்ப்பதும், மறுரூபமாவதும் நிஜமாய் யாருக்கும் தெரியாது. ஈசாக்கோடு, ரெபேக்காள் இணைந்தது அவளது உறவினர்கள் கண்டார்களா? இல்லையே!

(4) **போப்தான் அந்திகிறிஸ்து. கி.பி. 538லிருந்து நடக்கும் போப்பின் ஆட்சியில்தான், கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். வரப்போகும் யாக்கோபின் இக்கட்டு காலத்திலும் இருப்பார்கள். அப்போதுதான் யோவே.2:28 நிறைவேறும்.**

★ அந்திகிறிஸ்து ஒருவன்தான் என்று வேதம் சொல்கின்றது; (See. வெளி.19:19-21; 2 தெச. 2:3). கி.பி. 538ல் வந்த போப்தான் இன்றும் இருக்கிறாரா? இல்லையே! ஏராளமான போப்கள் வந்துவிட்டார்களே! சிந்தியுங்கள். எரே. 30:7ல் சொல்லப்பட்ட யாக்கோபின் இக்கட்டுக்காலம், இஸ்ரேலருக்குத்தான். அதிலே உண்மைக் கிறிஸ்தவர்கள் இருப்பதில்லை; அவர்கள்தான் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவார்களே! 2 தெச. 2:6,7 ஐ வாசித்தால் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு, 2 பேது.3:9 நிறைவேற வேண்டி பிரயாசப்படும் கிறிஸ்தவ சபையாரின் தடை நீங்கி, அவர்கள் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டால்தான், அந்திகிறிஸ்து வெளிப்படுவான். இன்னும் சபை எடுத்துக் கொள்ளப்படவில்லை. வருமென்று நாம் கேள்விப்பட்ட அந்தி கிறிஸ்துவின் ஆவி, போப் மூலம் உலகத்தில் இப்போதே கிரியை செய்கிறது (1 யோ.4:3) மற்றப்படி, வீழ்ந்துபோன ரோம சாம்ராஜ்யம், 10 ராஜாக்களால் இணைந்து மறுபடியும் எழும்பப் போகிறது (நேபுகாத்நேச்சார்

சிலையின் 10 விரல்கள்); அதுதான் மிருகமாகிய அந்திகிறிஸ்து; அந்த 10லிருந்தும் ஒன்று வெளிப்படும் அதுவே தனித்து நிற்கும் இறுதியான அந்திகிறிஸ்து.

மேலும் 10 கற்பனையில் 2ஐயும், 4 ஐயும் எடுத்துவிட்டான் போப் என்று சொல்லி, அது தானி.7:25ன் படிதான் என்று விளக்குவோரே சிந்தியுங்கள். வரப்போகும் அந்திகிறிஸ்து 10 பிரமாணங்களை மட்டுமல்ல. மொத்த வேத பிரமாணங்களையும், காலங்களையும், நம் வேதத்திலிருந்தே **மாற்றுவானல்ல; மாற்ற நினைப்பான்.. அவ்வளவுதான்.** போப்கூட, மாற்றினான், எதிலே? வேதத்திலல்ல; தங்களின் சபைக் குறிப்பிடங்களில். எனவே போப் அல்ல அந்தி கிறிஸ்து. அப்படியே மாற்றிய போப்பா வெளி. 19:20ன்படி உயிரோட நரகத்தில் தள்ளப்படுகிறார். அப்படி மாற்றிய போப்தான் எப்போதோ மரித்துவிட்டாரே!

யோவேல் 2:28ல் சொல்லப்பட்டது இஸ்ரேலர்களுக்கு. அது கிறிஸ்தவர்களுக்கு பெந்தகொஸ்தே நாளிலேயே (அப்.2:39; கலா. 3:11) ஆரம்பித்து, இரகசிய வருகை வரை தொடரும். இடையில் தொய்வாய் காணப்பட்டது, 1905 முதல் எழும்பிப் பிரகாசிக்கிறது. ஆமென். இஸ்ரேலர்களுக்கு அந்திகிறிஸ்து ஆட்சியான கடைசி 3 $^1/_2$ வருட உபத்திரவ காலத்தில் இது நடக்கும்; 1000 வருட ஆட்சியிலும் நடக்கும். ஆமென்.

**(5) கிறிஸ்தவ சபை என்ற ஒரு சபையை இயேசு உருவாக்கவில்லை; இஸ்ரேல் சபையின் மறுமலர்ச்சியே கிறிஸ்தவ சபை.**

★ மகாதவறு. மத்.16:18ல் இயேசுவே தன் மீது சபையைக் கட்டுவேன் என்று சொல்லியிருக்க, கிறிஸ்தவ சபை எப்படி இஸ்ரேல் சபையின் மறுமலர்ச்சி சபையாகும். கிறிஸ்தவ சபை சிருஷ்டிக்கப்படும் என்ற காரியம், ஆதியில் இருந்து ஒருவருக்கும் வெளிப்படுத்தப்படாமல், பவுலுக்கு மட்டுமே அந்த ரகசியம் வெளிப்பட்டிருக்கிறது என்று அறிக (எபே.2:19-3:6) எபே.2:14-16 ஐ வாசித்தால், புதிய மனுஷனாக கிறிஸ்தவ சபையை இயேசு சிலுவையில் சிருஷ்டித்தார் என்று அறியலாம். இந்த சபை இயேசுவின் சுயரத்தத்தால் சம்பாதிக்கப்பட்ட சபை என்று அப்.20:28 சொல்கின்றது.

**(6) மோசேயின் நியாயப் பிரமாணம் மாத்திரம் சிலுவையில் ஒழிந்துவிட்டது; 10 கற்பனை ஒழியவில்லை.**

★ மோசேயின் நியாயப்பிரமானத்தின் அடிப்படை - மூல- ஷரத்தே 10 கற்பனைதானே! 10 கற்பனையும், நியாயப்பிரமாணமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தது. மத்.5:17,18 ஐ வாசித்தால், நியாயப்பிரமாணத்தை ஒழிக்க அல்ல; நிறைவேற்றவே வந்தேன் என்கிறார். இங்கே சொல்லும் நியாயப்பிரமாணம் எது? இவர்கள் சொல்வதுபோல, 10 கற்பனையா அல்லது 10 கற்பனை அல்லாத நியாயப்பிரமாணமா? சிந்தியுங்கள். இது 10 கற்பனை அல்லாதது என்றால், அந்த அதிகாரம் முழுவதும், கொலை செய்யாதே, விபச்சாரம் செய்யாதே, பொய் சொல்லாதே என்று சொல்லப்பட்ட பிரமாணமெல்லாம் 10 கற்பனைதானே! ரோ. 7:7ல் சொல்லப்பட்ட "இச்சியாதிருப்பாயாக" என்ற நியாயப்பிரமாணம் 10 கற்பனை இணைந்தது இல்லையா? ரோ. 7:6ன்படி இந்த 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணத்திற்குத்தானே இஸ்ரேலர்கள் மரித்தவர்களானார்கள்! மத்.5:18ன்படி, இயேசு 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றிவிட்டதால், அது இப்போது இல்லை அல்லவா! (ரோ.10:4; எபி.10).

10 கற்பனை கற்பலகையில் கொடுக்கப்படாததற்கு முன்பே நியாயப் பிரமாண புஸ்தகத்தில், யாத்.20 முதல் 24 வரை தேவன் சொன்ன அத்தனையும் எழுதப்பட்டு, 10 கற்பனையும் சேர்ந்து கைக் கௌ்வோம் என்று இஸ்ரேலரின் ஒப்புதலின்படி முதலாம் உடன்படிக்கை மோசேயால் நடத்தப்பட்டது (யாத்.24:4-8).ஆக, நியாயப்பிரமாண புஸ்தகத்தில் 10 கற்பனையும் உண்டு. அதன்பின்தான் கற்பலகைகள் தரப்பட்டன; உடன்படிக்கைப் பெட்டி செய்யப்பட்டது; தேவன் இன்னும் சொன்ன காரியங்களும் அந்த 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணத்தில் எழுதப்பட்டது. இந்த 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாண வார்த்தைகள் தான், இஸ்ரேலர் பாவம் செய்யும்போது, பாவிகளுக்கு எதிரான சாட்சியாய் இருக்கும் (உபா.31:26). இதைத்தான் சிலுவையில் இயேசுவோடு ஒழிந்தது என்று கொலோ.2:14-17 சொல்கின்றது.

**(7) தானி.9:27ல் சொல்லப்பட்டது அந்திகிறிஸ்து அல்ல; இயேசுதான்.**

★ மகாதவறு. தானி.9:25ல் ஒரு பிரபு வருகிறார்; அவர்தான் மேசியாவாகிய இயேசு. அவர் கி.மு.445ல் எருசலேம் கட்ட ஆரம்பித்தது முதல் 483 வருடங்களுக்குப்பின் (69 வாரங்கள்) மரிப்பார் என்று தானி. 9:26 சொல்கிறது. அதே 9:26ல் இன்னொரு பிரபு, அதாவது வரப்போகிற பிரபு என்று ஒருவர் வருகிறார். அந்த அவர்

தான் தானி. 9:27ல் வருபவர். பரிசுத்த ஸ்தலமாம் எருசலேமை அழித்துப் போட்டவர்கள் இந்த பிரபுவின் ஜனங்களாம் (தானி.9:26). ஆக, அன்றிருந்த ரோமர் ஆட்சி இன்று இல்லை. அதே ரோமப் பேரரசு மறுபடியும் எழும்பப்போகிறது. அதன்பிரபுதான், 1 வாரம் = 7 வருஷம் இஸ்ரேலருக்கு உடன்படிக்கை பண்ணுவான். இயேசுவோ உடன்படிக்கை பண்ணுவேனென்று, வியாழன் மாலை சொன்னார்; வெள்ளி மாலை இரத்தக் கையெழுத்துப் போட்டு மரித்தார். ஆனால் அவரின் உடன்படிக்கை 2016 ஆண்டுகளாய் இன்றும் தொடர்கிறது. எனவே தானி.9:27ல் சொல்லப்பட்டது இயேசுவைப்பற்றி அல்ல. உடன்படிக்கை 3 $^{1}/_{2}$ வருஷம் வரும்போது, யூதர்கள் தங்கள் எருசலேம் ஆலயத்தில் செலுத்தும் பலியையும் காணிக்கைகளையும் ஒழியப்பண்ணி தன்னைத்தானே தேவனென்று சொல்வான் (2 தெச.2: ) எனவே அவர் இயேசு அல்ல; மட்டுமல்ல. பலியை உருவாக்கிய தேவனே தன்பலியை ஒழிக்கமாட்டார். அவரோடு கூட அவரது பலியும் ஒழிந்து போயிற்று அவ்வளவுதான்.

இங்கே "அவர்" என்று உள்ளதால் இயேசு என்று சிலர் சொல்கின்றனர். ஏசா.22:22, இயேசுவைப்பற்றி சொன்னாலும் "அவன்" என்று போடப்பட்டதால் அது மற்றவர் அல்லவே (See வெளி.2:26,27), இஃதெல்லாம் மொழிபெயர்ப்புத் தவறு.

**(8) மரித்தவர்களின் ஆவிகள் எல்லாமே தேவனிடம்தான் போகின்றன.**

★ இயேசு மரித்தபின் பாதாளம் போனார் என்று விசுவாசிக்கிறோம் (அப்.2: ). ஆனால் லூக்.23:43ன் படி இயேசுவும் கள்ளனும் பரதீசில் இருப்பார்கள் என்று உள்ளதே எப்படி? பரதீசு என்றால், மகிழ்ச்சி, செழிப்பு, தேவ பிரசன்னம் இருக்கும் இடமென்று பொருள். பிர.12:7ன்படி இந்த ஆவிகள் எல்லாமே தேவனிடம் - பரதீசு - போய், அங்கிருந்து பாதாளத்திற்கும், பரதீசுக்கும் அனுப்பப்படுகிறார்கள். அப்படித்தான், இரட்சிக்கப்பட்ட நிலையில் கள்ளன் இருந்ததால் பரலோகம் போனான்; நமக்காகப் பாவமாக்கப்பட்ட நிலையில் பாவியாய் இயேசு இருந்ததால் (2 கொரி. 5:21) பாதாளத்திற்கும் போனார். லாசரு ஐஸ்வர்யவான் நிலையும் அப்படியே!

**(9) இயேசு கிறிஸ்து 1844ம் ஆண்டுதான் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்திருக்கிறார். தானி.8:13ன் விளக்கம் இதுதான்.**

★ இது கள்ள உபதேசம். எபி.9:24; 8:1; அப்.7:55 போன்ற பல வசனங்களின்படி, இயேசு பரலோகம் சென்று, பிதாவின் வலது பாரிசத்திலே, முதலாம் நூற்றாண்டிலேயே வீற்றிருந்து, நமக்காய் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் (1 யோ.2:1). தானி.8:13ல் உள்ள 2300 இராப்பகல் தீர்க்கதரிசனத்திற்கும் தானி.9:24-27ல் சொல்லப்படும் 70 வார தீர்க்க தரிசனத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. இது 2300 இராப்பகல் தரிசனம் அந்தியோகஸ் எபிபேன்ஸ் பற்றியது. அந்தி கிறிஸ்து பற்றியது அல்ல.

**(10) வெளி.12;14; 13:5 போன்றவை கி.பி.538-1798 வரை நடந்து முடிந்தவை.**

★ தவறு. வெளி.4:1ஐ வாசித்தால், சபைகளுக்குப் பின் சம்பவிப்பவைகள் தான் வெளி.4 முதல் 19வரை சொல்லப்பட்டுள்ளது. சபையே இன்னும் எடுத்துக் கொள்ளப்படாததால், இவைகளெல்லாம் ஏற்கெனவே முடிந்து விட்டன என்று சொல்வது தவறு. காலங்களும், காலமும், அரைக்காலமும், 42 மாதம் என்பதும் வரப்போகும் அந்திகிறிஸ்துவின் கடைசி $3^1/_2$ வருட மகா உபத்திரவ நாட்களில் நடப்பவையாகும்.

❖ ❖ ❖

# அத்தியாயம் - 5

**(1) குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அதுமரித்தால் பரலோகம் போகும்.**

★ இது கள்ள உபதேசம், மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று, இரட்சிக்கப்பட்டதற்கு - மறுபடியும் பிறந்ததற்கு - அடையாளமாய் எடுப்பதுதான் ஞானஸ்நானம் (அப்.2:38; மாற்.16:16; 1 பேது.3:21; மத்.28:18-20) மற்றப்படி குழந்தைகள் எல்லாம் பாவமறியா பச்சிளம் குழந்தைகள். அதற்கு ஞானஸ்நானம் தேவையா? அவர்களை இயேசுவே, தன்னிடம் வர தடைபண்ணக்கூடாது என்கிறார். (மத்.19:14). "மனந்திரும்புகிற பாவியே பிள்ளைகளைப் போலிருப்பான்; பிள்ளை தன்னைத் தாழ்த்தும்" இப்படிப்பட்ட குணாதிசயமுள்ளவனே பரலோகம் போவானென்றால் (மத்.18:3-5), பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து பரலோகம் கொண்டுபோக வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தவன் யார்?

ஞானஸ்நானம் என்பது, இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதலுக்கு அடையாளம்; இயேசுவைப் போல, பாவத்திற்கு மரித்து, நீதிக்குப் பிழைத்ததற்கான அடையாளம். நம்முடைய கிறிஸ்தவமே இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதலில் தான் கட்டப்பட்டிருக்கிறது. நமது இரட்சிப்பின் சுவிசேஷமே இதுதான் (1 கொரி.15:1-4; ). இதை அவமதிக்கும்படியாய், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது, அந்திகிறிஸ்துவின் ஆவி.

**செங்கடலை கடந்தபோது குழந்தைகள் கடக்கவில்லையா?** (1 கொரி.10) இதுகேள்வி. பதிலுக்கு ஒரு கேள்வி. ஆடு மாடு எல்லாம் கடக்கவில்லையா? அவைகளும் ஞானஸ்நானம் பெற்றன என்று சொல்ல முடியுமா? பவுல் அந்த நிகழ்ச்சியை, எப்படி, யாருக்காக எழுதுகிறார் என்று பாருங்கள். ஆரம்பமே "உங்கள் பிதாக்கள்" என்று உள்ளது. ஆக பிதாக்கள் - பெரியவர்கள் பற்றித்தானே ஒழிய குழந்தைகளைப் பற்றி அல்ல. அங்கே சொல்லப்பட்ட பாவங்களையெல்லாம் குழந்தைகளா செய்தார்கள்? சிந்தியுங்கள். **சிறைச்சாலைக் காரன் வீட்டாரனைவரும் என்பதால் குழந்தைகளும் ஞானஸ்நானம் பெற்றிருக்குமே என்று ஒரு கேள்வி.** பவுல், இயேசுவை விசுவாசிக்கும்படி வசனத்தைப் போதித்தான். இதைப் புரிந்து, பிள்ளைகள் விசுவாசிக்க முடியுமா? விசுவாசித்தவர்கள் தான் ஞானஸ்நானம் பெறமுடியும் (see அப்.16:30-33).

**குழந்தைகள் பாவம் செய்யவில்லை என்றாலும், ஆதாம் - ஏவாள் செய்த ஜென்மபாவம் இருக்கிறதே,** அது கழுவப்படாமல் எப்படி குழந்தைகள் பரலோகம் போகும் என்பது ஒரு கேள்வி. இவர்கள் இயேசுவுக்கும் மேலே சிந்திக்கிற அதிகப் பிரசங்கிகள். ஜென்மபாவம் என்றால் என்ன என்று தெரியாத பிள்ளைகள் பாவமறியா, பச்சிளம் குழந்தைகள். அறியாப் பிள்ளைகளுக்கு பரலோகம் உண்டு என்று இயேசுவே சொல்கிறார். அறியாத பைத்தியக்காரனுக்கு ஞானஸ்நானம் கொடுப்பாயா? "சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கமாட்டான்" என்ற உலகப் பழமொழி இவர்களுக்குத்தானோ!

(2) **மூழ்கிதான் ஞானஸ்நானம் எடுக்கணுமா? இஷ்டப்பட்டவன் மூழ்கி எடுக்கட்டும், இஷ்டப்பட்டவன் தெளித்து எடுக்கட்டும்?**

★ இது மனிதருடைய கற்பனை (மத்.15:9). இதனால் தேவனின் கற்பனை மீறப்படுகின்றது (மத்.15:3). Baptism என்றாலே மூழ்குதல், ஸ்நானம் என்றாலே மூழ்கி குளித்தல். நம்முடையதோ

ஞானஸ்நானம். இயேசு யோர்தான் நதியில் ஏன் இறங்கி எடுத்தார்? நதிக்கே வராமல் எங்கிருந்தோ தெளிப்பு ஞானஸ்நானம் பெற்றிருக்கலாமே! தண்ணீர் மிகுதியான இடத்தில் யோவான் ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்து வந்தான் (யோ.3:23). நேரிலே வந்த காந்தேகே மந்திரியிடம் குடிக்க தண்ணிரில்லாமலா இருந்திருக்கும்? தெளிப்பு ஞானஸ்நானம் கொடுக்காமல், ஏன் தேரை நிறுத்தி தண்ணீருக்குள் இறங்கி ஞானஸ்நானம் பெற்றார்கள்? (அப்.8:35-38). இயேசு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்ததற்கு அடையாளமான ஞானஸ்நானம் பெறுகிறவன், தண்ணீருக்குள் இறங்கி, மூழ்கப்பட்டு, பின்பு வெளியேற வேண்டாமா?

இயேசு இப்படியாய் ஞானஸ்நானம் எடுத்து இஸ்ரேலருக்கு தன்னை விளங்கப் பண்ணினாரோ அப்படியே, பாவியாகிய நான் பாவத்திற்கு மரித்து, நீதிக்குப் பிழைத்து, நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன் என்று உற்றார் - பெற்றார் - உறவினர் - நண்பர்களுக்கு காட்ட வேண்டுமே! (see.யோ.1:31). இதனால், எடுப்பவனுக்கும் விசுவாசம் வளரும்; பார்ப்பவனுக்கும் விசுவாசம் உருவாகும். இந்த முழுக்கு ஞானஸ்நானம், பேழைக்குள் 8 பேர் இருந்து, தண்ணீருக் குள்ளானது போன்றது என்று 1 பேது.3:21 சொல்வதைப் பாருங்கள். இது தேவனோடு செய்யும் நிச்சயதார்த்தம் - உடன்படிக்கை. ஆமென்.

**(3) ஞாயிற்றுகிழமையை ஓய்வு நாளாய் ஆசரிக்க வேண்டும்.**

★ இப்படி சட்டம் போட்டு செயலாக்கம் செய்தது போப். போப்பை எதிர்த்து வந்தவர்களும் அதைக் கைக்கொள்ளலாமா? மத்.11:28 - 30ன் படி இயேசுவை ஏற்றுக் கொண்டாலே ஆத்மாவுக்கு இளைப்பாறுதல்; ஓய்வு (அதனால் 3 யோ.2:2 நடக்கும்). மற்றப்படி ஓய்வு நாள் ஆசரிப்பு நியாயப்பிரமாண கட்டளை. அது இயேசுவின் சிலுவை மரணத்தோடு முடிந்தது. சனியையோ, ஞாயிறையோ ஓய்வுநாளாய் ஆசாரிப்பவனுக்கு கலா.3:7-9ல் உள்ள ஆபிரகாமின் ஆசீர்வாதம் கிடைக்காது; ஏசா.58:13-14ல் உள்ள யாக்கோபின் சுதந்திரம் பெற விரும்பும் விசுவாச மார்க்கத்தார் ஆபிரகாமின் பிள்ளைகள் அல்லவே!

அரசாங்க விடுமுறை நாள் எந்த நாளாயிருந்தாலும்; அந்நாளில் சபைகூடி ஆராதிக்கலாம்; ஆனால் அது ஓய்வுநாள் ஆசரிப்பு அல்ல.

"ஞாயிறு என்பது இயேசுவின் உயிர்த்தெழுந்த நாளல்லவா? மகிழ்ச்சியான நாள்ளலவா!" உண்மைதான் (சங்.118:22-24). ஆனால் அது ஓய்வு நாளல்லவே! மட்டுமல்ல. உயிர்த்தெழுந்த நாளை ஓய்வு நாளாகவோ பண்டிகை நாளாகவோ ஆசரிக்கச் சொல்லி கட்டளை இல்லையே! (கொலோ.2:16,17) சொல்லாததை செய்கிறீர்கள்; தேவன் சொன்னதை செய்வதில்லை.

**(4) பிஷப்மூலம் திடப்படுத்தல் பெற்று விட்டாலே போதும், அதுவே இரட்சிப்புக்கும் பரிசுத்த ஆவி பெற்றதற்கும் ஒத்ததாகும்.**

★ ரோ.10:9,10 ன் படி இரட்சிப்பு வருகிறது. இரட்சிக்கப்பட்டேன் என்பதற்கு முதல் அடையாளம், முழுக்கு ஞானஸ்நானம் (அப்.2:38). அதேபோல் பரிசுத்த ஆவி பெற்றுவிட்டேன் என்பதற்கு முதல் அடையாளம், அந்நிய பாஷை பேசுதல் (அப்.2,8,10,19). மற்றப்படி உறுதி பூசுதலோ, திடப்படுத்தலோ அல்ல. பிஷப்மூலம் பெறுவது என்பதெல்லாம் மனுஷபோதனை, வசனத்திற்கு விரோதமானது.

**(5) சிலைகளை உருவாக்குவதும் நமஸ்கரிப்பதும், படங்களை உருவாக்குவதும் நமஸ்கரிப்பதும் பாவமல்ல.**

★ இவைகளெல்லாம் விக்ரக ஆராதனைகள். சிலர் சொல்வர்:- "நாங்கள் நமஸ்கரிப்பது இல்லையே" என்று. **உருவாக்குவதே பாவம்தான்** (யாத்.20:4,5; ரோ.1:21-23). மகிமை நிறை தேவனை நேருக்கு நேர் பார்த்து கண் பார்வையிழந்த பவுல்கூட, ".... நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்" (2 கொரி.5:16) என்று சொல்கிறாரே! கத்தோலிக்கரை விக்ரக ஆராதனைக்காரர்கள் என்று சொல்லும் பல சபைகள், தாங்களே விக்ரகங்களை வைத்திருக்கிறார்கள்! **பத்திரிகைகள், வாக்குத்தத்த அட்டைகள், காலண்டர்கள், சுவிசேஷ கூட்டங்கள், படம் காட்டி விளக்கமளித்தல், சிறுவர்கள் ஊழியம், சினிமா காட்சி போன்ற எல்லாவற்றிலும் உண்டே;** இவைகளெல்லாம், ஓவியன் ஒருவன் (டாவின்சி) வரைந்தது; நடிகர்கள் நடித்தது. இப்படியா நம் தேவன்? அன்றைக்கு கன்றுக்குட்டிக்கு உருவம் கொடுத்ததுபோல இன்றும் நடக்கிறதே! புறா வடிவத்தை பரிசுத்த ஆவி என்கின்ற நீங்கள், அக்கினி, தண்ணீர் போன்றவற்றையும் போட்டு, ஐம்பெரும் பூதம்தான் ஆவியானவர் என்று காட்டுவீர்களோ?

(6) **ஊழியர்களுக்கென்று தனித்தனி வஸ்திரங்கள்தான் அணிய வேண்டும்; சிலுவையை கழுத்தில் தொங்கவிட வேண்டும்; ஆசீர்வாதம் போடும்போதும், மற்றவர்களை ஆசீர்வதிக்கும் போதும் சிலுவை அடையாளம் போடவேண்டும்; ஈனச்சிலுவை இயேசுவா புனித சின்னமாயிருக்கிறது.**

★ நியாயப்பிரமாணத்தில்தான் ஆசாரியர்களுக்கு தனி வஸ்திரங்கள் உண்டு. ஆசாரியத்துவம் மாற்றப்பட்டயிற்று (எபி.7:12). எனவே அவைகள் தேவையே இல்லை. சிலுவை என்பது பயங்கரமான குற்றவாளிகள் தொங்குகிற ஒன்று. இது நியாயப்பிரமாணத்திலும் உண்டு (உபா. 21:22,23); ரோம சர்க்காரிலும் உண்டு. இது ஈனச் சிலுவை என்பதால், இதிலே தூக்கப்பட்டவன் சபிக்கப்பட்டவனாகிறான். இந்த சிலுவை இயேசுவின் இரத்தத்தால் புனிதமானது என்று சிலர் சொல்கிறார்கள். அப்படியானால் இயேசு தொங்கிய அந்த புனித சிலுவை எங்கே? அந்த சிலுவையிலேயே இயேசுவுக்குப் பின் பலர் தொங்கியதாக சரித்திரம் சொல்கின்றதே, அப்படியானால் அந்தப் புனித சிலுவையில் தொங்குகிறவன் எப்படி சபிக்கப்பட்டவனாவான்? பாவியாவான்? சிந்தியுங்கள். உயிரில்லாத உணர்வில்லாத ஈனச்சிலுவையை புனிதமாக்கவா இயேசு மரித்தார்? உணர்வுள்ள, உயிருள்ள பாவியாகிய நாம் புனிதமாகவே மரித்தார் (யோ.3:16) மரக்கட்டை மரக்கட்டைதான்; அது புனிதமாகாது. அதுவும் நீ வைத்திருக்கும், தொங்கவிட்டுக் கொண்டிருக்கும் சிலுவை இயேசுவின் சிலுவை அல்ல; உன்னால் உருவாக்கப்பட்ட விலையுயர்ந்த விக்கிரக சிலுவை. சிலுவையில் தொங்கிய இயேசுவின் வார்த்தையால்தான் ஆசீர்வாதமும், பரலோகமுமே ஒழிய, ஈனச்சிலுவையால் அல்ல... அது தங்கமோ, வெள்ளியோ.... ஈனம் ஈனம்தான்.

ஆசீர்வாதம் போடும்போது ஈனச்சிலுவை அடையாளத்தை நீ போட்டால், அதைப் பெற்றுக் கொள்கிறவன் சிலுவை உபாதை - மகா உபத்திரவம் - இயேசுவைப் போல் பெறவேண்டி வரும் ஜாக்கிரதை! சிலுவை அடையாளம் போடுபவன் மற்றவர்களுக்கு கெடுதல் உருவாக்குவது மட்டுமல்ல... அதன் சாபத்தை அவனும் அனுபவிப்பான். ஜாக்கிரதை! அறியாமல் செய்தாலும் அடிகள் உண்டு (லேவி. 5:17).

**(7) All souls Day; All saints Day என்று சொல்லி, வருடத்திற்கு ஒரு முறையாவது மரித்த ஆத்மாக்களுக்காக ஜெபிக்க வேண்டும்.**

★ ஏன்? அவனவன் செய்த கிரியைகளுக்கேற்ற பலன் இயேசுவோடு வருகிறது (வெளி.22:12; 2 கொரி. 5:10; ரோ.2:6). மனிதன் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது (எபி.9:27). உண்மை இப்படியிருக்க மரித்தவர்களுக்காக - அதுவும் கல்லறையில் போய் ஜெபிப்பதால் என்ன பயன்? அதைக் கேட்டு, தேவன் மரித்தவர்களுக்கு சகாயம் செய்வார் என்றால், இந்த பூமியில் நாம் எப்படியும் வாழ்ந்து, பின்பு இப்படி ஜெபிக்க சொல்லி, சொர்க்கம் போய்விடலாமே!

சிலசபைகளில், பணம் கட்டி இதற்கான MASS - பூஜை நடத்துகிறார்கள். மட்டுமல்ல. உங்கள் ஜெபம், அந்த கல்லறையில் உள்ளவர்களுக்கும் தெரியாது (பிர.9:5,6); தேவனும் ஏற்பதில்லை. இஃதெல்லாம் புறஜாதியார் வழக்கம்.

**(8) பாரம்பரியமாய் கொண்டாடும், அறுப்பின் பண்டிகை, பஸ்கா பண்டிகை, எக்காளப் பண்டிகை, கூடாரப் பண்டிகை போன்றவைகள் கண்டிப்பாய் கொண்டாட வேண்டும்.**

★ இது இயேசுவின் முதலாம் வருகையை விசுவாசிக்காத அந்திகிறிஸ்துக்களின் பணி. லேவி.23ல் உள்ள அத்தனை பண்டிகைகளும், இயேசுவுக்கு நிழலாட்டம். நிஜம் வந்தபிறகு அந்த பண்டிகைகளை கொண்டாடுவது கொலோ.2:16,17ன் படி விசுவாச துரோகம்.

**(9) கிறிஸ்தவன் ஒருவனும் நீதிமானில்லை; எனவே பாவியென்று சொல்லியே ஜெபிக்கலாம்.**

★ கிறிஸ்தவன் என்றாலே அவன் இயேசுவின் இரத்தத்தினாலே நீதிமானாக்கப்பட்டவன் (ரோ.3:23,24; 1 கொரி.6:11; ரோ.10:9,10). அவன் கிரியைகளினாலே நீதிமானாய் இல்லாவிட்டாலும், நீதிமானாக்கப்பட்ட அவன் பாவியல்ல. இரட்சிக்கப்படாதவன்தான் பாவி; ஜீவப்புஸ்தகத்தில் பெயரெழுதப்படாதவன் (யோ.16:8,9) அப்படி பாவி என்று ஜெபிக்கும்போது அவன் கொண்ட விசுவாசம், பெற்ற இரட்சிப்பு எல்லாமே வீண். அவன் சொல்லுகிறபடியே அவன் பாவியின் இடமான பாதாளம் - நரகம் போவான்.

**(10) எப்படிப்பட்ட கொள்கையுடைய சபையாரோடும் சேர்ந்து ஆராதிக்கலாம். கத்தோலிக்க சபையை எதிர்த்து வந்த சபையோடும், ஊழியம் செய்யலாம்.**

★ ஆராதிக்க பார்வோன் எகிப்திலே இடம் தந்தாலும், ஏன் அங்கே மோசே ஆராதிக்கவில்லை. ஒத்த கருத்தையுடைய ஒருமனப்பட்டவர்களோடு இணைந்துதான் ஆராதிக்க வேண்டும். ஊழியத்திற்கு இரட்சிக்கப்படாத சிப்போராள் வந்ததால்தானே தேவன் கொல்லப்பார்த்தார். (யாத்.4:24-26). ஜெபம் பண்ணவே கெத்சமனேயில் தேவன் பிரித்து பிரித்து விட்டாரே ஊழியத்தில் எப்படி இருக்க வேண்டும்? கானான் தேசத்திற்கு எகிப்திலிருந்து புறஜாதியினர் இஸ்ரரேலரோடு வந்ததும், அவர்களின் தோல்விக்கு ஒரு காரணம். அப்.2:40ன்படி, சத்திய மாறுபாடு, கொள்கை மாறுபாடு உள்ள யாரோடும் சேரக்கூடாது. அப்படிச் சேர்பவனுக்கு இறுதி இரட்சிப்பே இல்லை. தேவனுடைய பார்வையில், இப்படிப்பட்ட அந்நிய நுகப்பிணைப்பும், விக்ரக ஆராதனையும் தான் பெரியபாவம். 40 வருடவனாந்திரவாழ்வில் இஸ்ரேலர் இதில்தான் அதிகமாய் ஈடுபட்டனர். எபி.6:1,2ல் உள்ள மூல - அடிப்படை உபதேசமுள்ள எந்த சபையாரோடும் சேர்ந்து ஊழியம் செய்யலாம், ஆராதிக்கலாம்.

**(11) பரிசுத்த ஆவியைப் பெறவோ, அற்புத அடையாளங்களைப் பெற்றுக் கொள்ளவோ, ஞானஸ்நானம் எடுக்கவோ, வேறே எந்த சபைக்கும் செல்லலாம். ஆனால் பாரம்பரிய தாய்ச்சபையை மட்டும் தொட்டிக்கு, கட்டிலுக்கு (marriage), சவப்பெட்டிக்கு விட்டுவிடக்கூடாது.**

★ சபை உறுப்பினர்கள் ஞானஸ்நானம் எடுக்கவோ, பரிசுத்த ஆவியைப் பெறவோ, அற்புத அடையாளங்கள் ஏற்றுக் கொள்ளவோ, தங்கள் சபையில் ஏதுகரணம் இல்லையென்றால் அது கிறிஸ்தவ சபையே அல்ல. அதிலிருந்து உடனடியாக விலகி அருகிலுள்ள ஆவிக்குரிய சபையில் இணைய வேண்டும். மேலும் தாய்ச்சபை என்றோ, தந்தை சபை என்றோ ஏதுமில்லை. எந்த ஊரில் வசிக்கிறோமோ, அந்த ஊரில் அருகாமையிலுள்ள ஏதோ ஒரு ஆவிக்குரிய சபையில் உறுப்பினரானால் அதுவே போதுமானது. மற்றப்படி ஞானஸ்நானம் கொடுத்த "சபை, பாஸ்டர்" என்றெல்லாம் எண்ணங்கள் தேவையில்லை. ஞானஸ்நானங் கொடுத்த யோவான்ஸ்நானன் மரிப்பது குறித்துகூட இயேசு அங்கலாய்க்கவில்லையே! தொட்டில்,

கட்டில், சவப்பெட்டி, இவைகளெல்லாம் இம்மைக்குரிய காரியம். இம்மைக்காக மாத்திரம் சத்தியத்திற்கு புறம்பான சபையில் வாழ்ந்தால், அது பரம்பரைக்கும், பரிதவிக்கக் கூடிய ஒன்றாகும் (1 கொரி.5:9). எனவே பெயர்க்கிறிஸ்தவ, பாரம்பரிய, குழந்தை ஞானஸ்நானம் கொடுக்கும் சபைகளைவிட்டு வெளியேறியே ஆகவேண்டும்.

**(12) 10 கற்பனை கிறிஸ்தவனை ஆள்கிறது; நடத்துகிறது.**

★ இது கள்ள உபதேசம். 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் இயேசுவோடு கூட சிலுவையில் ஒழிந்துவிட்டது (எபே.2:14,15; கொலோ.2:13-17; ரோ.7:1-8; மத்.5:17,18; ரோ.10:4; எபி.8:13). கிறிஸ்தவர்களாகிய நாமோ இயேசுவின் உபதேசத்தையும் (மத்.28:20) அப்போஸ்தல உபதேசத்தையும் (ரோ.6:17; யூதா.17) கைக்கொள்ள வேண்டும். அதுவே நம்மை ஆள்கிறது; அதுவே நம்மை நியாயந்தீர்க்கும்.

❖ ❖ ❖

# அத்தியாயம் - 6

**(1) சின்ன குறிப்பிடம் என்ற சபையின் ஜெபப்புத்தகத்தைப் படித்தபின், "புதுநன்மை" எடுப்பது என்ற சடங்கின்மூலம் இராப்போஜனம் எடுக்கலாம்.**

★ இது வேதம் காட்டாத வழி. ஆதி அப்போஸ்தல காலத்தில், இரட்சிக்கப்பட்டவர்களைத்தான் சபையில் சேர்த்துக் கொண்டனர் (அப்.2:47). அப்படிப்பட்டவர்களோடுதான் திருவிருந்து நடந்தது (அப்.2:) இந்த வேதவழிப்படி நடப்போம்.

**(2) சபை மேய்ப்பரிடம் பாவங்களை இரகசியமாகவோ அல்லது சபையில் எழுந்து நின்று பகிரங்கமாகவோ அறிக்கையிட்டு மன்னிப்பு பெறவேண்டும்.**

★ பாவங்கள் மன்னிக்கும் அதிகாரம் இயேசுவுக்குத்தான் உண்டு (மாற்.2:10); இயேசுவின் இரத்தத்திற்குத்தான் உண்டு (1 யோ.1:7). வேறு யாருக்கும் கிடையாது. ஆதியிலிருந்து, பாவங்களை தேவனிடம்தான் அறிக்கையிட்டு மன்னிப்பு பெறவேண்டும் (1 யோ. 1:8-10). நியாயப்பிரமாணக் காலத்தில் கூட, பாவங்களுக்கு பலிசெலுத்தும்போது பலிப்பொருளின் மீதுதான் பாவம்

வைக்கப்படுகிறதே ஒழிய, எந்த ஒரு விசுவாசியும் ஆசாரியனிடம் சொல்வதே இல்லை. இந்த முறையை கொண்டு வந்தது போப் மார்க்கம். இது தேவனுக்குச் சமமாய் மேய்ப்பர் மாறுகின்ற பிசாசின் வேலை.

**(3) மரியாள் உயிரோடே பரலோகம் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறார். அவரிடம் நேரடியாய் ஜெபிக்க வேண்டும். அவரை வணங்க வேண்டும். அவர் பல மாதாக்கள் பெயரில் காட்சி தந்து அற்புதம் செய்கிறார்; அவர் சொல்வதை கேட்க வேண்டும்.**

★ மரியாள் உயிரோட பரலோகம் போனதற்கு வேத ஆதாரம் இல்லை. அப்படி அவர் போயிருந்தால், அவரும் எலியா, ஏனோக்கு போல் மதிக்கப்படத்தக்கவர்தான். அதற்காக அவரை வணங்கக்கூடாது. ஆதி முதல் வணக்கத்துக்குரியவர் தேவன் ஒருவரே (வெளி.19:10; 22:8,9; யாத்.20:1-3). பூமியைவிட்டுப் போய்விட்ட எந்த மனிதருக்கும் (மரியாளும் மனுஷிதான்; தெய்வமல்ல; அவளும் பரிசுத்த ஆவியைப் பெற்று ஊழியம் செய்தாளே - அப்.1:14; தன்னை தேவனுக்கு அடிமை என்று சொன்னவளாயிற்றே) நம் ஜெபம் கேட்காது. இயேசு சொன்னபடி, பிதாவை நோக்கி, இயேசுவின் நாமத்தில்தான் ஜெபிக்க வேண்டும் (யோ.15:16; 23; 14:13). நம் ஜெபம் விஷயத்தில் மரியாளுக்கு எந்தப்பங்கும் இல்லை. அற்புதங்கள் நடப்பதை வைத்து யாரையும் மதிக்கக்கூடாது (see மத்.7:22,23); புறஜாதிகளிடமும் அற்புதம் நடக்கிறதே! மண்ணை விட்டுப்போன யாரும் மறுபடியும் பூமிக்கு வருவதில்லை (எபி.9:27); வந்து காட்சி கொடுத்து ஊழியம் செய்வதில்லை. எலியா மாத்திரம் அந்திகிறிஸ்துவின் நாட்களில் வருவார் என்று எழுதப்பட்டிருக்கிறது (மல். 4:5). ஆனால் மரியாள் அடிக்கடி வருவார்கள் என்று ஆதாரமே இல்லை. அப்படி காட்சி தருபவர், தானே அற்புதம் செய்வதும், தன்னை வணங்க வேண்டும்; தனக்கு விழா எடுக்க வேண்டும்; தான் தரும் ஜெபமாலை வைத்து ஜெபிக்க வேண்டும் என்று சொல்வதும், உயிர்த்த இயேசுவோடு இல்லாமல், குழந்தை இயேசுவோடு காட்சி தருவதும், தேவனின் சித்தமுமல்ல; திட்டமுமல்ல. இதெல்லாம் கடைசி நாட்களில் ஏமாற்றும் பிசாசின் வேலை. பாக்கியவதி மரியாளின் பெயரை வைத்து பிசாசு மோசம் போக்குகிறான். ஜாக்கிரதை. மரியாள், புனிதர் எல்லோரும், நம் ஜெபத்தைக்கேட்டு ஆசீர் அளித்தால், இயேசு தேவையில்லையே! சிந்தியுங்கள்.

**(4) ஊழிய ஆண் - பெண் இருபாலரும் திருமணம் செய்யக்கூடாது.**

★ தவறு. வேதத்திலே இதற்கு வசனமே இல்லை. திருமணமானவர்களும், திருமணமாகாதவர்களும் வேதத்தில் ஊழியம் செய்திருக்கிறார்கள். இது தேவனின் கற்பனையல்ல; மனுஷ கற்பனை. தேவனின் அழைப்பும் தெரிந்துகொள்ளுதலுமே இதற்கு அடித்தளமாயிருக்க வேண்டும்.

**(5) மரித்த பின் தான், போப்பின் விருப்பப்படி ஒரு சிலருக்கு, "அர்ச்சிஸ்டவர்" அதாவது, புனிதர் (saint) பட்டம் கொடுக்கப்படும்.**

★ இது கர்த்தரின் சித்தத்திற்கு நேர்மாறானது. புனிதர் என்றால் 'Righteous' - நீதிமான் - என்று பொருள். என்றைக்கு ஒருவன் ரோ.10:9,10; யோ.3:5, 1 பேது.1:23ன்படி இரட்சிக்கப்பட்டானோ அன்றே அவனை நீதிமான் என்று தேவன் அழைக்கிறார் (ரோ.3:22,23; 1கொரி.6:11), இந்த நீதிமான், தான் பெற்ற இரட்சிப்பில் முடிவு பரியந்தம் நிலைத்தால், பரலோகம் போகமுடியும் (மத். 24:17-19; 1 பேது.4:17-19). ஆக, மரித்தபின், உலகை விட்டுப் பிரிந்தவருக்கு, பூமியிலுள்ளவர் பட்டம் கொடுப்பது என்பது கேலிக்குரியதாயிருக்கிறது. அது தேவை அற்றது.

**(6) பைபிளை யாரும் படிக்கக்கூடாது என்ற நிலைமாறி, "படிக்கலாம்" என்று அனுமதி வந்தாலும், பைபிள் வார்த்தைக்கும் மேலாய் போப் என்ன சொல்கிறாரோ அதுதான் ஜீவ வார்த்தை.**

★ இதுமகாபெரிய தேவ துரோகம். தேவனுடைய வார்த்தைக்கு மிஞ்சி யார் சொன்னாலும் ஏற்கமுடியாது என்று பவுல் கலா.1:8ல் சொன்னது பொய்யாகுமா?

**(7) அப்போஸ்தலர், புனிதர், மரியாள், இயேசு ஆகியோருக்கு சிலை வைத்து வணங்க வேண்டும்; தேர்கள் உருவாக்கி ஜோடித்து அழைத்துச் செல்ல வேண்டும்; அவர்களுக்கு என விழாக்கள் கொண்டாட வேண்டும்.**

★ மரித்து உயிர்த்தெழுந்த ஜீவிக்கிற இயேசுவுக்கே சிலை உருவாக்குவதும், அதை நமஸ்கரிப்பும் விக்ரக ஆராதனை என்று வேதம் சொல்லும்போது (யாத்.20:4,5; ரோ.1:21-23; 2 கொரி.5:16), இயேசுவின் மனித சீடர்களுக்கு அப்படிச் செய்வது மகா தவறு அல்லவா! இது பிசாசின் தூண்டுதலாகும். ரிக்கார்டு பூர்வமான

உருவங்கள் புனிதர்களுக்கு இருக்குமானால், அதை ஞாபக சின்னமாய் வைத்துக் கொள்ளலாம்; ஆனாலும் அது நாளாக, நாளாக, விக்ரகமாய் மாறிட வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இயேசுவுக்கோ, மரியாளுக்கோ, அப்போஸ்தலர்களுக்கோ அப்படிப்பட்ட ரிக்கார்டு பூர்வமாக உருவங்கள் இல்லவே இல்லை. இவர்களுக்கு திருவிழா கொண்டாட வேதம் கூறவில்லை. இயேசுவின் மரணத்தை மட்டும் நினைவுகூரும் வண்ணம், திருவிருந்து பண்டிகை தான் கிறிஸ்தவன் கொண்டாட வேண்டும் (1 கொரி.5:8). மற்றப்படி தற்காலத்தில் கொண்டாடுவதுபோல, கிறிஸ்மஸ், பஸ்கா, ஈஸ்டர் போன்ற பண்டிகைகள் எல்லாமே பாபிலோனியன் cults சம்பந்தப்பட்டதாகும். கிறிஸ்மஸ் பண்டிகை டிசம்பர் 25ல் வைப்பது சூரியக்கடவுளின் பாபிலோனிய திருவிழாவை நினைந்துதான். பஸ்கா, ஈஸ்டர் எல்லாமே வருடாவருடம் மாறுபட்ட தேதிகளில், ஆனால் வெள்ளியும், ஞாயிறும் மாறாமல், இஷ்டா தேவதையின் விழாவை ஒட்டி வருவதாகும். தற்காலத்தில் மரியாள் மற்றும் புனிதர்களுக்கு, ஆடு, கோழி என்ற பலியும் செலுத்தப்படுகிறது.

**(8) உத்தரிக்கிற ஸ்தலம் என்ற ஒன்று உண்டு (Purgatory). இதில் உள்ளவர்களுக்காய் ஜெபிக்க வேண்டும்.**

★ வேதத்தில், பரதீசு, பாதாளம், நரகம், மோட்சம் போன்றவைகள்தான் இருப்பதாகும். மரித்தவர்கள் இவைகளுக்கு தகுதிற்கேற்ப, காலத்திற்கேற்ப போவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. மற்றப்படி, உத்தரிக்கிற ஸ்தலம் இருப்பதாகவும், அதிலுள்ளவர்களுக்காக ஜெபித்தால், பூஜை எடுத்தால் அவர்கள் பரலோகம் போவார்கள் என்றும் சொல்வது கள்ள உபதேசம். எபி.9:27; 2 கொரி.510; வெளி.22:12; ரோ.2:6 போன்ற வசனங்களை அறிந்திருந்தால், உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்ற பேச்சே எழுந்திருக்காது.

**(9) வருடா வருடம் 40 நாள் தபசுகாலம் – லெந்து நாட்கள் – ஆசரிக்க வேண்டும். அந்த நாட்களில் எந்த ஒரு நல்ல காரியமும் வீட்டில் நடத்தக்கூடாது; கறி, மீன் சாப்பிடக்கூடாது. அந்த 40 நாளுக்குப் பிறகு Good Fridayயாம்; இயேசு மரிக்கிறாராம்; பின் உயிர்க்கிறாராம்.**

★ ஆவிக்குரிய வளர்ச்சிக்காய், வல்லமைக்காய், பிசாசை ஜெயித்து வெற்றி வாழ்க்கை வாழ்வதற்காய் உபவாசம் பண்ணலாம். தவறில்லை (See.மத்.17:21). வருடா வருடம் இதே நாளில் செய்து பின்

ஈஸ்டர் கொண்டாடுவதும், கிரேக்க தெய்வங்களான இஷ்டார், தம்மூசு ஆகியோரின் காரியங்களை வைத்து, புறஜாதியார் செய்த பண்டிகைகளை கிறிஸ்துவத்தில் மறக்க முடியாமல், அதையே திரும்பவும் செய்வதும், கிறிஸ்தவன் இன்னும் எகிப்தில் வாழ்கிறான் என்று பொருள். இஷ்டார் தேவதையின் நாள்தான் ஈஸ்டர் என்று ஆகியிருக்கிறது. பாபிலோனியன் CULTS வளர்கிறது.

❖ ❖ ❖

# அத்தியாயம் - 7

**(1) தண்ணீருக்குள் ஞானஸ்நானம் இல்லை; கொடியின் கீழ்தான் ஞானஸ்நானம்.**

★ இது கள்ள உபதேசம். அப்.8:36ல் சொன்ன காந்தேகே மந்திரியின் இரட்சிக்கப்பட்ட ஆவியின் உணர்வு இவர்களுக்கு இல்லை. இயேசு கொடியின் கீழா ஞானஸ்நானம் எடுத்து மாதிரியைக் காட்டினார்?

**(2) திருமண விஷயத்தில் எந்த சபையோடும் இணையலாம்.**

★ அந்நிய நுகப்பிணைப்பு கூடாது என்பது வேதத்தின் தாற்பரியம் (See 2 கொரி.6:16-18). சாலமோன் கெட்டதே அதனால்தான் என்று 2 ராஜா 11 சொல்கின்றது. எபி.6:1,2ன் படியான, மூல - அடிப்படை - உபதேசமில்லாத எந்த சபையோடும் திருமண விஷயத்திலும் ஊழியத்திலும் இணையக்கூடாது. (See யாத். 4:24-26)

**(3) அப்பம்தான் இயேசுவின் சரீரம்; ரசம்தான் அவரின் இரத்தம்.**

★ மகாதவறு. இது இயேசுவின் பிய்க்கப்பட்ட சரீரத்திற்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்கும் அடையாளமாய், நினைவு கூருவதாகும் (1 கொரி. 11:23-26)

**(4) கற்களால் கட்டப்பட்டது தான் தேவனின் ஆலயம்.**

★ இல்லை... இல்லை.... எருசலேம் ஆலயம் இருந்தவரை அதையே ஆலயம் என்று எண்ணினர். என்றைக்கு இயேசு மரித்து, திரைச்சீலை மேலிருந்து கீழாய் கிழிந்து, மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு எல்லோரும் போக வழிகிடைத்தோ அன்றுமுதல் கற்களால் கட்டப்பட்ட எருசலேம், ஆலயமல்ல. அங்கிருந்த மகிமை, பரிசுத்த ஆவியானவரால் நமக்குள் வந்தபோது நமது சரீரமே ஆலயம்; நம்மைப்போல எல்லா ஆலயங்களும் சேரும்போது அது தேவாலயம்

(1 கொரி. 6:11; 3:16). தற்போது சபை கட்டிடங்கள் ஆலயங்கள் அல்ல; துதிப்பதற்கான சபை வீடுகள். ஆமென்.

**(5) சபையிலே தீர்க்கதரிசன ஊழியமே கிடையாது.**

★ அப்படியானால், சபையிலுள்ள 5 விதமான ஊழியங்களில் தீர்க்கதரிசன ஊழியம் ஏன் இருக்கிறது? (எபே.4:13). இப்போது கண்ணாடியில் பார்ப்பதுபோல தேவனையும், அவரது காரியங்களையும் பார்க்கிறோம். நாம் பரலோகம் போய் நேரிடையாய் பார்ப்போம். அந்த நாள் - வருகை - வரும் வரைக்கும், தீர்க்கதரிசன ஊழியமும், அந்நிய பாஷை வரமும், மற்ற வரமும் கண்டிப்பாய் இருக்கும். அந்த நாளில்தான் இவைகள் ஒழியும் (1 கொரி.13:8-12) அந்த நாள் மிக சமீபமே!

**(6) நியாயப் பிரமாணக்காரர் போல சட்டப்படி நாம் நடக்க வேண்டும்.**

★ அப்படி நடந்தும் "நீதிமான் ஒருவனுமில்லை; ஒருவனாகிலுமில்லையே" ஏன்? (ரோ.3:10). விசுவாசத்தை முன்வைத்து, விசுவாச அடிப்படையில் நியாயப்பிரமாணச் சட்டத்தை கைக்கொண்டவர்கள் தான் எபி.11ல் உள்ள நீதிமான்கள். அதே போல நாமும், விசுவாத்தை முன் வைத்து, இயேசுவின் உபதேசத்தையும், அப்போஸ்தல உபதேசத்தையும் கைக்கொண்டு நடக்க வேண்டும் (மத்.28:20; ரோ.6:17; யூதா.17). அதுவே பரலோகம் போக வழி.

**7) பிதா, இயேசுவாக வந்தது முதல் வருகை; அந்த பிதா பரிசுத்த ஆவியானவராய் வந்தது 2ம் வருகை. எனவே 2ம்வருகை இனி எப்போதும் கிடையாது.**

★ இவர்கள் திரியேக தேவனை அறியாமல் சொல்பவர்கள். யோ. 14: 1-3; அப். 1:11; 1 தெச. 4:16-18; 1 கொரி. 15:51-57; மத். 24:30,31; ரோ. 11:25,26; வெளி. 1:7; சக. 14:4; யூதா 15,16 போன்ற வசனங்கள் எல்லாம் பொய்யா?


## ஆசிரியர் அழைத்தால் வரத் தயார்

ஞாயிறு ஆராதனைக்கு...
வேதப்பாடம் நடத்த...
வசன விளக்கம் கொடுக்க...
சுவிசேஷக் கூட்டம் நடத்த
கருத்தரங்குகள் வைக்க...
முஸ்லீம்கள், இந்துக்கள், நாத்திகர்கள்
ஆகியோரோடு கலந்துரையாட...
பைபிள் காலேஜில் போதிக்க...
உபவாசம், முழு இரவு ஜெபம்
போன்ற எல்லா கூட்டங்களுக்கும்

# ஆசிரியரின் வெளியீடுகள்

## ஆராய்ச்சிப் புத்தகங்கள்

★ கருகலான சத்தியம் (பாகம் I)
★ கருகலான சத்தியம் (பாகம் II)
★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் I)
★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் II)
★ வியாதியா? மரணமா?
★ விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்! (பாகம் I & பாகம் II)
★ வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்
★ கதைகள் அறுபது
★ சிறுவர் ஊழியம்
★ இஸ்லாமியரின் கேள்விகள்
★ உங்களுக்குத் தெரியுமா?
★ கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்

## பாடல் சி.டி

★ ஆடியோ : ரூ. 50/- வீடியோ : ரூ. 50/-
★ (ஆடியோ சி.டி. Vol. I, II, IV, VI மற்றும் DVD சி.டி. Vol. III, V)

## தீர்க்கதரிசன விளக்கவுரைகள் DVD

★ வெளிப்படுத்தின விசேஷம் (3 சி.டி)
★ தானியேல் (3 சி.டி)
(ஒரு செட் ரூ. 200/-)

## கருத்தரங்கு செய்திகள் DVD (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

★ இனி சம்பவிக்கப் போகிறவைகள்
★ குரான் சொல்லும் ஈசா தேவனா?
★ இயேசு ஏன் வரவில்லை?
★ வேதம் விஞ்ஞானத்திற்கு ஒத்திருக்கிறதா?
★ ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும்
★ கள்ள உபதேசமும் கள்ள தீர்க்கதரிசினமும்
★ மாறுபாடுள்ள சந்ததி எது?
★ வேதம் பற்றி முஸ்லீம்கள் சொல்வது சரியா?
★ குரானில் குளறுபடிகள் உண்டா?
★ வேதத்தில் குளறுபடிகளா? பொய்த்தகவல்களா?
★ இயேசுபற்றி முஸ்லீம்களின் கருத்தென்ன?

**அரை மணிநேர DVD செய்திகள்** (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

★ இயேசு வருவாரா?

★ அந்தி கிறிஸ்து எப்போது வெளிப்படுவான்?

★ எது தேவசித்தம்?

★ வியாதி தேவனின் சிட்சையா?

★ திரித்துவம் உண்டா?

★ அந்நிய பாஷை

★ எது ஆவிக்குரிய சபை?

★ படைப்பின் இரகசியம்

★ மரணத்திற்குப் பின் நிலை என்ன?

★ தெய்வீக சுகம்

★ எது விசுவாச ஊழியம்? எது விசுவாச வாழ்க்கை?

★ இயேசுவின் இரத்தம்

★ பண்டிகைகள் தேவையா?

★ வரமும், கனியும், வல்லமையும், அதிகாரமும்

★ ஆசீர்வாதமும், சாபமும், வாக்குத்தத்தமும், தண்டனையும்

★ இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானமா?

★ இயேசு சர்வவல்லமையுள்ள தேவனா?

★ சபைக்குள்ளே நிறைவேறுகிற - நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனங்கள்

★ நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது?

★ நிறைவேற வேண்டிய உடன்படிக்கைகள்

★ யார் அந்த இரண்டு சாட்சிகள்?

★ யார் அந்த 1,44,000 பேர்?

★ 70 வார தீர்க்கதரிசனம்

★ 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்

❖ ❖ ❖

# வேதப் பொன்மொழிகள்

- ★ ஆட்களைப் பாராதே! ஆண்டவனைப்பார்!
- ★ வசனமுள்ள வாழ்வு வளமான வாழ்வு!
- ★ விசுவாசம் வெற்றியைத் தரும்
- ★ Where there is vision there will be provision
- ★ போதக சிட்சையே ஜீவ வழி
- ★ பரிசுத்தமாக்குவது வசனமே
- ★ கிரியை இல்லாத விசுவாசம் செத்தது
- ★ Have positive confession
- ★ பூமியிலே நூறத்தனை ஆசீர்வாதம் உண்டு
- ★ இரகசிய வருகைக்கு ஆயத்தமா?
- ★ வேதத்தை விதை! விளையச் செய்பவர் தேவன்
- ★ பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு
- ★ திக்கற்றவர்களையும், விதவைகளையும் விசாரிப்பதே மாசற்ற பக்தி
- ★ ஆசீர்வாதமும் சாபமும் மனிதனே சுதந்தரிக்க வேண்டும்
- ★ வாக்குத்தத்தம் ஒன்றல்ல; இரண்டல்ல; ஏராளம்
- ★ மூல உபதேசம் இல்லாத சபை கிறிஸ்தவ சபையல்ல
- ★ பரிசுத்த ஆவி பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷை

# faith brings success

Rev. Dr. A. Xavier (Author)



## ஆசிரியரைப்பற்றி,,,,,,,

1951ம் ஆண்டு மே மாதம் 16ஆம் நாள், தமிழ்நாடு, திருச்சிமாவட்டம் மணப்பாறை அருகே உள்ள சின்ன உடையாபட்டி என்ற குக்கிராமத்தில் ஏழை குடும்பத்தில் ரோமன் கத்தோலிக்க சபையை சார்ந்த பெற்றோருக்குமகனாய் பிறந்தவர்தான் Rev. Dr. A. சேவியர்.

குழந்தை பருவம் முதல் பக்தியோடு வளர்க்கப்பட்டவர். B.Sc., (கணிதவியல்) படிப்பை திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் முடித்து, தொலைபேசி துறையில் பணியில் சேர்ந்து, படிப்படியாய் பதவி உயர்ந்து, டிவிஷனல் இன்ஜீனியராக ஆனார்.

கல்லூரியில் படிக்கும்போதே நாத்திகனாய் மாறி இயேசுவுக்கு எதிராளியாய் மாறினார். இந்நிலையில் நெல்லை மாவட்டம் குலசேகர பட்டினத்தை சார்ந்த C.S.I சபை பெற்றோரின் மகள் கஸ்தூரிபாய் என்பவரை 16.06.1976 அன்று மணந்தார். பக்தியுள்ள மனைவியின் நடக்கையாலும், ஜெபத்தாலும், ஆசிரியருக்குள்ளே ஒரு மாற்றம் உருவானது.

1981–ல் நடந்த ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் ஏற்பட்ட மூளை முறிவிலிருந்து 1985–ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கிடைத்த விடுதலையால் ஒரு பெருத்த மாற்றம் உண்டாகி, 1986 நவம்பரில் இரட்சிக்கப்பட்டு ஆவிக்குரிய கிறிஸ்தவரானார். பெந்தகோஸ்தே சபையில் நுழைந்தவர்,செவென்த்டே அட்வென்டிஸ்ட் சபையினரால் ஈர்க்கப்பட்டு சபை மாறியதால் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, அந்த சபையிலிருந்து வெளியேறி, ஆவிக்குரிய விசுவாசியாய் மாறினார். விசுவாச விதையை தமிழகத்தில் விதைத்த தேசத்தின் தீர்க்கதரிசி ஜஸ்டின் பிரபாகரனின் போதனையால் விசுவாசத்தில் பெலப்பட்டு, ஊழியத்தில் நுழைந்தார். அநேக குக்கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் செய்தார். டிராக்ஸ் ஊழியம், தெருப்பிசங்கம், "எப்போதும் வசன விளக்கம்" போன்றவையெல்லாம் இவருக்கு தேவன் தந்த வரம். மிகவும் சிறிய சபைகளுக்கும் சென்று சத்தியத்தை பரப்பினார். "கடைசிகால விடுதலை முழக்கம்" என்ற மாத இதழை ஆரம்பித்து அதன்பின் "வசன முழக்கம்" என்ற பத்திரிக்கையை நடத்தினார். "விசுவாசம் வெற்றியைதரும்" என்ற தாரக மந்திரத்தை போதித்தார். வாரந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும், சென்னையிலும், மாவட்ட தலைநகரங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி கிறிஸ்தவ சபைகளில் பெரிய எழுப்புதலை உருவாக்கினார். எந்த ஊழியத்திற்கும் யார் அழைத்தாலும் எதையும் பார்க்காமல் உடனே ஒத்துக்கொள்ளும் சுபாவம் உள்ளவர்.

தேவனின் தரிசனப்படி கஸ்தூரிபாய் ஆசிரமம், சேவியர் இறையியல் பயிலகம், விடுதலை கிறிஸ்துவின் சபை, விசுவாச கருத்தரங்குகள், ஊழியர் கருத்தரங்குகள், மற்றும் இணையதளம், தொலைக்காட்சி, முகப்புத்தகம் போன்ற பல ஊடகங்கள் மூலம் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். தற்போது "விசுவாச முழக்கம்" என்ற மாதஇதழ் கௌரவ ஆசிரியராகி ஒரு வசனப்புரட்சி செய்து வருகிறார். அன்னாரின் ஊழியம் விரிந்து பரவ அநேக ஆத்துமாக்களை வருகைக்காய் ஆயத்தமாக்க ஜெபியுங்கள்.


endtime deliverance ministry

endtimetrust xavier

9444979822

revdrxavier@gmail.com